www.onlineuthayan.com

பக்கங்கள்: 54

# உதயன்

சுடர் 27
கதிர் 85

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 07 ஞாயிற்றுக்கிழமை (19/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# நீதிக்கான உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டும் ஐ.நா.

## இலங்கை விடயத்தில் அமெரிக்க அமைப்புகள் அழுத்தம்

நியூயோர்க்,பெப்ரவரி 19

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமானதொரு அனைத்துலகப் பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை நிறுவுவதை நோக்கிய, பயனுள்ள நடவடிக்கையை எடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நீதியை வழங்குவதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை தனது உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டிய நேரம் இது.

இந்தக் கோரிக்கையை அமெரிக்காவைத் தளமாக கொண்டு செயற்படும் 15 அரச சார்பற்ற உரிமை அமைப்புகள் அமெரிக்காவிடம்விடுத்துள்ளன.

இது தொடர்பாக அந்த அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூற அமெரிக்கா அழுத்தம் கொடுக்க முடிவு செய்துள்ளதையிட்டு மகிழ்ச்சி கொள்கிறோம்.

இலங்கை அரசு தீவிரமான எந்தவொரு உள்நாட்டு விசாரணைகளையும் எதிர்த்து வருகின்ற நிலையில், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற பெரிய அளவிலான மீறல்கள் பற்றிய விவகாரத்துக்கு நாம் உயர்ந்த முன்னுரிமை கொடுத்துள்ளோம்.

இலங்கையில் உள்நாட்டுப் போரின்

19

## மினி பஸ் மோதி மாதகல் வாசி சாவு

மாதகல், பெப்.19

மாதகல் லூர்து அன்னை ஆலய நற்கருணைப் பெருவிழாவுக்குச் சென்ற ஒருவர் மினி பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே மரணமானார்.

நேற்றுமாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மாதகலைச் சேர்ந்த பீற்றர் பொனி பஸ் (வயது 34) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மாதகல் லூர்து அன்னை ஆலயத்துக்கு மிக அருகிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

மாதகல் கடற்கரையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 787 ஆம் இலக்க மினி பஸ் எதிரில் வந்துகொண்டிருந்த குறித்த நபரை மோதியதில்

19

## பால்மா விலை ஏறும்?

பால்மாவின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசிடம் பால்மா விநியோக நிறுவனங்கள் அனுமதி கோரியுள்ளன. இந்த அனுமதி வழங்கப்பட்டால் 400 கிராம் பால்மாவின் விலை 15 ரூபாவினால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைய சில தினங்களில் திடீரென டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 120 ரூபாவாக வீழ்ச்சியடைந்தமையால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது என்று பால்மா நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## ஜயலத் தொடர்ந்தும் வைத்தியசாலையில்

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது நடத்தப்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதலில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். பொலிஸார் நடத்திய கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதல் காரணமாக தான் காயமடைந்ததாகவும் பொலிஸார் வீசிய கண்ணீர்ப் புகைக் குண்டில் சேர்க்கப்பட்டிருந்த இரசாயனப் பொருள் தொடர்பில் தனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஏ.ரீ.எம்மில் திருடியவர் சிக்கினார்

குருநாகல் - தம்புள்ளை வீதியிலுள்ள வங்கியொன்றின் தன்னியக்க இயந்திரத்திலிருந்து பணத்தைத் திருட முயற்சித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சந்தேகநபர் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நீதிவானின் காணிக்கே 'வேட்டு' வைத்த ஆசாமி

இலங்கையில் நீதிவான் ஒருவரின் காணி போலி ஆவணங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்டுள்ளது. கல்கிஸ பகுதியில் நீதிவான் ஒருவருக்குச் சொந்தமான 74 பேர்சஸ் காணியே இவ்வாறு போலியான காணி உறுதி தயாரிக்கப்பட்டு ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபரை எதிர்வரும் 22ம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் மஹிந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

## சவேந்திர சில்வா விவகாரம் ஐ.நாவில் இரகசிய சந்திப்பு

நியூயோர்க்,பெப் 19

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள ஐ.நாவுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐ.நா பொதுச் செயலருக்கு அமைதிப் படை நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் சிறப்புக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட விவகாரம் குறித்து நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இரகசிய உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த நியமனம் தொடர்பாக தாமும், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளும் அதிருப்தி கொண்டுள்ளதாகவும், இதனைச் சரி

19

## தமிழர் பிரச்சினையில் ஐ.நா. தலையிடும் முதற்படியே ஜெனிவாவில் வரும் தீர்மானம்

### வவுனியா மாநாட்டில் சுரேஷ் எம்.பி.

வவுனியா, பெப்.19

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து ஆதரவு தெரிவித்திருக்கும் சந்தர்ப்பமானது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஐ.நா. தலையிடுவதற்கான முதற்படியாகும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று வவுனியா நகர சபை மண்டபத்தில் தமிழ்த்

19

## ராணுவத் தலையீடு, அரசியல் செல்வாக்கால் வடக்கின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு

### அமெ. பிரதிநிதியிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப். 19

அரசியல் செல்வாக்கு மற்றும் இராணுவத் தலையீடுகள் காரணமாக வடக்கின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சர்வதேச தொழிலாளர் ஒருமைப்பாட்டுக்கான அமெரிக்க நிலையத்தின் பிரதிநிதி திமொதி ஜெ.ரயானிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற சந்திப்பின் போதே இலங்கை

19

## இலங்கை விவகாரம் குறித்து ஜெனிவாவில் அதிக கவனம்

### சர்வதேச நெருக்கடிக்குழு வலியுறுத்து

கொழும்பு,பெப் 19

இலங்கை அரசின் மீதான சர்வதேச நன்மதிப்பை மேலும் அதிகரிப்பதற்கு இலங்கை தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சர்வதேச நெருக்கடிக் குழு வலியுறுத்தியுள்ளது. ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமை

19

50 W நிகரான ஒளியைத்தரும் எமது 3W -ECO LED ஐ 30 நாள்களுக்கு பாவித்தால் உங்கள் மின்சாரக் கட்டணம்
1 ரூபா 62 சதம் மட்டுமே!
Global Business Network
231 Temple Road, Nallur, Jaffna.
Tel: 021 320 1771, 077 85 35625.

டைல்களுக்கு மேல் டைல் பதிக்க வேண்டுமா.... Red சிமெந்தின் மேல் டைல் பதிக்க வேண்டுமா....
போசலின் டைல்களை நீண்டகாலத்துக்கு கழராது உறுதியாக வைத்திருக்க வேண்டுமா.....
கவலையை விடுங்கள்
LATICRETE
அமெரிக்கத் தயாரிப்பிலான LATICRETE ADHESIVE வகைகள் உங்கள் கவலையை நீக்கி விடும்.
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05,Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888 #05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111
Ranjanas CERAMIC metro engineering (pvt)ltd.

CMB/TRICHY/CMB - 9,700/=
CMB/LONDON -33,300/=
CMB/FRANKFURT -36,900/=
CMB/CHENNAI/CMB -10,400/=
CMB/DOHA -14,500/=
CALL 077727617
AIRMARK Travels & Tours IATA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கூட்டமைப்பினரின் தீர்வு முயற்சிக்கு பக்கபலமாக இருப்போம் - மன்னார் ஆயர்



வவுனியா, பெப்.19

நீண்ட காலமாக நிலவி வருகின்ற அரசியல் பிரச்சினைக்கு பேச்சுகளின் மூலம் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தமிழ் சிவில் சமூகத்தினர் பக்கபலமாக இருப்பார்கள் என்று மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்தார்.

இலங்கை அரசுடன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுகள் குறித்து தமிழ் சிவில் சமூகத்தினருக்கு ஏற்பட்டிருந்த சந்தேகம் தொடர்பில் விளக்கமளிக்கும் கலந்துரையாடல் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையிலான தமிழ் சிவில் சமூகத்தின் ஒரு பகுதியினருக்கும் இடையில் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பு மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மன்னார் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் சிவில் சமூகத்தினரின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமக்கு விளக்கமளித்திருந்ததாகவும், இந்தச் சந்திப்பின் நோக்கம் நிறைவேறியிருப்பதாகவும் அவர் கூறினார்.

நீண்ட காலமாக நிலவி வருகின்ற அரசியல் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதற்கு தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் சிவில் சமூகத்தினர் பக்கபலமாக இருப்பார்கள் என்றும் மன்னார் ஆயர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பு மிகவும் திருப்திகரமாக அமைந்திருந்தது எனக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வெறும் கண்துடைப்புக்காக தாங்கள் அரசுடன் பேச்சுக்களை நடத்தவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

''நாங்கள் எதனைப் பெறப்போகின்றோம் என்பதுதான் முக்கியம். எமது மக்கள் உண்மையான சுயாட்சியைப் பெறவேண்டும் என்பதுதான் சுயநிர்ணய உரிமை என்பதன் உண்மையான விளக்கம். நாங்கள் சுலோகங்களின் அடிப்படையில் பேச்சு நடத்தவில்லை. தமிழ் சிவில் சமூகத்தைச் சந்தித்ததும் இதன் அடிப்படையில்தான்'' - என்றார் சம்பந்தன். (ஓ-5)

## நீண்டகாலம் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ். குடாநாட்டில் 65 பாடசாலைகள் இன்னும் இயங்கவில்லையா?

### வியப்புடன் கேட்டார் அமெரிக்கப் பிரதிநிதி

யாழ்ப்பாணம், பெப்.19

15 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தில் 65 பாடசாலைகள் இன்னமும் இயங்காமல் இருப்பதைக் கேட்டு அமெரிக்கப் பிரதிநிதி வியந்துபோன சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ். நகரிலுள்ள விடுதியொன்றில் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச தொழிலாளர் ஒருமைப்பாட்டுக்குமான அமெரிக்க நிலையத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஜெ.யானுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

அந்தச் சந்திப்பின் போது இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வடபகுதியின் கல்விச் செயற்பாடுகளுக்கான சவால்கள் மற்றும் தடைகள் தொடர்பாக விபரித்தனர்.

வட பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இன்னமும் இயங்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இன்னமும் 65 பாடசாலை இயங்கவில்லை என்று ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

மிக நீண்ட காலமாக சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தில் 65 பாடசாலைகள் இயங்கவில்லையா என அமெரிக்கப் பிரதிநிதி கேட்டு வியந்துபோனார். தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் குறிப்பிட்டுள்ளார். (ஒ-03)

## பிரதமருக்காக காத்திருக்காது கொழும்பு திரும்பிய ஹெலி

கொழும்பு,பெப் 19

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிற்காகப் பிரதமர் டி.எம். ஜயரட்ன ஹெலிகொப்டரில் பயணம் செய்திருந்தார். எனினும், பிரதமருக்காகக் காத்திருக்காது குறித்த ஹெலி கொழும்பு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினரிடம் அறிவிக்காமல் திடீரெனக் குறித்த ஹெலி கொழும்பு திரும்பியுள்ளது. இதனால் பிரதமர் டி.எம். ஜயரட்ன அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து கிடைக்கப் பெற்ற அவசர அழைப்பை அடுத்து இவ்வாறு ஹெலி அவசரமாகத் திரும்பியுள்ளது. குறித்த நிகழ்வின் பின்னர் ஹெலி மூலம் கம்பளைக்குச் செல்லவிருப்பதாகப் பிரதமர் ஏற்கனவே விமானப்படையினருக்கு அறிவித்திருந்தார்.

எனினும், பிரதமரின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து, குறித்த விமானி ஹெலியைக் கொழும்புக்கு செலுத்தியுள்ளார். இதனால், பிரதமர் தரை வழியாகக் கம்பளைக்குச் சென்றார் எனத் தெரியவருகிறது. (த)

## நாமல் தலைமையிலான குழு பலஸ்தீனத்துக்குப் பறந்தது

கொழும்பு, பெப் 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளடங்கிய அரச உயர்மட்ட தூதுக் குழுவொன்று நேற்று சனிக்கிழமை மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக பலஸ்தீனத்திற்குச் சென்றுள்ளது.

பலஸ்தீன அரசின் அழைப்பின் பேரிலேயே இந்தத் தூதுக் குழுவினர் பலஸ்தீனத்திற்கு சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராகவே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பலஸ்தீனத்துக்குப் பயணம் மேற்கொள்வதாகத் தெரியவருகிறது.

நாமல் ராஜபக்ஷவுடன், விஞ்ஞான தொழிநுட்ப பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன புஷ்பகுமார மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரத்ன அமுனுகம ஆகியோரும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

## வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் சுவீடனின் மேலும் 300 வீடுகள்

### யாழ். வந்துள்ள அந்நாட்டு பிரதிநிதி தகவல்

யாழ்ப்பாணம், பெப்.19

சுவீடன் அரசு யாழ்ப்பாணத்தில் மேலும் 300 வீடுகளை நிர்மாணித்து வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அந்த நாட்டுப் பிரதிநிதி ஒருவர் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

போர் மற்றும் சுனாமிப் பேரிடர்களினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியிலேயே 300 வீடுகளை, நிர்மாணித்து வழங்க சுவீடன் முன்வந்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக சுவீடன் நாட்டுப் பிரதிநிதி அரச அதிபருக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

சுவீடன் அரசினால் மறவன்புலோ மற்றும் கைதடிப் பகுதியில் ஏற்கனவே வீட்டுத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் வழங்கப்பட்டு வருகிறது. (ஒ-03)

## தங்க பிஸ்கட் விற்பனையில் ஈடுபட்ட யாழ். நகர் நகைக்கடை வர்த்தகர்கள் இருவருக்கு நேற்றுப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், பெப்.19

தங்க பிஸ்கட் விற்பனையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் யாழ்.நகர் நகைக்கடை உரிமையாளர்கள் இருவர் உட்பட மூவர் பொலிஸாரிடம் சிக்கினர். அவர்கள் மூவரும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் சந்தேக நபர்கள் மூவரும் நேற்றுமுன்னிலைப்படுத்தப்பட்டனர். அதன்போதே பொலிஸ் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

விற்பனையின் போது பொலிஸாரால் மீட்கப்பட்ட 10 பவுண் தங்க பிஸ்கட்டையும் யாழ்.சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்து சோதனை செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிவில் உடையில் சென்ற பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் யாழ்.நகரிலுள்ள நகைக் கடை ஒன்றுக்குச் சென்று தங்க பிஸ்கட் வாங்குவதாகக் கூறிக் கேட்டுள்ளனர்.

அந்தக் கடை உரிமையாளர் கடைக்கு வந்தவர்களை அமர வைத்துவிட்டு, மற்றொரு பிரபல நகைக் கடையில் அதனை வாங்கி வருமாறு தனது ஊழியர் ஒருவரை அனுப்பி வைத்துள்ளார். அவர் தங்க பிஸ்கட் சகிதம் வருவதைக் கண்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அதனைப் பறித்தெடுத்துக் கொண்டு தாம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி அடையாளப் படுத்தியுள்ளனர். மூவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்துள்ளனர்.

நகைக் கடைகள் இரண்டையும் அவர்களது வீடுகளையும் சல்லடை போட்டுப் பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளர். பின்னர் பதில் நீதிவான் முன்னிலையில் மூவரையும் முன்னிலைப்படுத்தினர்.

அதன்போதே பொலிஸ் பிணையில் செல்ல அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தங்க பிஸ்கட்டை யாழ்.சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

சுங்கத் திணைக்கள முத்திரையின்றி தங்க பிஸ்கட்டை பயன்படுத்தியமைக்காகவே மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறுகிறார்கள். (ஒ-03-04)




வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சமகால அரசியல் குறித்த மாநாட்டின்போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மேடையில் காணப்படுகின்றனர். (435)

## பொலிஸ் பாதுகாப்புடன் இறுதிக் கிரியை

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து சிலாபத்தில் மீனவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மீனவரின் இறுதிக்கிரியைகள் நேற்று பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் இடம்பெற்றது. பாதுகாப்புக் கடமைகளில் 1500இற்கு மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

## எந்தநேரத்திலும் போராடத் தயார்

### சிட்னி புலிக்கொடி வீரன் உறுமல்

சிட்னி, பெப் 19

''சிட்னியில் ஆஸ்திரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் போது, அங்கு நாங்கள் (தமிழர்கள்) தமிழீழத்தைத் சேர்ந்தவர்கள் என்பதை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் துணிவுடன் கூறிப் போராடுவோம் என்று நிரூபிப்பதற்காகவே எங்களுடைய தமிழீழத் தேசியக் கொடியை பறக்கவிட்டேன்'' - இவ்வாறு நேற்று முன்தினம் சிட்னியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞன் தெரிவித்துள்ளார்.

''பல ஊடகங்களில் குறித்த புலிக் கொடியை பொலிஸார் பறித்தெடுத்ததாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் உண்மையில் அங்கு அவ்வாறு நடக்கவில்லை. நூற்றுக்கணக்கான சிங்களவர்களின் மத்தியில் தேசியக்கொடியை பறக்கவிட்டேன். புலிக் கொடியை பார்த்த சிங்களவர்கள் பயந்து போய் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பின்னர் பொலிஸார் என்னிடம், ''துடுப்பாட்டத்தை பார்வையிடுவதென்றால் புலிக் கொடியை தம்மிடம் தர வேண்டும்'' என்று கேட்டு கொண்டனர்.

அதன்போது இலங்கை அரசு எமது தமிழீழ மண்ணில் நடத்திய இன அழிப்பை பற்றி ஆஸ்திரேலியப் பொலிஸாருக்கு விளக்கினேன். அதற்காகவே நான் இங்கு புலிக்கொடியைப் பறக்க விட்டேன் என்று தெரிவித்த போது பொலிஸார் எங்களைப் பாராட்டினர்.

''நாங்கள் இங்கு பிரச்சினைகளை ஏற்படுத்த வரவில்லை. எங்களது போராட்டத்தை எடுத்து சொல்வதற்காகவே இங்கு வந்தோம். எடுத்தும் காட்டிவிட்டோம். ஆனால் எங்களுடைய புலிக் கொடியை நாங்கள் யாரிடமும் கொடுப்பதற்கு தயார் இல்லை. நாங்களாகவே வெளியேறுகின்றோம்" என்று பொலிஸாருக்குத் தெரிவித்தோம். புலத்தில் தமிழர்கள் வாழ்கின்ற எல்லா இடங்களிலும் புலிக்கொடி பறக்கும். அதே போல ஒரு நாள் ஈழத்திலும் தமிழீழத் தேசியக் கொடி பறக்கத்தான் போகிறது. (ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அறிஞர்களைத் தந்த ஆரம்பப் பாடசாலைகளை ஓரக்கண்ணால் நோக்குவது உகந்ததல்ல

கல்வியே கருந்தனம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். இளமையில் கல்.

எமது முது தமிழ்ச் சான்றோர்கள், வாழ்க்கையில், வாழ்க்கைக்கு, கல்வி எத்தகு அவசியமானது, இளம் பராயத்தில் அதனைப் பெறுவது பிரதானமானது, மிக முக்கியமானது என்பதனை இடித்துரைப்பதற்காகக் கூறிய பல பொன் மொழிகளில் மேற்கூறியவையும் அடங்கும்.

தமிழர் மண்ணில் பல இல்லாமைகள், வறுமைகளின் மத்தியிலும் பெற்றோர்கள் சந்ததி சந்ததியாக கல்விக்கு அளித்த முதன்மைத்துவமும் முக்கியத்துவமும் அவர்களின் பிள்ளைகள் அவையில் முந்தியிருக்கவும், அறிவுடையோராக மிளிர்ந்து சிறக்கவும் வித்திட்டது.

இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறைக்கு வந்ததன் பின்னர், ஏழை, செல்வந்தர் என்று எல்லாத் தரப்பினரின் பிள்ளைகளும் கல்வி பயிலவும், அதனோடு பல துறைகளில் ஏற்றம் காணவும் அது வித்திட்டது. கிராமம், நகரம் என்ற வேறுபாடோ ஏற்றத் தாழ்வோ இன்றி சம கல்வி வாய்ப்பும் வசதிகளும் பெருகின.

அபிவிருத்தியும், அதன் பாற்பட்ட சமூகக் கட்டமைப்பின் மாற்றங்களும், கிராமங்கள் முன்னைய காலங்கள் போலன்றி துரிதமாக முன்னேறவும், நகரங்களின் வளர்ச்சிக்கு ஒப்ப உயர்ந்து எழுவதற்கும் வாய்ப்பளித்தன.

தமிழ்ப் பிரதேசங்களின் கல்வித்துறை வளர்ச்சியில், கிராமங்களில் எமது முன்னோர்களின் தூர நோக்கினால் - பிடி அரிசித் திட்டம் போன்ற முறைகளால் - வருங்காலச் சந்ததியின் முன்னேற்றம் கருதி, பல பாடசாலைகள் நிறுவப்பட்டதும், வளர்க்கப்பட்டதும் இப்போது பலருக்கும் தெரியாத அல்லது மறக்கப்பட்ட விடயமாகிவிட்டது.

கிராமப்புறங்களில், மற்றும் சிறு குறிச்சிகளில் தொடங்கப்பட்ட பல ஆரம்பப் பாடசாலைகள் வித்தியாசாலைகளாகவும், மகா வித்தியாலயங்களாகவும், கல்லூரிகளாகவும் உயர்ந்த பதிவுகள், வரலாறுகள் வீட்டுக்கு வீடு வாசற்படி - என்பதற்கு ஒப்பானது எனலாம்.

ஆனால், பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதால், அவை அரசாங்கத்தினால் - அதன் அங்கமான கல்வி அமைச்சினால் - கொண்டுவரப்பட்ட நிர்வாகப் 'புதுமை'களாலும் மாற்றங்களாலும் பல வட்டகைகளில் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருப்பது பரவலாக அவதானிக்கப்படுகிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வதற்குத் தேவையின்றி, மிகப் பரவலாக, கிராமப்புற ஆரம்பக் கல்விக்கு வேட்டு வைக்கப்படுகிறது; பெற்றோர்கள், குறிப்பாக வாழ்க்கை வளங்களும் வசதிகளும் குறைந்த மக்கள் தமது பிள்ளைகளின் கல்வி குறித்து அந்தரிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மாணவர்களின் கல்விக்கான அடித்தளம் ஆரம்பப் பாடசாலைகள். அடித்தளம் உறுதியாக இருந்தால் மட்டுமே கட்டடம் சீராக அமையும். இன்னொரு வகையில் கூறுவதானால், ஆரம்பப் பாடசாலைகளையும், ஆரம்ப வகுப்புகளையும் கூட அரச கல்வித் துறையினர் பாரபட்சம் இன்றி ஓரக் கண்ணால் பார்க்காமல் வருங்காலப் பிரசைகளின் எதிர்காலம் என்ற நோக்கோடு பார்க்க வேண்டும்.

அவற்றுக்குத் தேவையான வளங்கள் கல்வித் துறையினரால் உரிய முறையில் வழங்கப்படாததால், பெற்றோர் தமது பிள்ளைகளை நகரப் புறப் பாடசாலைகளுக்கு (ஆரம்பக் கல்வி வசதி உள்ள பாடசாலைகளுக்கு) அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிறது.

அதற்கும் அப்பால், கிராமப் புற ஆரம்பப் பாடசாலைகள் பல, கல்வி நிர்வாகிகளால் பொருத்தமான முறையில் கவனிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகளும் குறைபாடுகளும் பரவலாக உண்டு.

அதனாலேயே, கிராமப் புறங்களைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளை நகரப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர் என்ற வாதம் வலுத்து வருகிறது.

அது மட்டுமன்றி, நகரப் புறப் பாடசாலைகளில், கிராமப் புறப் பாடசாலைகளை விட, கல்வித் தரம் மிகவும் மேலோங்கியுள்ளது என்ற தப்பெண்ணமும் பெற்றோர்களில் ஒரு சாராரிடம் உண்டு என்பதும் மறைக்கக்கூடியது அல்ல. அது மட்டுமன்றி, கிராமப் புறச் சூழலை விடுத்து நகரப்புற பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி பெறுவதற்குத் தமது சின்னஞ்சிறுசுகளை அனுப்புவோரில் ஒரு பகுதியினர் அங்கு தமது பிள்ளைகள் நல்ல பழக்க வழக்கங்களை மட்டுமன்றி, 'புதிய கலாசாரங்களைப்' பெற வாய்ப்புண்டு என்றும் கருதுகிறார்கள்.

அதனால், கிராமப் புறங்களில் வாழும் ஓரளவு பண வசதி படைத்த பெற்றோர் (வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவோர், மற்றும் வருமானம் தரும் தொழில் துறைகளில் ஈடுபடுவோர், அரச சேவையாளர்கள் தமது பிள்ளைகளை நகரப்புற ஆரம்பப் பாடசாலைகளுக்கு அனுப்புவதையே விரும்புகிறார்கள்) தமது பிள்ளைகளை நகரப் புற பாடசாலைகளில் சேர்ப்பது அதிகரித்து வருவது கண்கூடு. அதற்காக அவர்களை முற்றிலும் குறை கூற முடியாது. ஆனால் தூர இடத்துக்குச் சென்று கல்வி பயின்று சோர்வுடன் வீடு வந்து சேர்வதால் மாணவர்களுக்கு உண்டாகக்கூடிய பாதிப்புப் போன்ற அடுத்த பக்கத்தையும் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

கிராமப் புற மாணவர்கள் நகரப் புறப் பாடசாலைகளில் கல்வி பயிலச் செல்வதை வைத்துக்கொண்டு, அவற்றில் உள்ள ஆரம்பப் பிரிவுகளை தனிப் பாடசாலைகளாக்கவும்;

ஏற்கனவே இயங்கிய ஆரம்பப் பாடசாலைகளை, அங்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே பயில்கின்றனர் என்று கூறி மூடிவிடவும் அதிகாரத்தில் உள்ளோர் திட்டமிடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நகரப் புறப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவது போன்று கிராமப் புற ஆரம்பப் பாடசாலைகளின் வளங்களை குறிப்பிட்ட அளவிலேனும் அதிகரித்தால் இந்தப் பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வையேனும் காணலாம் அல்லவா?

கிராமப் பாடசாலைகள், அந்தந்தக் கிராமங்களின் கல்வி வளர்ச்சிக்கான ஊற்றுக் கண்களாகத் துலங்கியவை, விளங்கியவை. அவற்றின் அறிவூட்டல் பணி பாரம்பரியம் மிக்கது. பல அறிஞர்களினதும், கல்விமான்களினதும் வளர்ச்சிக்கு வித்திட்டவை. அவற்றை மூடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அது அந்தந்தப் பகுதிகளில் ஏற்படுத்தக் கூடிய பாரதூரமான சமூகப் பாதிப்பினை அதிகாரிகள் மனதில் கொள்வது நல்லது.

கல்வி வளர்ச்சிக்கான புதுமையான திட்டங்கள் என்ற போர்வையைக் காட்டிக்கொண்டு, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே கிராமங்களின் எழுச்சிக்கு எமது முந்தையர்கள் வித்திட்ட ஆரம்பப் பாடசாலைகளை அமிழ்த்திவிடும் திட்டங்களைக் கைவிடுவதே சாலச் சிறந்தது.

# குறைந்த மாணவர்களுடன் இயங்கும் பாடசாலைகள் விரைவில் அபிவிருத்தி

### ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய

வலி.வடக்கு, பெப்.19

நாட்டில் மாணவர்கள் குறைவாகக் காணப்படும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்து அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்து, ஏனைய பாடசாலைகள் போன்று செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்படவுள்ளன.

நாட்டில் சுமார் 1580 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் 50 இற்கும் குறைவான மாணவர்களுடன் இயங்கி வருவதாக இனங் காணப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகள் மூடப்படுமா? அல்லது தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்புக் காணப்பட்ட நிலையில் ஜனாதிபதியினால் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் 50 இற்கும் குறைவான பிள்ளைகளைக் கொண்ட பாடசாலைகளில் ஆயிரம் பாடசாலைகள், முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 50இற்கும் குறைவான பிள்ளைகளுடன் இயங்கும் பாடசாலைகளின் விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் அனைத்துப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

(த-86)

## சீன கன்ரோன் வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.19

2012 ஆம் ஆண்டு சீன கன்ரோன் வர்த்தகக் கண்காட்சிக்கு யாழ்ப்பாண வர்த்தகர்களும் கலந்து கொள்ளமுடியும் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

வடமேல் மாகாணக் கைத்தொழில் சேவைகள் நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி முதல் மே மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த வர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொள்ள ஆர்வமுடைய வர்த்தகர்கள் இல. 165 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.(த-14)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தளபதி வருகை

யாழ்ப்பாணம், பெப்.19

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் இலங்கைக்கான பிரதம தளபதி டாக்டர் டி.டபிள்யு.வீரசூரிய நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து யாழ். மாவட்டத்தில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் செயற்பாட்டைப் பார்வையிட்டார். அத்துடன் திறமையாகச் செயற்பட்ட அங்கத்தவர்களையும் அவர் கௌரவித்தார். இந்த நிகழ்வு நேற்று பி.ப. 3.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கருகில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்டத் தலைமைக் காரியாலத்தில் இடம்பெற்றது. (த)

## மானிப்பாய் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் அவசியம்

நவாலி, பெப்.19

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனமொன்று அவசரமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கடந்த புதன்கிழமை நடைபெற்ற அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை வைத்தியசாலை பொறுப்பதிகாரி எஸ்.கே. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது இருநேரமும் இயங்கி வருவதால் நோயாளர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் இங்குள்ள மகப்பேற்று மனைக்கும் பிரசவங்களுக்காகக் கர்ப்பிணிகளும் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் அம்புலன்ஸ் வாகனமும் வைத்தியர்கள், தாதிகள் தங்குவதற்கு விடுதிகளும் அமைக்கப்படவேண்டுமெனவும், இது தொடர்பான மகஜரை யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் விரைவில் கையளிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(த்-100)

## பூநகரி கல்முனையில் அந்தோனியார் ஆலயம்

### யாழ். ஆயர் திறந்து வைப்பார்

பூநகரி கல்முனை மண்டைக் கல்லாறில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய அந்தோனியார் ஆலயம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

பூநகரிக் கல்முனைப்பகுதியில் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். அந்த மக்களின் ஆன்மிகத் தேவைகளை கருத்திற் கொண்டு இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் திருவழிபாடுகள் இடம்பெறும்.

ஆலய திருவிழாவில் கலந்து கொள்வதற்காகப் பாஷையூர், குருநகர் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கடல் வழியாகக் கல்முனைக்குச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

26 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட இந்த ஆலயத் திறப்பு விழா இடம்பெறும். ஆயர் ஆலயத்தைத் திறந்து வைப்பார்

தொடர்ந்து புனிதரின் ஆசிர்வாதமும், திருச்சொரூப பவனி என்பனவும் இடம்பெறும். (த-17)

# நிகழ்வுகள் இன்று

**கண்டிய நடனம்**

கொழும்பிலுள்ள ஆவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் இரண்டாவது தடவையாக, கடந்த ஒரு வருட காலமாக நடத்தப்பட்டு வருகின்ற கண்டிய நடன கற்கை நெறியில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் வழங்கும் கண்டிய நடன அளிக்கைகள் பி.ப. 4.00 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரனும், சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசனும் கலந்து கொள்வர். (த)

**கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் கையளிப்பு**

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட இடத்தினை பொதுமக்களின் மீள்குடியேற்றம் மற்றும் விவசாயத் தேவைகளுக்காக கையளிக்கும் நிகழ்வு முற்பகல் 10மணிக்கு கிளிநொச்சி ஜெயபுரம் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது. (த-14)

**கூட்டம்**

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் முற்பகல் 10மணிக்கு சுன்னாகம் தெற்கு சபாபதிப் பிள்ளை வீதி, றொட்டியாலடி கண்ணகி விளையாட்டுக்கழக மண்டபத்தில் சங்கத்தலைவர் செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

★ ★ ★

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பிற்பகல் 4மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-135)

★ ★ ★

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று இல 43, மூன்றாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(த-115-400)

**நூல் அறிமுகம்**

கீர்த்தனை ராஜேந்திராவின் ''பூவொன்றின் புதிய மொழி'' கவிதை நூல் அறிமுக விழா மாலை 5மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(த-14-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தம் வைத்தியசாலை
**SANTHAM HOSPITAL**
No.126, 3rd Cross Street, Jaffna.
வழங்கும் தரமான

வெளிநோயாளர் சேவை. காலை 7 மணி - மாலை 7 மணி வரை

உள்நோயாளர் சேவை.

அம்புலன்ஸ் சேவை.

ஆய்வுகூட வசதி.

X - Ray, ECG, Colour Scanning

என்பவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்!

பின்வரும் விசேட வைத்திய நிபுணர்களின் (CONSULTATION SERVICE) ஆலோசனைகளை தினமும் முற்பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்!

முற்பதிவுகளுக்கு அழைக்கவும் 021 567 7756 | 021 567 6577

1. பொது வைத்திய நிபுணர் - VP
2. சத்திர சிகிச்சை நிபுணர் - Surgeon
3. மகப்பேற்று வைத்திய நிபுணர் - VOG
4. தோல் வைத்திய நிபுணர் - Skin Specialist
5. கண் வைத்திய நிபுணர் - Eye Surgeon
6. குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர் - Peadiatrician
7. காது. மூக்கு. தொண்டை வைத்திய நிபுணர் - ENT Surgeon

**HOME VISIT:** உங்கள் அன்புக்குரியவர்கள் நடமாட முடியாது இருந்தால் அவர்களுக்கு நாங்கள் உங்கள் வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிப்போம்.



## ஆங்கிலம் கற்பது இலகுவானது

ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில், பரீட்சையில், நேர்முகத்தேர்வில், பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

தனிப்பட்ட கவனிப்பில், அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ? Local and UK Certificates for Each Level

14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்

A1/B1/B2 Training Specialists

திருமணமாகி யுகே செல்வோருக்கான ஆங்கில வகுப்பும் பரீட்சையும்.

**City and Guilds UK Approved Centre in Jaffna !**

ESOL L1
ESOL L2
ESOL L3
Spoken English(KU/C&G)
IELTS/A1/B1/B2

பேசலாம் வாங்க !

City & Guilds Approved Centre

Web Site with full info: WWW.KUGROUP.INFO

இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதுக்கீட்டுக்கு அழையுங்கள்.

0776458253/0213208342 புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Knowledge Universe**
Malaysian College of Business and ICT

City and Guilds Qualification are accepted by BRITISH COUNCIL

இல 75, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (லாவா வைத்தியசாலை மேல்மாடி)


## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்தம்பி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும்; சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி 17.02.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் பரியோவான் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26/4, ஈச்சமோட்டை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சாந்தி (மகள்).


## அறைகள் or வீடு வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் நான்கு அறைகளை கொண்ட வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு கொடுக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் (OR) உத்தியோகத் தர்கள் விரும்பத்தக்கது

தொடர்பு: 0718565662

## வீடு காணி விற்பனைக்கு

பரந்தன், குமரபுரத்தில் ஏ-9 வீதிக்கு அண்மையில் வீடு மற்றும் கிணற்றுடன் கூடிய அரை ஏக்கர் மேட்டுக் காணியும், மூன்றரை ஏக்கர் வயற்காணியும் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:- 0214912798

## வீடு வாடகைக்கு உண்டு

சென்ற் ஆன்ஸ் லேன் சுண்டுக்குளியில் சகல வசதிகளுடனும் கூடிய (14X18X2) மேல் மாடிவீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0212220626, 0715198254

## மெசி பர்கியுஸன் MF 240



இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட MF 240 உழவு இயந்திரங்கள் உத்தரவாதத்துடன் சகாய விலையில்

தயா ட்ரக்ரர்ஸ்
இல. 24, செப்டன் பிளேஸ், காலி வீதி, தெஹிவளை.

011-2717173/011-2716619/0773114965

வெளிவந்துவிட்டது

## வெற்றித்தேர்வு!

2012 - தரம் - 5
புத்தகசாலைகளுக்கான
வெற்றித் தேர்வு - 01,
வெற்றித்தேர்வு - 02
இன்றே பெற்றுக்கொள்ள முடியும்.

2012 - தரம் : 04 வெற்றித்தேர்வு - 01
22.01.2012 வெளிவருகின்றது.

கீழ்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
பூபாலசிங்கம் - யாழ். நகர், துர்க்கா - சுன்னாகம்
அருள்நாயகி - கொடிகாமம், அறிவுநதி - கிளிநொச்சி
யாழ். புத்தக நிலையம் - மல்லாகம்
வடமராட்சி - பிரபல புத்தக நிலையங்கள்.

தொடர்புகளுக்கு: 0212229016, 0775388471

## வேலைக்கு ஆள்கள் தேவை

போட்டோ கொப்பிக் கடையில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 4222, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

## VACANCIES

கணினிப் போதனாசிரியர் - முழுநேரம்
வரவேற்பாளர் (Receptionist)

சுன்னாகத்தில் முன்னணி கணினி நிறுவனத்திற்கு மேற்படி பதவிகளுக்கு இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
(பழக விரும்புகின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு : Tel :0777577333
NO. 180/1, JET MOTORS BUILDING, K. K. S வீதி, சுன்னாகம்.


## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2012

தலைவர் : கலாநிதி ஆறு. திருமுருகன் (அதிபர்)
திகதி : 19.02.2012 ஞாயிறு பி.ப. ஒரு மணி
இடம் : கல்லூரி மைதானம்
பிரதம விருந்தினர் : திரு. A.M. ஜாபிர்
(பழைய மாணவர், பொறியியலாளர், B.Sc., Eng.P.G.Dip (Eng), C.Eng. MIE, Consultant Engineer)
சிறப்பு விருந்தினர்கள் : திரு. A. ஈஸ்வரநாதன்
(உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
திரு. M. நடராஜா
(உடற்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்,
அதிவலர், மாணவர்கள்.


Call Doctors 0776458253
வைத்தியரை வீட்டிற்கே அழைத்திடுங்கள்
jaffnaonline.info/doc

## Doctor on Call

வயோதிபம், நீரிழிவு, குருதி அழுத்தம், நாட்பட்ட நோய்கள் முதல் தொடர் பராமரிப்பு தேவைப்படும் அல்லது எந்த நோயானாலும் வைத்திய சேவையை உங்கள் வீட்டிலேயே பெற விரும்பும் நிலையில் நீங்களோ உங்கள் அன்புக்கு உரியவர்களே இருந்தால், எம்முடன் வருடாந்த ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதன் மூலம் MBBS வைத்தியர்களின் சேவையினை குடா நாட்டின் எப்பகுதியிலும் உங்கள் வீட்டிலேயே பெறமுடியும். விபரங்களுக்கு : 0776458253

## பணியாள்கள் தேவை

திருநெல்வேலி சென்றல் நேர்சிங் ஹோமுக்கு அண்மையில் உள்ள விருந்தினர் இல்லத்திற்கு பின்வருவோர் வேண்டப்படுகின்றனர்.

* தோட்டப் பராமரிப்பாளர்
* அறை பராமரிப்பாளர்
* உணவு பரிமாறுபவர்
* சமையலாளர்

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலக நேரத்தில் சமுகம் தரவும்.

இல.51, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி, யாழ்.
021 222 1889
021 4922334


## மரண அறிவித்தல்கள்

### முத்தையா ஞானேஸ்வரி

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தையா ஞானேஸ்வரி நேற்று (18.02.2012) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மு.மகாலிங்கம் (மகன்)

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(14586)

### செல்லையா கைலாயநாதன்



(சிவசம்பு களஞ்சியம், யாழ்ப்பாணம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கைலாயநாதன் நேற்று (18.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

23, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(14849)

தகவல்
குடும்பத்தினர்

### சின்னையா றெஜினோல்ட் செல்லத்துரை

(கணக்காய்வாளர்)



அளவெட்டி தெற்கு, மாகியம்பதியைப் பிறப்பிடமாகவும் இல.682, ஆலடிச் சந்தி, மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா றெஜினோல்ட் செல்லத்துரை நேற்று (18.02.2012) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சோதிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மாணிக்கத்தின் அன்பு மருமகனும் பாக்கியரத்தினம், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இரத்தினசிங்கம், செல்லையா நிர்மலா ஆகியோரின் சகோதரனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் துளசியின் அன்புத் தகப்பனாரும் சஞ்சீவனின் மாமனாரும் லக்ஷா, கனிஷா, சஞ்ஜெய் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை AOG சபையினரால் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக காக்கைதீவு AOG சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

682, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.

தகவல்
துளசி (மகள்)
குடும்பத்தினர்.


## உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
அதிரடி விசேட சலுகை...!
கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



## திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி. கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதபுரம் மக்கள் அடிப்படை வசதியின்றி சிரமம்

கொழும்புத்துறை,பெப்.19

பாஷையூர் புனிதபுரம், உதயபுரம் பகுதியில் மீளக் குடியமர்ந்து வரும் மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளுக்கான குடிதண்ணீர்,மின்சார, வீதிப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகக் குடியிருப்புகளில் வசிப்போரும், வீடுகளைத் திருத்தம் செய்வோரும் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றனர். கடற்கரையை அண்டிய இந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உவர் நீராகக் காணப்படுகிறது. யாழ். மாநகர சபையால் பவுசர் மூலம் வழங்கப்படும் நீர் விநியோகமும் கிரமமாக நடைபெறுவதில்லையென சுட்டிக்காட்டப்படுகிறது.

அதேவேளை இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளதை சாதகமாகப் பயன்படுத்தி இரவு நேரங்களில் சேதமடைந்த வீடுகளில் தவறான நடத்தைகளில் பலர் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பகுதிகளுக்கு செல்லும் பிரதான பாதையான கடற்கரை வீதி 20 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளது.

இந்தக் குறைபாடுகள் தொடர்பாக அதிகாரிகளிடம் அமைப்புகள் என்பவற்றிடம் பலமுறை சுட்டிக்காட்டியும் இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-135)

## உபபணிமனை இடமாற்றம்

கைதடி,பெப்.19

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு அருகே இயங்கிவந்த சாவகச்சேரி பிரதேச சபையின் உபபணிமனை திருத்தவேலை காரணமாக அருகே உள்ள தனியார் வீடொன்றில் கடந்த மாதம் தொடக்கம் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-288)

# கரையோர மீன் பிடிக்கு தாவியுள்ள யாழ்.மீனவர்

### எரிபொருள் விலை உயர்வே காரணம்

யாழ்ப்பாணம்,பெப்.19

குடாநாட்டு மீன்பிடித் தொழிலாளர்கள் தற்போது கரையோர மீன்பிடித் தொழிலிலேயே ஆர்வம் காட்டி வருகின்றனர். எரிபொருள்களின் விலை அதிகரிப்பை அடுத்தே மீனவர்கள் இவ்வாறு கரையோர மீன் பிடியை நாடியுள்ளதாக மீனவர் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்ணெண்ணெய் மற்றும் டீசல் விலைகள் மிகக் கூடுதலாக அதிகரிக்கப்பட்டமையால் யாழ்.குடாநாட்டு மீனவர்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர் சமாசங்கள் மேலும் சுட்டிக்காட்டின.

படகுகளுக்காகப் பயன்படுத்தப்படும் எரிபொருள்கள் விலை உயர்ந்துள்ளன. ஆயினும் அதற்கேற்றவாறு குடாக்கடலில் வலைகளில் மீன் பாடும் அதிகமாக இல்லை. குடாக்கடல் மீன் வளங்கள் ஏற்கனவே இந்திய மீனவர்களின் 'ட்ரோலர்' படகுகளால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடு இப்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்த நிலையில் எமது மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களால் கிடைக்கும் வருமானம் படகுகளுக்கான எரிபொருள் செலவைக்கூட ஈடுசெய்யக் கூடிய வகையில் இல்லை. இதனாலேயே இப்போது அவர்கள் கரையோர மீன் பிடியை நாடுகின்றனர். ஒரு சில வசதி வாய்ப்புக் கொண்ட மீனவர்கள் தவிர வறிய மீனவர்களே அதிகம் இவ்வாறு தொழில் செய்கின்றனர் என்று சமாசத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

> படகுகளுக்காகப் பயன்படுத்தப்படும் எரிபொருள்கள் விலை உயர்ந்துள்ளன. ஆயினும் அதற்கேற்றவாறு குடாக்கடலில் வலைகளில் மீன் பாடும் அதிகமாக இல்லை.

இந்தக் கரையோர மீன் பிடியிலும் போதிய மீன்கள் கிடைப்பதில்லை. இதனால் மீன் விலையும் தற்போது மும்மடங்காக அதிகரித்துள்ளது. எதிர்வரும் நாள்களில் மீனின் விலை மேலும் உயர்வடைய வாய்ப்புக்கள் உள்ளன எனவும் மீனவர் சமாச வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (த-17)

## தட்டில் விழுந்த 5 ரூபாவை தூக்கி வீசிய பிச்சைக்காரன்

யாழ்ப்பாணம்,பெப்.19

பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் இப்போது ஐந்து ரூபா பிச்சைப் பணம் தனக்குப் போதாது என்று தெரிவித்துப் பிச்சைக்காரன் ஒருவர் அதைத் தூக்கி வீசிவிட்டுச் சென்றான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ்.நகரப்பகுதிக் கடை ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

யாழ். நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பிச்சைக்காரருக்கு வர்த்தகர்கள் பிச்சை கொடுப்பது வழக்கம்.

முன்னர் 50 சதத்தில் இருந்த பிச்சைப்பணம் படிப்படியாக அதிகரித்து ஐந்து ரூபாவை அடைந்தது. வர்த்தகர்களும் பிச்சைக்காரர்களுக்கு 5 ரூபா வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் வழமைபோன்று தன்னிடம் வந்த பிச்சைக்காரனுக்கு 5ரூபாவைத் தட்டில் போட்டார் வர்த்தகர். மறுகணமே அவருக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. பாத்திரத்தில் விழுந்த ஐந்து ரூபாக் குற்றியை எடுத்த பிச்சைக்காரன் அதை உடனே வர்த்தகரை நோக்கி வீசி விட்டு இந்தக் காசு என்னத்துக்குக் காணும்? இப்ப பொருள்களின் விலை உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டுக் கொண்டே அங்கிருந்து சென்று விட்டான்.

அதிர்ச்சியடைந்த வர்த்தகர் பின்னர் தன் அயற் கடைக்காரரிடம் இதுபற்றிக் கூறியுள்ளார். அப்போது சில வர்த்தகர்கள் தங்களிடம் அந்தப் பிச்சைக்காரன் 10 ரூபா தருமாறு கேட்டு வாங்கியதாகத் தெரிவித்தனர். பொருள்களின் விலை அதிகரிப்பு யாரைத்தான் விட்டு வைத்தது என்று அவர்கள் தமக்குள்ளே பேசிக் கொண்டனர். (த-17)

## திருக்கேதீஸ்வரத்துக்கு யாழில் இருந்து பஸ்

யாழ்ப்பாணம்,பெப்.19

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வரத்திற்கு இம்முறையும் விசேட பஸ் சேவைகளை நடத்துவதற்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. யாழ். மத்திய பஸ் நிலையம், மற்றும் காரைநகர், பருத்தித்துறை டிப்போக்களில் இருந்து இந்த விசேட பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளன.

நாளை திங்கட்கிழமை காலை இந்த விசேட சேவைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தனியார் பஸ்களும் திருக்கேதீஸ்வரத்துக்குச் சேவையில் ஈடுபடவுள்ளன. மகா சிவராத்திரியை ஒட்டி நாட்டின் பல பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திருக்கேதீஸ்வரத்தில் கூடவுள்ளனர்.

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் இசை ஆராதனையில் உள்ளூர் கலைஞர்களுடன் தென்னிந்திய கலைஞர்களும் பங்கு கொள்கின்றனர். (த-17)

## சேகரிக்கப்பட்ட கழிவுகளால் டெங்கு பரவும் அபாய நிலை



கைதடி,பெப்.19

சாவகச்சேரிப் பிரதேச சபையின் மந்த கதியான செயற்பாட்டினால் கைதடியில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அந்தப்பகுதி மக்கள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர்.

டெங்கு நோயின் அபாயம் குறித்து சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியுடன் அங்குள்ள சனசமூக நிலையங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தித் தேவையற்ற கழிவுப் பொருள்களை வளவில் வைத்திருக்காது அவற்றை பிரதேச சபையின் உதவியுடன் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அண்மையில் மேற்கொண்டனர். இதனையடுத்துப் பொதுமக்கள் உரப்பைகளில் கழிவுப் பொருள்களைப்போட்டு அவற்றைத் தமது வீதி ஓரங்களில் வைத்துள்ளனர். ஆயினும் 15 நாள்களுக்கு மேல் கடந்தும் பிரதேசசபை அவற்றை அகற்ற இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்தக் கழிவுகளால் அங்கு மீண்டும் நுளம்பின் தொல்லை அதிகரித்திருப்பதாகவும், இதனால் அவற்றை மீளவும் தமது வீட்டு வளவில் கொட்ட வேண்டிய அவல நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள்.

எனவே, இந்த விடயத்தில் சாவகச்சேரி பிரதேச சபை உடனடிக் கவனமெடுத்து இவற்றை அகற்றவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-288)

## கோப்பாய் வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனம் பழுது

### அவசர நோயாளர் சிரமம்

யாழ்ப்பாணம்,பெப்.19

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்தமையால் வைத்தியசாலையின் அவசர நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனம் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு வரும் வழியில் கோப்பாய் வைத்தியசாலையில் உள்ள அவசர நோயாளர்களையும் ஏற்றிக் கொண்டே யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்கிறது. இதனால் நோயாளர்களுக்கான சிகிச்சையும் தாமதமாகிறது.

இவ்வாறு கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் ஒரு நோயாளி அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்வதற்குப் பிறிதொரு வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனம் வரும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் வைத்தியசாலையில் பழுதடைந்த அம்புலன்ஸ் தற்போது திருத்தப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## விஞ்ஞான பீட மாணவர்கள் செவ்வாய் முதல் விரிவுரைக்கு

பண்டத்தரிப்பு,பெப்.19

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பை கைவிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் நடந்த சந்திப்பில் மாணவர் பிரச்சினைக்கு தாம் தீர்வு பெற்றுத் தருவதாக விரிவுரையாளர்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் இது தற்காலிக முடிவு எனவும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால் மீண்டும் பகிஷ்கரிப்பு நடத்தப்படும் எனவும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-130)

> இது தற்காலிக முடிவு எனவும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால் மீண்டும் பகிஷ்கரிப்பு நடத்தப்படும் எனவும் மாணவர்கள் கூறினர்.

## இணக்க சபைக்கு பிரதிநிதிகள்

நவாலி,பெப்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வரும் இணக்க சபைக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டமொன்று கடந்த வாரம் கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன் தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் சர்வோதயத்தின் நீதிச் சேவைப் பிரிவின் [illegible] கொண்டார். (த-100)

# 2 லட்சம் பனம் விதைகள் கடந்த போகத்தில் நடுகை

> குடாநாட்டில் பனை வளத்தை அதிகரிக்கவும், அழிந்த இடங்களில் மீண்டும் பனை நாற்றுக்களை நடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்.பெப்.19

யாழ். குடாநாட்டில் கடந்த ஆண்டில் இரண்டு லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த போகத்தில் நடுகை செய்யப்பட்ட இந்தப் பனம் விதைகள் முளைத்த பின்னர் இவை நாற்றுக்களாக நடப்படும். இதனை விட 60 ஆயிரம் பனம் நாற்றுக்கள் பயிரிடப்பட்டுள்ளன. இந்தப் பனை நாற்றுக்களும் இந்த ஆண்டில் நடுகை செய்யப்படும்.

குடாநாட்டில் பனை வளத்தை அதிகரிக்கவும், அழிந்த இடங்களில் மீண்டும் பன்ன நாற்றுக்களை பிடுங்கி நடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே பயிரிடப்பட்ட பனம் நாற்றுக்கள் யாவும் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கால யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்போது பனை மரங்களையும் வடலிகளையும் வெட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது- என்றார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MOORTHY GUEST HOUSE**
**மூர்த்தி கெஸ்ற் கவுஸ்**
250 ஆசனங்களுடன் குளிரூட்டப்பட்ட மண்டபம்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
T.P:- 021 221 9399
A/C Non A/C Rooms, hall



**ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்**



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை
flex அருள்
0777 614 186
4, IBC, Wellawate, Colombo 06, Sri Lanka.
மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்! Rs. 15,000/-
CAPTAIN TV MEGA TV JAYA TV
FLEX Graphic

## வீடு விற்பனைக்கு

யாழ். அபூபக்கர் வீதியில் வீட்டுடன் கூடிய 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே. 075 2430335

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: தொ.பே. 021 222 6266

## வவுனியாவில் வேலை வாய்ப்பு

அச்சகத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
★. கணினி இயக்குபவர் (Photoshop, Pagemaker தேர்ச்சியுடையோர்
★. Offset (Camado) இயக்குபவர்
★. புத்தகம் கட்டுபவர் (Binder)
தொடர்புகள் (சனிக்கிழமைக்கு முன்)
024 3243265,
024 2226747,

## தவறிவிட்டது

17.02.2012 வெள்ளிக்கிழமை அன்று யாழ் - கொழும்பு பஸ்சில் ஒரு தொகைப்பணம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 4538015

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

கொழும்பு பம்பலப்பிட்டியில் எம்மோடு தங்கியிருந்து எமது இரு 3, 5 வயது இரு பெண் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும் வீட்டுவேலைகளில் சிறு உதவிபுரியவும், 18-50வயதில் நற்குணமுள்ள பெண்ணொருவர் தேவை. சம்பளம்10,000/= இற்கு மேல். தொடர்பு: 0773819855

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மனோகரா தியேட்டருக்கு அண்மையில் உள்ள சிறிய வீட்டுடன் கூடிய காணி (2½ பரப்பு) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0777587947

# நீங்கா நினைவலைகள்

**31ஆம் நாள்**

மலர்வு: 30-11-1965
உதிர்வு: 14-01-2012



**4ஆம் ஆண்டு**

மலர்வு: 16-03-1989
உதிர்வு: 24-10-2008



திருமதி **வசந்தராணி ஜெயானந்தம்** **ஜெயானந்தம் ஜெயகண்ணன்**

விழிபொங்கும் சிரிப்பெறிந்து செல்லும் வசந்த
கோகிலமே! - எம் மகிழ்ச்சியின் மகோன்னதத்
திறவுகோலாய் இருந்த நீங்கள் கணப்பொழுதின்
கால இடைவெளிக்குள் கட்டணம் ஏதுமின்றி
அரனடி சேர்ந்து நிரந்தரமான பிரிவின்
வலிகளை (த்) தந்து சென்றதும் ஏனோ? - தாயே
சோபை இழந்த நம் வாழ்க்கை வானிற்கு
ஒளியூட்ட விரைந்திடும் திருநாள் எந்நாளோ?

எமது குடும்பவிளக்கின் மறைவையொட்டி இடம்பெறு கின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ் வும் இன்று (19-02-2012) மு.ப 11 மணியளவில் யாழ். நல்லூர், திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் (கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோயிலுக்கு அருகில்) இடம்பெறும். அத்தருணம் யாவரையும் வருகைதந்து நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். (தனிப்பட்ட அழைப் பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

காத்திருப்புடன்
த. ஜெயானந்தம் (கணவர் பாஸ்கரன் சிற்பாலயம்)
பிள்ளைகள் - கஸ்தூரி, றோசன்.

17, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(14828) (7,10)

# கண்ணீர் அஞ்சலி



அம்பாள் மரக்காலை
உரிமையாளர்களின்
பாசமிகு மாமனார்
**கந்தையா சண்முகராசா**
(உரிமையாளர், அம்பாள் ஸ்ரோர்ஸ்,
வீரமாகாளி அம்மன் கோயில்)
இவரது பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொண்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
அம்பாள் மரக்காலை, வீரமாகாளி அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சி/9421) (2-7-9)

FAZER
eden MOTORS



YAMAHA
முன் பதிவுகளுக்கு அழையுங்கள் - 077 2737622
**ஈடன் மோட்டர்ஸ்**
கிளிநொச்சி- 021 4925604, வவுனியா - 024 4925775

# Canada Supper Visa



கடந்த வருட இறுதியில் கனடாவில் அறிமுகப்படுத்தப்பட்ட தாய், தந்தையரை, பிள்ளைகளுடன் குறுகிய காலத்தில் இணைத்துக்கொள்வதற்கான Parent and Grand Parent Supper Visa வைப் பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகள் எம்மால் வழங்கப்படுகின்றன.

★ இவ்விசாவை பெறுவதன் மூலம் உங்கள் பிள்ளைகளுடன் 10 ஆண்டுகள் நீங்கள் Canda வில் வாழலாம். அதற்குரிய செலவினையும் Medical Insurance ஆகிய பொறுப்பினை உங்கள் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளல் வேண் டும்.

★ இதுவரை தாய், தந்தையரை ஸ்பொன்சர் செய்து Visa கிடைக்கப் பெறாதவர்களும், வேறு காரணங்களுக்காக Visa மறுக்கப்பட்ட பெற்றோர்களும் இவ் Visa வினைப்பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கலாம்.

★ மேற்குறிப்பிட்ட தவிர்ந்த வேறு எவ்விதமான Visa சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் எமது ஆலோசனை களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு: 0778 980652
Rainbow Travels Ltd
113, Chatham St,
Col - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராண்ட் ஹோட்டல் நட்சத்திர விருது

நுவரெலியா, பெப்.19




நுவரெலியாவில் அமைந்துள்ள 4 நட்சத்திர அந்தஸ்து கொண்ட கிராண்ட் ஹோட்டலுக்கு அண்மையில் 2011 ஆம் ஆண்டு பெரிய வர்த்தக அடிப்படையில் நட்சத்திர விருது மாகாண அமைச்சினால் வழங்கப்பட்டது.

இந்த விருதானது வர்த்தகத் துறையில் சகல முறைகளிலும் ஒழுங்குபடுத்தப்பட்டு, வழி நடத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டதாகும். இந்த விருதைப் பெறுவதற்காக இந்த நிறுவனம் பல பிரிவுகளில் போட்டியிட்டதுடன், அந்த வகையில் வர்த்தக ரீதியிலான வளர்ச்சியையும், ஊழியர்களின் நலன்களை நிறைவேற்றும் முறையினையும் கருத்தில் கொண்டு மற்றும் சமுதாயத்திற்கு எவ்வகையில் சேவைகளை வழங்கியது என்ற அடிப்படையிலும் இந்த விருது கிராண்ட் ஹோட்டலுக்கு வழங்கப்பட்டது.

இந்த விருதினைப் பெற்றதற்காக கிராண்ட் ஹோட்டல் நிறுவனம் மிகவும் பெருமைப் பட்டுக் கொள்கின்றது. இந்த ஹோட்டலில் 54 அறைகள், வரவேற்பறை, ஓய்வு அறைகள் என்பன சீர்த்திருத்தப்பட்டதோடு புதிதாக தேநீர் களம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது. அத்தோடு இந்த நிறுவனத்திற்கு இறுதி ஆண்டு அறிக்கைகளாக இலங்கை பட்டயக் கணக்கறிஞர் விருதும் கிடைக்கப்பெற்றது. (த)



சாந்தம் வைத்தியசாலை திறப்பு விழா வைபவத்தின்போது சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதியின் சிரேஷ்ட இணைச் செயலாளர் கீத் ஸ்ரீ கெங்காநாத் அபயவத்தன நாடாவை வெட்டி வைத்தியசாலையை திறந்து வைக்கிறார். (த)

# டீமோவின் பராமரிப்புச் சேவை

உலகின் மிகச் சிறந்த வாகனத் தயாரிப்பான Mercedes- Benz வருமிடத்தில் இலங்கையில் Diesel & Motor Engineering PLC (DIMO) நிறுவனத்தைத் தவிர வேறு எந்த நிறுவனமும் நினைவில் வருவதற்கு சந்தர்ப்பம் இல்லை. ஜேர்மன் மோட்டார் வாகன முதலீட்டாளர்களின் உள்ளூர் உத்தியோகப்பூர்வ விநியோகஸ்தராக ஏழு தசாப்தங்களாக டீமோ விளங்குகின்றது.

இந்த 'நட்சத்திர' அந்தஸ்தின் ஊடாக இலங்கையின் போக்குவரத்துத் துறையில் புதிய மாற்றங்கள் நிகழ்வதற்கு டீமோ ஒரு கருவியாக விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Mercedes- Benz எத்தகைய தனித்துவம் வாய்ந்த வியாபாரக்குறி என்பது யாவரும் அறிந்த ஒன்று. உலகின் முதலாவது மோட்டார் வாகனத் தயாரிப்பாளர் களாக 1886இல் அறிமுகமாகி இற்றைவரை இதன் அசுர வளர்ச்சி அபரிதமானதாகத் திகழ்வதுடன் உலகின் மிகச் சிறந்த வாகனத் தொழில்நுட்பங்களை உடனுக்குடன் அறிமுகப்படுத்தும் பெருமையையும் இது கொண்டுள்ளது. வாகன ஓட்டுநர்களுக்கும் பயணிகளுக்கும் சிறந்த அனுபவத்தைப் பெற்றுத் தரும் Mercedes- Benz ரக வாகனங்கள் அவற்றில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களுக்கும், உட்புற வசதிகளுக்கும் பேர் போனவை.

ஆகவே, உயர்தர வசதிகளைக் கொண்ட இந்த வாகனங்கள் அதற்கேயான தனித்துவ முறையில் பராமரிக்கப்பட வேண்டியன.

இவ்விடயத்தில் டீமோவின் தலைச்சிறந்த வாகனப் பராமரிப்பு சேவைகள் முதலிடம் பெறுகின்றன.

24 மணிநேர நாடளாவிய வீதியோர உதவிகள் முதல் முழுமையாகப் புதுப்பிக்கும் சேவைகள் உள்ளடங்களாக டீமோவின் விற்பனைக்குப் பின்னரான சேவைகள் அனைத்துமே எந்தவொரு Mercedes - Benz உரிமையாளரையும் மனம் குளிர்விக்ககூடியன.

Mercedes Benz மோட்டார் வாகனங்கள் அனைத்தும் நேர்த்தியான தொழில்நுட்பங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. பிரத்தியேகமான நவீன உட்புற வடிவமைப்பை உடையவை. டீமோவில் பணிபுரியும் தொழிற்சாலையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இந்த விசேட ரக வாகனங்களை நுட்பமாகத் திருத்தக்கூடிய ஆற்றல் கொண்டவர்களாக உள்ளனர். தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட்டுவரும் 'Star Diagnostics' தொழிநுட்ப முறைகளும் வாகனத்தின் உடற்பகுதியில் சேதங்கள் மற்றும் பாதிப்புகள் நிகழும் பட்சத்தில் அவற்றை முன்னர் இருந்த தோற்றத்தில் பெற்றுத்தரக் கூடிய இயந்திரங்களின் (Celette body distortion straightening machinery) மூலம் சீரான திருத்த சேவைகள் துரித கதியில் வழங்கப்படுகின்றன. எவ்வகையான திருத்தங்களானாலும் அசல் Mercedes-Benz உதிரிப் பாகங்களே பயன்படுத்தப்படுகின்றன. (த)

## சி.பி.எல்.பூட்ஸ் மூலம் அன்பளிப்பு

மஞ்சி, ரிட்ஸ்பரி மற்றும் டியாரா போன்ற மக்கள் மனம் வென்ற பிஸ்கட் வகைகளை தயாரித்து விற்பனை செய்து வரும் சிபிஎல் பூட்ஸ் இன்டர்நஷனல் நிறுவனம் பாடசாலை மாணவர்களின் நலனை எப்போதும் கருத்தில் கொண்டு செயற்பட்டு வரும் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கமைவாக கல்விச் சேவை மற்றும் கல்விசார் குறைநத வசதிகள் படைத்த பாடசாலைகளின் வளங்களை மேம்படுத்தும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் மேற்கொண்டிருந்தது.

கடுவெல், ரணால பகுதியில் அமைந்துள்ள சி.பி.எல் பூட்ஸ் இன்டர்நஷனல் நிறுவனமானது, அப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளின் பின்தங்கிய நிலையை மாற்றியமைத்து அபிவிருத்தி செய்வதற்கு விசேட செயற்திட்டமொன்றை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

பிரதேசத்தின் பிரபல்யம் பெற்ற பாடசாலையான ரணால கனிஷ்ட வித்தியாலயத்தின் நீண்ட காலத் தேவையாக அமைந்திருந்த பல்நோக்கு ஒன்று கூடல் அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது. சுமார் 70 லட்சம் பெறுமதியான பணத்தொகை செலவீனத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த கட்டிடத்தில் வகுப்பறைகள், ஒன்றுகூடல்கள், வெவ்வேறு வைபவங்கள் மற்றும் கலை நிகழ்வுகளுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். (த)

# ஹற்றன் நஷனல் வங்கியின் புதிய கணக்குகள் அறிமுகம்



ஹற்றன் நஷனல் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதிஷ்டான மற்றும் யௌவன அபமான கணக்குகள் தொடர்பாக மானிப்பாய் கிளை வாடிக்கையாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்று கடந்த 27 ஆம் திகதி கிளை முகாமையாளர் ஆ.து. லோரன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரியும் மற்றும் வெளிநாட்டு பணப்பரிமாற்றத்தை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட அதிஷ்டான கணக்கு பற்றியும் அக்கணக்கை ஆரம்பிப்பதன் மூலம் அடையும் நன்மைகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இன்றைய இளைஞர்களின் சிறப்பான எதிர்காலத்துக்காக பல வசதிகளை கொண்ட 'யௌவன அபமான' கணக்கு பற்றியும் அதனால் வழங்கப்படும் குறுங்கால, நீண்டகால கடன்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஹற்றன் நஷனல் வங்கியின் மானிப்பாய் வாடிக்கையாளர் சேவை நிலையம் ஓர் கிளையாக தரமுயர்த்தப்பட்டு ஓர் ஆண்டு நிறைவை குறிக்கும் முகமாக நடத்திய விசேட 'சிங்கிதி' சிறுவர் சேமிப்பு கணக்கின் அதிஷ்டசாலிகளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி. சிவலிங்கம் தெரிவு செய்தார். (த)

# புதிய வியாபாரக் குறியில் Velona

இலங்கையின் ஆடை உற்பத்தியில் தனக்கென முத்திரை பதித்த 'வெலோனா' நாமம் பல தசாப்தங்களுக்கு மேலாக அசைக்க முடியாத இடத்தில் உள்ளது. இன்றும் இலங்கையர் மனதில் நீங்காத இடம்பெற்றுள்ளது. 1940இல் இலங்கையரான ரஸ்கின் பெர்னாண்டோவினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் 1970-80 காலப் பகுதிகளில் இலங்கையின் தைத்த ஆடைகள் உற்பத்தியில் வெற்றிக்கொடி கட்டிப் பறந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நாமத்தின் புகழ் ஒரு காலத்தில் மங்கியிருந்தாலும், இலங்கையின் இளம் தொழில் முனைவர் ஒருவரின் முயற்சியால் வெலோனாவின் பண்டக் குறி புதுப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பெயர் உள்நாட்டைத் தாண்டி வெளிநாட்டிலும் புகழ்பெறத் தொடங்கியுள்ளது.

வெலோனா நிறுவனத்தைக் கொள்வனவு செய்த Thread Works (Pvt) Ltd. (TW) தனது உற்பத்திகளை மேலும் விஸ்தரித்துள்ளது. தற்போதைய புதுப்பித்தல் முயற்சியை அடுத்து TW உயர்தரம் வாய்ந்த தயாரிப்புக்களையும் பொதியிடலையும் அறிமுகப்படுத்தியுள்ளது. Thread Works by Velona என்ற புதிய பண்டக்குறியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உற்பத்திகள் அனைத்தும் பல தசாப்த காலமாக தம்மீது நம்பிக்கை வைத்துள்ள வாடிக்கையாளருக்கு உயர்தரம் வாய்ந்த தரமான தயாரிப்புக்களைத் தொடர்ந்தும் வழங்கத் தயாராகவுள்ளது.

இந்தப் புதிய முன்னெடுப்புகள் பற்றிக் கருத்துத் தெரிவித்த Thread Works நிறுவனத்தின் தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமான கிஹான் டி சொய்சா "2008ஆம் ஆண்டில் இந்தப் பெயரை உள் வாங்கியதிலிருந்து எம்மால் 'வெலோனாவை' மீள் நிலைப்படுத்தக்கூடியதாக விருந்தது. இதன்மூலம் சிறந்த ஒரு நிலையை நாம் எட்டியுள்ளோம். வாய்ப்புக்கள் அதிகம் கொண்ட இந்தப் பண்டப் பெயரின் உரிமையாளராக நாம் மாறக்கிடைத்தமை எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம். எமக்கு சரியான நெறிப்படுத்தலும் உள்ளது. எம்நாட்டின் சுயஉற்பத்திகளை ஊக்குவித்து அவற்றை வெளிநாடுகளிலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதில் நான் தீவிர ஆர்வம் கொண்டுள்ளேன். எம்நாட்டில் திறமையானவர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்களை இனங்கண்டு சரியான வகையில் நெறிப்படுத்தினால் சிறந்த வியாபாரப் பெயர்களை எம்மால் உருவாக்கி சர்வதேச மட்டத்தில் வெற்றி பெறுவதற்கான ஆற்றலைப் பெறமுடியும்" என்றார். (த)

# நுண் நிதி வாடிக்கையாளர்களை மகிழ்வூட்டிய கொமர்ஷல் கிரடிட்

கொமர்ஷல் கிரடிட் தனது வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான அனுபவத்தை வழங்கி இலங்கையின் நிதித் துறையில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரை இலங்கை முழுவதும் பரந்து இருக்கும் 90,000 நுண் நிதியில் உள்ள வாடிக்கையாளர்களில் 5,000 தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் அவிசாவெல, கலுஅக்கலவில் உள்ள லெஷர் வேர்ல்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பலதரப்பட்ட உற்சாகமூட்டும் நிகழ்வுகளுடன் [illegible] நேரத்தை செலவிட்ட அவர்கள் மொழி, கலாச்சார மற்றும் பூகோள எல்லைகளுக்கப்பால் அனைவருடனும் பழக ஒரு சந்தர்ப்பமாகவும் அமைந்தது. கொமர்ஷல் கிரடிட்டுடன் இணைந்தது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்பதே அனைவரின் ஏகோபித்த குரலாக இருந்ததுடன், கொமர்ஷல் கிரடிட்டின் ஆதரவுடன் நுண் நிதி செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்பட்டதையிட்டு நன்றியுள்ளவர்களாக உள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனர் பி. டி. டப்ளியூ. ஏ. சில்வா, கொமர்ஷல் கிரடிட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் எகொடகே, தொழில் புரியும் பணிப்பாளர் திருமதி கேயா எகொடகே உள்ளிட்ட கொமர்ஷல் கிரடிட் அதிகாரிகள் மற்றும் விருந்தினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

மீசாலை, அல்லாரை வீதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0779711972

MD

## நெல்லி சாறு

தொகையாகத் தேவைப்படுகின்றன

மேலதிக விபரங்களுக்கு கிழமை நாட்களில் நேரில் அல்லது தொலைபேசி 2586622 இலக்கத்தில் பிரதான செயற்பாட்டு அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**லங்கா கனரீஸ் லிமிடெட்**

45/75, நாராஹேன்பிட்டி வீதி, கொழும்பு 05.
தொலைபேசி: 0112-586622.
தொலைநகல்: 0112-368480.

## Herbal Health Care Center

யாழ்ப்பாணத்து சித்த மருத்துவமுறைகள், இந்தியா கேரளா ஆயுள்வேத, சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.

**சித்தமருத்துவ நிபுணர்களின் சேவை**

01. பொதுமருத்துவ நிபுணர், மகளிர் மருத்துவ நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர்கள் சிகிச்சைகளை மேற்கொள்ளுகிறார்கள்.
02. பாரம்பரிய மருத்துவர்களின் சேவை
03. Fair Pharma (Pvt) Ltd மருத்துவசேவை இந்நிறுவன வைத்தியர்கள் மாதம் ஒரு தடவை இந்தியாவில் இருந்து வருகை தந்து சிகிச்சையளிக்கிறார்கள். (இவர்கள் இருதய அடைப்பு, புரஸ்ரேட் நோய், ஒற்றைத் தலைவலி, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நிலைமை, வாதரோகங்கள், ஈரல் நோய், மன அழுத்தம் போன்ற பிரச்சினைக்குச் சிறப்பாகச் சிகிச்சை செய்கிறார்கள்)
04. மருத்துவ எண்ணெய்க்குளியல், மசாஜ், பஞ்சகர்ம கிசிச்சை, பாரிசவாதம நோயாளிகளுக்கான சிகிச்சை மற்றும் தீராத வயிற்றுப்புண் போன்றவற்றுக்கும் சிறப்பான சிகிச்சை நடைபெறுகிறது.

விரைவில் சுற்றுலாப்பணிகளுக்கான மசாஜ், மருத்துவக் குளியல் இடம்பெறவுள்ளது.

சித்த ஆயுர்வேத, பாரம்பலிய மருத்துவ சேவையைத் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 0750413579

**65, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்,**
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

# மலேசியா

**தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**



மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் — முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

**GOODLINE MANPOWER SERVICES**

38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள், புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.

யாழ் அக்சவியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி சந்திக்கு அண்மையில்1000 சதுரஅடி விஸ்தாரமான இரண்டாம் மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 4002780

## கார் விற்பனைக்கு

MORRIS OX FORD DIESEL CAR விற்பனைக்குண்டு.

தொடர்பு : 22/2, கொண்டாவடி லேன், பண்டாரக்குளம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P : 075 0441948

## வீடு வாடகைக்கு

நல்லூர் முத்திரைச்சந்தியில் வீடு உடன் வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 071 638 3502

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1981 சித்திரை 2ஆம் பாதம் செவ்வாய் 7இல் கி.பா.70, இல.பா. 40 உள்ள டாக்டருக்கு.

டாக்டர்/எஞ்சினியர் மணமகன்தேவை சைவ போசனம் விரும்பத் தக்கது.

தொடர்பு : 077 7143770

## காணியும் வீடும் விற்பனைக்கு

நெல்லியடி, மகாத்மா வீதியில் 6 பரப்பு காணி யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**075 6407873**

(14405)

## திருமண சேவை

டாக்டர்கள், பொறியியலாளர்கள், B.SC. M.SC. B.COM. B.A. பட்டதாரிகள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. மணமக்களைத் தேடுவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

"சிவா திருமண சேவை"
100, அரசடி வீதி, கந்தர்மடம்.
(யாழ்/இந்து மகளிர் கல்லூரியடி)
T.P : 077 8996281

## வீடு வாடகைக்கு

நல்லூர் ஜோன்பொஸ்கோ பாட சாலைக்கு அருகில் யாழ். கச்சேரிக்கு அண்மையில் கார் பார்க் வசதியு டன் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட புதிய மாடி வீடு ஒரு வருட முற்பணத்துடன் வாடகைக்கு உண்டு. கீழ்த் தரையில் 2 அறை களும், மேல் தட்டில் 3 அறைகளும் உண்டு. நிறு வனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு: 077 0770 727

(14588) (46-6-9)

## விநியோகஸ்தர்கள் தேவை

Wanted distributers for the following imported Fruit Drinks from Bangkok.

**Yoku fruit Juice 500 ml**
(Orange/Strawberry/Pineapple/Lychee)

**Engery Drink - fyrer horse - 250 ml can**

**Normal fruit juice - 325 ml can**
(Mango/Mangusteen/Orange/mixed fruit & Nelli)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Contact :
ASIRI SONS (Pvt) Ltd,
35/5, Rosmend Place, Colombo-07
T.P. No: 112690470
Mobile: 0722218763

(C9045.7.10)

# MOBILE PHONE

**UNLOCKING DEVICES** விற்பனைக்கு உண்டு
முழுமையான செயன்முறை விளக்கத்துடன்

(MX Box , SE Tool, Dragon, Infinity, Z3X, Octopus, ATF, Spiderman... etc)

இலங்கையின் முன்னணி ஆசிரியர் ரிஸ்வியின் **MOBILE PHONE REPAIRING** வகுப்புக்கள் மற்றும் திருத்த வேலைகள்

- Warranty
- Installations
- Unlocking Instruction
- Flashing Instruction
- File Downloading
- Flash file DVD
- Online Support

**KINGTECH**

No. 231 ½, Santhos Plaza, Main Street, Colombo 11.
Tel : 0112 334058 / 0723 402243 / 0715 656778

## IMMEDIATE VACANCIES

# SALES EXECUTIVES
## (2K / DEBEER PAINTS)

- More than 2 Years experience in paints or Hardware field
- Age below 30 Yrs.
- Should be a self-motivated and result oriented professional
- Preference will be given to candidates with experience in selling 2k paints
- Fluent in English language and Communicate in Tamil language would be an added advantage
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the Island

Apply with company CV and **indicating the post** on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.

C.P.T. **General Manager,**
**CAUSEWAY PAINTS Lanka (pvt) Ltd.**
**15, Noel Mendis Mawatha**
**Modarawila Industrial Estate, Panadura**

LUXURY EMULSION KENLUX Sunny Colour box Farécla

## மரண அறிவித்தல்



## கிருஷ்ணர் சிவநேசபாக்கியம்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் இல.79, குட்செட் வீதி, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணர் சிவநேசபாக்கியம் (18.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி முருகேசு - தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி மாதவர் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. மாதவர் கிருஷ்ணரின் அன்பு மனை வியும் ஆவார்.

அன்னார் ஞானாம்பிகை (கொழும்பு), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, குமாரசாமி, மகேஸ்வரன், சண்முகம், பாலசுப்பிர மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி (மூளாய்), மகாலட்சுமி (கொழும்பு), தில்லைநாதன் (கனடா), பூலட்சுமி, (வவுனியா), செல்வராணி (கனடா), விஜயநாதன் (கனடா), தாமரைச்செல்வி (உதவி தபால் அதிபர் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வரட்ணம் (மூளாய்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் - அதிகாரி) மற்றும் விஜயராணி (கனடா), பத்மநாதன் (கனடா) அமுதலிங்கம் (கனடா), கலாஜோதி (கனடா), ஜெயந்தன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், சுபாசினி (கொலன்ட்), சுதாசினி (மூளாய்), முருகதாசன் (அவுஸ்திரேலியா, ரமணதாசன் (சேவா லங்கா கிளிநொச்சி), சொரூபி (கொழும்பு), ஹரணியா (கனடா), முகுந்தன் (கொழும்பு பல்கலைக்கழகம்), ஆதித்தன் (வவுனியா), நிலானி (கனடா), நிவேதன் (கனடா), சிவானி (கனடா), தயானி (கனடா), ராஜீவன் (வவுனியா), வைஷ்ணவி (வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாருஜன், சியாரா (கொலன்ட்), சாம்பவி, சந்தோஷி (மூளாய்), கிருஷான் (அவுஸ்திரேலியா), தர்ஷாந் (சுன்னாகம்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூத உடல் இறுதி அஞ்சலிக்காக வவுனியாவில் அவரது மகளின் இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைக்காக திங்கட்கிழமை காலை அவரது சொந்த இடமான பொன்னாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு (21.02.2012) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொன் னாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

மானிப்பாய் நகர சபை பிரதேசத்தில் சிறிய வீடு அல்லது வீட்டின் ஒரு பகுதி வாடகைக்குத் தேவை. தொடர்பு : 021 3210804

## வீட்டுடன் காணி விற்பனை

நல்லூர், செட்டித் தெரு நடுப்பகுதியில் அமைந்துள்ள 3 பரப்பு 5.3 காணி சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்புகளுக்கு: 0750424927

## காணி உடன் விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில், அமைந்துள்ள பழனியாண்டவர் கோயிலுக்கும் வன்னியசிங்கம் வீதிக்கும் இடையில் 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு : 021 2219048 (14447)(7-8)

## வேலையாள் தேவை

நகைக்கடை ஒன்றுக்கு வேலை ஆள் தேவை. தொடர்பு : 0775035549.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் (02.10.1984) பூராடம் 2 இல் செவ்வாய் Account Assistant ஆகப் பணிபுரியும் 5' 3'' உயரமுள்ள மணமகளுக்கு செவ்வாயுள்ள தகுதியான மணமகன் தேவை. விபரங்களுக்கு மாலையில் 077 9940039 இலக்கத்தில் பெற்றோருடன் தொடர்புகொள்ளவும். (14754)(45)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## மணமகள் தேவை

33 வயது நிரம்பிய வளர்ப்பு மகளுக்கு கிறிஸ்தவ மணமகன் தேவை.
தொடர்பு : 021 3210804

## THANU COMMUNICATION & NET CAFE

உடனடி வேலை வாய்ப்பு உண்டு. Communication One Year அனுபவமுள்ள பெண் அல்லது ஆண் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 0778025702, 021 7451825

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத்தெரு பகுதியில் 2 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 6303115 (14594) (45-8-9)

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி முன்பாக இயங்கும் தேநீர்ச்சாலைக்கு

- ★. டீ மேக்கர்
- ★. சப்பிளையர்
- ★. றொட்டி மேக்கர்
- ★. சமையலாளர் (உடன் தேவை)

தொடர்பு : தனுஷ் கபே,
66, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்.

## தோட்ட வயல் காணி விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கில் 14 பரப்பு வயலும் (குளவெளி) தோப்பு போதிப்பிள்ளையார் கோயிலுக்கு வடக்கு வீதியில் 14½ பரப்பு தோட்டமும் (வாரியார்பங்கு) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 071 4922907
077 7169657

## Dewmina Design Furniture

Designers & Manufacturers of Quality Furniture

(Specialist for Pantry Cupboards)





உங்களது விருப்பத்துக்கு ஏற்ற வடிவில் உங்களது வீடுகள், அலுவலகங்களில் அலுமாரிகள் மற்றும் மாபிள் வேலைகள் அழகான முறையில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**New Kamal Ceremic**
Stanley Road, Jaffna.

T.P: 021 222 2085, 078 514 8310, 077 5670038, 072 232 2729



## சீரடி சாயிநாதரின் வீதி உலா

**20.02.2012**

அன்பான பக்தர்களே!

நாளை (20.02.2012) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு சாமங்களும் விசேட பூசைகள் இடம்பெறும்

1ஆம் சாமம் - மாலை 6 மணிக்கு
2ஆம் சாமம் - இரவு 7.30 மணிக்கு
3 ஆம் சாமம் - நள்ளிரவு 12 மணிக்கு
4ஆம் சாமம் - அதிகாலை 4மணிக்கு

### பாபாவின் வீதி உலா

இரவு 8.30 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் வீதி, கோயில் வீதி, செட்டித் தெரு ஒழுங்கை, செட்டித்தெரு, பருத்தித்துறை வீதி, 2ஆம் கட்டை வீதி, நாவலர் வீதி ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

★ நள்ளிரவு 12 மணிக்கு அடியார்கள் தமது கரங்களாலேயே பாபாவுக்கு அபிடேகம் செய்யமுடியும்.

**பாபா அருள் பெற அனைவரும் வருக!**

"சீரடிசாயி மந்திர்"
314, நாவலர் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.
தொலை.பே. இல. 077 4815336, 077 7222 568

**பா.ராகவன்**
(ஸ்தாபகர்)

திங்கள் முதல் பெற்றுக்கொள்ளலாம்.



திங்கள் தோறும் வெளிவரும் முதல்தரக் கையேடு

# புலமைச்சுடர்

தரம் 5, 4, 3 மாணவர்களுக்கான ஒரு வாரகால ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறப்பு வழிகாட்டி

**முற்றிலும் பாடத்திட்டத்தைத் தழுவியது 21**

பக்கங்கள் : 20 | 20.02.2012 - 26.02.2012 | 15/= இல் பரிபூரணபலன்

### பாராட்டுப் பரிசு

கடந்தவருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்த அல் - அஷ்ஹர் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களான எஸ். அன்வறா, எம். ஏ. எம். றிஸ்கி, எம்.பி. ஜெஸ்மியா ஆகியோரையும் இவர்களை இந்நிலைக்கு உயர்த்திய பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் புலமைச்சுடர் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. இவர்களில் 181 புள்ளிகளைப் பெற்ற செல்வி சுலைமாலெவ்வை அன்வறா புலமைச் சுடருக்கு வழங்கிய செவ்வி பக்கம் 02 இல் பிரசுரமாகின்றது.

சித்தியடைந்த மாணவர்கள்



எஸ். அன்வறா



எம். ஏ. எம். றிஸ்கி
எம். பி. ஜெஸ்மியா

### கையேட்டை அலங்கரிப்பவை

- தரம் 05 மாணவர்களுக்கான வினாத்தாள் I, II
- தரம் 5, 4 கற்றல் குறிப்புகள்
  தமிழ்மொழி
  கணிதம்
  சுற்றாடல்
  ஆங்கிலம்
- பகுதி I வினாக்களுக்கு விடை காணும் விளக்கங்கள்
- கட்டுரைக்களம்
- பெற்றோருக்கான ஆலோசனைகள்
- மூளைக்கு வேலை
- கடந்தகால வினாக்கள்
- வாரம் ஒரு பிராணி
- பயிற்சிகள்
- தரம் 03, 04 மாணவர்களுக்கான வினாத்தாள் II
- தரம் 3 கற்றல் குறிப்புகள்
  தமிழ்மொழி
  கணிதம்
  ஆங்கிலம்

சித்தியடைய வழிகாட்டிய பாராட்டுக்குரிய ஆசிரியர்கள்



### இவ்வாரக் கையேட்டை அலங்கரிக்கும் புலமைச்சுடர் வளவாளர் குழாம்



P. அம்பிகைபாகன் | U. L. M. சாஜித் | T. திலீப்குமார் | N. S. தீபன் | S. கபிலன் | P. பரமதயாளன் | M. L. M. பைசல் | R. பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL HIGHER DIPLOMA (IHD) *in* IT & Management Specialisations

TOWARDS B.SC. (HONS) SPECIALISED DEGREE IN SRI LANKA OR IN THE UK
FROM UNIVERSITY OF WOLVERHAMPTON (UK) | BUCKINGHAMSHIRE NEW UNIVERSITY (UK)
*AND OTHER LEADING UNIVERSITIES IN UK*

EDhat INTERNATIONAL



நமது நீண்டகால கல்வித் திட்டங்களில்,தரத்தையும் தொடர்ச்சியையும் விரும்புவோரின், மாற்றமடைந்துவரும் கல்வி மற்றும் தொழில்சார் தெரிவுகளைப் பூர்த்தி செய்யும் வகையில், Edhat International Higher Diplomaக்கள் விளங்குகின்றன. போட்டிநிறைந்த உலகில், கல்வி நிகழ்ச்சிகளில் அனுமதி பெறுவதற்கான பல்வேறுவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம், EdHat தராதரங்கள், ஒருவரின் கல்வி மற்றும் தொழில்சார் ரீதியான பல்வகைத் தன்மையை அங்கீகரிக்கின்றனது.

இச்சந்தர்ப்பத்தில், EdHat மாணவர் என்ற வகையில் உங்களை வரவேற்று உங்கள் வாழ்க்கையின் முக்கியமான இக்காலப் பகுதியில் சகலவெற்றியும் கிட்டவாழ்த்துகிறேன். EdHat தெரிவு செய்ததன் மூலம், மாற்றமடைந்துவரும் உலகிற்கு பொருத்தமான, அதேவேளையில் அதிக உறுதிப்பாட்டையும் வாழ்நாள் குறிக்கோள்களை அடைவதற்கான உத்தரவாதத்தையும், வழங்கக்கூடிய கல்வியைப் பெறவிரும்பும் புத்திக் கூர்மையுள்ள பெருந்தொகையான மாணவர்களுடன் நீங்களும் இணைந்து கொள்கிறீர்கள்.

***Dr. Mike Anderson,*** *Chief of Academic Awards of EdHat International , UK*

## EdHat International's UK Partner Universities



UNIVERSITY OF WOLVERHAMPTON
KNOWLEDGE • INNOVATION • ENTERPRISE

*The Message Translated in Tamil*

பொருத்தமான EdHat International Higher Diploma தராதரமுள்ள மாணவர்களுக்கு, உயர்நிலைக் கல்வியைப் பயில்வதற்கான வாய்ப்பை வழங்குவதில் Wolverhampton பல்கலைக்கழகம் மகிழ்ச்சி கொள்கிறது. எதிர்காலத்தில் எம்மிடம் வந்துகல்விகற்கும் பொருட்டு Edhat Higher Diploma தாரர்கள் பலரைவரவேற்க நாம் காத்திருக்கிறோம்.

***Jane Nelson,*** *Pro-Vice Chancellor, Student Affairs, University of Wolverhampton, UK*

EdHat International Higher Diploma தராதரமுடையவர்களை, ஐக்கியராஜ்யத்திலுள்ள எமது பல்கலைக்கழகத்தில் அல்லது இலங்கையில் உள்ள பங்காளிவளாகம் ஒன்றில், வியாபாரத்துறை சார்ந்த கலைமானிப்பட்ட இறுதியாண்டில் அனுமதிபெறுவதற்கான தகுதியுடையவர்கள் என்பதை Backinghamshire பல்கலைகழகத்தின் சார்பில் உறுதிப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

***Prof. Derek Godfrey,*** *Deputy Vice Chancellor, Buckinghamshire New University,* ***UK***



bucks new university

*The Message Translated in Tamil*

## Programme Advancement - Computing

**Proceed Towards Final Year at the University of Wolverhampton or Employment completion of the Internship**

| | | |
|---|---|---|
| **Semester - 4 (International Higher Diploma IHD Level)** | | **Duration - 6 Months** |
| Computing / Software Development / Computer Networks Specialized Core Modules | | Final Project |
| **Semester - 3** | | **Duration - 6 Months** |
| Computing / Software Development / Computer Networks Specialized Core Modules | | Language & Communication Skills |
| **Semester - 2** | | **Duration - 6 Months** |
| Specialized Core Modules | ICT Specialised Modules | Language & Communication Skills |
| **Semester – 1 (International Diploma in Computing)** | | **Duration - 6 Months** |
| General Core Modules | ICT Specialised Modules | Language & Communication Skills |

**Absolute Beginner After O/L or A/L**

## Programme Advancement - Management

**Proceed Towards Final Year at the Buckinghamshire New University or Employment completion of the Internship**

| | | |
|---|---|---|
| **Semester - 4 (International Higher Diploma IHD Level)** | | **Duration - 6 Months** |
| Business Management \| Marketing \| Finance \| HR Specialized Core Modules | | Final Project |
| **Semester - 3** | | **Duration - 6 Months** |
| Business Management \| Marketing \| Finance \| HR Specialized Core Modules | | Language & Communication Skills |
| **Semester - 2** | | **Duration - 6 Months** |
| Specialized Core Modules | Management Specialised Modules | Language & Communication Skills |
| **Semester – 1 (International Diploma in Business Management)** | | **Duration - 6 Months** |
| General Core Modules | Management Specialised Modules | Language & Communication Skills |

**Absolute Beginner After O/L or A/L**

IDM Nations Campus

## IDM Nations Campus

#216, Navalar Road, Jaffna. P: +94 212 229 901
#5 1/1, Kandy Road, Chavakachcheri. P: +94 212 200 800
#30, Main Street, Chankanai, P: +94 217 429 060

Regional Head office:
IDM City Campus 3
#16, 42nd Lane,
Colombo - 06.
T: 2 361 801 | F: 2 361 8017
E: info@idmcc3.lk

IDM City Campus # 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு அஞ்சலி

**37ஆம் ஆண்டு நினைவஞ்சலி 3ஆம் ஆண்டு**



**திரு முருகேசு ஏரம்பு**
இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்
யாழ்/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**திருமதி. ஞானாம்பிகை ஏரம்பு**
இளைப்பாறிய தலைமை ஆசிரியை
யாழ்/மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம்

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து வருடங்கள் எத்தனை அகன்றாலும் உங்கள் இருவர் நினைவலைகளும் எமது உள்ளங்களை விட்டு அகன்றிட மறுக்கிறதே அப்பா! அம்மா! நாம் உறங்கினால் கனவில் உங்கள் இருவர் உருவங்கள் கண்முன் வந்து கலைகின்றதே அப்பா! அம்மா! ஆயிரம் ஆயிரம் உறவுகள் வந்து போனாலும், அப்பா! அம்மா! என்றழைக்க நீங்கள் எம்முடன் இல்லையே. நீங்கள் இருவரும் எங்கள் மேல் காட்டிய பாசத்தை, அக்கறையை என்றென்றும் எங்களால் மறந்துவிட முடியாது. தன்னம்பிக்கைக்கும், நேர்மைக்கும் வரைவிலக்கணமாக, வழிகாட்டியாக எதையும் தாங்கும் இதயம் படைத்தவராக இவ்வுலகில் நிறைவுடன் வாழ்ந்தீர்களே! இருவர் நினைவலைகளும் என்றும் எங்கள் மனதில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல விநாயகரின் பாதங்களைப் பணிகின்றோம்.

பாசமிகு மகன்
ஏ. திருஞானபர்லன்,
மற்றும் குடும்ப உறவுகள்.


**ஐரோப்பிய நாட்டுக்கு செல்ல வேண்டுமா சைப்பிரஸ் நாட்டுக்கு உடனடி வேலைவாய்ப்பு**

| | | | |
|---|---|---|---|
| வீட்டுப் பணிப்பெண்கள் (House Maids) | 25 | 326 Euro | 50,000 |
| தோட்ட தொழிலாளர்கள் (Farm Labourer) | 25 | 425 Euro | 65,000 |

**கட்டார்**

| தொழில் | எண் | சம்பளம் (QR) | சம்பளம் (RS) |
|---|---|---|---|
| வெல்டர்-Welder | 25 | 1400 | 43,400 |
| ப்ளம்பர்-Plumber | 25 | 1200 | 37,200 |
| குழாய் பொருத்துபவர்- Pipe Fitter | 25 | 1200 | 37,200 |
| மேசன் - Mason | 25 | 1200 | 37,200 |
| இயந்திர பொறியியலாளர்- Machanical Engineer | 02 | 3000 | 93,000 |
| இயந்திர அட்டோ கேட் வரைவாளரர் - Auto cad Draftsmen | 02 | 2000 | 62,000 |
| உதவியாளர்கள்- Machanical Helpers | 25 | 900 | 27,900 |

**சவுதி அரேபியாவில்**

| | | (SR) FA | |
|---|---|---|---|
| கனரக கருவிகள் ஆப்ரேட்டர்- Heavy Equipment operator (JCB/DOZER/SHAVEL) | 02 | 1200+300=1500 | 46,500 |
| நில அளவையாளர்- Land surveyor cum forman | 01 | 2000+300=2300 | 71,300 |
| கட்டட பொறியியலாளர்- Civil Engineer | 01 | 3500+500=4000 | 124,000 |
| எலக்றீஷியன் Electrician | 01 | 1200 | 37,200 |
| ஏ/சி டெக்னிஷியன் (A/C Technician) | 01 | 1200 | 37,200 |
| மேசன் - Tile Fixer | 01 | 1200 | 37,200 |
| தச்சு வேலை | 01 | 1200 | 37,200 |

1 SR = 31Rs

நிபந்தனைகள்
1. நிறுவனத்தினால் இலவச உணவு, தங்குமிட வசதி, வைத்திய பரிசோதனை, காப்புறுதி மற்றும் இதர வசதிகள் செய்து தரப்படும்.
2. 2 வருட கால ஒப்பந்தம்
3. 2 வருட ஒப்பந்த கால முடிவில் திரும்பி வருவதற்கான பிரயாணச்சீட்டு இலவசம்.
4. தொழில் அனுபவம் இல்லாதவர்களுக்கு தொழிற்பயிற்சி இலவசம்
★. 8 வர்ண புகைப்படங்களுடன் கடவுச்சீட்டு அளவு. (பின் தளம் வெள்ளை நிறம்) ★. கடவுச்சீட்டு, அசல் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்:
க.சுதாகரன் - 0779580588

**மேன்டெக் என்டர்பிரைசஸ்**
MANTEK ENTERPRISES
License No. 1449
#535 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
தொ.இல. 2363193, 011-4375911 பெக்ஸ். 4510549
Email: mantek.enterprises@yahoo.com
(நித்திய கல்யாணி ஜுவலர்ஸ் அருகில், றொக்ஸி தியட்டர் அருகில் உள்ள பெட்ரோல் நிலையத்திற்கு முன்பாக)
SLBEF APROVED CHARGES ONLY


# மரண அறிவித்தல்

## கந்தையா சண்முகராசா

(உரிமையாளர்- அம்பாள் ஸ்ரோர்ஸ், வீரமாகாளி அம்மன் கோயில்)



நல்லூர் அரசடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகராசா 15.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், சதீஸ்கரன், ஜெஸ்மினி (சுவிஸ்), சர்வேந்திரன் (கனடா), சயேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்காதரன் (சுவிஸ்),யமுனா (ஆசிரியை), சண்முகா (இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, இராசம்மா, கண்மணி, சாமி, திருநாவுக்கரசு மற்றும் சதாசிவம்,பிள்ளையம்மா, நயினார், மங்கையற்கரசி (கமலா), ஆகியோரின் சகோதரரும், இராசேந்திரம் (ஐம்போம்), காலஞ்சென்றவர்களான பூமணி, செல்லம்மா மற்றும் இராசமணி (கனடா), சின்னராசா, நாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ரிஷிகரன், லதீஸ்கரன், வக்ஷிகரன், அல்சியா, அனுஸ்கா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31/1, இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Scafolding Props விற்பனைக்குண்டு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட

**Scafolding**

உயரம் - 5 அடி, நீள -7 அடி, அகலம்- 4 அடி, அளவினை உடைய GI Pipe இனால் தயாரிக்கப்பட்டது.

**Props**

2'', 1½'' GI Pipe இனால் தயாரிக்கப்பட்டது
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
SEDCO
இல. 52, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
021 222 8754

## விற்பனைக்குண்டு

HS XXXX, JI XXXX தொடர் இலக்கமுடைய இரண்டு ஐஸ்கிறீம் வான்களும், ஐஸ்கிறீம் வாத், டீபிறிஸர் என்பனவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 6090926

## வீடு காணி விற்பனைக்குண்டு

பெரிய கடையிலிருந்து ½ மைல் தூரத்தில் வண்ணார் பண்ணையில் 3½ பரப்பு காணியுடன் கூடிய விசாலமான வீடு விற்பனைக்குண்டு. ஆஸ்பத்திரிக்கோ, பெரிய விற்பனை நிலையத்திற்கோ, வைத்தியசாலைக்கோ மிக வசதியானது.

மேலும் கனகரெத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அண்மித்ததாக உள்ள 3½ பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை பார்வையிடும் நேரம் பிற்பகல் 4மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொ.பே. 077 2269878 (14364) (45-8-7)

## மூன்றுதொடர் கடைகள்வாடகைக்கு

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 49 அடி நீளமும், 12 அடி அகலமும் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள மூன்று தொடர்கடைகள் முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும். விவரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். கடை ஒன்றுக்கு முற்பணம் 3 லட்சம். மாதவாடகை 10,000/=

தொடர்பு- செல்லத்துரை தவமணி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
077 615 8066, 021 490 8566, 077 468 1475



## சந்நிதி முருகன் அன் ரவல்ஸ்

திருமண மற்றும் சுற்றுலாவிற்கான பஸ் சேவை
குளிரூட்டப்பட்ட திருமணக் கார்

Phone
021 222 8076
077 711 0199
077 201 8275



241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை)

# நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

## கேள்வி மனுக் கோரல்
## காணி தேவை

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் பிராந்திய அலுவலகம் அமைப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ 1-1½ ஏக்கர் காணி தேவைப்படுகிறது. கைதடி நகரத்துக்கும் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்துக்கும் இடையில் இருப்பது விரும்பத்தக்கது.

கீழ்க்காணும் வசதிகளுடைய காணிகளுக்கு உரித்துடைய ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் தமது கேள்விப் பத்திரத்தை மூல உறுதி, நில அளவை வரைபடம் மற்றும் காணிப் பதிவாளரால் பேணப்படும் காணி உறுதிப்பத்திரம் ஆகியவற்றின் பிரதியுடன் இணைத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட 14 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. காணி கண்டி-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருக்க வேண்டும்
2. Three phase மின்சார வசதி
3. குடிநீர் வசதியுடன் கூடியது

**Chairman,**
**Central Engineering Consultancy Bureau**
**415, Bauddhaloka Mawatha,**
**Colombo-07.**

(14758) (7,10)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் முன்னாள் AUTOS கட்டடத்துக்கு பின்புறமாக கந்தப்பசேகர ஒழுங்கையில் 1 பரப்பும் 9 குளியும் (வயல் அளவை) கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 6805364, மார்ச் 10 ஆம் திகதிக்கு பின், 011 9054717773

# VACANCIES

## Mullaitivu

**CONSTRUCTION ENGINEERS & TECHNICAL OFFICERS**

Vacancies exist for construction engineers and technical officers with the irrigation experience of 3-8 years.

**Qualification:** B.Sc.(Eng), NDT, HNDE, NDES, NCT.

**STORE KEEPER, OFFICE ASSISTANT & WORK SUPERVISOR**

A/L QUALIFIED

**COOK**

Apply within 7 days, send your CV to:

**Daimei Constructions (Pvt) Ltd,**
**E.mail: jeevaratnams@yahoo.co.uk**
**Mobile: 077-3400645**

(14589) (7,10)

# DAMRO

# MANAGEMENT TRAINEE
## (Marketing)
## Jaffna

DAMRO is South Asia's Largest Furniture Manufacturer, specialized in office and household furniture. Today DAMRO brand of furniture has become synonymous with quality & durability with unmatched elegance. Our products are marketed through showrooms and dealer channels in Sri Lanka, India and Australia.

With recent expansions, we seek to recruit a dynamic & hard working individual as a **Management Trainee** for the mega showroom, which will be opened in near future in Jaffna.

**Applicant should possess :**

- ☑ a degree in marketing or part qualification in CIM/SLIM or equivalent.
- ☑ good communication, coordination and PR skills.
- ☑ willingness to work long hours and commitment to achieve targets.

Applicant should be a male under 30 years of age & be a permanent resident within 30km from the above area.

Upon successful completion of a training period based on individual performance, he will be placed as a showroom manager of the above mega showroom with an attractive remuneration package.

If the above position is of interest to you, please forward a detailed resume with your contact number & contact details of two non- related referees to reach us within 10 days of this advertisement.

**The Human Resources Manager,**
**DAMRO**
**No: 361, Kandy Road,**
**Nittambuwa.**
**E-mail: hrm@damro.lk**

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்புலட்சுமி குருநாதர்



கொக்குவில் மேற்கு, ஐயனார் கோயி லடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயில டியைத் தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட சுப்புலட்சுமி குரு நாதர் கடந்த (16.02.2012) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சிவபாக் கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குருநா தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசா விஜயரட்ணம், பரிபூரணம், சோமசுந்தரம், குமாரசாமி மற்றும் அன்னலிங்கம், செல்வரத்தினம், தங்கரத்தினம் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் குலசேகரம் (குலம், ஜேர்மன்), ஜெகதீஸ்வரன் (கிளி, நோர்வே), நந் தினி (லண்டன்), சுதர்மன் (சோமு, லண்டன்), ரோகினி ஆகி யோரின் பாசமிகு தாயும், செல்வராணி, தமயந்தி, பத்மநாதன், குசேலகுமாரி, தர்மசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியும், வானவி, றெஜீனா, விஜய், பரதன், லஷ்மன், பவீஷன், நர்மதா, தேனுகா, சங்கர், லக்ஷிகா, லஷ்மி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு.
பா.நாகநாதபிள்ளை. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 57

## என்று விடியும் ஒரு சுகமான தேசம்?

நாம் நொடிந்துபோய் நோயிடம் அடைக்கலமானது ஏன்? சுகமும் சுதந்திரமும் தொலைந்துபோனது எப்படி? வெள்ளை எல்லாம் பால் என்று எண்ணி நாம் வெள்ளைக்காரன் சொன்னதையே செய்தோம், அயலவரைப் பகைத்தோம், அறியாதவர்களை எஜமானராக்கினோம், புகைத்தோம், குடித்தோம், கிண்டலடித்துக் குதூகலித்தோம், குற்றம் குறைசொல்ல ஒன்றைக் காலில் நின்றோம். நிறைகளைச் சொல்ல நிறைய யோசித்தோம், சத்துமாப் பேணியில்தான் சத்து என்று சத்தியம் செய்தோம். சோரும்போதெல்லாம் சோடா குடித்தோம், ஆசிரியர் சேவையை அவதூறாய்ச் சொன்னோம், தாதியரை என்றும் தரக்குறைவாய்ப் பேசினோம். வைத்தியர்களை வாயார வைதோம், மருந்து விசிறுவதால் விவசாயியைக் கூட விட்டா வைத்தோம். வர்த்தகர்களை வார்த்தைகளால் அர்ச்சித்தோம், மாணவரின் ஒழுக்கத்தை மணிக்கணக்காய் விமர்சித்தோம், நண்பர்களை எதிரியாய்க் கொண்டோம். எம்மை ஏய்பவர்களுக்கு எள் என்னமுன் எண்ணெய் ஆனோம். பந்தம் பிடிப்பதற்காய் சொந்தக் கோவணத் துணியையும் கொழுத்தினோம். எமது தேசம் மட்டும் உருப்படாது என்று உள்ளம் உடைந்து, மனம் வெதும்பி, நித்தமும் இரத்தம் கொதிப்படைந்து சீறிச் சினப்பெடுத்து, வயிறுகள் எல்லாம் பற்றி எரிய எம் சுகத்துக்கு நாமே கொள்ளி போட்டோம்.

நாம் மட்டும் நல்லவராய் இருக்க, மற்றவரெல்லாம் போக்கிரியாயும் புல்லுருவியாயும் ஆனது எப்படி? எல்லோரும் நொந்து நோயுற்ற ஒரு சந்ததியின் மாதிரிதான். மீண்டும் சுகம்பெற்று ஆக வேண்டும், சிந்திப்போம்.

எத்தனை தடவை இரத்தானம் செய்தோம், நம்மவரைக் காக்க உழைப்பின் என்ன வீதத்தைக் கொடுத்து உதவினோம். எத்தனை மரங்கள் நட்டோம். என்னத்தை இயற்கையாய் பயிரிட்டோம். எம் எத்தனை உறவுகளை இழந்த பின்னாவது கொடுக்கத் துணிந்தோம். எத்தனை பேர் துயர் துடைத்தோம். எவர் எவர்க்கு கைகொடுத்தோம். வைத்தியசாலையின் நெருக்கடிகள் தீர்த்துவைக்க உடற்பயிற்சி செய்தோமா? உடல்நிறை பேணினோமா? சீனி தவிர்த்தோமா? சீராக வாகனம் விட்டோமா? புகைப்பதையும் குடிப்பதையும் துறக்கத் துணிந்தோமா? எதையும் செய்துவிட்டு இனிதே வருவோம். வைத்தியசாலை வாசலைத் திறந்து வை என்று வாதிடுவதா? மற்றவனுக்காக அழுதோமா? மன்னிப்புகள் கேட்க மனம் துணிந்தோமா? பெற்றவரை உற்றவரை உயிர்போலக் காத்தோமா?

எங்கும் நல்ல சிற்பங்கள் உதித்திட எம்மை நாமே செதுக்குவோம். மற்றவன் செதுக்குமுன் அடுத்தவனுக்குப் பட்டம் சூட்டுமுன் எமக்கு நாமே பட்டை தீட்டித் துலங்குவோம். வெள்ளையனெல்லாம் தன்னைத்தானே செதுக்கி தானே வளர்ந்துவர நாம் மற்றவனைச் செதுக்க உளி கொண்டு துரத்துவதா? பேனா என்ற ஆயுதம் தூக்கிப் போர்க்குற்றம் புரிவதா? பட்டவை போதும் பண்படுத்துவோம். ஒரு சுகமான தேசத்துக்காய் ஒன்றாகி, ஒற்றுமையாய் உழைப்போம். உறுதிகொள்வோம். சிரி, கொடு, எழு, உழை, உடு, உண், அழு, அரவணை, படி, பண்பாட்டைக் காப்பாற்று நிச்சயம் சுகம் நிதர்சனமாகும்.

சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## வாய் துர்நாற்றமும் வாய்ச்சுத்தமும்

வாய் துர்நாற்றமடிப்பது பலருக்கு அவ்வப் போது வந்துபோவதாக இருந்தாலும், சிலருக்கு இது நிரந்தரப் பிரச்சினையாக உள்ளது. இதனால் அவர்கள் மற்றவர்களுடன் பேசும்போது பல அசௌகரியமான நிலைமைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

வாய்த் துர்நாற்றத்துக்கான காரணங்கள் பலவாக இருந்தாலும் அவற்றை இயற்கையாகவும் இலகுவாகவும் தீர்த்துக் கொள்ளக் கூடிய சில முறைகள் உள்ளன. அவற்றைக் கடைப் பிடிப்பதனால் ஓரளவு இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

வாய் துர்நாற்றத்துக்கான முக்கிய காரணம் வாய்யை முறையாகச் சுத்தம் செய்யப்படாததே ஆகும். உணவு உண்டபின் சரியாக வாய்ச்சுத்தம் பேணுதல் அவசியம். உணவுத் துண்டுகள் ஈறுகளிடையே தங்கி பற்றீரியாத் தாக்கம் ஏற்படும்போது வாய்த்துர்நாற்றம் ஏற்படுகிறது. புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் போன்றவையும் வாய்த் துர்நாற்றத்துக்குக் காரணமாகின்றன.

முரசிலிருந்து இரத்தம் வடிதல், பற்சூத்தை, பற்களுக்கிடையே கட்டிகள் போன்றவையும் வாய்த் துர்நாற்றத்துக்குக் காரணமாகின்றன.

இவ்வாறு ஏற்படுகின்ற வாய்த் துர்நாற்றத்தைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்வோம்.

முதலாவதாக, வாயை ஒவ்வொரு நாளும் முறையாக இரண்டுமுறை சுத்தம் பேணுதல் அவசியமாகும். காலையும், படுக்கப் போகும் முன்பும் பல்துலக்கிக் கொண்டு முறையாகத் துப்புரவாக்கினால் வாய்த் துர்நாற்றம் குறையும்.

ஒவ்வொரு உணவின் பின்பும், பல் துலக்குதல் மிகவும் நன்மையாகும். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் நன்றாக வாயை அலசிக் கொப்பளிப்பதால் வாய்த் துர்நாற்றம் குறையும்.

பல்துலக்கி மென்மையானதாகவும், ஈறுகளைப் புண்படுத்தாததாகவும் இருக்க வேண்டும். அத்துடன் பல் துலக்கியை மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றுதல் நன்மையாகும்.

பல், வாய்க்குழியைச் சுத்தம் செய்வதுடன் நாக்கையும் எப்போதும் துப்புரவாக்கிக் கொள்ள வேண்டும்.

வருடத்தில் ஒரு தடவையாவது பல் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று வாய்த் துர்நாற்றத்தைப் போக்கிக் கொள்ளலாம்.

செ.தவச்செல்வம்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

**கேள்வி:-** சிறுவர்களுக்குத் தடுப்பூசி கொடுக்கும் நடைமுறைகள் காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்று வருகின்றன. நாம் உண்மையில் பின்பற்ற வேண்டிய சரியான நடைமுறை என்ன? தடுப்பூசிகளால் பக்க விளைவுகள் ஏற்படும் ஆபத்து இருக்கிறதா?

**பதில்:-** மனிதனுக்கும் நுண்ணங்கிகளுக்கும் இடையேயான போராட்டம் நீண்ட வரலாறு கொண்டது. இந்தப் போராட்டத்தின் போது மனித உடலானது பொதுவான மற்றும் சிறப்பு முறைகளைப் பயன்படுத்தி, நோய்க்கிருமிகளால் உடலுக்கு ஏற்படும் ஆபத்தைக் குறைக்கின்றது, தடுக்கின்றது. சிறப்பு முறை நோய் எதிர்ப்பானது எமது உடலில் உள்ள வெண்குழிய வகையைச் சேர்ந்த ஞாபகக் கலங்களால் ஒழுங்கமைக்கப்படுகிறது. இந்த ஞாபகக் கலங்களை இயற்கையான முறையில் நோய்க்கிருமிகளுக்கு எதிராகத் தூண்டுவதற்கு அந்த நோயானது எமக்கு ஒரு தடவையேனும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஞாபகக் கலங்களைச் செயற்கை முறையில் தூண்டும் செயற்பாடே தடுப்பு மருந்தேற்றல் திட்டமாகும். இதன்போது வீரியம் குறைந்த நோய்க்கிருமிகள்/ கொல்லப்பட்ட நோய்க்கிருமிகள்/ நோய்க்கிருமியின் ஏதோனுமொரு பாகம்/ நோய்க் கிருமியால் உருவாக்கப்பட்ட நச்சுப் பொருள்கள் போன்றவற்றில் ஒன்று உடலினுள் செலுத்தப்பட்டு ஞாபகக் கலங்கள் தூண்டப்படும்.

இலங்கையில் நோய்களற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகப் பிறந்த நாள் தொடக்கம் நோய்த்தடுப்பு மருந்தேற்றல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஞாபகக் கலங்களைச் சரியான முறையில் தூண்டுவதற்காகச் சில தடுப்பு மருந்துகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மீண்டும் மீண்டும் வழங் கப்படும்.

குழந்தை பிறந்து வைத்தியசாலையிலிருந்து வீடு செல்வதற்கு முன் BCG என்னும் காசநோய்க்கெதிரான மருந்து வழங்கப்படும். இது முக்கியமாக மூளைக் காசநோய்த் தாக்கத்தைத் தவிர்ப்பதற்காகவே வழங்கப்படுகின்றது. ஊசி போட்டு 6 மாதத்துக்குப் பின்பும் அடையாளம் ஏற்படவில்லையாயின் மருத்துவ ஆலோசனையை நாடவும். அடுத்து குழந்தையின் 2,4,6 ஆம் மாதங்களில் Pentavalent எனப்படும் 5 நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கப்படும். இது குக்கல், தொண்டைக்கரப்பன், ஏற்புவலி, Haemophilus influenzab, Hepatitis B ஆகிய நோய்களுக்கு எதிரான ஊசி மருந்தாகும். இதனுடன் சேர்த்து போலியோவைத் தடுப்பதற்கான சொட்டு மருந்தும் 2,4,6 ஆம் மாதங்களில் வழங்கப்படும்.

9 ஆம் மாதத்தில் Japanese Encephalitis (JE) க்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கப்படும். பிறந்ததிலிருந்து எப்போதாவது வலிப்பு வந்திருக்குமானால் JE ஊசி போடுவதைத் தவிர்த்து வைத்திய நிபுணரின் ஆலோசனையை நாடவும். 1 வயதிலும் 3 வயதிலும் சுவைக்கட்டு, சின்னமுத்து, ருபெல்லா (MMR) நோய்களுக்கு எதிரான ஊசி வழங்கப்படும்.

1½ வயதில் முக்கூட்டு ஊசியும், [குக்கல், தொண்டைக்கரப்பன், ஏற்புவலி ஆகியவற்றுக்கு எதிரானது], போலியோ சொட்டு மருந்தும் வழங்கப்படும். 5 வயதில் இருகூட்டு ஊசியும், [தொண்டைக்கரப்பன், ஏற்புவலிக்கு எதிரானது] போலியோ சொட்டு மருந்தும் வழங்கப்படும்.

அதன் பின்பு 10–15 வயதுக்குட்பட்ட காலத்தில் aTdஎனப்படும் வயது வந்தோருக்கான ஏற்புவலி, தொண்டைக்கரப்பன் ஊசி பாடசாலையில் வைத்து வழங்கப்படும். மேற் கூறியவாறு ஏற்புவலி ஊசி 6 தடவைகள் [2,4,6 ஆம் மாதங்கள், 1½ வயது, 5 வயது, 10–15 வயது] வழங்கப்பட்டு அதற்கான Card உங்களிடம் இருக்குமானால் மீண்டும் உங்களுக்கு ஏற்புவலி ஊசி போடத் தேவையில்லை.

14 வயதில் ருபெல்லா ஊசி மீண்டும் பாடசாலையில் வைத்து வழங்கப்படும்.

★தடுப்பு மருந்தானது பலவித பரிசோதனைகளின் பின்பே சமுதாயத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆயினும் சில ஒவ்வாமைத் தாக்கங்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. தடுப்பு மருந்து ஏற்றிய பின், கால்மணி நேரம் தடுப்பூசி ஏற்றிய இடத்திலேயே இருந்து ஏதாவது ஒவ்வாமைத் தாக்கங்கள் ஏற்படுகின்றனவா எனப் பார்க்க வேண்டும்.

★ தடுப்பு ஏற்றிய பின் அந்த இடத்தில் சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுக்கக் கூடாது.

★ காய்ச்சல் ஏற்பட்டால் பனடோல் கொடுக்கவும் காய்ச்சல் குணமாகாவிட்டால்/ வலிப்பு ஏற்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் செல்லவும்.

★ ஊசி ஏற்றிய இடத்தில் வலி, வீக்கம் என்பன ஆபத்தில்லாத தாக்கங்கள் ஆகும். ஆனால் சீழ், கட்டி போன்றவை ஏற்படுமானால் தகுந்த சிகிச்சை பெற வேண்டும்.

★ குழந்தைக்குக் காய்ச்சல் போன்ற ஆபத்தில்லாத தாக்கங்கள் ஏற்பட்டால் அடுத்துவரும் ஊசிகளை சாதாரணமாகப் போடலாம்.

★ முதிராக் குழந்தைகளுக்கு (premature baby) BCG ஐ வைத்தியசாலையிலிருந்து வீடு செல்லத் தகுதியான போதே போட வேண்டும்.

★ குழந்தைகள் கடுமையான வருத்தங்களால் பாதிக்கப்பட்டிருந்தால் நோய் குணமடைந்த பின்னரே ஊசி வழங்க வேண்டும்.

★ ஒவ்வாமை உடைய குழந்தைகளும் (asthma, eczema) பாதுகாப்பாகத் தடுப்பூசி பெறலாம்.

★ போலியோ சொட்டு மருந்து கொடுத்த பின்பு சத்தி எடுத்தால்/ வயிற்றோட்டம் ஏற்பட்டால் மீண்டும் வழங்க வேண்டும்.

மருத்துவர் ஆர்.ராமாவித்தியா
யாழ்.போதனா வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகத்துறையில் முதற்படி..

MIX MEDIA தமிழ்
PRESENTATION | NEWS | PRODUCTION | ONLINE

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணைய வானொலி மற்றும் ஊடங்களுடன் facebook, இவை பற்றிய ஆரம்ப அறிவை பெற்றுக்கொள்ளவும்
ஊடகத்துறைக்குள் நீங்கள் கால் பதிக்கவும் இது ஒரு முதற் கட்டம்

**அனுபவம் வாய்ந்த ஊடகவியலாளர்களினால் கற்பிக்கப்படும்.**

**சான்றிதழுடன் கூடிய ஊடக அறிமுகத்துக்கு தயாராகுங்கள்.**

ORGANISED BY
IDM Media Faculty
PROFESSIONAL MEDIA FACTORY

Workshop on 19th February in Jaffna

RESERVE YOUR SEATS TODAY!! | CALL US NOW 212 229 901

IDM MEDIA FACULTY
Media Faculty
#15, Laurie's Place
Colombo - 04
media@idmcc3.lk

WORKSHOP WILL BE CONDUCTED AT
IDM Nations Campus
#216, Navalar Road, Jaffna.
P: +94 212 229 901



### கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No- 1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் (Pussalla Farm) (24.02.2012) வெள்ளிக்கிழமையன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
'சிற்றி பாம் ரேடேர்ஸ்" ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
T.P.No. 021 222 1158
(14248) (2-6)

### வீடு காணி விற்பனைக்கு

கோப்பாயில், யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியில் வீட்டுடன் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
முழுமையாகவோ / பகுதியாகவோ பிரித்தும்கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை) தொடர்பு : 078 5381399
078 4667338
021 2230028

### காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பின்புறமாக கம்பஸ் லேனில் 1 ½ பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு:
0774869128
(14484)(6,10)

### FITTING & SETTING

செய்மதி தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒழுங்கமைத்தலும் பழுது பார்த்தலும்.
(DISH TV, SUNDIRECT, VIDEOCON, LBN CABLE, DANCABLE) மேலும் நவீன MPEG-4 RECEIVER மூலம் C-BAND, KU-BAND பொருத்துதல் கணனி பழுது பார்த்தல் இவையனைத்துக்கும் அழையுங்கள்.

S.RAM - 075 0460210


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23.06.1974

தோற்றம்
05.06.1996

தோற்றம்
08.02.1972

மறைவு
19.02.1997



மன்னார் வலைப்பாட்டில் சங்கமமான

**திருச்செல்வம் கமலேந்திரராணி** (குமுதினி) | **திருச்செல்வம் கம்சினி** | **சிவலிங்கம் திருச்செல்வம்**

அன்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே
காலமெல்லாம் எம்மோடு கூடி வாழ்வீர்கள் என்று எண்ணி இருந்தோமே
காலனவன் சதியில் மூவரும் வலைப்பாட்டில் சங்கமமானீர்களே
செல்வம் என்று அழைக்க தம்பி உன் உறவொன்றில்லையே
பதினைந்து ஆண்டுகள் என்ன எத்தனை
ஆயிரம் ஆண்டுகளானாலும் ஆறுமோ எங்கள் துயரம்

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அக்கா, அத்தான்,
அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.

க. சிவலிங்கம்,
கதிரிப்பாய், அச்சுவேலி.

(4572)(2-7-19)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

## அமரர் புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)



மலர்வு
15.03.1936

உதிர்வு
20.01.2012

தாயே! நின் நினைவு தந்த கோலங்கள் - கண்ணீர் காய்ந்த
கோடுகளாய் எம் விழியருகே உறைந்தாலும்
எம் வாழ்வு கொள்ளும் கோலமதில் - உம்
கைரேகைப் பதிவுகளே எமைக் காக்கும்

அன்பான அன்னையே! நீங்களிட்ட பாதைதனில்
நம் வாழ்க்கை தழைத்திடுமே!
தங்கள் மாண்பு வழி நாம் சீர்மை பெற
உம் ஆசி வழிகாட்டி நிற்கும்

அம்மா! உம் கருணை பொழியும் நிஜங்கள்
என்றுமே எம்முடன் தொடரும்
அருள் நிறை இறையடியில் - உங்கள்
ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

எமது குடும்பத் தலைவி திடீரென நோயுற்ற வேளையில் அவருக்குச் சிகிச்சை அளிக்க உதவிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் ஏனைய பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தாயார் சிவபதமடைந்தபோது எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, பத்திரிகை, மின்னஞ்சல், கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தாயாரின் இறுதிக் கிரியையின்போது சகல வழிகளிலும் கை கொடுத்து உதவிய நண்பர்கள், உறவினர்கள், யாழ்போதனா வைத்தியசாலை சமூகத்தினர், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட சமூகத்தினர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(14572)(2-19-7)

72/27, பணிக்கர் லேன்,
பலாலி வீதி, திருநெல்வேலி

- குடும்பத்தினர்.
"சிவகிரி"
மீசாலை வடக்கு, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

பல வாகனங்கள் தரிக்கக்கூடிய வளவுடன், நவீன வசதிகொண்ட விசாலமான வீடு அரியாலையில் உடன் விற்பனைக்குண்டு.

இந்த வீடு முனிசிப்பல் எல்லைக்குள்ளும் A 9 வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் ஒரு பிரதான வீதியில் அமைந்துள்ளது. இன்னொரு வீதியிலிருந்தும் இதற்கு வழியுண்டு. ஒரு பொது சேவைகள் அல்லது வியாபார சேவைகள் காரியாலயத்திற்கோ அல்லது உயர் அதிகாரிகள் வசிப்பதற்கோ உகந்தது. குறைந்த விலை அமெ-டொலர் ஒரு லட்சம் (100 000)

தொடர்பு:
94 77 6909284
94 11 2585801 (C\9059)

## RENT / LEASE

Available for Rent / Lease. 4 Roomed House 1800 Sq feet. Near Kokuvil Junction.
Contact Nos:
0778 650 672/ 011-2337991 (C\9068)

## சர்வதேச திருமண சேவை

எமது புதிய கிளை ஆரம்பம்

நாடுமுழுவதும் இந்து, கிறிஸ்தவ அனைத்து இனத்தவர்களிலும் செவ்வாய் தோஷம், சுத்த ஜாதகம், கிரக பாவம் கூடிய, குறைந்த, டாக்டர், இஞ்சினியர், கணக்காளர், SLAS, அரச நிர்வாகத் துறை பட்டதாரிகள் அரச, தனியார்துறை, வெளிநாடு, உள்நாடு, சைவபோசனம், விவாகரத்து முதற்கொண்டு மணமக்களின் விவரங்களுக்கு உடன் அணுகவும்.

"சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
128, கோயில் புதுக்குளம், 5ஆம் ஒழுங்கை,
வவுனியா,
தொ.பே. 024 2224 360
தலைமை அலுவலகம் : யாழ்ப்பாணம்.
077 9694009 (14831) (45-6-7)

## விற்பனைக்கு

Hardwares பொருட்களும்,
தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0774131776

## விற்பனைக்கு

இல.42, இராசாவின் தோட்டம், 2 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. மாலை 6 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.
தொடர்புக்கு: 011 2365453

## தேவை

Pharmacy யில் வேலை பார்த்த அனுபவம் கொண்ட பெண் உடுவிலில் வேலைக்குத் தேவை.
075 2399619 (14784)

## காணி விற்பனைக்கு

கரந்தன், நீர்வேலி-உரும்பிராய் ஞான வைரவர் கோயில் வீதியில், கோகிலன் கடைக்கும் சிவபூதவராயர் கோயிலுக்கும் இடையில் வீட்டுடன் கூடிய 8½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777295970 (C\9420)

## காணி விற்பனைக்கு

யாழ்.சித்தங்கேணி - சித்தங்கேணியிலிருந்து சங்கானை செல்லும் பாதை அந்திரான் வாய்க்கால் ரோட்டில் 6 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: திருமதி தனஞ்செயன்
(6 pm - 9 pm) 0726704988

## சேவை

UK, CANADA, AUSTRALIA போன்ற நாடுகளுக்கு செல்வதற்கான Visa ஆலோசனை மற்றும் சகல நாடுகளுக்குமான Air Ticketing.
தொடர்பு
075 2399619 (14785)

## வேலைக்கு ஆள் தேவை

வாகனத்தில் பொருள்களை கொண்டு சென்று விநியோகிப்பதற்கு ஆள் தேவை. நெல்லியடி, கரவெட்டி பிர தேசத்தவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0777240612

## மோட்டார் சைக்கிள் (JAPAN HONDA) விற்பனைக்கு



நல்ல நிலையில் உள்ள - Original Japan Honda CBR, No. XF5823 ரக் மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு.
தொடர்புகட்கு :
077 6630323

## காணி விற்பனைக்கு

ஊரெழுவில் பலாலி ரோட்டுக்கு அருகில் 6 பரப்பு சதுரக் காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
0774504730, 0778650672 (C\9065)


# மரண அறிவித்தல்



## கந்தையா ஜெயவீரசிங்கம்

கரவெட்டியை பிறப்பிடமாகவும், வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோயில் வீதியில் வசித்தவரும் தற்போது அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஜெயவீரசிங்கம் (முன்னாள் பிரதம பொறியியலாளர், கிளிநொச்சி, வவுனியா -RDA தற்போதைய வதிவிட பொறியியலாளர் - Care, மாங்குளம்) அவர்கள் (17.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் சுகன்யாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குணரெட்ணம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தனபாலசிங்கம் (பிரதம முகாமைத்துவ உதவியாளர் - நகரசபை - வவுனியா), குலவீரசிங்கம் (அவுஸ்திரேலியா), பிரேமகுமாரி (வ/விபுலானந்தா - ஆசிரியை), தர்மகுலசிங்கம் (அவுஸ்திரேலியா), சுகுனகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயரெட்ணம், சிறிவதனி, ஜெயலக்ஷ்மி, அகழ்யா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 49, வில்வெந்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி,
குடும்பத்தினர்

# 17ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## செல்வராசா ஞானசேகரம்

(ஞானம்)

(வத்திராயன், தாளையடி)



மலர்வு:
31-01-1964
உதிர்வு:
30-01-1995
திதி: 19-02-2012

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஓடி மறைந்து பதினேழு ஆண்டு
நிற்பதோ உன் நினைவு
நித்தம் உன் நினைவுகள்
என்றும் மறைவா நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்

அம்மா, சகோதர்கள்,
மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

தகவல்
குடும்பத்தினர்
077 5045 755


## வஜிர ஹவுஸில் இணைய ஓர் அரிய வாய்ப்பு

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, நுவரெலியா, பதுளை, கண்டி ஆகிய பிரதேசங்களுக்கு

### வியாபார பங்குதாரர்கள் தேவை (கட்டிட நிர்மானத்துறைக்கு)

96 வருடங்கள் பழமை வாய்ந்த கட்டிட நிர்மானத்துறையில் முண்ணணி வகிக்கும் எமது வஜிர ஹவுஸ் நிறுவனத்துக்கு, நிறுவனத்தின் வியாபாரத்தை விரிவு படுத்தும் நோக்கில், நாடெங்கிலும் வியாபார ஸ்தானம் ஆரம்பிக்க வியாபார பங்குதாரர் தேவை, இதன் மூலம் மிகப்பெரிய இலாபத்தை பெற்றுக்கொள்ள முடியும். எங்கள் நிறுவனத்துடன் வியாபாரத்தில் இணையும் பொருட்டு உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

அதனுடன் மிகப்பெரிய இலாபத்தை வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ளமுடியும் மேலும் நாடெங்கிலும் வீடுகள் கட்டி விற்கவும் மேலும் உங்களை கோடீஸ்வர வியாபாரியாக்குவதோடு, மட்டுமல்லாமல் பரம்பரை பரம்பரையாக இந்த வியாபாரத்தை முன்னெடுத்து செல்லமுடியும். உடனே அழையுங்கள் - 0716500800

VAJIRA HOUSE BUILDERS(PVT)LTD
No 04, Vajira Road, Colombo 04 - 0716 500 800


## மட்டுப்படுத்தப்பட்ட வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### பார ஊர்திகள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் கிழ்வரும் விவரப்படியான மூன்று (3) பார ஊர்திகளும் ஒரு MT - 90 மோட்டார்சைக்கிலும் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றினை கொள்வனவு செய்யவிரும்புவோர் கூறுவிலையின் இரகசிய தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது மூடிய கூறுவிலைகளை (03.03.2012) திகதிக்கு முன்னதாக தலைவர், வேலணை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம், வேலணை என்னும் முகவரிக்கு கடித உறையின் மேல் மூலையில் கூறுவிலை கோரல் - பாரஊர்தி விற்பனை என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| பாரஊர்தி | மாதிரி |
|---|---|
| 1. 40 ஸ்ரீ - 75 73 | லங்கா அசோக்லேடன் (டஸ்கர்) |
| 2. 24 ஸ்ரீ - 9490 | ஸ்ஸ்க |
| 3. 43- 4170 | டஸ்கர் |

01. MT - 90 மோட்டார்சைக்கிள்

குறிப்பு:
1. பாரஊர்தியின் செயற்பாடு தன்மையை காரியாலய நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.
2. நேரடியாக ஒப்படைக்கப்படும் கூறுவிலைகள் தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
3. கூறு விலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்

15.02.2012

தலைவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

(95) 151, கண்டி வீதி, சுண்டுக்குழியில் இரண்டு பெரிய அறைகளைக் கொண்ட விசாலமான வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்களுக்கும் ஏற்றது.

தொடர்புகளுக்கு : 077 2980578

## JOIN US NOW

We are market leaders in Sri Lanka, with over 15 years experience.
We are a member of major international group in Honkong With over 24 branch officers throughout Asia and 6 branches in Sri Lanka.

அறிவிருத்தி உத்தியோகத்தர் (Recovery Officer)

தகைமைகள்:

* சிறந்த கல்வித்தகைமை உடையவராகவும்
* ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் திறமை உடையவராகவும்
* செல்லுபடியான மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரத்துடன், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவராகவும்
* யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு சென்று பணிபுரியும் ஆர்வம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாகத் தங்கள் சுயவிவரக் கோவையை நேர்முகப் பரீட்சைக்கு கீழ்வரும் தொலைநகலுக்கு அனுப்பிவைக்கவும்.

(C19046)

தொலைநகல்: 0112768729, தொலைபேசி 0115749374.

## தேவை

வடக்கு கிழக்கில் அரசாங்க ஆசிரியர்களுக்கு (ICDL) பயிற்சி வழங்குவதற்கு ஒப்பந்த அடிப்படையிலான தனியார் கல்வி நிறுவனங்கள் தேவை

Call - 0714 567600 or SMS 0714 567598

## நிரந்தர வேலைவாய்ப்பு

நாடு பூராகவும் 160 கிளைகளுடன் இயங்கிக் கொண்டிருக்கும் எமது கம்பனி மேலும் இலங்கையின் முன்னனி கம்பனியுடன் இணைந்து பல தொழில் வாய்ப்புக்களை வடக்கு பிரதேசத்தில் இலவச பயிற்சியுடன் வழங்க வுள்ளது. பயிற்சியின் போது (12000-18000) வரையான ஊதியம் வழங்கப்படும். பயிற்சியின் பின் 45000 + Earning பெற்றுக்கொள்ளலாம்.

★.கல்வித்தகைமை O/L தொடக்கம்
★.தங்குமிட வசதி இலவசம்

தொடர்புகளுக்கு : 077 8787143, 077 9994807, 071 9565565,

## வாகனம் விற்பனைக்கு

WP- GE-xxxx தொடரிலக்க முடைய பென்ஸ் ரக வான் விற்பனைக்கு அல்லது மாதாந்த வாடகைக்கு.

தொடர்பு 021 222 1889, 021 492 2334

## கட்டட வேலைகள்

புதிய, பழைய கட்டடங்களுக்கு மாபிள் (Tiles) பொருத் துதல், பெயின் வேலைகள், இண்டலொக் வேலைகள் (Supper Finishing Works) துரிதமாகவும், சாதாரண கட்டனத்திலும் செய்து தரப்படும்.

தொடர்பு : 072 3555955, 071 7541244, 072 4362001

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்து கனடாவில் வசிக்கும் 1981ஆம் ஆண்டு மேடராசியும் அச்சுவினி நட்சத்திரம் செவ்வாய்குற்றமற்ற உணவகத்தில் வேலை பார்க்கும் ஆணுக்கும் நல்ல குணமுள்ள பெண்ணை கனடாவில் மட்டும் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு : யாழ்ப்பாணம் (077 4582801)
கனடா (001514 7330782)
(001514 833 9119)

## யாழ் நகரில்! வாடகைக்கு

### கார்கள், வான்கள்

Rent a Car



* சாரதியுடன் வாகனம்
* சாரதியில்லாமல் வாகனம்
* திருமண வைபவங்கள், சுற்றுலாக்களுக்கு
* வெளியூர் பயணங்களுக்கு
* கார், வான், கனரகவாகனங்கள்
* வாராந்த மாதாந்த வாடகைக்கு

K.J Enterprises

105/06, சி.பொன்னம்பலம் லேன், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Hotline : 0759463632, 0750422904
Office : 021320 2198


## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் வில்வரெத்தினம்

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முத்துஐயன்கட்டை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் வில்வரெத்தினம் 2012.02.18 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார்காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்மாவின் அன்புமகனும் காலஞ்சென்ற வைரமுத்து கனகம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற பரிமளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசம்மா சோமசுந்தரத்தின் பாசமிகு சகோதரரும் நந்தினி, அருட்செல்வி, அருளானந்தன், திருச்செல் வம்(திரு) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பரமராசா மற்றும் சிறிகரன், நிஷா, ராசாத்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.02.2012 ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் வில்லூண்டி இந்து மயானத்தில் தகனம் செய்ய ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
இல.66/7, முஸ்லீம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(பள்ளிவாசல் அருகில்)

தகவல்:
மகன். திருச்செல்வம்(திரு)

## பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தல்

இலங்கை மக்களே, உங்கள் சொத்துக்களின் சட்டபூர்வமான உரிமையை மோசடி நபர்கள், குண்டர்கள் அல்லது திட்டமிட்டுச் செயல்புரியும் குழுக்களால் அநீதியாக கைப்பற்றப்பட்டிருந்தால் அல்லது கைப்பற்றப்பட முயற்சித்தாலோ அதிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்கு பொலிஸார் சகல சந்தர்ப்பங்களிலும் முன்னுரிமை அளித்து செயற்படுவார்கள் என்பதை அறிவித்துக்கொள்கிறோம். இத்தகைய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவின் கீழ் விசேட விசாரணைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை இதன் மூலம் அறிவிக்கின்றோம்.

* உங்களுடைய ஏதேனுமொரு சொத்தை எவரேனுமொரு நபரோ அல்லது குழுவொன்றினாலோ கைப்பற்றப்பட்டிருந்தால்.
* உங்கள் வீடு, வியாபார ஸ்தாபனம், தோட்டம் என்பவை வேறொரு தரப்பினரால் போலி உறுதி தயாரித்து அல்லது முயற்சிக்கின்றார்களென்றால்.
* வெறேனுமொரு தரப்பினர் பல்வேறுபட்ட வழிகள் மூலம் உங்களை அச்சுறுத்தியோ பலாத்காரமாகவோ உங்களின் சட்டபூர்வமான உரிமையுள்ள சொத்துக்களின் உரித்தை கைவிட்டு செல்லுமாறு அச்சுறுத்தல் அல்லது அவ்வாறு செய்து உங்கள் சொத்துக்களை அபகரிக்க முற்பட்டிருந்தால்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் தாமதமின்றி கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுக்கு முறையிடவோ அல்லது பக்ஸ் மூலம் அறிவிக்கவோ நடவடிக்கை எடுக்குமாறு இதனூடாக அறிவிக்கிறோம்.

### அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

பிரதிப்பொலிஸ் மா அதிபர் - குற்றப் புலனாய்வுத் திணைக்களம்
தொ. பே: 011-2328138 - பெக்ஸ் 011-2326937
குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசேட விசாரணைப் பிரிவு 1933
தொ. பே: 011-2380380 - பெக்ஸ் 011-2380382

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புதிய பாதை தெரியும் நாள்.

**இடபம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பேச்சில் இங்கிதம் தேவைப் படும் நாள். .

**மிதுனம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விடயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிங்கம்:** புதிய யோசனைகள் பிறக்கும். பிள்ளைகள் நீண்ட நாள் கேட்டுக் கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி:** பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்:** தைரியமாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும்நாள்.

**விருச்சிகம்:** கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். புதிய வர்கள் நண்பர்களாவார்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். திடீர் திருப்பம் ஏற்படும் நாள்.

**தனுசு:** மனஉளைச்சல் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் தன்னை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை என்று நினைப்பீர்கள். உடல் நலம் பாதிக்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும். சகிப்புத்தன்மை தேவைப்படும் நாள்.

**மகரம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போகவேண்டும். அசதி, சோர்வு வந்து விலகும். தாழ்வு மனப்பான்மை வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். தாய்வழியில் மதிக்கப்படுவீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மீனம்:** சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புதிய இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**நாளை**

மாசி 8 திங்கட்கிழமை 20.02.2012
திதி: சதுர்த்தசி பி.இ. 04.23 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.இ. 12.07 வரை
சுபநேரம்: 12.32 - 02.02 வரை,
ராகு காலம்: 02.02- 09.32வரை

## பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து ஒரு நாள் போட்டித் தொடர்




**3 ஆவது ஒருநாள் ஆட்டம்**

இங்கிலாந்து 9 இலக்குகளால் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் 222/10
உமர் அக்மல் - 50
சயீட் அப்ரிடி - 51

இங்கிலாந்து 226/1
கேபி பீற்றர்ஸன் -111*
ஏலன் குக் - 80

ஆட்ட நாயகன் - கேபி பீற்றர்ஸன்

## ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ் காதலில் சிக்கியது

பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் தற்போது காதல் சர்ச்சையில் சிக்கியுள்ளார். அந்த நாட்டு நடிகை மீரா அளித்த பேட்டியில், அக்தர் தன்னை நீண்டநாளாக காதலித்து வந்ததாகவும், அதை நான் ஏற்று கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

என்னை காதலித்த அதே சமயத்தில் எனது உறவுப்பெண் ஒருவரையும் அக்தர் காதலிக்க முயற்சி செய்தார் என்று கூறியுள்ளார்.

இது குறித்து அக்தர் கூறுகையில், நான் ஏன் மீராவை காதலிக்க வேண்டும். இதில் எந்தவித உண்மையும் இல்லை. இதுபோன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். பல பெண்கள் என்னை மணக்க கனவு காண்பது சகஜம் தான் என்றார். (5)

# இறுதியாட்டத்தில் விளையாட உடுவில் மான்ஸ் தகுதி

வலி.வடக்கு, பெப்.19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப் பந்தாட்டப் போட்டி இறுதியாட்டத்தில் விளையாட உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.



மூன்று ஒற்றையர் சுற்றுக்களையும் இரண்டு இரட்டையர் சுற்றுக்களையும் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று ஒற்றையர் சுற்றுக்கான வெற்றி பெற்ற உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் 21:08, 21:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தை 21:02, 21:03 என்ற புள்ளிகள் அடிப்படையில் மான்ஸ் மகா வித்தியாலயம் வென்றது.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் 21:13, 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

முதல் மூன்று ஒற்றையர் ஆட்டங்கயும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் வெற்றி பெற்ற நிலையில் இரட்டையர் ஆட்டம் இடம் பெறாமலேயே அது இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

## விக்ரோறியா 3 ஆம் இடம்

வலி.வடக்கு.பெப்.19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும், ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டு அமைந்த இந்தப் போட்டியில் விக்ரோறியாக் கல்லூரி முதல் சுற்றை 21:11, 21:16, என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 21:13, 21:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இரு கல்லூரிகளுக்கும் மூன்றாவது சுற்று மிகவும் முக்கியமானதாகக் காணப்பட்டது.

இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் விக்ரோறியாக் கல்லூரி கடும் எதிர்ப்பின் மத்தியில் 21:19, 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் அமரர் டாக்டர் ஜே.பி.சி பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அதில் இன்று ஞாயிறுக் கிழமை மாலை 4.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## தெல்லிப்பழை யூனியனை வென்றது மான்ஸ் அணி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான அரையிறுதி ஆட்டமொன்றில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்ட மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு ஒற்றையர் சுற்றுக்களையும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் வென்றது. முதல் ஒற்றையர் சுற்றை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் 21:06, 21:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஒன்றுடன் இரண்டாம் ஒற்றையர் சுற்றையும் 21:08, 21:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான போட்டிக்கு உரிய ஆவணங்கள் இன்றி எதிரணிப் பாடசாலை மைதானத்துக்கு சமூகம் கொடுத்தமையால் போட்டியில் விளையாட அனுமதி வழங்கப்படாதமையால் மூன்றாம் இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெற்றுக் கொண்டது. (த-86)

## கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம்,பெப்.19

நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்ட போட்டி இன்று ஞாயிறுக்கிழமை கனகராஜன்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம் பெறவுள்ளது. (த-23)

## தாச்சிச் சங்கக் கூட்டம் இன்று

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் தெற்கு சபாபதிப் பிள்ளை வீதியிலுள்ள கண்ணகி விளையாட்டுக் கழக மண்டபத்தில் சங்கத் தலைவர் செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்க இருப்பதனால் விளையாட்டுக் கழகங்களின் பிரதி நிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர் மிரட்டப்பட்டார்

உடுவில் பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த ஐந்துபேர் கொண்ட குழுவினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சென்ற இந்தக் கும்பல் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினரை அச்சுறுத்தி விட்டுச் சென்றுள்ளது. தனியார் காணி ஒன்றினுள் திருட்டுத்தனமாக இளநீர் பறித்து வந்ததாகக் கூறப்படும் அந்தக் குழு பற்றி காணி உரிமையாளர் குறித்த சிவில் பாதுகாப்பு உறுப்பினரிடம் முறையிட்டுள்ளார்.

இது குறித்து பிரஸ்தாப உறுப்பினர் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து இனிமேல் இவ்வாறு (இளநீர் பறிக்காதீர்) நடந்து கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தி விட்டுத் திரும்பி இருந்தார். அன்றைய தினம் இரவு குறித்த நபர்கள் அவரின் வீடு புகுந்து அச்சுறுத்தியுள்ளனர்.

உடுவில், கோமராம் தோட்ட வீதியைச் சேர்ந்த தபேந்திரன் ஜெயந்தன் (வயது-19) என்பவரே அந்த சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர் ஆவார்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையப் பிரிவுக் குட்பட்ட பகுதியிலும் ஆள்கள் மற்றும் பொருள்கள், வாகனங்களைப் பரிசோதனை செய்யவும் சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்கவும் தேவையேற்படின் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களின் கடமை என்பது குறிப்பிடத்தக்கது. சில நாள்களுக்கு முன்னரே சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினருக்கான அடையாள அட்டையும் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வீடு புகுந்து இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்பிரிவு கிராமசேவையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 22 ★ 06 ★ 1960

விண்ணில் 20 ★ 01 ★ 2012



### அமரர் கனகசபாபதி வரதராசன்

கடந்த 20.01.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் கனகசபாபதி வரதராசன் அவர்களது வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 42, B.A. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்பு

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பழனி ஆண்டவர் கோயில் கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் ராஜ்குமார் (வயது 31) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-323)

## மரண அறிவித்தல்



### இராசலிங்கம் ராஜ்குமார்

கோண்டாவில் றோட், கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் ராஜ்குமார் நேற்று முன்தினம் (17.02.2012) வெள்ளிக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராசலிங்கம் காலஞ்சென்ற நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கஜேந்தினியின் அன்புக் கணவரும் அபிஷா, சாருகான் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4 மணியளவில் கட்டையாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் றோட்,
கோப்பாய் தெற்கு. (14848)

தகவல் :
குடும்பத்தினர்



### தம்பு குமாரவேல்

(ஓய்வுபெற்ற விவசாயப் பணிப்பாளர்- விவசாயத் திணைக்களம், ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர் (CARE International)

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு குமாரவேல் நேற்று (18.02.2012) சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## வேலை ஆள்கள் தேவை

சிவா மோட்டார் சைக்கிள் திருத்தகம் அன் சேவிஸ் நிலையத்துக்கு தொழில் பழகியவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை. நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:- இல.186, இராமநாதன் வீதி, (யாழ். பல்கலைக்கழகம் முன்பாக) பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0776056880, 021 222 6454

## சிறுநீரகம் தேவை

இயங்கராவூரில் வசித்துவரும் சுப்பிரமணியம் யோகராசா நான்கு பிள்ளைகளின் தந்தை. இவருக்கு சிறுநீரகம் தேவைப்படுகின்றது. எனவே இச் சிறுநீரகம் வழங்குபவர்கள் 0750975422 இலக்க தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் இதற்கான தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## வான் விற்பனைக்கு

62-XXXX தொடர் இலக்கமுடைய டுவல்ஏசி, Super GL சீற் வசதிகளுடன் நல்ல நிலையில் உள்ள கைரூப் டொல்பின் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0775473126,0212225076

## German,Swiss மொழிகள்

தமிழ்மொழி Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் Audio book விளக்கத்துடன் நடைபெறுகின்றது. வெளிமாவட்டத்திலிருந்து வருவோருக்கு தங்குமிட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்:-

10, Palaly road Jaffna. T.P.0771604823

## ஆலய உற்சவங்களுக்கு

வில்லுப்பாட்டு கதாப்பிரசங்கம் சமய சொற்பொழிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும்
"வில்லிசைக் கலைமாமணி"
சிவஸ்ரீ நா. கலாதரக்குருக்கள்,
கோயிற்கடவை, துன்னையூர். தொ.பே. 0779690990, 0245688323


## மரண அறிவித்தல்கள்



### திருமதி சுப்பிரமணியம் யோகம்

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயிலடியை பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் யோகம் (18.02.2012) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் - பொற்கொடி தம்பதியரின் அன்பு மகளும் கிருஸ்ண பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் பத்மாவதி (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்) காலஞ்சென்றவர்களான எதிர்வீரசிங்கம் லட்சுமி, சுருதி, கேசரி, ஜெயம், பசுபதி நாயகி, முருகையா, ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராணி, லில்லிராணி, கிமாலராணி, நேசராஜன், பிரேமராணி, மகாராஜன், சண்முகராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விசாகப்பெருமாள், ஜெயரட்ணம், விமலநாதன், மனோராணி, பரமலிங்கம், கலாவதி, உமா ஆகியோரின் அன்பு மாமியும் கிருஸ்ணகுமரன், ஜெயகௌரி, ராகுலன், ஜெயலக்சுமி, ஜெயரஞ்சினி, கோகுலன், கௌசல்யா, பார்த்தீபன், மேனன், மிதிலா, சிவானுயா, தனுசியா, நிவேதா, உமா, ரதி, சிவகாமி, மயூரா, சங்கவி, சுகாசினி, தாரகா, ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னகம்,
சித்தங்கேணி.

தகவல்:
சி.சுப்பிரமணியம் (கணவர்).



### துரைலிங்கம் கமலாதேவி

நெற்கொழு வீதி, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைலிங்கம் கமலாதேவி நேற்று (18.02.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைலிங்கத்தின் அன்பு மனைவியும், துரைராஜா, விசாகரத்தினம், உத்தரராசா, தியாகராசா, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெற்கொழு வீதி,
ஊரிக்காடு.

தகவல்:
சி. துரைராசா
(இளைப்பாறிய தபால் அதிபர்)

### சின்னையா செல்லையா



மாத்தளையைப் பிறப்பிடமாகவும் இல- 177 விவேகானந்தா நகரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்லையா 18.02.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசம்மா ஆகியோரின் அன்புமகனும் காலஞ்சென்ற செல்லையா இலட்சுமி தம்பதியின் மருமகனும் பவளவள்ளியின் பாசமிகு கணவனும் ரவிச்சந்திரன், மஞ்சுளாதேவி, சதீஸ்குமார் (முன்னாள் கிளிநொச்சி சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை சாரதி), நிர்மலாதேவி, சத்தியாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுமதி, சந்திரசேகரம், சியாமளா, விஜயரத்தினம், பிரகாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனுசியன், யதுர்சன், தானுசன், கம்ஷா, டில்ஷா, தரணிகா, தருண், பிருந்திகா, தருஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக இன்று (19.02.2012) நண்பகல் 12 மணியளவில் இரணைமடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்
குடும்பத்தினர்.


UCMAS

## LONDON COLLEGE OF ACHIVERS இல் UCMAS Abacus

உங்கள் குழந்தைகளின் வளமான முன்னேற்றத்தின் முன்னோடி UCMAS ABACUS (மனக்கணிதம்)! எமது தலைமைக் காரியாலயத்திலும் இதர தெரிவு செய்யப்பட்ட இடங்களிலும் 02.03.2012 இல் வகுப்புகள் ஆரம்பமாகின்றது. ஒரு வகுப்பிற்கு 15 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால், உங்கள் பதிவுகளை 28.02.2012 இற்கு முன் மேற்கொண்டு இடத்தினை உறுதி செய்யுங்கள்.

உடனடி அழைப்பிற்கு 0774122934, 0777224994.

தென்மராட்சி: கண்டி வீதி, சாவகச்சேரி, 0213218455, 0777224994.

வடமராட்சி: [illegible] 0774122934, 0212264206.

## மணல் விற்பனைக்கு

கண்டாவளைப் பெருக்கன் மணல், வெள்ளைக்கல், கருங்கல், சல்லி என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் உரிய இடத்துக்கு கொண்டு வந்து தரப்படும்.

தொடர்பு :- 0772309979, 0779912363.

## Galaxy Cabs 021 - 3201201

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

வேலணை மேற்கு 08 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகலிங்கம் பிரதர்ஷன் என்பவருடைய அடையாள அட்டையும் சிறுதொகைப்பணமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- S.மோகன்
சபரிமலை ஸ்ரோர்ஸ், 98 ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியர்களை விரட்டிய வைகோ அணி

சென்னை,பெப் 19

இலங்கையைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவர்கள் 21 பேர், 5 நாள் சிறப்புப் பயிற்சிக்காகக் கோவை நவ கரையிலுள்ள ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்துக்குச் சென்றனர்.

இதை அறிந்த ம.தி.மு.க கோவை புறநகர் மாவட்டச் செயலாளர் ஈஸ்வரன் தலைமையில் ம.தி.மு.கவினர் நேற்றுமுன்தினம் அங்கு சென்று, இவர்களை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசின் பிரதிநிதிகளாக வந்துள்ள இவர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கக்கூடாது என்றனர்.

இவர்களைதிருப்பிஅனுப்ப உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதை தொடர்ந்து ம.தி.மு.கவினர் திரும்பினர். (த)

## மினி பஸ் மோதி மாதகல் வாசி சாவு

»1 அவர் தூக்கி வீசப்பட்டுத் தலையில் காயமடைந்த நிலையில் அந்த இடத்திலேயே உயிரிழக்க நேரிட்டது. குறித்த மினி பஸ்ஸின் நடத்துநரே பஸ்ஸைச் செலுத்தி வந்துள்ளார் என்றும் மிக வேகமாக வந்த பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து குறித்த நபரை மோதியதுடன், அருகில் இருந்த மின்கம்பத்துடனும் மோதியது என்று கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலைப் பொலிஸார் நடத் துநரைக் கைது செய்ததுடன், இறந்தவரின் உடலைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தால் நேற்று நடைபெற இருந்த லூர்து அன்னையின் திருச்சொரூபபவனி இடம்பெறவில்லை. (ஒ-130)

## ராணுவத் தலையீடு, அரசியல் செல்வாக்கால் வடக்கின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு

»1 ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க நிலையத்தின் ஆசியாவுக்கான நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளரான திமொதி ஜெ.ரயானுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவரான க.சிறிராஜகுமார் தலைமையிலான சங்கப் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பு நேற்று யாழ். நகரிலுள்ள உதயன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளால் மேலும் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படும் விதத்திலான செயற்பாடுகள் நடந்தேறிவருகின்றன. அரசியல் செல்வாக்குப் பிரயோகம் மற்றும் இராணுவத் தலையீடு காரணமாக கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன. பாடசாலை நேரங்களில் பாடசாலை வளாகங்கள் மற்றும் நிகழ்வுகளில் இராணுவத் தலையீடுகள் உள்ளன. இதனால் மாணவர்கள் மத்தியில் அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது.

கல்விச் சேவைப் பதவியுயர்வுப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பலர் அரசியல் செல்வாக்குப் பிரயோகம் காரணமாகப் பதவியுயர்வுக்கான வாய்ப்புகளின்றி உள்ளனர்.

ஆசிரியர் இடமாற்றத்தில் முறைகேடு, ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன. ஆசிரியர் நியமனத்தின் போது பொருத்தமான வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு அதிகளவில் பற்றாக்குறை உள்ளது.

ஒழுங்கீனமற்ற இடமாற்றம் காரணமாக ஆசிரியர்கள் தமது சம்பளத்தில் 25 வீதத்தை போக்குவரத்துக்காக செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்தகால போர் நிலைமையினால் வடக்கில் 5 ஆயிரம் சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர். எனவே மாவட்டம் தோறும் சிறுவரைப் பராமரிக்கக் கூடியதிட்டங்கள்நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-03)

## நீதிக்கான உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டும் ஐ.நா.

»1 போது இருதரப்பினராலும் மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான கணிசமான சாட்சியங்கள் உள்ளதாகக் கூறும் ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையைக் கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பியிருந்தார்.

இந்த அறிக்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் போரின் இறுதி 5 மாதங்களிலும் கொல்லப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

பிரதானமாக, சன அடர்த்தி உள்ள பகுதிகள் மீது - குறிப்பாக மருத்துவமனைகள், உணவு விநியோக மையங்கள் மீது - நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களிலேயே இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளன. விடுதலைப் புலிகள், பொது மக்களை மனித கவசங்களாகப் பாவித்துள்ளனர்.

பிரிட்டனின் சனல் -4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளிப் பதிவு ஒன்றில் இலங்கைப் படையினரின் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் பதிவாகியுள்ளன.

ஐ.நா நிபுணர்குழுவும், அனைத்துலக அமைப்புகளும் இலங்கை அரசின் உள்ளக விசாரணைக் குழுவான நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளை நிராகரித்துள்ளன.இந்த மீறல்கள் குறித்து நடுநிலையாகவும் முறைப்படியாகவும் விசாரிப்பதற்குரிய சுதந்திரம் இந்த ஆணைக்குழுவுக்கு இல்லை என்று இந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் சில சாதகமான பரிந்துரைகளும் உள்ளன.

இந்த அறிக்கை இலங்கைப் படைகளால் நிகழ்த்தப்பட்ட மோசமான மீறல்களை நிராகரித்து விட்டதால், பொறுப்புக்கூறும் விசாரணை அவசியம் தேவை.

சுதந்திரமானதொரு அனைத்துலக பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை நிறுவுவதை நோக்கிய, பயனுள்ள நடவடிக்கையை எடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நீதியை வழங்குவதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை தனது உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டிய நேரம் இது - என்றுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம்,அமெரிக்க சுதந்திர இல்லம், மனித உரிமைகள் தலைமைத்துவப் பேரவை,அமெரிக்க திறந்த சமூக நிறுவனங்களின் இணையம், இன அழிப்பை தடுக்கும் அமைப்பு ஆகியவை உட்பட 15 அமைப்புகள்இதில் கையெழுத்திட்டுள்ளன. (த)

## தமிழர் பிரச்சினையில் ஐ.நா. தலையிடும் முதற்படியே ஜெனிவாவில் வரும் தீர்மானம்

»1 தேசியக் கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற சமகால அரசியல் கருத் தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் துரித கதியில் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகமும் ஐ.நா. அமைப்புக்களும் அழுத்தம் கொடுத்திருப்பது எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதில் இறுதிக் கட்டப் போரின் தின்போது காணாமற் போனவர்கள், சரணடைந்தவர்கள், கொல்லப்பட்டவர்கள் மற்றும் போர்க் குற்றவிவகாரங்கள் தொடர்பாக அழுத்தம் கொடுக்கப் படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக நாம் சர்வதேச சமூகத்துக்கும் புலம்பெயர் அமைப்புக்களுக்கும் சர்வதேசத் தலைவர்களுக்கும் தொடர்ச்சியாக உண்மை நிலைப்பாட்டை தெரியப்படுத்தி வந்துள்ளோம்.

இதன் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் முன்னெடுக்கப்படும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

இது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதற்படியாகும். இன்று எம் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் அனைத்தையும் விடுத்து இங்கு ஒன்று கூடியுள்ளோம். ஆகவே இனப்பிரச்சினைக்கும் உறுதியானதும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கின்றோம்.

எம்மை மிரட்டி அடிபணிய வைத்துவிட முடியாது. நாம் எமது மக்களின் உரிமைகளுக்காகவே குரல் எழுப்புகின்றோம். இதில் எந்த முட்டுக்கட்டை ஏற்பட்டாலும் அவற்றை உடைத்தெறிந்து தீர்வு காண்பதில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது - என்றார்.

### இரா.சம்பந்தன் உரை

இந்த மாநாட்டில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உரையாற்றுகையில் கூறியதாவது:

இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசும் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே இலங்கை அரசுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பேச்சுக்களின் ஆரம்ப காலத்தில் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்போ ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியோ நமது அமைப்பில் இருக்கவில்லை. இதன் காரணமாகவே அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் உள்வாங்கப்படாது போகும் நிலை ஏற்பட்டது. இப்போது அவ்வாறான நிலை இல்லை. எதிர்காலத்தில் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். அதன் மூலம் எனக்குப் பதிலாக ஆனந்தசங்கரியோ சித்தார்த்தனோ சொல்வதை நான் மறுக்கப் போவதில்லை.

நல்லிணக்க ஆணைக் குழு சிபார்சு செய்துள்ள விடயங்களின் அடிப்படையில் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என ஐ.நா. அமைப்பும் வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழு பல்வேறு விடயங்கள் தொடர்பாக சிபார்சுகளை முன்வைத்துள்ளது. அவற்றை நாம் முற்றுமுழுதாக ஏற்காவிட்டாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பாகவும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் முன்வைக்கப்பட்டுள்ள சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

நாம் இனப்பிரச்சினை தொடர்பாக பல கோணங்களிலும் பல மட்டங்களிலும் பேச்சுக்களை நடத்துவதுடன் தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பும் அவசியம் என வலியுறுத்தியுள்ளோம்.

ஆரம்ப கட்டத்தில் இந்தியாவின் அழுத்தம் காரமாகவே இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்தது - என்றார்.

### மாவை சேனாதிராசா

நிகழ்வில் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய மாநாடு வெகு விரைவில் நடத்தப்படும். அது ஒரு தமிழ் எழுச்சி மாநாடகவே அமையும்.-

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், இனப் படுகொலைகள் தொடர்பாக இன்று சர்வதேச சமூகமே தலையிடும் நிலை ஏற்பட்டது. நாம் எமது ஒன்றுபட்ட மக்கள் பலத்தினாலேயே இதனைச் சாதித்துள்ளோம்.

நாம் எமது அடிப்படை உரிமைகள், சமத்துவம் மற்றும் ஏனைய உரிமைகள் தொடர்பாக அரசுடன் மட்டுமன்றி இங்குள்ள ஏனைய அரசியல் அமைப்புக்களுடனும் பேச்சு நடத்துகின்றோம். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் தென்பகுதியில் எமது உணர்வை அங்கீகரிக்கும் மலையகத் தலைவர்கள் போன்ற எல்லாத் தரப்புடனும் மனம் விட்டு பேச்சு நடத்தி வருகின்றோம்.

இலங்கையில் உள்ள ஏனைய சமூகங்கள் போன்று நாமும் தன்மானத்துடனும் சுதந்திரமாகவும் சுயமாகவும் கௌரவமாகவும் வாழ வேண்டும். அதற்குத் தேவையான அனைத்து அடிப்படை உரிமைகளும் எமக்கு வழங்கப்படவேண்டும். இதனை தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலம்தான் சாதிக்க முடியும்.

தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது. அதே போன்று தொடர்ச்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய மாநாட்டினையும் கூட்ட திட்டமிட்டுள்ளோம். இது ஒரு தமிழர் எழுச்சிமாநாடாக அமையும் - என்றார்.

இந்த நிகழ்வில் ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனும் ஈ.பி.ஆர். எல்.எவ். சுரேஷ் பிறேமச்சந்திரன் உட்பட ஐந்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஒ-10-2)

## இலங்கை விவகாரம் குறித்து ஜெனிவாவில் அதிக கவனம்

»1 கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம் எனவும் அது கூறியுள்ளது.

இலங்கை இராணுவம் தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாயின் அதன் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்துச் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டியது காலத்தின் தேவை என சர்வதேச நெருக்கடிக்குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் அலன் கீனன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா எடுத்துள்ள நிலைப்பாட்டை அவர் வரவேற்றுள்ளார். இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்று வருவதாகக் கூறியுள்ள அவர், சிலாபத்தில் மீனவர் படுகொலை, நீதிமன்ற வளாகத்திலேயே கைதி கடத்தல் போன்ற சம்பவங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும்அவசியமானதென வலியுறுத்தியுள்ளார். (த)

## சவேந்திர சில்வா விவகாரம் ஐ.நாவில் இரகசிய சந்திப்பு

»1 செய்யுமாறு இலங்கையைக் கேட்டிருப்பதாகவும் பங்களாதேஷ் நாட்டின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்திருந்தார்.இதனை உறுதி செய்த பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநதி, இதுகுறித்து குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் ஐ.நா அமைதிப்படைப் பணியகத்துக்கும் சில உறுப்பு நாடுகளின் தூதுவர்களுக்கும் இடையில் இந்த விவகாரம் குறித்துக் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளதாக நியூயோர்க் தகவல்கள் கூறுகின்றன.

ஐ.நாவின் அமைதிக்காப்பு நடவடிக்கைக்கான இரு கீழ்நிலைச் செயலர்களுடனான இந்த சந்திப்பில் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட சில நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டத்தின் பின்னர், ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சுசன் ரைஸ் கருத்து வெளியிடுகையில்,

ஆலோசனைக் குழுவில் பணியாற்றத் தெரிவு செய்யப்படும் எவருடையதும் பின்னணி குறித்து அக்கறை கொள்ள வேண்டும்.இதுகுறித்து உறுப்புநாடுகளுடன் கலந்துரையாடியுள்ளோம். ஐ.நா செயலகத்துடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது.இதற்குப் பதிலளிப்பது தொடர்பாக பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன். இதுபற்றிப் பகிரங்கமாக விவாதிப்பது பெரும்பாலும் நல்லதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஐ.நாவின் இன்னொரு நிரந்தர உறுப்பு நாட்டின் பிரதிநிதி,இலங்கை விவகாரத்தில் நீங்கள் சரியாகச் செய்தீர்கள் என்று இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளரைப் பாராட்டியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின்றிச்

10 வரப்பிரசாதங்களுடன்
ஐஸ்கிறீம் இயந்திரம்

50,000/- மேல்
மாத வருமானம்



- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை ரூ 99,000/- இல் இருந்து | புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902



# ஆங்கிலம்

இலவச கற்கைநெறி

20.02.2012
திங்கள்கிழமை

பிரிவு 1 : காலை 8.00 - 9.00
பிரிவு 2 : காலை 10.00 - 11.00
பிரிவு 3 : மாலை 3.00 - 4.00
பிரிவு 4 : மாலை 5.00 - 6.00

அனுமதி இலவசம்
பயிற்சி புத்தகம் இலவசம்
சான்றிதழ் இலவசம்

(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)

MyWay English
NSB அருகில், கொடிகாமம் வீதி,
நெல்லியடி
077 33 63 456



# திருமண சேவை

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர்தரம் முதல் சாதாரண தரம் வரையில் மணமக்களின் சாதகங்கள் இருக்கின்றன. நேரில் வந்து தேர்ந்தெடுத்து, உங்கள் திருமணங்களை, நீங்கள் விரும்பியபடி நிறைவேற்றுங்கள்.

''சர்வதேச புலவர் திருமண சேவை''
'மதுரகானம்', 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2227147 - 0713352215
57, விகாரை லேன், வெள்ளவத்தை, கொழும்பு - 6
தொ.பே. 0112 363435.



# பணியாளர்கள் தேவை

சந்தைப்படுத்தல் பிரிவுக்கு உடனடியாக முழு நேர மற்றும் பகுதிநேர பணியாளர்கள் தேவை. தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

அடிப்படை சம்பளம்
போக்குவரத்து செலவுகள்
மேலதிக விற்பனைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

GLOBAL BUSINESS NETWORK
231, TEMPLE ROAD, NALLUR.



# 50% OFFER COMPUTER COURSES

புதிய வகுப்புகள் ஆரம்பம்
20.02.2012

| | | |
|---|---|---|
| Certificate in Ms Office 2007 | ~~6000/-~~ | 3000/- |
| Diploma in Computer Studies | ~~10000/-~~ | 5000/- |
| Diploma in Graphic Designing | ~~15000/-~~ | 7500/- |
| Diploma in Web Designing | ~~10000/-~~ | 5000/- |
| Diploma in Computer Hardware | ~~10000/-~~ | 5000/- |
| Certificate in Java, VB.NET, C#, AsP | ~~22000/-~~ | 11000/- |

LONDON METROPOLITAN COLLEGE
No:197, Arasady Road, Jaffna
(Between Kandarmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395


# மரண அறிவித்தல்



## முத்து - சின்னமணி

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து சின்னமணி 17.02.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கோவிந்தர் - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, அன்னபாக்கியம் (செல்லக்கண்டு), தேவராணி (வள்ளியம்மை) மற்றும் கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவராணி (லீலா), செல்வராணி (செல்லம்), விக்னேஸ்வரன் (அப்பன், சுவிஸ்), ஜெகதீசன் (தீசன்) ஆகியோரின் அன்புத் தாயும், நாகராசா, விஜயரத்தினம், உசாமதி (சுவிஸ்), இரட்ணவேணி ஆகியோரின் அன்பு மாமியும், தர்ஷினி (பிரான்ஸ்), சுதர்சன் (பிரான்ஸ்), சுஜீவன் (சுவிஸ்), வைஷ்ணவி, சங்கீர்த்தனன், ஷாகீசன் (சுவிஸ்), விதுசன் (சுவிஸ்), சுவஸ்திகா, ஷாகித்தியன், ஆகியோரின், அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் சுன்னாகத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயன்னா வீதி,
அம்பனை, சுன்னாகம் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


# STUDY IN UK

AFTER GCE O/L
GCE A/L
what next?

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

February/March Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk



# அட்சயா

டிப்ளோமா அழகுக் கலை பயிற்சி நெறி

★ பேசியில் ★ மேக்கப் ★ கெயாஸ்டைல் ★ தலைமுடி அயன் பண்ணுதல், சுருட்டுதல் ★ கெயாகட்டிங் ★ ஐசிங் ★ ஐசிங் பிளவர் ★ சாறிப்ளவுஸ் கட்டிங் ★ பஞ்சாபி கட்டிங் ★ பிளவ மேக்கிங் ★ சமையல் அலங்காரங்கள் ★ டெலி பியர், பூ, நாகசடை செய்முறை ★ பெயிண்டிங்

மேற்படி பயிற்சி முடிவில் ''டிப்ளோமா சான்றிதழ்'' வழங்கப்படும். ஆர்வமுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

★ உடல் எடை குறைக்கும் பால்மா

★ ஒட்டிய கன்னங்களை குண்டுக்கன்னங்களாக மாற்றும் குளிகை, உடல் எடை கூட்டும் குளிகை.

★ கடும் கறை, நாட்பட்ட பருக்கள், பிறப்பிலேயே கறுப்பு மஞ்சள், கறுப்பு புள்ளிகள், கழுத்து கறுப்பு என்பன மாற்றும் ''ஒரிஜினல் வைற்றிங் கிறீம்'' விற்பனைக்கு உண்டு.

★ பேசியல், மேக்கப், தலைமுடி அயன் பண்ணுதல், சுருட்டுதல், ஐசிங்கேக், றிச்கேக், கேக் வகைகள் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்சயா (அரவிந் ஸ்ருடியோவிற்கு அருகில்)
461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.



# வாடகைக்கு

சாவகச்சேரி, கொமர்சல் வங்கிக்கு அருகில் உள்ள மேல் மாடிக் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு : 021 2221849.



# வீடு விற்பனைக்கு

இல. 93, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் 3¼ பரப்பு, 5 அறைகள், கிணறு, வளவுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு தொ.பே.
0771286724, 0770879929



# மகளிருக்கான 3 மாத கால பயிற்சிகள்





அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் பயிற்சிகள் சனி, ஞாயிறுகளிலும் நடைபெற உள்ளன.

முக அழகுக் கலை (Facial):- (B) பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற், தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட 15 வகையானவை.

Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம்,
வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்,

அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)





50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening), முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 6 வித முடி வெட்டுதல்கள். தமக்குத் தாமே முடி வெட்டுவதற்கானபயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 25-02-2012 சனி காலை 9.30 மணி

கலாலயா
பயிற்சியகம்
1985-2012
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்



LORENTZ
GERMANY



# இலவசமாக

வாழ்நாள் முழுவதும் நீரைப் பெற்றுக்கொள்ளுங்கள்

## நீர் இறைக்கும் இயந்திரம்

சூரிய சக்தியால் இயங்கும் துருப்பிடிக்காத LORENTZ பம்பித்தொகுதிகள்
விவசாய பண்ணைகளுக்கு, விடுமுறை விடுதிகளுக்கு, பாடசாலைகளுக்கு மற்றும் கிராம மக்களுக்கு



- மண்ணெண்ணை, டீசல், மின்சாரம் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கு முற்றுப்புள்ளி.
- உங்கள் விவசாய வேலைத்திட்டத்தின் வர்த்தகத்தின் இலாபம் அதிகரிக்கும்.
- இலவசமாக மின்சாரத்தையும் பெற்றுக்கொள்ள இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்.

விலை ரூபா. 215,000.00 இருந்து

Ataaspirations - 011 2722990

இறக்குமதி செய்து விநியோகிப்போர்
E.B. CREASY & CO. PLC
98, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
Tel: 011 2478770-9 மனோகரன்: 0777 415338


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


சரியான இடத்தில் இலங்கை 23


வீடுவரும் வரை காத்திருக்கும் மக்கள் 05


தமிழரைத் தேடும் சிங்கள அரசு 06


தொடரும் தீவிரவாதம் 17


பொதுப் பயணத்தில் அசௌகரியம் 19



# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 19 பெப்ரவரி 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# வல்லூறுகளின் தற்கொலை

■ ஓாண்யன்

அமைதியாக இருந்த வானத்தில் சின்னதான சலசலப்பு. காதைக் கிழிக்கும் பேரோசையோடு இனம் புரியாத பயம் ஒன்று அந்தச் சூழலில் உற்பத்தியாகத் தொடங்கியது. வந்தவர்கள் போனவர்கள் நின்றவர்கள் எல்லோரும் கிட்டிய தூரத்திலிருக்கும் குழிகளில் தம்மை மறைத்துக்கொண்டார்கள். எப்படியேனும் உயிரை காத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் ஒளிந்திருக்கும் மறைவிடங்கள் எந்தளவு தூரத்துக்கு மேலே பேரோசையோடு வட்டமிடும் இயந்திர வல்லூறுகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கக்கூடும் என்பது அவர்களுக்கே புரியாமல் இருந்தது.

மேலே இரைச்சல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. ஒலியைப் பின் தொடர்ந்து செல்லும் கண்களுக்கு வல்லூறுகள் தென்படவேயில்லை. தாம் கைவிட்டுச்சென்ற ஒலியை விடவும் வேறெங்கோ தூரத்துக்கு வல்லூறுகள் சென்று வட்டமிடத் தொடங்கியிருக்கும். தம் இரையை இனங்கண்டு கொண்டபின் சட்டெனப் பதிந்து குண்டுகளை பொழிந்துவிட்டுப் போனபின்னர் தான் நடப்பது என்னவென்று அறியமுடியும். அந்தளவுக்கு வல்லூறுகள் வேகம் கூடியவை.

வல்லூறுகளின் குண்டுகளின் குடும்பங்கள் பலவும் கூண்டோடு சிதைக்கப்பட்டன. எங்கும் மனிதக் கறிகள். ரத்தம் குளமாகி வீடெங்கும் உறைந்திருக்கும். அருகே இருக்கும் மரங்களில் தலை, கால், கை, இனங்கண்டுகொள்ள முடியாத தசைத் துண்டங்கள் என்பனவெல்லாம் தம் இஷ்ரப்படி தொங்கி விளையாடிக்கொண்டிருக்கும். இரத்தத்தில் தோய்ந்திருக்கும் பிஞ்சு ஒன்றின் உடலத்தை மடியில் வைத்துக்கொண்டு கதறியழும் தாய்மாரின் ஒப்பாரிகள் வல்லூறுகளுக்கு கேட்பதில்லை.

''பத்தியெரிஞ்சு போவாங்கள். என்ரை பிள்ளையை இப்பிடி ஆக்கிட்டாங்களே. உதுகளுக்கு அழிவே வராதோ? நான் கும்பிடுற கடவுள் உண்மை எண்டால் உதுகள விழுத்திக் காட்டோணும்.'' மடியில் சிதைந்துபோன சடலத்தை சுமந்தபடி கைகளில் மண்ணை அள்ளி எறிந்து அந்தத் தாய்மார்கள் விட்டெறியும் சாபங்கள் வல்லூறுகளை ஒருபோதும் சலனப்படுத்தியதில்லை. அந்தத் தாய்மார்கள் 'கும்பிடுகின்ற' கடவுள்கள் கண்ணை இறுக மூடியிருக்க வேண்டும். வல்லூறுகளைத் தாக்கவென தரையில் இருந்து செல்லும் ஏவுகணைகளுக்கு ஒவ்வொருமுறையும் வல்லூறுகள் ஏமாற்றத்தையே பரிசளித்துக் கொண்டிருந்தன. ஒருபோதும் ஏவுகணைகள் வெற்றிபெறவே முடியவில்லை. கடைசியில் வல்லூறுகளை வீழ்த்தவே முடியாது என்ற முடிந்த முடிவுக்கு வந்த பின்னர் சாபமிடுவதைக் குறைத்துக் கொண்டு, தப்பிக்கும் வழிகளைத் தேட முற்பட்டார்கள் மக்கள். ஆனாலும் வல்லூறுகள் விடுவதாயில்லை. எங்கு போனாலும் பின் தொடரும் நிழல்போல தேடிச் சென்று தம் இரைகளைக் கொத்திக் குதறிக்கொண்டேயிருந்தன. முள்ளிவாய்க்கால் வரை வல்லூறுகளின் வட்டமிடுதல்களும், இரைகொத்தல்களும் முற்றுப்புள்ளியின்றி தொடர்ந்து கொண்டேயிருந்தன.

> ❝ பத்தியெரிஞ்சு போவாங்கள். என்ரை பிள்ளையை இப்பி ஆக்கிட்டாங்களே. உதுகளுக்கு அழிவே வராதோ? நான் கும்பிடுகிற கடவுள் உண்மை எண்டால் உதுகளை விழுத்திக் காட்டோணும்."




2012–பெப்ரவரி–13

நீர்கொழும்புக்கும் புத்தளத்துக்கும் இடைப்பட்ட வான் பரப்பில் பறந்துகொண்டிருந்த மிக் விமானத்துக்கு திடீரென வியாதி வந்துவிட்டது. விமானிக்கு நிலைமை புரிந்துவிட்டது. என்னதான் செய்தாலும் மிக்கை காப்பா[illegible] முடிவுசெய்த விமானி தன்னையாவது காப்பாற்றிக்கொள்ள ஆபத்துக்கால பொறிமுறையை இயங்கச் செய்தார். அவரை இருக்கையோடு தூக்கி வெளியே எறிந்தது அந்தப் பொறிமுறை. வானத்தில் பரசூட் விரிந்துகொள்ள தரையை நோக்கி வந்து கொண்டிருந்த விமானி, ஒரு தென்னந் தோப்பில் மிக் விமானத்துக்கு இயற்கை கொள்ளி வைப்பதை கண்டுகொள்ள நேர்ந்தது.

போர்க் காலங்களில் புலிகளின் படைக் கலங்களுக்கு தண்ணிகாட்டிவிட்டு, நினைத்த இடத்திலெல்லாம் குண்டுமாரி பொழியக் கூடிய வல்லமைகொண்ட மிக் விமானம், வாய்பிளந்து, சிதறுண்டு தனக்குத்தானே தீ மூட்டிக்கொண்டு அழிந்துபோனது. இத்தனை நாளும் தான் செய்த கொலைகளை நினைத்து மனம் அழுந்தித்தான் இந்தத் தற்கொலை முடிவுக்கு மிக் வந்ததோ தெரியவில்லை. 'மிக்'கின் தற்கொலை சாபங்களும் கடவுளர்களும் உண்மை தானோ என்ற நினைப்பை அனேகரிடத்தில் ஏற்படுத்தியுள்ளன. முன்னர் இத்தகைய வல்லூறுகள் வீழ்ந்த செய்தி ஒரு விழா போலவே கொண்டாடப்படுவதுண்டு. வெடிகள் முழங்க, எல்லோரும் மகிழ்வோடு இந்தச் செய்தியைப் பரிமாறிக் கொள்வார்கள். மாலையில் பத்திரிகைகள் விசேட பதிப்புகளில் வல்லூறுகளின் வீழ்ச்சியை விரிவாகச் சொல்லி மகிழ்வை இன்[illegible] செய்வதுண்டு. வீழ்த்தப் [illegible]களின் உருவங்களை ஒத்த ஊர்திகள் வீதியெங்கும் பவனிவரும். வெல்வோம் என்ற நம்பிக்கை இன்னும் அதிகரிக்கும். ''கொஞ்ச நாளைக்கு துலைவாங்கள் குண்டுபோட வரமாட்டங்கள்'' என்ற நிம்மதி ஆறுதலைத் தரும்.

இன்றைக்கு நிலைமை அப்படியல்ல. வல்லூறுகளுக்கு வடக்கிலும் கிழக்கிலும் இப்போது வேலை இல்லாமல் போய்விட்டன. அவை வெறும் கண்காட்சிப் பொருள்கள்தான். சும்மாயிருந்தால் சோம்பல் பிடித்துவிடும் என்பதற்காக அவ்வப்போது தம் இருப்பிடங்களிலிருந்து புறப்பட்டு, வானத்தை சுகம் விசாரித்துவிட்டு மீண்டும் 'கட்டுக்கொடிக்கு' திரும்புவதே இப்போது வல்லூறுகளின் வாழ்க்கையாகிவிட்டது. சில வேளைகளில் இந்த வாழ்க்கை பிடிக்காததால்கூட வல்லூறுகள் தற்கொலை முடிவுக்கு போயிருக்கலாம். சென்ற வருடமும் மார்ச் முதலாம் திகதி கிபிர் விமானம் ஒன்று இதே பாணியில் தன் விமானியோடு சேர்ந்து தற்கொலை செய்துகொண்டது.

இதற்கெல்லாம் காரணம், ஒன்று வல்லூறுகளின் விரக்தி அல்லது போர் நிகழ்ந்த காலங்களில் தாம் செய்த கொலைகளுக்கான மன உளைச்சலாக இருக்கவேண்டும். அல்லது கண்ணீரோடும், மடிகளில் பிணத்தோடும் தாய்மார்கள் விட்டெறிந்த சாபமாக இருக்க வேண்டும். 'மிக்'கும், கிபிரும் பற்றி எரிந்ததைப் பார்க்கும்போது, ''பத்தியெரிஞ்சு போவாங்கள்.'' என்று போட்ட சாபங்கள்தான் பலித்திருக்க வேண்டும் போல் தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை

■ தட்சா

சித்திரவதை என்பது உயிர் ஒன்றை மிகக் கொடூரமான முறையில் தண்டிப்பது எனப் பொருள்படும். அது உடல் ரீதியான துன்புறுத்தலாக மட்டுமன்றி உள ரீதியான துன்புறுத்தலாகவும் அமையும்.

இந்தச் சித்திரவதை குறித்த தகவல்கள் அதற்கான தண்டனைகள் மற்றும் அது குறித்த சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்கள் என்பன பரந்தவை.

அண்மையில் களனி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மருத்துவக் கண்காட்சியில் அது குறித்த தகவல்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

சித்திரவதை என்பது எந்தச் செயல் கடிய வலியை தருகின்றதோ அது உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக இருத்தல், உள்நோக்கத்துடன் ஒருவரைத் துன்புறுத்தல், உத்தியோகஸ்தர் அல்லது பகிரங்க அலுவல் அதிகாரத்துடன் செயற்படுத்தப்படும் வேறு நபர்களின் தூண்டுதல் அல்லது அனுமதியுடன் இணக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்றது.

இந்தச்சித்திரவதையின் முக்கிய விளைவுகள் அவயவங்களை உருக்குலைத்தல், பாரிசவாதம், சுயநினைவை இழத்தல், உணர்ச்சிவசப்பட்ட ரீதி உண்டாதல், இறப்பு மற்றும் காணாமற் போதல் போன்றவை ஏற்படும்.

இது உடனடியாக ஏற்படும் ஒரு வேதனை அல்ல. சித்திரவதைக்கு உட்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் காலம் கடந்த புற அதிர்ச்சிக் காயம், அழுத்த சீர்குலைவினால் வருந்துவர்.

இவை அறிகுறிகளாக வெளிப்படும். அதாவது கடந்த கால நிகழ்வு, கடுமையான மனக்கவலை, தூக்கமின்மை, மன அழுத்தம் போன்றவை ஆகும்.

சமூகத்திலுள்ள யாரும் சித்திரவதைக்கு உள்ளாக முடியும். குழந்தைகள் முதல் முதியோர்வரை எவரும் பாதிக்கப்படலாம். இது தனி ஒருவரை மட்டும் பாதிப்பதில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சித்திரவதைக்கு உட்பட்டவரின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களும் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் அவர் சார்ந்த சமுதாயமும் மறைமுகமாக பாதிப்புக்கு உள்ளாகின்றது.

இத்தகைய சித்திரவதைகளை தடுக்க சில வழிமுறைகள் உள்ளன. அதாவது சமுதாயத்திலும் அரசியல் வாதிகளிடையிலும் ஒழுக்க நெறி முறைகள், ஜனநாயகப் பண்புகளையும் மனித உரிமைகளையும் பாதுகாத்தல், சித்திரவதையை தடுத்தல் மற்றும் அழித்தல் தொடர்பாகச் சாதாரண மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல், சட்ட வாட்சியை விருத்தி செய்தலும் பாதுகாத்தலும், சட்டத்தை அமுல்படுத்த தொடர்பயிற்சி வழங்கல் போன்றவை ஆகும்.

சித்திரவதை பரந்த அளவில் மனித உரிமை மீறலாக கருதப்படுகின்றது. இதனை தடை செய்வது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் முக்கிய ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை அமைத்ததன் மூலம் உரிமைகளுடன் தொடர்புடைய ஆகக் குறைந்த நியம ஒழுங்கமைப்பை அறிமுகப்படுத்தியது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் ஐந்தாம் உறுப்புரிமை சித்திரவதையில் இருந்து பாதுகாப்பு வழங்கலைக் குறிப்பிடுகின்றது.

சித்திரவதைக்கு எதிரான விதி ஒன்று காணப்படுகின்றது. இது சித்திரவதையை தடைசெய்தல் தொடர்பான மிக முக்கிய உடன்படிக்கை ஆகும். இது 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி பதியப்பட்டது. அது சித்திரவதை என்றால் என்ன? மற்றும் கொடூரமான , மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான நடத்துகை, தண்டித்தல் போன்ற அர்த்தங்களுக்கு வரைவிலக்கணம் கூறுகின்றது.

இவற்றில் உறுப்புரை ஒன்று மட்டும் 16 சித்திரவதையை தடைசெய்வதற்கும் உறுப்புரிமை 2 இல் முதலாம் சரத்து முற்றாக நீக்குவதற்கும் அரச நிறுவனங்கள் எடுக்க வேண்டிய பயன்தரு சட்ட நிர்வாக நீதித்துறை மற்றும் ஏனைய நடவடிக்கைகளை வலியுறுத்துகின்றது.

இந்தச்சித்திரவதைக்கு எதிரான அரசியலமைப்பு உத்தரவாதங்கள் உள்ளன. அதாவது 1978 இல் அரசியலமைப்பு அத்தியாயம் மூன்றில் மக்கள் அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உறுப்புரிமை இரண்டில் சித்திரவதையிலிருந்தான சுதந்திரத்தை நிச்சயப்படுத்துகின்றது.

சித்திரவதைக்கு எதிரான நிர்வாகக் கட்டமைப்புக்குள் நீதிமன்றம், பொலீஸ் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவை இயங்கி வருகின்றன.

எதேச்சையான கைது, எதேச்சையான தடுத்து வைப்பு, சித்திரவதை என்பவற்றைத் தடுப்பதற்கு 011-2689064 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும்.

# அழகான பயணம்...

■ ஜோ

நண்பர்களுடன் பயணம் என்றால் யாருக்குத்தான் பிடிக்காது?? அப்படித்தான் எனக்கும். சென்ற இடம் எங்கு தெரியுமா?? கடலினுள் அழகிய தீவாகக் காட்சி தரும் நயினாதீவு..

செல்வதற்கு ஒரு கிழமைக்கு முதலே இங்கு தான் செல்லப்போகின்றோம் எனத் தீர்மானம் எடுத்தாகிவிட்டது. அன்றையதினமே வீட்டிலும் வந்து கூறிவிட்டேன் இவ்விடயத்தை. அப்பாவிடம் கூறினால் போகவேண்டாம் என்றுவிடுவாரோ எனும் பயம் ஆட்கொள்ளவே அம்மாவிடம் விடயத்தை கூறி அம்மாவின் மூலம் விடயத்தை அப்பாவிற்கு கூறினேன்.

மிகவும் மகிழ்ச்சியான வாழ்வில் மறக்க முடியாத தருணங்களுள் அப்பா அனுமதி தந்த நிகழ்வும் ஒன்றாகிவிட்டது.

விடிந்தது. நான் நயினாதீவிற்கு சென்று கிட்டத்தட்ட 6 வருடங்களிற்கு மேல் ஆகியிருக்கும். இதனால் ஆர்வத்துடன் ஆயத்தமானேன். செல்வதற்கு சரியாக 8.15 இற்கு நிற்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. நானும் குறித்த நேரத்திற்கு ஆயத்தமாகிவிட்டேன். 8.15 இற்குத்தான் என் நண்பன் ஒருவன் முன்தினம் கூறியது நினைவுக்கு வந்தது. நான் குறித்த நேரத்துக்கு எழும்பமாட்டேன். முடிந்தால் வருவேன் என்று.

உடனடியாக குறித்த அந்த நண்பனுடைய கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தினேன். என் துரதிஸ்டம் கைத்தொலைபேசி அணைக்கப்பட்டிருந்தது.

5 நிமிட இடைவெளியில் அந்த நண்பனிடம் இருந்து குறுஞ்செய்தி வந்தது. எல்லாரும் வந்துவிட்டனரா? எத்தனை மணிக்குச் செல்லப் போகின்றீர்கள்? நான் இப்போதுதான் எழும்பினான். என்று இருந்தது அந்தக் குறுந்தகவல். சிறியதாக ஒரு கவலை. அவனை விட்டு நயினாதீவு செல்வது கொஞ்சம் கஸ்டமாக இருந்தது. ஆனால் என்னதான் செய்ய முடியும்??

நான் குறித்த இடத்திற்கு வந்துவிட்டேன். எனக்கு அடுத்ததாக குறித்த இடத்திற்கு வந்தது யார் தெரியுமா?? நான் இப்போதுதான் எழும்பினேன் எனக் குறுஞ்செய்தியில் குறும்பு செய்த அந்த நண்பன் தான்..

நாம் ஐந்து பேர் நெருங்கிய நண்பர்கள். அதில் மூவர் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் நிற்பதாகவும் போகும் வழியில் தம்மை ஏற்றிக் கொண்டு போகுமாறும் கூறினர். அவர்களை விட்டு என் மற்றைய நண்பியை காணவில்லை. அவளிற்கு அழைப்பை ஏற்படுத்தி சீக்கிரம் வருமாறு கூறிவிட்டுக் காத்திருந்தோம்.

மகிழ்வுடன் அனைவரும் பயணத்தை ஆரம்பித்தோம்.போகும் வழியில் பேருந்து நிலையம் சென்று மற்ற நண்பர்களையும் ஏற்றிக் கொண்டு சென்றோம். இரு பக்கமும் கடல். நடுவே பேருந்து பயணம். அதுவும் ஜன்னலோரத்தில் நான். சில்லென்ற காற்று. சுற்றிவர நண்பர்களின் கலகலப்பு. கேட்கவா வேண்டும்?? நினைவுகள் விரிந்து சென்றன.

இரு பக்க கடலைப் பார்த்ததும் மனம் கடலைப் போல விரிந்து இத்தனை நாள்களாக கால ஓட்டத்தில் மறந்த மற்றும் மறைத்த விடயங்களை நினைக்கச் செய்தன.

பஸ்சினுள் நண்பர்களின் நண்பர்களாக வந்தவர்கள் அறிமுகமான நேரம் அழகானது. அவர்களுடன் பழகியது ஒரு நாள்மட்டுமே. ஆனால் அனைவருமே மறக்க முடியாத உறவுகள். மீண்டும் எப்போது இப்படியான சுற்றுலா??... என மனம் ஏங்கவில்லை என நான் பொய் சொல்ல விரும்பவில்லை.

இயல்பாகவே கலகலப்பாக இருக்கும் என் நண்பர்களை நான் அடுத்த பிறவியிலும் இழக்க விரும்பவில்லை..

இடையிடையே என் அண்ணாவின் கண்காணிப்பிற்கும் நான் தவற விடப்படவில்லை. செல்லும் பாதை முடிந்து போகாமல் இருந்தால் என்ன? என்றெல்லாம் நினைக்கத் தொடங்கியது. உண்மைதான் இத்தனை நாள்களாகப் பயத்துடன் நான் பழகியவர்களை இச்சுற்றுலாவின் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஓடும் பேருந்தில் மிதி பலகையில் நின்று பயணம் செய்ய வேண்டும் என்பது என் நீண்ட கால ஆசை. இதுகூட இன்றைய நாளில் நிறைவேறிவிட்டது. கையில் இருந்த புகைப்படக்கருவி தன் பணியை தவறாமல் செய்தது.

பார்க்கும் போது மனதைக் கவர்ந்த இடங்களை எல்லாம் புகைப்படமாக பதிவு செய்தபடியே பயணத்தை தொடர்ந்தேன்.

பேருந்து கடற்கரை ஓரமாக நிறுத்தப்பட்டது. படகுக்கு செல்வதற்காக நாம் அனைவரும் இறக்கப்பட்டோம்..

# 22 வருட காலத்தின் பின்னர்

22 வருடங்களின் பின் தெல்லிப்பழை மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் தொடர்பாக தகவல்களைப் பெறுவதற்காக அப்பகுதியில் வாழும் பெண் ஒருவரை நேரில் சென்று தொடர்பு கொண்ட போது அவர்களது இடம்பெயர்வு தொடர்பாக பல விடயங்களை அறிந்து கொண்டோம்.

"22 வருடத்திற்கு பிறகு வந்திருக்கிறம். அடிப்படை வசதிகள் எதுவுமில்லை. ஆனாலும் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கிறம். இது ஓரளவு திருப்திதான். இருந்தாலும் தொடர்ந்து கஸ்டத்தைத்தான் அனுபவிக்கிறம்". என்கிறார்கள் இப்பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள தவமணி என்னும் பெண்மணி.

60 வயதான திருமதி தவமணி பொன்னுத்துரை என்பவர் மாதகலட்டி தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

அறுவது வயதான இவர் முதற்தடவையாக 1990 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் 16 ஆம் திகதி இடம்பெயர்ந்துள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெயர்வை சந்தித்த இவர்கள் இன்று தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மீளக்குடியமர்த்தப்பட்டு 3 மாதங்கள் ஆன போதிலும் அவர்களிற்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. கணவனை இழந்த பெண்ணான தவமணி தனது 27 வயது மகளுடன் வாழ்ந்து வருகின்றார். அவருடைய கணவன் இறக்கும் போது தவமணிக்கு 34 வயதாகவும் இவருடைய மகளிற்கு வயது 7ஆகவும் இருந்தது. அன்றிலிருந்து அரிசி இடித்தும் வேறு பல கூலி வேலைகள் செய்தும் [illegible] வந்த இவர் தற்போது மீள்குடியமர்வுக்குப் பின்னர் தனது வாழ்வாதாரத்துக்காக கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார்.

"கடையால் வருமானம் குறைவுதான். இருந்தாலும் வேற தொழில் இல்லை. போட்டிக்கு பல கடைகள் வந்து விட்டன. நான் பழம் மற்றும் தண்ணீர்ப் போத்தல் என்பன விற்கிறன்" என்கிறார் தவமணி.

ஆரம்ப காலத்திலேயே மண் வீட்டில் வசித்த இவர்கள் தற்போது அவ்வீட்டையும் இழந்துள்ளனர்; எனினும் மீள் குடியமர்வின் போது வழங்கப்பட்ட தூண், கல், மரக்குற்றிகள், கூரை என்பவற்றைக் கொண்டு கொட்டில் போட்டு வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் எமக்கொரு அம்மா கிடைப்பாவா.....?

விஷ்ணு



உள் நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் தொடரும் சமூக விரோதச் செயல்கள் முன்னரை விட அதிகரித்த நிலையில் உள்ளன.

மதுப்பாவனை, புகைப்பாவனை, இவை தவிர்ந்த சமுதாய சீர்கேட்டு நடவடிக்கைகள் எனப்பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றில் தமிழ்ச் சமூகத்துக்கு பெரிய தலையிடியைக் கொடுத்து, இளந்தலை முறையினரை அமைதியாகச் சீரழித்துக் கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையாக இள வயது கர்ப்பங்களும், சட்ட விரோத கர்ப்பங்களும். கண்டதும் காதல் கொண்டதே கோலம் என்ற இந்த நிலையால் மாதாந்தம் சுமார் 10 பேர் வரை சட்டவிரோதமாக கருத்தரிக்கின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உள்ள அதே வேளை, இவ்வாறு சட்ட விரோதமாகப் பிறந்த குழந்தைகளை எவ்வாறு பராமரிப்பது என்பது இன்னொரு பிரச்சினையாக உள்ளது.

இவ்வாறான குழந்தைகளைப் பராமரிக்க அரச சிறுவர் இல்லங்கள் அமைந்திருக்கின்ற போதும் அங்கு வளரும் குழந்தைகள் எந்தளவுக்கு அறிவு வளர்ச்சியைப் பெறும் என்பதே பிரச்சினையாக உள்ளது.

பொதுவாகவே வைத்தியசாலைகளில் பிரசவத்துக்கென கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்படும் போது அவர்கள் புட்டிப் பால் கொடுப்பதற்கான போத்தல்கள் எதுவுமே வைத்திருக்க முடியாது. வைத்தியர்கள் இதனைக் கண்டிப்பர். காரணம் தாய்ப்பால் மட்டுமே குழந்தைக்கு ஊட்டப்பட வேண்டும். அதுவே போசாக்கு நிறைந்தது. அவ்வாறிருக்க அரச சிறுவர் இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் புட்டிப்பால் மூலமே வளர்கின்றன. அது அவர்களுக்கு போதிய ஊட்டச் சத்தாக அமையாததால் எதிர்காலத்தில் அவர்களது நிலை பரிதாபகரமாக இருக்கும்.

அவர்கள் குழந்தை இல்லாத தம்பதிகளுக்குத் தத்துக்கொடுக்கப்படுகிறார்கள். இது ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாக வாழ வழி சமைக்கிறது. ஆனால் குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படும் செயற்பாட்டின் வேகம் போதுமானதாக இல்லை. அதுவே தற்போதுள்ள பிரச்சினை.

வடமாகாணத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தத்துப் பெறுவதற்காக கிடைக்கப் பெறுகின்றன. ஆனால், அந்த விண்ணப்பதாரிகளுக்கு விரைவாக குழந்தைகள் போய்ச் சேர்வதில்லை, இதுவிரைவுபடுத்தப்படும் பட்சத்தில் அனைவருக்கும் ஆரோக்கியம் கிடைக்கும்.

குழந்தைகளைத் தத்துப்பெறுவர்கள் தாம் தேவையான அளவு பொருளாதார வசதியுடையவர்கள் என்பதை நிரூபித்தல் வேண்டும். தவிர விண்ணப்பதாரிகளால் சட்டத்தரணிகளூடாக நீதிமன்றத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கப்படும் சில குழந்தைகளது அறிக்கைகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்படுகின்றன. பதில் வரஅதிக மாதங்கள் செல்கின்றமையும் இவ்வாறான பின்னடைவுகள் ஏற்படக் காரணம்.

வன்னிப் பகுதியில் வைத்தியசாலைகளில் பிறக்கும் குழந்தைகளை அதன் தாய்மார் வளர்க்க விரும்பாத பட்சத்தில் உரிய முறையில் உடனுக்குடன் தத்துக் கொடுக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த வேகத்தைக் காண முடியவில்லை. தாமதமாகும் ஒவ்வொரு நாளும் தாயில்லாப் பிள்ளையாக இல்லத்தில் குழந்தைகள் இருப்பது ஆரோக்கியமான ஒன்றல்ல.

தவிர இல்லத்தில் வைத்து வளர்க்கப்படும் குழந்தைகளைப் பராமரிக்கப் போதிய எண்ணிக்கையில் பராமரிப்பாளர்களும் இல்லை. இது தாயின் அரவணைப்புப் போன்றதாக அமைவதில்லை.

இதனால் குழந்தைகள் அறிவு வளர்ச்சியில் பாதிப்பை - தடுப்பை ஏற்படுத்தி வருகிறது. எனவே தத்துக் கொடுப்பதற்குத் தடையில்லாது குழந்தைகளை விரைவில் உரியவர்களுக்கு தத்துக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அனைவரதும் கோரிக்கையாக உள்ளது. ✱

# எல்லாம் தரமானவையா...?

வித்தகி

இன்று எந்த பிள்ளையைப் பார்த்தாலும் பின்னேரத்திலும் சரி காலையிலும் சரி கதைக்க முடியாது. அவ்வளவு சுறுசுறுப்பாக காணப்படுகிறார்கள். காலை எழுந்து குளித்து 7 மணியாகிறது என்றவுடன் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு பாடசாலை பஸ்ஸுக்கு புறப்பட்டுவிடுவார்கள். பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முடிவுற வீட்டுக்கு வர நேரம் 2.45 ஆகிவிடும். வந்தவுடனே புத்தகப் பையை தூக்கிக் கொண்டு சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதி என்று ரியூசனுக்கு போய் விடுவார்கள்.

ரியூசனுக்கு போவது படிக்க. ஆனால் இன்று அது ஒரு பஷனும் கூட. ரியூசனுக்கு பிள்ளை போறதில்லை என்றால் அவர்களுக்கு கௌரவ குறைச்சல் என்று பெற்றோர் எண்ணுகிறார்களோ தெரியாது.

இன்று கற்றோர்தான் அதிகம். அத்துடன் பெண்களும் சரி ஆண்களும் சரி தொழில் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களும் கற்றவர்களே.

முன்னர் கிராமபுற பெற்றோர் சிலர் கற்றவர்களாகவும் கூடுதலானவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் காணப்படுவார்கள். தமது பிள்ளைகள் பாடசாலையில் கற்றவற்றில் விளங்காத பகுதியைச் சொல்லி கொடுக்கப் பெற்றோருக்குத் தெரியாது. அதனால் தெரியாத பகுதியை கேட்டுப் படிக்க அயலிலுள்ள தொழில் பார்த்து ஓய்வு நிலையில் இருக்கும் ஆசிரியரிடம் சென்று அதன் விளக்கம் பற்றி கேட்பார்கள். அவரிடம் கேட்டு வந்து மிகுதியைத் தாமே படிப்பார்கள். இப்படித்தான் முன்னர் கற்றார்கள். கேட்டு படிப்பதற்கு கட்டணம் அறவிடுதல் என்பது காணப்படாது.

பின்னர் அது போன்று தெரியாதவற்றைச் சொல்லி கொடுக்க, வயது போனவர்கள் தமது ஓய்வு காலத்தில் தாம் கற்ற கல்வியை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்க தமது வீடுகளிலோ அல்லது பொது மண்டபங்களிலோ வகுப்புகளை நடத்தினார்கள். அங்கு வரும் மாணவர்கள் தாம் பாடசாலையில் கற்றவற்றில் அல்லது ஆசிரியர் கொடுத்த வீட்டுப் பாடத்தில் விளங்காத பகுதியைக் கேட்டுப் படிப்பார்கள். வீட்டில் சொல்லிக் கொடுக்கக் கூடியவர்கள் இருந்தால் அவர்களிடம் கேட்டுப் படிப்பார்கள்.

இவ்வாறு இருந்த கேட்டுக் கற்கும் முறை காலம் செய்த கோலத்தினால் மாறியது ரியூசனாக. அதற்கு தனியிடம் போட்டு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வோர் ஆசிரியர்களை நியமித்து பாடசாலையில் கல்வி கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் மூலம் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

இன்று தனியார் கல்வி நிலையத்தில் தனியாக ஒரு நேர அட்டவணை போட்டு அங்கு பாடசாலை வகுப்பில் நடைபெறுவது போல் வகுப்புக்கள் நடத்தப்பட்டு அவர்களுக் வீட்டுப் பாடம் கொடுப்பார்கள். பாடசாலையில் கொடுக்கும் பாடத்தை ரியூசனில் கேட்க எங்கு நேரம். அதனை கேட்டால் சில ரியூசன் ஆசிரியர்கள் ஏன் உங்கள் பாடசாலை ஆசிரியர் இதைச் சொல்லித் தரவில்லையா என்ற கேள்வி வேறு.

ஒரு பிரதேசத்துக்கு ஒரு தனியார் கல்வி நிலையம் அல்லது நான்கு ஐந்து பிரதேசத்திற்கு ஒரு தனியார் கல்வி நிலையம் என இருந்தது. சிலர் மேலதிகமாக கற்கிறோம் என்று சென்று கற்றார்கள். ஆனால் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் யாவும் தரமான ஆசிரியர்கள் மூலம்தான் கல்வி வழங்குகின்றனவா என்று யாருக்கும் தெரியாது.

ஒரு சில தனியார் கல்வி நிலையங்கள் சரியாக முறையில் மாணவர்களுக்கு கல்வி சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன் வியாபார நோக்கம் அற்று ஏழ்மையில் இருப்பவர்களுக்கு இலவசமாக வழங்குகின்றன.

ஆனால் சில தனியார் கல்வி நிலையங்கள் தமது நிறுவனத்தின் பெயர் வெளிவர வேண்டும் என்பதற்காக செயற்படுகிறன. வியாபார நோக்கமே முன்னிற்கிறது. ஏழை மாணவர்களுக்கு வேறு யாரிடமாவது உதவிகளை பெற்று வழங்குகிறார்கள். வறுமையில் இருப்பவர்களுக்கு இலவசமாக கல்வி கற்பிப்பது போல் காட்டிக் கொள்கிறார்கள். அதற் கான [illegible] முன்வரு பவர்[illegible] பெற்றுக் கொள் கிறார்கள். ஏழை மாணவர்கள் பற்றி யாராவது விசாரித்தால் தாமே முன்னின்று அவர்களை தெரிவு செய்து கொடுத்த அவர்கள் வழங்க வரும் அன்பளிப்புக்களை தமது நிறுவனத்திலே வைத்து சிறு விழா ஒன்றை ஒழுங்கமைத்து பலரை கூப்பிட்டு மாணவர்களுக்கு வழங்குகிறார்கள்.

> பக்கத்து வீட்டுப் பிள்ளை ரியூசனுக்கு போனால் என் பிள்ளை போகாமல் இருக்க முடியுமா? என்று சிந்தித்து ஏதாவது ரியூசனுக்கு போகட்டும் என்று உங்கள் பிள்ளைகளை நீங்களே கெடுக்காமல் வீடுகளில் இருந்து எவ்வளவு கற்க முடியுமோ அதனை கற்க வழி அமைத்துக் கொடுங்கள்.

அதனை பார்க்கும் ஏனையோர் அட நாம் அங்கு கல்வி கற்காதுவிட்டதால் எமக்குக் கிடைக்கவில்லை என மாணவரையும் என்னை பிள்ளையையும் இங்கேதான் சேர்க்க வேண்டும் என்று பெற்றோரையும் நினைக்கவைத்து மாணவர்களை தம்மிடம் வர வைக்க எவ்வாறு எல்லாம் சிலர் உத்திகளை கையாளுகிறார்கள்.

சில தனியார் கல்வி நிலையங்களில் வியாபார நோக்கமே இப்போது காணப்படுகிறது. சேவை செய்பவர்கள் போல் வெளியுலகுக்கு காட்டிக் கொள்வார்கள் . ஆனால் ஏழை, பணக்காரர் என்ற பேதம் இன்றி எல்லோரிடமும் சில தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் ஒரே அளவான பணத்தையே கட்டணமாக அறவிடுகிறார்கள். இங்கு கற்பிப்பவர்கள் எல்லோரும் சரியான முறையில் கற்பிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்களா என்றால் இல்லை.

மாணவர்கள் ரியூசனுக்கு போகாவிட்டால் வீட்டை போய் அவர்களை அழைக்கும் நிலை கூட இன்று காணப்படுகிறது.

பெற்றோர்களே, பக்கத்து வீட்டுப் பிள்ளை ரியூசனுக்கு போனால் என் பிள்ளை போகாமல் இருக்க முடியுமா? என்று சிந்தித்து ஏதாவது ரியூசனுக்கு போகட்டும் என்று உங்கள் பிள்ளைகளை நீங்களே கெடுக்காமல் வீடுகளில் இருந்து எவ்வளவு கற்க முடியுமோ அதனை கற்க வழி அமைத்துக் கொடுங்கள்.

எட நாம் நாடகம் பார்க்கிற நேரம் அதைக் குழப்பாமல் அதுகள் ரியூசனுக்கு போற நேரத்திலையாவது நாம் நிம்மதியாய் நாடகங்களை பார்ப்போம் என்று நினைத்து பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்பிப் போட்டு தங்கள் பிள்ளைகளைப் பற்றி இன்னொருவர் நாடகம் எழுதும் நிலை ஏற்பட வைக்கிறார்கள்.

இன்று எத்தனையோ பெற்றோர்களுக்கு தமது பிள்ளைகள் எங்கு ரியூசனுக்கு செல்கிறார்கள் என்று கூட தெரியாது.

சனி, ஞாயிறு காலையில் பார்த்தால் எவ்வாறு உடுப்புடுத்து போக வேண்டும் என்று சிந்தித்து கண்ணாடி முன் நின்று தம்மை அழகுபடுத்தி கிளம்புவார்கள்.

வகுப்பு முடிந்த கையோடு ஏதாவது ஐஸ்கிறீம் கடைக்கு செல்வார்கள். அது மட்டும் இல்லாது கூட்டாகச் சேர்ந்து ஏதாவது பார்க், பீச் என்று சுற்றுவார்கள். இவற்றை எல்லாம் கண்டு கொள்ளத் தயங்குகிறார்கள் அவர்களது பெற்றோர்கள்.

பெற்றோர்கள் இந்த விடயங்களில் கவனம் எடுத்துச் செயற்படத் தயங்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் எமது சந்ததியின் நிலைமை எங்கு போய் நிற்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளில் அக்கறை எடுத்துச் செயற்படக் கூடிய தரமான கல்வி நிறுவனங்களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அல்லது நீங்களே ஒரு நேரத்தை ஒதுக்கி பிள்ளைகளுக்கு பாடங்களை சொல்லிக் கொடுங்கள். மற்றவர்கள் போல நாமும் வாழ்கிறோம் என்று சொல்லி உங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்தை நீங்களே வீணடித்து விடாதீர்கள்.

கல்வித்துறையில் அக்கறையுடையவர்கள், கல்வி நிறுவனங்கள் இயங்கும் போது அங்கு சரியான முறையில் கற்பித்தல் நடைபெறுகிறதா? தகுதியான ஆசிரியர்கள் தான் கல்வி கற்பிக்கிறார்களா என்று ஆராய்ந்து தரமற்றவைகளை சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த விடயங்களில் உரிய வகையில் அக்கறை எடுக்கப்படாத பட்சத்தில் எதிர்காலத்தில் எமது சந்ததியின் கல்வியை மட்டுமல்ல எமது கலாசாரத்தையும் இழந்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்படும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழம்புகிறது அமெரிக்கா

நித்தியா

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈரான் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது என்று அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ் சாட்டி வந்த நிலையில், அணு ஆயுத உற்பத்தித் திறனில் தாம் பெற்று விட்ட முன்னேற்றம் குறித்து கடந்த வாரம் உலக நாடுகளுக்கு வெளிப்படையாகவே ஈரான் தெரியப்படுத்தியுள்ளது.

தமது நாட்டு அணு ஆராய்ச்சி மையத்தில் அணு உலையின் இயக்கத்தைத் தொடக்கி வைத்துப் பேசிய ஈரான் அதிபர் ஹொமட் அகமதி நிஜாத், அணு ஆயுத எரிபொருள் கருவியையும் உருவாக்கி இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்களை உருவாக்குவதற்குத் தேவையானது யுரேனியம் எனப்படும் எரிபொருள். இதனைத் தூய்மையாகவும் குறைந்த நேரத்தில் மிக விரைவாக உருவாக்கவும் பிரிப்பானைக் கருவியை உருவாக்கியிருக்கிறது ஈரான்.

தாம் அடைந்துள்ள இத் தகைய முன்னேற்றம் குறித்து நடான்ஜ் பகுதியில் உள்ள அணுமின் நிலையத்தின் யுரேனிய செறிவூட்டல் நிகழ்வை அதிபர் ஆரம்பித்து வைக்கும் காட்சிகளை நேரடியாக ஒளிபரப்பியதால் உலக நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன.

அதுமட்டுமன்றி ஈரானில் புதிதாக நான்கு முக்கிய நகரப் பகுதிகளில், அணு ஆராய்ச்சி நிலையங்களை அமைக்கவும் அந்த நாட்டு அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். இந்த நான்கு ஆராய்ச்சிகள் மூலம் நாட்டுக்குத் தேவைப்படும் கதிரியக்க மருந்துகளை உற்பத்தி செய்யவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். இவற்றுடன் தெஹ்ராணில் ஓர் அணு உலை இயக்கக் கட்டுப்பாட்டு நிலையமும் அமைக்கப்பட இருக்கிறது. இதே வேளை, மின் வழங்கலுக்காக மேலதிகமாக 20 மின் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.



அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே அணு சக்தி தொடர்பான விவகாரத்தால் முறுகல் நிலை ஏற்பட்டதை அடுத்து, ஏற்கனவே ஹோர்மூஸ் நீரிணையில் பதற்றம் ஏற்பட்டது. அதாவது உலகின் எண்ணெய் விநியோகத்தில் பெரும் பகுதி ஹோர்மூஸ் நீரினை வழியாகத்தான் நடைபெறுகிறது. ஈரானுக்கு அண்மையில் உள்ள குறித்த நீரிணை வழியாகத் தான் பேர்சியன் வளைகுடாவத் தாண்ட வேண்டும்.

இந்த நிலையில் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், தமது நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்தற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக அரபு நாடுகளிலிருந்து புறப்படும் எண்ணெய் கப்பல்களை ஹோர்மூஸ் துறைமுகம் வழியாகச் செல்லத் தடை விதிக்க போவதாக எச்சரித்ததுடன் அந்தக் கடலில் அடிக்கடி போர் ஒத்திகை நடவடிக்கையிலும் ஈரான் ஈடுபட்டு வருகிறது.

இதனால் ஆத்திரமுற்ற அமெரிக்கா ''ஹோர்மூஸை மூடினால் பதிலடி கொடுப்போம்'' என்ற அறிவிப்பை வெளியிட்டதுடன் அணு ஆயுதங்களைத் தாங்கிய ஆபிரகாம் லிங்கன் என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் கடந்த மாதம் ஹோர்மூஸ் நீரிணையில் முகாமிட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த புதன் கிழமை தமது அணுத் திட்ட முன்னேற்றங்கள் குறித்துப் பகிரங்கமாக ஈரான் வெளிப்படுத்தியது இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் தனது நட்பு நாடான இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா கருதுகிறது.

எனவே இஸ்ரேலின் பாதுகாப்புக்காகத் தனது ஆபிரகாம் லிங்கன் என்ற கப்பலை ஸ்ரெய்ட் ஒப் ஹோர்மூஸ் துறைமுகப் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

அதன் அருகே 2 கடல் மைல் தூரத்தில் ஈரான் கப்பற்படை படகுகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை தீவிரமடைந்துள்ளது.

ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருந்தமைக்குப் பதிலடியாக அதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், கிரிஸ், ஜேர்மன், இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கான எண்ணெய் வழங்களை நிறுத்தி விட்டது.

இதனால் ஆவேசமடைந்த ஒபாமா, உலக நாடுகள் ஈரானைத் தனிமைப் படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளார். எனினும் ஐந்து நாள் பயணமாக ஜப்பான் வந்துள்ள இஸ்ரேல் ஹெலித் பராக்கிடம் ''ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் பயங்கர விளைவுகள் ஏற்படும். தற்போதுள்ள பிரச்சினை மேலும் பெரிதாகி விடும். எனவே இப்போதைக்கு ராணுவ நடவடிக்கை வேண்டாம்'' என அறிவுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஈரானுக்கிடையிலான நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் மேலும் நிலைமையை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்புகளே அதிகம்.

# அழகு ஒரு தடையல்ல...

அழகு என்பது உடலின் நிறத்தில்தான் உள்ளது என்ற எண்ணம் நம்மில் பெரும் பாலாரிடமும் உள்ளது. இது முற்றிலும் உண்மை அல்ல. அழகு என்பது நிறத்தாலோ, வெளித்தோற்றத்தாலோ வருவது அல்ல. அழகு என்பது மனிதனின் மனதில் உள்ளது.

நிறமுடையவர்கள் அனைவரும் நல்லவர்கள், உண்மையானவர்கள் என்ற எண்ணம் நம்மிடையே உள்ளது. கருமையானவர்கள் என்பதால் ஒருவரை கெட்டவர் என்றோ, அழகற்றவர்கள் என்றோ, மோசமானவர் என்றோ கருதுவது முற்றிலும் தவறு.

உடல் நிறம், சிவப்போ, கறுப்போ அது முக்கியமல்ல. ஒருவரிடம் நல்ல எண்ணங்களோ, நல்ல செயல்களோ, நல்ல குணங்களோ இருந்தால் அவர்களை விட உலகில் யாரும் அழகுடையவர்களாக இருக்கமுடியாது.

பிறப்பால் அனைவரும் நல்லவர்கள் தான். சந்தர்ப்ப சூழ்நிலையில்தான் ஒருவனை கெட்டவனாக்குகிறது. தாயும், தந்தையும் சிவப்பு நிறமுடையவர்கள் என்றால் அவர்களது குழந்தையும் சிவப்பாக பிறக்கும். இருவரும் கறுப்பு என்றால் குழந்தையும் கறுப்பாக இருக்கும். இது உலக நியதி. இதை யாராலும் மாற்றமுடியாது. செயற்கை பொருட்கள் மூலம் உடல் நிறத்தை மாற்றிக்கொண்டால், அது தாற்காலிகம் தான். செயற்கை பொருள்கள் பயன் படுத்துவதை நிறுத்தினால் பின்பு தனது பழைய நிறத்தையே அடையும். இயற்கைப் படைப்பைப் போல்இருக்க முடியாது. முதலில் நீங்கள் உங்களையே விரும்பத் தொடங்குங்கள். பிறரும் உங்களை விரும்புவார்கள். எதையும் குறையாக எடுத்துக்கொள்ள வேண்டாம். கடவுள் தந்தவரம் என்று ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிரச்சினை என்று எதுவும் இருக்காது. எப்போதும் மன நிறைவுடன் இருங்கள். உங்களைவிட உலகில் வேறு யாரும் அழகல்ல. அனைவர் மீதும் அன்பு செலுத்துங்கள். உங்களைவிட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள். மனம் விட்டுச் சிரியுங்கள்.

சமூகத்தை விட்டு ஒதுங்கிக் கொண்டு, உங்கள் திறமைகளை மறைத்துக் கொள்ளாதீர்கள். உங்களுக்குள் எத்தனை திறமைகள் உள்ளது என்பது உங்களுக்கே தெரியாது. எனவே உங்களுக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணருங்கள்.

ஒரு காலத்தில் கறுப்பு மனிதர்கள் வெள்ளையரிடம் அடிமையாக இருந்தார்கள். இப்போது அவர்கள் வெள்ளையர்களை விடத் திறமையாகச் செயற்படுகின்றனர். அவர்கள் தங்களை அடிமைகளாகவே நினைத்துக் கொண்டிருந்தால் இன்று இவ்வாறு உயர்ந்து நிற்க முடியுமா?

இந்த மனிதப் பிறவி ஒரு முறைதான். எனவே அதைத் தாழ்வு மனப்பான்மையால்குறுக்கிக் கொள்ளாதீர்கள்

நாம் சாகப் பிறக்கவில்லை! சாதிக்கத் தான் பிறந்துள்ளோம்! இதை ஆழமாக உங்கள் மனதில் பதித் துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை வளம் பெறும்.

மருத்துவர் [illegible]
வைத்திய[illegible]
வைத்தியசாலை, மன்னார்.

# நமக்கென்ன

ஊர்சிட்டு

இன்று வன்முறைகள் நடக்கும்போது அதனைக் காணும் பலர் நமக்கு என்ன? சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்று விலத்தியே நடக்கின்றனர். இதனால் சில இடங்களில் வன்முறைகள் நடக்க அது சாதகமாக அமைந்து விடுகிறது. “அன்று ஒரு நிகழ்விலே விருந்தினர் ஒருவர் கூறுகிறார். நான் இரவு பஸ்ஸிலே பிரயாணம் செய்து கொண்டு இருக்கிறேன். எனக்கு முன் இருக்கையில் ஒரு 14 வயது பெண் பிள்ளை தாயாருடன் இருக்கிறார். பின்னால் இருக்கையில் ஒரு இளைஞன் இருக்கிறான். அவன் அந்த சிறுமிக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் சேட்டை செய்கிறான். இதனை நான் கண்டுவிட்டேன். ஆனால் அந்தச் சிறுமி அதனைக் கண்டு கொண்டதாய் இல்லை. அச்செயலலை நிறுத்த அந்த சிறுமி நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. அந்த சிறுமி தனது தயாருக்கு சொன்னால், அந்த தாயார் ஏதாவது நடவடிக்கையாவது எடுத்திருக்க முடியும். அல்லது அந்த சிறுமி இடத்தை மாற்றி இருந்திருக்கலாம் அதனை நான் பார்க்கும் போது அந்த சிறுமியும் அதற்கு உடந்தை போல் இருந்தது. இன்று பெண்கள் இவ்வாறு இருக்கிறார்களே என்று எண்ணத் தோன்றியது'' என்று அவர் தன் கருத்தையும் சேர்த்து சொல்லி தன் உரையை நடாத்திக் கொண்டு இருக்கிறார் அதனைப் பார்த்த மற்றவர்கள் சிலர் கதைத்த விடயம். “இதனைக் கூற இவருக்கு எந்த தகுதியும் இருப்பதாய் தெரியவில்லை'' என்று எனக்கும் சிந்தித்துப் பார்க்கும் போது இது சரிதான் என்று தோன்றியது. அந்த சிறுமி பயத்தால் சொல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது அவரது தாயாரும் ஒரு பெண். அவருக்குக் கூறினால் அந்த இளைஞருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூடச் சிந்தித் திருக்கலாம் அல்லது அந்தச் சிறுமியும் உடந்தையாக கூட இருந்திருக்கலாம். அது வேறு விடயம். இதனை இங்கு கூறும் இந்த பெரியவர் தானும் அதனைத் பார்த்துக்கொண்டு தான் இருந்திருக்கிறார். அவர் அதனை தட்டிக் கேட்க முற்படவில்லை? அவர்கள் பெண்கள் தானே இவர் ஒரு ஆண். ஏன் இதனைத் தட்டிக் கேட்க முற்பட வில்லை இது அவர் வீட்டுப்பிள்ளையாகவோ அல்லது தனது உறவினர்களாகவோ இருந்தால் இவரும் இவ்வாறு தான் பார்த்துக் கொண்டு இருந்திருப்பாரா? இல்லையா...... உடனே தட்டிக் கேட்டிருப்பார். ஆனால் இது யார் வீட்டுப் பிள்ளையோ எனக்கு ஏன் தேவையற்ற வம்பு என்று தானே இருந்திருக்கிறார்? அதுமட்டு மன்றி இன்று வன்முறைகளுக்கு பெண்களும் தான் உடந்தை என்று எவ்வாறு முடியும்? சில பெண்கள் என்று கூறினால் அதனை ஏற்க முடியும். ஆனால் பெண்கள் என்று ஒட்டு மொத்தப் பெண்களையும் கூற எவருக்கும் அதிகாரம் இல்லை என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வீதியிலே போகும்போது ஒரு பெண்ணை இருவர் சைக்கிளில் துரத்தும்போது, ஒரு பெரியவர் இறக்கி கேட்கிறார். அப்போது அந்த பெண்ணுக்கு துணிவு வந்து ஆண்களை ஏசி அனுப்புகிறாள். அந்த பெரியவரும்எனக்கு ஏன்வம்பு என்று போய் இருந்தால், அந்த பெண்ணின் நிலை இன்று எவ்வாறு இருந்திருக்கும் என்று யாருக்கும் தெரியாது. அந்த பெரியவர் இவர்கள் இளைஞர்கள் தனக்கு ஏதாவது செய்து விடுவார்கள் என்று பேசாமல் போய் இருக்கலாம். ஆனால் அந்த பெரியவர் அவ்வாறு செய்ய வில்லை. வீதியிலும் சரி எங்காவது போகும் இடங்களிலும் சரி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏற்படும் போது, அவர்களும் எமது குடும்ப உறுப்பினர் கள் போல் தானே அவர்களுக்கு உதவுவோம் என்றுஎவரும் சிந்திப்பதாய் இல்லை. இந்த முறை மாற வேண்டும். இன்று ஒருவருக்கு, பிரதி பலனை பாராது உதவி செய்வோம் ஆனால் அவ்வாறு நாமும் இன்னலில் இருக்கும்போது எமக்கும் யாராவது உதவுவார்கள் என்று சிந்திக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வரும்வரை காய்ந்திருக்கும் மக்கள்



■ வீகேளம்

> “அடுத்த கட்டத் திட்டத்தில் தமக்கு விரைவாக வீட்டுத் திட்டம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு அதிகாரிகளின் வரவையும் இந்த பெயர்ப் பட்டியலின் வரவையும் எதிர்பார்த்தபடியே மாதங்கள் பல கடந்தன.

அன்று பலபேருக்கு நல்ல நாளாக இருக்க வேண்டும். ஏதோ முண்டியடித்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலர் பின்னால் கூடிநின்று ஏதேதோ பேசிக்கொண்டும் இருந்தார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமம் அது, இயற்கைத் தோற்றமுடைய அந்தக் கிராமத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. கிளிநொச்சி நகரத்திலிருந்து மேற்குப் பக்கமாக கிட்டத்தட்ட 20 - 25 கிலோ மீற்றர் பயணித்தால் சென்றடையக் கூடிய கிராமத்தில் 420இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.

வீதிப்போக்குவரத்துச் சரியாக முழுமைப்படுத்தப்பட இல்லை. மின்சார வசதியில்லை. சொல்லப் போனால், குக்கிராமம் போலத்தான் அது இருக்கிறது.

சனக்கூட்டம் ஏன் இவ்வாறு கூடியிருக்கிறது? என்று பார்ப்பதற்கான ஆர்வம் மேலெழுந்ததால் அருகில் சென்று பார்த்தேன். அங்கு, கொஞ்ச பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒட்டப்பட்டிருந்தது. தங்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளதா? என்ற ஆவலில் முண்டியடித்துக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் அதை நான் பார்த்தேன்.

93 பெயர்கள் அந்தப் பட்டியலில் அடக்கப்பட்டிருந்தன. இந்தத் தடவை அரச உத்தியோகத்தர்களுக்கும் அதில் இடம் வழங்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே இந்தக் கிராமத்தில் 195 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுக் கணிசமானவை கட்டிமுடிக்கப்பட்டன. பெருமளவில் வழங்கப்பட்ட அளவுத் திட்டங்களுக்கு அப்பால் பயனாளர்களும் தங்கள் பணத்தைச் சேர்த்து 3 அறைகள், ஒரு கோல், ஒரு சமையலறை என்ற அமைப்பில் ஒரு உருப்படியான வீட்டைக் கட்டிமுடித்தார்கள்.

இந்த வீட்டுத்திட்டத்துக்காக வீட்டு உரிமையாளரின் பெயரில் காணி உறுதி அல்லது உரிமைப் பத்திரம் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டதால் இத்திட்டத்திலிருந்து பலர் விலக்கப்பட வேண்டியவர்கள் ஆயினர்.

இதனால் அடுத்த கட்டத் திட்டத்தில் தமக்கு விரைவாக வீட்டுத்திட்டம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு அதிகாரிகளின் வரவையும் இந்த பெயர்ப் பட்டியலின் வரவையும் எதிர்பார்த்தபடியே பல மாதங்கள் கழிந்தன. இந்தக் கிராமத்தில் 2010 ஆரம்பத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு வருடங்கள் ஆனபோதும் மீதிப்பேருக்கு வீட்டுத்திட்டம் வந்துசேரவில்லை. (இப்போதும் பெயர்ப்பட்டியல்)

வீட்டுத்திட்டம் பற்றி அதிகாரிகளிடம் அந்தக் குடும்பங்கள் கேட்டபோது, கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டங்கட்டமாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் குறித்த கிராமம் முதற்கட்டமான அதிக எண்ணிக்கையான வீடுகளைப் பெற்றுள்ளது. எனவே முதல் சுற்றில் எல்லாக் கிராமங்களுக்கும் திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். அப்போது உங்களுக்கும் வீடு கிடைத்துவிடும் என்ற பதில் கிடைத்தது.

நீண்டநாள் காத்திருப்புக்களின் மத்தியில் அந்த சனக்கூட்டம் கூடியிருந்த நாள் அதில் தங்கள் பெயர் இடம்பெற்றுள்ளதா எனத் தேடிய நாள் கடந்தவருடம் 12ஆம் மாதம் 15ஆம் திகதியாக இருந்தது.

ஓரளவுக்கு மனத்திருப்தி, வீட்டுத்திட்டம் வந்துவிடும் என்ற பெருமிதம் அவர்கள் மத்தியில் புரையோடியிருந்தது.

இன்று 3 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் அதுபற்றி எந்தவிதமான அடுத்தகட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அந்த மக்கள் நாளை கூட்டம் கூடுவார்கள். திட்டம் பற்றி அறிவுறுத்துவதற்கு அதிகாரிகள் வருவார்கள் என்று வழி மீது விழி வைத்து காத்திருக்கின்றனர்.

ஆனால் பெயர்விவரம் ஒட்டப்பட்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. யாரும் இதுவரை திரும்பிக்கூடப் பார்த்ததாகத் தெரியவில்லை. இப்போது அந்த ஊருக்குப் போனால் அந்தப் பெயர்ப் பட்டியலையும் காணவில்லை.

மீள்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் தற்காலிக குடிசைகளில் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்வைக் கழித்துவிட்ட அந்த மக்கள் இப்போது ஒட்டப்பட்ட பெயர் விவரங்களையும் மறந்துவிட்டார்கள்.

யாராவது அதிகாரிகள் வந்தால் எங்களுக்கு வீட்டுத்திட்டம் வருமா? என்று கேட்டால் வந்துவிடும் என்றே பதில் கிடைக்கும். இரண்டு வருடங்களாக குடிசைகளில் இருந்தபடியே வீட்டுத்திட்டம் பற்றியும் கல்வீட்டில் எங்கள் புது வாழ்க்கை பற்றியும் கனவு கண்டபடியே இருக்கின்றோம். இவற்றுக்கு உருப்படியான பதில் கிடைப்பதோ எங்கள் வாழ்க்கைக்கு விமோசனம் கிடைப்பதோ இப்போதைக்கு இல்லையென்றே எமக்குத் தோன்றுகின்றது.

சாதாரண மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அத்தியாவசியப் பொருள்கள் நாளுக்கு நாள் விலையேறிக்கொண்டே இருக்கின்றன. இந்த நெருக்கடிகளுக்குக் குடிசைகளில் இருந்தபடியே நாங்கள் முகங்கொடுக்கின்றோம். இதை பொறுப்பான எவரும் நினைத்துப் பார்ப்பதே இல்லை என்கின்றனர் அந்தக் கிராமத்து மக்கள்.

வன்னியில் பல கிராமங்கள் இந்தக் கிராமத்தைப் போலவேதான் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. ஆனால் அதற்கான தீர்வு, மக்களின் தேவைகள் பற்றி எவரும் சிந்திப்பதே கிடையாது.

பல கிராமங்களுக்கு முதற் கட்டமாக 'சாம்பிளுக்கு' கொஞ்சக் கொஞ்ச வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. பரவலாக மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களில் இவ்வாறு கட்டிக் கொடுக்கப்பட்டதால் பல பேருக்குக் கணக்குக் காட்ட நல்ல வசதியாகவும் இருக்கிறது.

கிராம எண்ணிக்கை அடிப்படையில் எல்லாக் கிராமங்களுக்கும் இவை அமைந்துவிட்டதால் வெளியிடங்களில் இருந்து வருவோருக்கும் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்கும் பட்டியலைத் தூக்கிப் போட்டு வீராப்பும் பேசமுடிகிறது.

ஆனால் பத்தில் ஒன்றே நிறைவேறிய கதை வந்துபோகும் பல பேருக்கு தெரியவே தெரியாது. தெரிவிக்கவும் அனுமதியில்லை. தெரியப்படுத்தவும் அதிகாரம் இல்லை. அறிக்கைகளில் சோடிக்கப்படும் கதையாகவே வகையாகவே அபிவிருத்திகள் தொடர்கின்றன.

பாவம், அரச நிர்வாகத்தில் வேலை செய்பவர்கள். அவர்கள் தான் அவலப்படும் மக்களால் தினமும் ஏச்சுக் கேட்கும் பாவிகளாக உள்ளனர். அவர்கள் என்னதான் செய்துவிட முடியும். மேலதிகாரிகள் பணிப்பவற்றையும் சொல்பவற்றையும் கேட்டுத் தலையசைப்பதே அவர்களின் பணியாக உள்ளது.

எது எப்படியிருந்தபோதிலும் மக்களுக்கு ஆசைகளைத் தூண்டிவிட்டு அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்யாது அவர்களது கேள்விகளுக்குப் பதில் கூறாது தட்டிக்கழிப்பது அரசின் மற்றுமொரு அசமந்தப் போக்காக உள்ளது.

நாளுக்குநாள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் சுமை அதை ஈடு செய்வதற்கு அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பவற்றுக்கு மத்தியில் அரசு இதுவரையில் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் பொறுப்புக் கூறும் தன்மையிலிருந்தும் கடமையிலிருந்தும் விலகியிருப்பது எதிர்காலத்தில் அந்த மக்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிவிடும்.

இன்றுவரும் நாளைவரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு உருப்படியாக என்று வரும் என்பதையாவது சொல்லிவிட்டால் அவர்கள் தம்பாட்டில் இருந்துவிடுவார்கள். யுத்தத்தின்போது இருந்த எல்லாவற்றையும் இழந்துவிட்ட அந்த மக்களுக்கு இதிலென்ன அவ்வளவு எதிர்பார்ப்பு இருக்கப் போகின்றது.

எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது போல மக்கள் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் அரசிடமிருந்து ஏதாவது கிள்ளித் தெளிக்கப்பட்டால் அது மட்டுமே அவர்களுக்குச் சொத்தாக மாறும். கிள்ளல்கள் தொடரும் நிலையில் எப்போதுதான் தெளிப்பார்களோ?

அடிபட்டு நின்று தங்கள் பெயர்களை வாசித்த அந்தக் கூட்டத்தினர் இப்போது அந்தப் பக்கமே வருவதில்லை. மன உளைச்சலில் தங்கள் வேலைகளைப் பார்த்தபடி வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடக்கின்றனர். அரசு தமக்கான கடமைகளைச் செய்துகொண்டே இருக்கின்றது. மக்களுக்காக அல்ல தமக்காகவே. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரைத் தேடும் சிங்கள அரசு!

■ துன்னாலைச் செல்வம்



வன்னியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு சரியான வகையில் பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதில் அனைத்துலக சமூகம் கடும்போக்கைக் கடைப்பிடித்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை சபையின் கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராக முன்வைப்பதற்கான பிரேரணை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது அரச படைகள் மேற்கொண்ட தமிழர்கள் மீதான கொடூரத் தாக்குதல்கள், அனைத்துலக சட்டத்தை முற்று முழுதாக மீறிக் காணப்படுவதாகவும், இறுதிப் போர் இடம்பெற்ற 5 மாதங்களில் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டனர் எனவும் ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் அறியப்பட்டுள்ளது.

அரச படையால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கும் என ஐ.நா. மனித விசாரணை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போர் வெற்றியில் துள்ளிக் குதித்த இலங்கை அரசு பொதுமக்களையும், விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்கத் தவறியமை மற்றும் போர் விதிமுறைகளின் மீறல்கள் தொடர்பிலான சுயாதீன சாட்சியங்களை இல்லாது ஒழிப்பதில் தவறிழைத்தமை போன்றவற்றின் பின்னணியில் மிகப் பயங்கரமான, கொடூரமான நில அபகரிப்புக் கொள்கையை இலங்கை அரசு- கைக்கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இதற்கிடையில் இறுதிக் கட்டப் போரில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்ற மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் கேட்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கும் பொறுப்புக் கூறுவது தொடர்பாக அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலர் மரியா ஒட்டேரோ, தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஒ பிளேக் ஆகியோர், இலங்கையில் பல தரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்திய நிலையிலேயே ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளது.

ஜெனிவாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளன.

இத்தகைய நெருக்கடிக்கு மத்தியில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இந்தத் தீர்மானமானது, இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற சர்வதேச அமைப்புகளுக்கும் இந்தப் பிரேரணையை அனுப்பி வைக்குமாறு ஐரோப்பிய நாடாளுமன்றம் கேட்டுள்ளது.

இலங்கை அரசு என்ன உறுதிமொழிகளை வழங்கினாலும், ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக் குழுக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தில் எதுவித மாற்றங்களையும் செய்யப்போவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மரியா ஒட்டேரோ மற்றும் ரொபேட் ஓ பிளேக் ஆகியோர் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய சந்திப்பின்போதே, அமெரிக்காவின் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டிய முக்கிய பிரச்சினைகள் நேற்று அரசுடன் பேசுவதாக இதன்போது உறுதியளித்துள்ள அமெரிக்க இராஜதந்திரிகள், பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலிருந்து அரசு விலகி விடமுடியாது என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகளின் அமுலாக்கம் என்பன பற்றி இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டிருக்கிறது.

> “ கலாசார சீரழிவை மேற்கொண்டு தமிழ் இனத்தைக் கலப்பினமாக்கி, தமிழ் சமூகத்தை சுயபுத்தி இல்லாத மனிதர்களாக உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கு தமிழ் அரச அதிகாரிகளையும் சிங்கள அரசு பயன்படுத்துகிறது. தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போடும் நிலையில் அரச தமிழ் அதிகாரிகள் உள்ளனர்.

ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை அமுலாக்குவதில் அரசு அக்கறை இல்லாமல் இருப்பதால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்தும் தீர்மானமொன்றை எதிர்வரும் ஜெனிவா மாநாட்டில் நிறைவேற்ற அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளதாக இங்கு குறிப்பிட்டுள்ள அமெரிக்க இராஜதந்திரிகள் இப்போது அரசு வழங்கும் உறுதிமொழிகளை ஏற்று, அந்தத் தீர்மானத்தை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யாது என்று குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைகளுக்கு கொண்டுவரவேண்டும் என்பதில் அமெரிக்கா அக்கறையுடன் உள்ளது எனவும் அமெரிக்க இராஜதந்திரிகள் இந்தச் சந்திப்பில் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

இறுதிக் கட்டப் போரில் அகப்பட்டுக் கொண்ட மக்களில் தப்பிக்கொண்டவர்கள் மயிரிழையில் எவ்வாறு உயிர் தப்பிக் கொண்டார்கள் என்பதை ஆழமாகப் பதிந்து வைத்துள்ளனர்.

இந்த மக்கள் அரச படைகளால் கொடூரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வடுக்களை சுமந்து நிற்கின்றனர்.

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் பூர்த்தி ஆகும் நிலையில் இவர்களுக்கான வசதிகள் எவையும் முழுமையாக செய்து கொடுக்கப்படாத நிலையில், இந்த மக்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கிறார்கள்.

சிங்கள அரச தலைவர்கள் தாம்தான் இந்த நாட்டின் சொந்தக்காரர் என்ற மமதையில் அகங்காரம் கொண்டு திரிகின்றனர். தமிழ் மக்களின் வளங்களைச் சூறையாடுவதில், எந்தவித தடங்கலும் இன்றி ஈடுபடுகின்றனர்.

வலிகாமம் வடக்கு முன்னரங்கப் பகுதியில் பலாலி படைத்தளத்தின் முன்னரங்க நிலைகளாக விளங்கும் ஒட்டகப் புலத்திலிருந்து வயாவிளான் ஊடாகத் தெல்லிப்பழைச் சந்தி வரைக்கும், அங்கிருந்து காங்கேசன்துறைவரை நிரந்தரத் தடுப்பு வேலிகளை இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர். இதனால் வலி. வடக்கில் பலாலி இராணுவத் தலைமையகத்தை அண்மித்த இடங்களில் உள்ள 23 கிராம அலுவலர் பிரிவுகளில், மக்கள் மீளக் குடியமர்வதற்கான சாத்தியங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றன.

மூன்று தசாப்த காலப் போரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழர் போராட்டங்கள் தோல்வி கண்ட நிலையில் தமிழர்கள் நிலங்கள் சிங்களவர்களின் நிலமாக மாறிவருகிறது.

கடைசிப் போரில் விடுதலைப் புலிகள் பலாத்காரமான ஆள் சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. போராட்டத்துக்கு ஆள் சேர்ப்பு நடவடிக்கைகள் போராட்ட ஆரம்ப காலம் முதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டன. இறுதிப் போரில் விடுதலைப் புலிகளுடன் இருந்து சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்களின் பிள்ளைகளைப் போராட்டத்துக்கு சேர்க்கும் போதுதான், இந்தக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் இருந்து போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்யாமல் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்கள், மற்றப் பிள்ளைகளைப் போராட்டத்துக்கு சேர்க்கும் போது கண்மூடிக் குளிர் காய்ந்தவர்கள், இறுதிப் போரில் தமது பிள்ளைகளைப் போராட்டத்துக்கு சேர்க்கும் போது விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தினர்.

உலகத் தமிழ்த் தலைவர் பிரபாகரன். தமிழர்களுக்கு இப்படியொரு தமிழ்த் தலைவர் இதுவரை கிடைக்கவில்லை; இனியும் கிடைக்கப் போவதில்லை. கடைசிவரை தமிழ் மக்களுக்காக போராடினார். அரசுகளின் சொகுசுகளுக்கு மயங்கி மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்து வாழவிரும்பாதவர்; மக்களுக்காக உயிரைக் கொடுக்கத் துணிந்தவர் பிரபாகரன்.

இந்த நிலையில் பக்கத்தில் இருந்து அவரின் உப்பைத் தின்றவர்களே பிரபாகரனைத் தூற்றினர். இவ்வாறு தூற்றியவர்களது குடும்பம் கூட இறுதி யுத்தத்திலும் பாதிக்கப்படாமல் பாதுகாப்பாக மீண்டு வந்திருக்கிறது.

பிரபாகரன் விட்ட தவறு இப்படிப்பட்டவர்களை விட்டுவைத்ததுதான்.தமிழ்த் தாய்க்குப் பிறந்தவன், தமிழர்கள் துன்பப்படும் போது பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டான். புலிப்பால் குடித்தவன் தமிழன். தமிழ் இனத்தை ஆயுதப் போரின் மூலம் அழித்த சிங்கள அரசு இப்பொழுது மீண்டும் தமிழ் மக்கள் மீது ஒரு போராட்டத்தைத் திணிக்கிறது.

கலாசார சீரழிவை மேற்கொண்டு தமிழ் இனத்தைக் கலப்பினமாக்கி, தமிழ் சமூகத்தை சுயபுத்தி இல்லாத மனிதர்களாக உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கு தமிழ் அரச அதிகாரிகளையும் சிங்கள அரசு பயன்படுத்துகிறது. தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போடும் நிலையில் அரச தமிழ் அதிகாரிகள் உள்ளனர்.

இறுதிக் கட்டப் போரில் சிங்கள அரசால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மறந்து விடாதீர்கள். நியாயத்துக்காக குரல் எழுப்புவோம். எங்கள் உரிமைகளை ஒரு போதுமே விட்டுவிடக்கூடாது. அரசின் சொகுசு வாழ்க்கைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ் அரச தலைவர்களைப் பற்றிச் சிந்திக்காமல் எமது நியாயமான பாதையில் உரிமைக்கான செயற்பாடுகளில் உறுதியுடன் முன்னேறுவோம். உலகப் பரப்பில் ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுப்போம். எமக்கு உரிமை வேண்டும்,எமக்கு விடுதலை வேண்டும் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியாகிய கஜானாவை நிரப்புவதற்கு முயலும் அரசு

■ ஹரிஸ்

வெளிவாரிப் பட்டப் படிப்புச் செயற்பாடுகளை முற்றாக இடைநிறுத்துவது பற்றிய செய்திகள் அண்மையில் கல்வி அமைச்சின் உயர்மட்டங்களில் இருந்து கசிந்திருந்தன. வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவே இந்தச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சு அதனை நியாயப்படுத்தி இருந்தது.

இதேவேளை ''வெளிவாரி பட்டப் படிப்பை நாய்கள் கூட மதிக்காது'' என்று அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் இலங்கை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கூறியிருந்தார்.

திடீரென அரசின் உயர்மட்டத்துக்கு ஏற்பட்ட வெளிவாரிப் பட்டப்படிப்பின் மீதான அதீத கோபத்துக்கான காரணம் அதற்கான உண்மையான நிலவரம் அரசால் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. பட்டதாரிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவே இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்படப்போவதாக நொண்டிச் சாட்டு கல்வி அமைச்சாலும் உயர் கல்வி அமைச்சாலும் கூறப்படுகின்றது.

ஆனால் அதற்குப் பின்னால் உள்ள அவர்களின் கபடநோக்கம் தந்திரோபாயம் இன்னும் திரைக்கு வராத சங்கதியாக உள்ளது. வெளிவாரிப் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டதற்கான நோக்கம் பல்கலைக் கழகங்களுக்குத் தகுதிபெற்றும் நாட்டின் பொருளாதார ஆழ் நிலையால் அதற்குள் உள்வாங்கப்படாது உயர்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்ள ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதே யாகும். இலங்கையில் உள்ள 16 பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிகள் உயர்ந்த இசற் புள்ளிகள் மற்றும் மாவட்ட நிலைகளை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் வருடமொன்றுக்கான பல்கலைக்கழக உள்வாரி வாய்ப்பை உயர்தரப்பரீட்சையில் தோற்றிய மொத்த

> “ தற்போதைய அரசு பொதுவாகத் தனியார் பல்கலைக்கழகங்கள் பற்றிய கற்பனையில் மிதக்கிறது. தனியார் பல்கலைக் கழகம் நிறுவுவேன் தடுத்துப் பாருங்கள் என உயர்கல்வி அமைச்சர் சவால் விடுகிறார். ஏதோ தனியார் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு தான் அமைச்சராக பொறுப்பேற்றது என்ற வகையில் அவரின் வாதப் பிரதி வாதங்கள் அமைந்துள்ளன.

மாணவர்களில் 10 வீதத்துக்கு குறைவானவர்களே பெறுகின்றனர். அதாவது சுமார் 3 லட்சத்துக்கு அதிகமானோர் தோற்றி அண்ணளவாக 23 ஆயிரம் பேரே அதற்கான அனுமதியை பெறுகின்றனர். ஏனைய பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புக்கான தகுதி இருந்தும் நாட்டின் பொருளாதார நிலையில் உயர் கல்வி வாய்ப்பு மறுதலிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

இவர்களுக்கும் கல்வி வாய்ப்பை வழங்கி நாட்டின் பொருளாதார நிலையில் பல்கலைக் கழகங்களுக்குள் உள்வாங்கப் படாது நடுத்தெருவில் விடப்பட்ட மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கவும், நாட்டின் அபிவிருத்தியில் அறிவுமிகுந்த மாணவ சமூகத்தை ஈடுபடுத்தவும் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசுகள் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேம்படுத்த நடவடிக்கைகளைமேற்கொண்டு இருந்தன.

ஆனால் தற்போது ஆட்சியில் இருக்கும் ஆசியா வின் அதிசயமான (?) அரசு அதனை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது மாணவர் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தற்போதைய அரசு பொதுவாகத் தனியார் பல்கலைக்கழகங்கள் பற்றிய கற்பனையில் மிதக்கிறது. ''தனியார் பல்கலைக் கழகம் நிறுவுவேன் தடுத்துப் பாருங்கள் என உயர்கல்வி அமைச்சர் சவால் விடுகிறார். ஏதோ தனியார் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு தான் அமைச்சராக பொறுப்பேற்றது என்ற வகையில் அவரின் வாதப் பிரதி வாதங்கள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் வெளிவாரிப் பட்டப்படிப்பால் பட்டதாரிகள் பெரும் எண்ணிக்கையில் உருவாகின்றனர் என கதறிவரும் அரசு மறுபுறத்தில் மேலும் பட்டதாரிகளை உருவாக்குவதற்காக தனியார் பல்கலைக்கழகம் பற்றிய சிந்தனையில் ஈடுபடுவது பொதுமக்கள் மத்தியில சந்தேகங்களை தோற்றுவித்துள் ளது.

அதாவது இலங்கை உயர்கல்வி அமைச்சு தனியார் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என ஒற்றைக்காலில் நிற்கிறது. இந்த நிலையில் இதனை நடைமுறைப் படுத்தும்போது வெளிவாரிப் பட்டப் படிப்புகள் இருக்கின்றது தானே பிறகு ஏன் தனியார் பல்கலைக்கழகம் என்ற கேள்வியை எதிர்கட்சிகள் முன்வைக்கக் கூடும். அதனால்தான் தர்ம சங்கடத்தில் மாட்டி குறித்த கேள்விக்கு பதில் தேடி அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனை நன்குணர்ந்த அரசு வெளிவாரி பட்டப்படிப்பை இல்லாது ஒழிக்க பட்டதாரிகள் பிரச்சினையை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள முனைகிறது.

வெளிவாரிப் பட்டப் படிப்பால் அரசுக்குக் கிடைக்கும் வருவாயை விடத் தனியார் பல்கலைக்கழக உருவாக்கத்தில் அரசுக்கு கிடைக்கும் வருவாய் அன்னியச் செலவாணி அதிகமானது. எனவே காலியாக உள்ள தனது கஜானாவை நிரப்பிக் கொள்ள அரசு வெளிவாரிப் பட்டப்படிப்பை இல்லாது ஒழித்து தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவும் நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதான சந்தேகம் பொதுமக் கள் மனதில் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

விலையேற்றம் மற்றும் ஏனைய செயற்பாடுகளால் ஏழைகள் வாழமுடியாத தேசமாக இலங்கையை மாற்றி வரும் அரசு வெளிவாரி பட்டப்படிப்பை இல்லாது ஒழித்து தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கி ஏழைகள் கற்கமுடியாத தேசமாகவும் இலங்கையை மாற்ற திடசங்கற்பம் கொண்டுள்ளது.

இலங்கையின் இலவசக் கல்வியும் இலங்கையின் கல்விப் பெருமையையும் சீர்குலைக்கப்படும் சந்தர்ப்பங்களை மஹிந்தர் தலைமையிலான அரசு அதன் இத்தகைய செயற்றிட்டங்கள் மூலம் நடைமுறைப் படுத்தியே வருகின்றது என்பதே கடந்த கால கசப்பான உண்மை. ✱

# அபிவிருத்திக்கான மின்வெட்டு?

■ தென்னவன்

மின்சாரம் உலகில் அத்தியாவசியமான ஒன்றாக மாறியுள்ளது. தற்போது அனைத்துத்தேவைகளும் மின்சார மயமாகியுள்ளதால் மின்சாரம் இன்றி வாழ முடியாத நிலை பெரும்பாலான இடங்களில் ஏற்பட்டுள்ளது.

மின்சாரப் பாவனை ஆரம்பித்துப் பல வருடங்கள் சென்றுள்ள போதிலும் இன்று வரை மின்சாரம் இன்றிக் காணப்படும் கிராமங்கள் எம் மத்தியில் உள்ளன.

அண்மைக் காலமாக குடாநாட்டில் வீதி அகலிப்புத் திட்டத்தின் கீழ் மின்சாரம் நிறுத்தப்படும் நிகழ்வுகள் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறுகிய காலத்தில் இவை பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நாள்கள் வாரங்களாகி மாதக்கணக்கில் மின்தடை ஏற்ப டுத்தப்பட்டு வருகிறது.

எமது பிரதேசத்தில் அமைதி திரும்புவதையடுத்து பல்வேறு தொழில்கள் மின்சாரத்துடன் தொடர்புடையனவாக உள்ளன. அலுவலகங்கள் வங்கிகள் உட்பட அனைத்து இடங்களிலும் மின்சாரத்தில் இயங்கும் கணினிகள் தொடக்கம் ஏ.சி. வரை உள்ளன. அலுவலகங்களில் தட்டச்சு இயந்திரங்கள் மூலைக்குள் தள்ளிவிட்டு அந்த இடங்களில் கணினி இயந்திரங்கள் முன்னிலை வகி க்கின்றன. அலுவலகங்கள் வங்கிகள் போன்றவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் கணினி ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வர்த்தக நிலையங்களைப் பொறுத்த வரையில் அன்றாட வர்த்தக செயற்பாடுகளுக்கு மின்சாரத்தின் தேவை அவசியமாகிறது. தேநீர் விற்பனை நிலையங்களில் சிரட்டை கரிபோட்டு எரிக்கும் பொயிலர் அடுப்பு அகற்றப்பட்டு மின்சாரத்தின் இணைப்பில் சுடுதண்ணீர் வைக்கப்படுகிறது.

இவற்றுடன் குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்தும் குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிறீம் போன்றவை பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. முன்னைய காலங்களில் விறகு போட்டு எரித்து நடத்திய பேக்கரிகள் கூட தமது பாண் போன்ற உணவுத் தயாரிப்புப் பொருள்களை மின்சார சாதனங்கள் மூலம் தயாரிக்கின்றன. மின்சாரத்தை நம்பி பிரதேசங்களில் பல்வேறு தொழில் நிலையங்களும் இயங்கி வருகின்றன.

இவையெல்லாம் மின்சாரத்தில் இயங்குபவையாக உள்ளதால் இந்த இடங்களில் ஆயிரக்கணக்கானோர் நிரந்தர வருமானம் பெற்று வந்துள்ளனர்.

வீதி அகலிப்பு பணிக்காக வாரத்தில் நான்கு தினங்கள் [வேலை நாள்கள் உட்பட] காலை 8.00 மணி தொடக்கம் தொடர்ச்சியாக 10 தொடக்கம் 12 மணித்தியாலங்கள் மின்தடை ஏற்படுத்தப் படுகிறது.

இதனால் அலுவலகப் பணிகள் எவ்வளவு தூரம் பொது மக்களை தாமதப்படுத்துகிறது என்பதை அலைந்து திரியும் மக்களைக் கேட்டால் தான் தெரியும்.

இன்று வேலை நாள்கள் மின்தடை இடம் பெறும் போது பொதுமக்களுக்கு கடிதம் கொடுக்க கணினிகளை இயக்க முடியாததால் நாளை நாளைக்கு என மக்களை அலைக்கழிக்கும் நிலையில் அலுவலகங்கள் காணப்படுகின்றன.

அரச அலுவலகங்கள் மின்தடை ஏற்படும் வேளைகளில் மின் பிறப்பாக்கி பயன்படுத்தலாம் தானே என மக்கள் கேள்வி கேட்கின்றனர். மின்தடை ஓரிரு மணித்தியாலங்கள் ஏற்பட்டால் மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தலாம். ஒன்றுவிட்டு ஒரு நாள் எட்டு மணி நேரம் தொடர்ச்சியாக மின்பிறப்பாக்கி இயங்கினால் அதன் சேவை எத்தனை நாள்களுக்கு முடியும். அவையும் சூடேறி விரைவில் பழுதடைந்து போய் விடுகின்றன.

ஒவ்வொரு அலுவலகங்களிலும் புதிய புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவுக்கும் கணினியின் சேவை பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் மின்பிறப்பாக்கி மூலம் கிடைக்கும் மின்சாரம் எந்தப் பிரிவுக்கென வழங்குவது என்ற நிலைப்பாடு ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்து வருகிறது. சில அலு வலகங்களில் எட்டு மணி நேரமும் மின்பிறப்பாக்கி இயங்கி ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு மணிநேரம் என வகுக்கப்பட்டு மின் விநியோகம் வழங்குவதையும் காணமுடிகிறது. சில திணைக்களங்களின் மின் பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளதால் சாஜ்ஜர் வெளிச்சத்தைப் பயன்படுத்தி வேலை செய்வதைக்காண முடிகிறது.

அலுவலகங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை விட மின்சாரத்தை நம்பித் தொழில்களைத் தொடங்கிய பல தொழில் நிறுவனங்கள் அங்கு பணியாற்றிய தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி யுள்ளதுடன் வங்கிகளில் தொழில் தொடங்கப் பெற்ற கடனின் வட்டியைக் கூட கட்ட முடியாமல் தத்தளிக்கின்றனர்.

இவை ஒரு புறமிருக்க வீதி அகலிப்புப் பணிக்காக மின்கம்பங்கள் மாற்றும் பணி மிக மந்த கதியில் நடைபெற்று வருகின்றன. இலங்கை மின்சார சபையினால் இவ் வேலைகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கப்பட்ட போதிலும் அவற்றைச் செய்வோர் மந்த கதியில் செய்கின்றனர். ஒரு நாளைக்கு ஐந்து கம்பங்களே மாற்றப்படுகின்ற போதிலும் அந்த வேலை கூடத் துரிதமாக செய்யப் படுவதில்லை கனரக வாகனத்தின் மூலம் மின்கம்பங்கள் மாற்றப்படுகின்ற போதிலும் கம்பங்களில் உள்ள கம்பிகளை கழற்றிப் பூட்டுவதற்கென அதிக நேரத்தினை செலவழிக்கின்றனர். இதனாலேயே இவர்கள் மேலதிகமாக இரவு 8 மணி வரை மின் தடையை ஏற்படுத்துகின்றனர்.

காலை 8.00 மணிக்கு முன்னர் சமைத்து குளிர் சாதனப் பெட்டிக்குள் வைத்து விட்டு தொலைக்காட்சியில் தொடர் சீரியல் நாடகங்களைப் பார்க்கும் பெண்களுக்கும் விடுமுறை தினங்களில் ஒளிபரப்பாகும் நிகழ்வுகளைப் பார்க்கும் அனைவ ரும் மின்தடை ஏற்படுத்துவேரை திட்டுவதையும்

மின்தடையினால் தேங்கிக் கிடக்கும் வேலைகள் செய்து முடிக்கப்படுவதால் விடுமுறை நாள்களில் ஓய்வாக இருக்க முடிகிறது என மகிழ்வுறும் ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி........

தருபவர் - வித்தியா

## 19.02.2012 முதல் 25.02.2012 வரை

### மேடம்

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். உடல் நலக் குறைவுகளாலும் அவ்வப்போது அவதிப்படலாம். சிலர் இடம்மாறிப் புதிய சூழ்நிலையில் பணியாற்ற வேண்டிய கட்டாயம் உருவாகும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பிள்ளைகளுக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்வுக்கு வரும். யாருக்கும் வாக்குக் கொடுப்பது, அடுத்தவர் விவகாரங்களில் தலை யிடுவதைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்படுங்கள். சோர்வு, சோம்பல் கூடும். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

### இடபம்

மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடிவடையாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல் விலகிவிடும். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். நீண்டநாள் கடன் பிரச்சினைகளில் இடைநடுவில் வேறு வருமானம் மூலம் சரி செய்யும் சூழ்நிலை உருவாகும். போட்டிகள், எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகி பாசம் அதிகரிக்கும். மனக்குழப்பம் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். உறவினர்களாலும் நன்மை அடையலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு போன்றவற்றைச் சந்திக்கலாம்.

### மிதுனம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலரின் வேலைகளுக்காக அலைய நேரிடலாம். தாய் வழியில் அன்புத்தொல்லைகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான வருமானம் அதிகரிக்கும். புதிய தொழில்களில் முதலீடு செய்வது மற்றவர்களை நம்பிப் பணம் கொடுப்பது போன்றவற்றில் எச்சரிக்கை அவசியம். மருத்துவச் செலவுகளாலும், அவ்வப்போது சிரமங்களுக்கு ஆள்படலாம். எதிர்ப்புகள், போட்டிகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### கடகம்

நினைத்த காரியங்கள் நிறைவேறுவதன் மூலம் மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. தொழில் ரீதியான வேலைப்பளு அதிகரிக்கும். எந்த வேலையையும் எளிதில் முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலருடன் பகை உருவாகலாம். மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்காமல், நீங்களே அனைத்தையும் செய்வது நன்மை தரும். பணிபுரிவோர் திடீர் இடமாற்றத்தை எதிர்கொள்ளலாம். மாமன், மைத்துனர்கள் சிலர், நீங்கள் எதிர்பாராத வகையில் உதவி செய்யலாம். காரிய வெற்றி உண்டு.

### சிங்கம்

குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கக் கணிசமாகச் செலவு செய்யலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்கலாம். காலை முதல் மாலை வரை ஓய்வில்லாமல் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். பெரிய மனிதர்கள் சந்திப்பு நிகழும். சில வேலைகளை சிரமம் இல்லாமல் சுலபமாக முடித்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். எந்த விடயத்திலும் நீங்கள் உத்வேகத்துடன் செயற்பட முடியும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு கத்தி விட்டு, பின்னர் சமாதானம் அடைவீர்கள். பொறுமையை இழக்கும் நிகழ்ச்சிகளும் நடக்கலாம்.அலைச்சல், வேலைப்பளு அதிகரிக்கும். கவனக்குறைவை எதிர்கொள்ள லாம்.

### கன்னி

எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். அடுத்த சில தினங்களில் சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். ஒரு செலவை நினைத்துக் கவலைப்படும் நேரத்தில், மற்றொரு செலவு உண்டாகலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகி பாசம் கூடும். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். அவ்வப்போது சிறு உபாதைகள் ஆள்கொள்ளலாம். மேலும், தொழில் ரீதியாக சிலரிடம் கடன் வாங்க வேண்டிய நிலைமை உருவாகலாம். பணிபுரியும் பெண்கள் அதிக வேலைப்பளுவைச் சந்திக்கலாம். புதியவர்களின் நட்புக் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. மனக் குழப்பங்கள் உண்டாகும்.

### துலாம்

மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சக ஊழியர்கள், நண்பர்கள் சிலருடன் பொறாமை, பிரச்சினைகள் உருவாகலாம். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். எந்தக் காரியத்தையும் நீங்கள் நினைத்த வேகத்துக்குச் செய்ய முடியாமல் தவிக்கலாம். அலுப்பு, சலிப்பு, வெறுப்பு அவ்வப்போது ஆள்கொள்ளும். தொழில் ரீதியான வேலைப்பளுவும் அதிகரிக்கும். வேலைப்பளு கூடினாலும், அதற்கேற்ற ஆதாயத்தைப் பெறலாம்.ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.

### விருச்சிகம்

எதிர்பாராத செலவுகளால் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் அதிகரிக்கும். கடன் விவகாரங்களாலும், அதற்கு வட்டி கட்டும் விடயங்களாலும் கவலைப்படலாம். வழக்கு விவகாரங்கள் இழுத்தடிக்கலாம். எதிர்பார்த்தபடி, எதுவும் நடக்காமல் குதர்க்கமாக நடக்கலாம். பெரிய மனிதர்களின் அனுசரணை கிடைக்காமல் போகலாம். செலவுகள் கட்டுக்கு அடங்காமல் செல்லும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தாயார் வழியில் சில ஆதாயங்களைப் பெறலாம். ஓய்வின்றி, அடிக்கடி பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். தந்தை வழியில் நன்மை அடையலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். காரியத் தடைகளைச் சந்திக்கலாம்.

### தனுசு

நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் முடிவுக்கு வரலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். நீண்ட நாள்களாக இழுத்தடித்த சில பிரச்சினைகள் திடீரென முடிவுக்கு வரலாம். எதிர்ப்புகள், போட்டிகள் விலகும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தந்தை வழியில் நன்மை அடையலாம். பிள்ளைகளின் செயற்பாடு பெருமைப்பட வைக்கும். பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். செலவு, அலைச்சல் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### மகரம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். உறவினர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். குதர்க்கமான, குத்தலான பேச்சுகளைத் தவிர்க்க வேண்டும். சிலர் கண் உபாதைகளுக்கும் ஆள்படலாம். சிலரை நீண்ட நாள்களுக்குப் பின்னர் சந்திக்கலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். வேலைப்பளு கூடினாலும், அதற்கேற்ற ஆதாயத்தைப் பெறலாம். செலவு, அலைச்சல் உண்டு.

### கும்பம்

திட்டமிட்ட காரியங்களை முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத தண்டச்செலவுகள் உருவாகும். பயணங்களில் இடையூறுகள், சிரமங்கள் உண்டாகலாம். சிலரை எதிர்பாராமல் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.சில விடயங்களில் அவசரப்பட்டு செயற்பட்டு விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். தந்தையுடன், பெரிய மனிதர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்மை தரும். தொழில் ரீதியாக அடிக்கடி விமர்சனங்கள், பிரச்சினைகள் உருவாகலாம். சிக்கலான நபர்களிடமும், கனிவாகப்பேசி, சில வேலைகளை முடிப்பீர்கள்.சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். நினைத்தது நிறைவேறும்

### மீனம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் மூலம் ஆதாயம், அனுகூலம் பெறலாம். எந்தக்காரியத்தை செய்யும் முன்னர் யோசனையுடன் செய்ய வேண்டும். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வழக்கத்துக்கு மாறாகக் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பொழுது போக்கு விடயங்களில் காட்டும், ஈடுபாடுகள் மூலம் கவலைகளை மறப்பீர்கள். மருத்துவச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பாராத சில [illegible]களையும் எதிர்கொள்ளலாம். பெரிய மனிதர்களின் அறிமுகம், நட்பு [illegible] கடனுதவிபெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களுக்காக உத்தரவாதம் கொடுக்க வேண்டாம். சிலர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தடைப்படலாம். காரிய வெற்றி உண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரி வள்ளலும் மாரியும்



## இலக்கியக்காட்சி 121

■ மட்டுவில் நல்லதம்பி



'கொடைக்குக் கர்ணன்' என அழியாப் புகழ்பெற்றவன் குந்திமைந்தன் கர்ணன். அதுபோல், அறிஞரையும் வறிஞரையும் ஆதரித்துப் புகழ் பெற்றவன், பறம்புமலை நாட்டை ஆண்ட பாரி வள்வல். இயற்கை வளஞ்சேர்ந்த பறம்பு நாட்டில் நெல்லும் கனிகளும் தேனும் கிழங்கும் கிடைத்தமையால் குடிமக்கள் எந்தக் குறையுமின்றி வாழ்ந்தனர். அதனால் பசியும் பகையும் இன்றி, வளமுள்ள அந்த மலை நாட்டின் அரண்மனையில் கருணையின் வடிவமாக வீற்றிருந்தான் பாரி வள்ளல்.

மன்னுயிர் தொடக்கம் புல்லுயுர் ஈறாக அனைத்து உயிர்களையும் ஆதரித்து வந்தான் பாரி. ஒரு நாள் பாரி நாட்டு வளங் காணத் தேரேறிப் புறப்பட்டுப் போனான். வழியில் ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். கொழு கொம்பின்றி ஆடிக் கொண்டிருந்த அக்கொடி, பாரியிடம் தன் குறை கூறி நிற்பது போல அவன் உள்ளத்தில் பதிந்தது. அதன் துயர்கண்டு வருந்தி அத்துன்பம் போக்கத் தனது பெரிய தேரை அதனருகே நிறுத்தினான். கொடியை எடுத்துத் தேர் மீது படர விட்டான். கவலையற்றுத் தன் கோட்டைக்கு நடந்து சென்றான். அன்று முதலாக அவன், முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளல் ஆனான்.

இவ்வாறு பாரியின் புகழை அறிந்த கபிலர் என்ற புலவர்,

*"பாரி பாரி என்று பல ஏத்தி*
*ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்*
*பாரி ஒருவனும் அல்லன்*
*மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"*

என்று புகழ்ந்து பாடினார்.

நல்லோர் அல்லோர் எனப் பாராமல் மாரி பெய்கிறது தானே. அவ்வாறிருக்க, மாரியைப் புகழாமல், பாரிபாரி என்றே புகழ்கிறீர்களே என்று இகழ்வது போலப் பாரியைப் புகழ்ந்துள்ள கபிலரின் கவி நயம் வியந்து பாராட்டத்தக்கதே.

மனைவியர் இருவரோடு வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் வறுமையுற்ற பொழுது, ஒரு நாள் திருப்புகலூரிலே கோயில் வீதியிலே செங்கற்களை அடுக்கித் துண்டை விரித்துப் படுத்திருந்தார். புகலூர்ப் பெருமானிடம் தனது குறையை முறையிட்ட பொழுது.

*"மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே*
*வில்லுக் கிவனென்று*
*கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினும்*
*கொடுப் பாரிலை*
*பொடிக் கொள் மேனியெம் புண்ணியன் எந்தை*
*புகலூர்ப் பாடுமின் புலவீர்காள்!*
*அடுக்கு மேல் அமர் உலகம் ஆள்வதற்கு*
*யாதும் ஐயுற வில்லையே"*

என்று பாடிய தேவாரப் பதிகத்தில் பாரியின் பெருமையைக் கூறியுள்ளமை காண்போம்.

மேலும், புலவர் பெருமானாகிய கபிலர்,

*பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை*
*நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்*
*கறங்குமணி நெடுந்தேர் கொள்க எனக் கொடுத்த*
*பரங்தோங்கு சிறப்பிற் பாரி.*

என்று புகழ்ந்துள்ளமை காண்போம். முல்லைக் கொடி நாவாரப் புகழாது ஆயினும், மணி ஒலிக்கும் நெடுந்தேரை அதற்குக் கொடுத்தான்; மற்றவர் புகழ வேண்டுமென்பதற்காக அவன் கொடுக்கவில்லை எனக் கபிலர் காட்டும் வண்ணம் வியத்தற்குரியதே.

இவ்வாறு குறுநில மன்னனான பாரியின் புகழ் பரவுவது கண்டு மூவேந்தருங்கூட அவன் மீது அழுக்காறு கொண்டு, பறம்புமலையை முற்றுகையிட்டும் அவனை வெல்ல முடியவில்லை! பஞ்சமின்றி மக்களைப் பாதுகாக்கும் வல்லமை கொண்டிருந்தான். வீரத்தால் வெல்வது கடினம் எனக் கண்ட மூவேந்தர் வேறு நயவஞ்சக வழிகளை நாடினர். இப்படியான நிலையில், பாரியின் புகழ்பாடிச் சென்று கேட்டீர்களாயின் வள்ளல் பாரி தன் பறம்பு நாட்டையே தந்துவிடுவான் என மூவேந்தருக்கு கபிலர் குறிப்பாலுணர்த்தியும் கேளாமல், அவ்வள்ளலை வஞ்சனையால் கொன்றுவிட்டார்கள்; பெரும்பழியைத் தேடிக் கொண்டார்கள் என்பது வரலாறு.

இத்தகைய பாரி வள்ளலுக்கு இரு பெண் பிள்ளைகள் [illegible] தந்தையைக் கொன்று பகைவர் பறம்பு மலையைக் கைப்பற்றி[illegible] போனார்கள் அப் பிள்ளைகள்!

(16 ஆம் பக்கம் பார்க்க)

# சுமை




இராஜினிதேவி சிவலிங்கம்,
கோப்பாய்.

அன்று சனிக்கிழமை, பாடசாலை விடுமுறை. சனி, ஞாயிறு தினங்களில் தான் வீட்டிலுள்ள வேலைகளைச் செய்ய முடியும். அது கூட வீட்டிற்கு யாராவது விருந்தாளிகள் வந்தால் அல்லது ஆசிரியர் செயலமர்வு என்றால் அடுத்த சனி, ஞாயிறு வரை பிற்போடப்படும். இந்த சனி வீட்டு வேலைகளை முடித்து விட்டு நானும் எனது கணவரும் முன் வராந்தாவில் போட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து பத்திரிகையில் மூழ்கி இருந்தோம். எங்களது வீட்டு வாசலில் ஒரு சிறுவன் சுமார் பதினான்கு வயது இருக்கும் சுமக்க முடியாத ஒரு பையைச் சுமந்த வண்ணம்

" அம்மா செருப்பு வேணுமா?.. என்றான். இந்தக் கொழுத்தும் வெயிலில் வந்த அவனைப் பார்த்தேன். ஒடிசலாய், சுள்ளி சுள்ளியாய் கால் கைகள், ஒட்டி உலர்ந்த கன்னங்களையும் பார்த்தேன். பரிதாபமான அந்தக் கண்கள் என் மனதை குடைவதை உணர்ந்து " உள்ளுக்கு வாரும் தம்பி".....

எனது குரலைக் கேட்டு கதிரையில் இருந்து பத்திரிகையைப் படித்தபடியே உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட என் கணவரும் எழும்பிவிட்டார். உள்ளே வந்த சிறுவனைப் பார்த்ததும் " தம்பி எங்கட வீட்டில சின்னப் பிள்ளைகள் இல்லை செருப்பு வேண்டாம்; நீர் பக்கத்து வீட்டில கேளும்" எனது கணவர் சொல்வதற்கு முன் " ஐயா, அம்மாவுக்கும் அளவான செருப்பு இருக்கு ஒருக்காப் பாருங்கோவன்" சிறுவனின் கெஞ்சும் தொனி என் கணவரின் மனதையும் நெகிழச் செய்திருக்க வேண்டும்.

" சரி எடும் தம்பி பார்ப்பம்"..... நான் சிறுவனுக்கு அருகில் வருகின்றேன். தன் பையில் வைத்திருந்த செருப்புகளை வெளியிலே எடுத்து வைத்த சிறுவன் "அம்மா இதைப் பாருங்கோ. இது வெளியில நல்ல நிகழ்ச்சிக்குப் போகப் போடலாம். இதைப் பாருங்கோ இது சாதாரணமாக எங்க போகேக்கையும் போடலாம். வெறும் இருநூறு ரூபா தான்" "தம்பி இது சின்னனாய் இருக்கும் போல எனக்கு; 6ஆம் நம்பர் செருப்புத்தான் வேணும்." நான் கூறியது தான் தாமதம் என் கால்களில் செருப்பைக் கொழுவி கால்களை உள்ளே தள்ளி நீண்டும் வண்ணம் செய்த அந்த சிறுவனின் புத்திசாலித் தனத்தை நாம் இருவரும் ரசித்தோம்.

எனது கணவர் சிறுவனிடம் " தம்பி நீர் எந்த இடம். இந்தச் சின்ன வயதிலே வியாபாரம் செய்ய வந்திட்டீர் படிக்கிறனீரோ? என விசாரிப்பது காசு எடுப்பதற்காகச் சென்ற என் காதில் விழுந்தது. " ஐயா நாங்கள் இடம் பெயர்ந்து வந்தனாங்கள். எங்கட இடம் கிளிநொச்சி. நாங்கள் இடம்பெயர்ந்து வரேக்க செல் விழுந்து அப்பா செத்துப் போனார். அம்மாவுக்கும் ஒரு காலில்லை. எனக்கு ஒரு தம்பியும் தங்கச்சியும். நாங்கள் இப்ப அம்மம்மா வீட்டில இருக்கிறம். தம்பியும் தங்கச்சியும் படிக்கினம். என்னை ஒரு முதலாளியிட்ட எங்கட மாமா சேர்த்து விட்டிருக்கிறார். அவர் செருப்புகளை மொத்தமாக வாங்கி எங்கள போல ஆக்களிட்ட கொடுத்து வீடு வீடாக விற்க விட்டிருக்கிறார்." சிறுவனின் கதையைக் கேட்டதும் நாங்கள் இருவரும் நெகிழ்ந்து விட்டோம்.

திடீரென்று மனசு கனத்து துயருற்றது. கீறல்பட்டு இரத்தம் கசிந்தது.

பெற்றோர்களை நச்சரித்து புது உடுப்பென்றும், சப்பாத்தென்றும், ஐஸ்கிறீமென்றும் விரும்பியதெல்லாம் வாங்கி அனுபவிக்க வேண்டிய இச் சிறு வயதில் இப்படிப் பொறுப்பாக..... வீட்டில் என்ன தொல்லையோ..... இந்தச் சிறிய பையன் தலையில் குடும்ப பாரத்தை சுமக்கும் சுமையா? வயது முதிர்ந்த அம்மம்மா, ஊனமுற்றதாய், தம்பி, தங்கை இவனது கைகளையே நம்பி...

மனதில் படர்ந்த பச்சாதாப உணர்வு மடை திறந்து கொண்டது. ஒரு சோடி செருப்புகளை தெரிந்தெடுத்து அதற்கான பணத்தைக் கொடுப்பதற்கு எனது கணவரிடம் நான் காசைக் கொடுத்த போது அவர் அந்தச் சிறுவனிடம் "தம்பி உனக்கு எவ்வளவு காசு ஒரு நாளுக்கு உனது முதலாளி தருவார்" எனக் கேட்டதும் சிறுவன் " ஒவ்வொரு நாளும் பத்துச்சோடி செருப்பு விற்க வேணும் ஐயா, எனக்கு இருநூறு ரூபா முதலாளி தருவார்." என்று கூறினான். எனது கணவர் நான் எடுத்த செருப்பை விட மேலும் ஒரு சோடி செருப்பை எடுத்ததுடன் பையனின் கையில் மேலதிகமாக நூறு ரூபாத் தாளையும் கொடுத்து" இதை நீ வைத்துக்கொள்" என்றார்.

" நன்றி ஐயா என்னிடம் இரண்டு சோடி செருப்பு எடுத்ததே போதும் நூறு ரூபாவை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்"

அவனது செயல் இது பிச்சையல்ல; தொழில் எனச் சொல்லாமல் சொல்லியது. செருப்புக்களைத் தனது பையில் அடுக்கிய சிறுவன் வெளிறிய துணித் தொப்பியை தலையிலும் நைந்து போன செருப்பைக் கால்களிலும் அணிந்து கொண்டு சுமக்க முடியாத அந்த பையை சுமந்து கொண்டு வெளியேறினான்.

அக்கினியாய்க் கொதிக்கும் ஐந்து வயிற்றுக்கு அரையும் குறையுமாய் ஏதாவது கிடைக்க வேணும். அத்துடன் சகோதரங்களின் படிப்பு வேறு...... அவனால் இழுத்துப் பறிக்க முடியுமா? முடியும் என்ற தோரணை அவனில் தெரிந்தது.

அடுத்த சனிக்கிழமை மாலை சுமார் 5 மணியிருக்கும். அதே சிறுவன் கையில் சிறு கூடை. அதற்குள் வடை, கடலைச்சுருள்கள், மிக்சர்பைக்கட் என்பவற்றுடன் எங்களது கேற் வாசலில் " அம்மா வடை மிக்சர் எடுக்கிறீங்களா? " வாரும் தம்பி. என்ன தொழிலை மாத்திப் போட்டீரோ?"வாஞ்சையுடன் சிறுவனை வரவேற்கின்றேன். சிறு புன்னகையுடன், இல்லை அம்மா 5 மணி வரையும் செருப்பு விற்கிறனான். அதற்குப் பிறகு வீட்டில் இருக்கிற எல்லோரும் சேர்ந்து செய்த சாப்பாட்டுச் சாமான்களை விற்கிறனான் அம்மா"

சிறுவனின் பதிலில் எனக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் மனதிலே பொங்கியது. எவ்வளவு புத்திசாலித்தனமும் பொறுப்புணர்ச்சியும் உள்ள இவனது எதிர்காலம் மிகப் பிரகாசமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மனதில் பொங்கிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு" 5 வடைகளும், மிக்சர் பைக்கட்டும் 5 கடலைச்சுருளும் தா தம்பி" கண்களில் ஒளி பளிச்சிட, அம்மா உங்களுக்கு 5 பிள்ளைகளா? அவனை நோக்கி முறுவலித்த நான் எனக்குப் பிள்ளைகள் இல்லை, உனக்காகத்தான் இதனை வாங்குகின்றேன் என்று கூற முடியுமா? ஆம் எனக்கு 5 பிள்ளைகள் என்று பதில் கூறி அவனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்தனுப்புகின்றேன். அந்தச் சிறுவன் எங்கள் பக்கத்து வீட்டில் வடை, மிக்சர் வேணுமா எனக் கேட்பது என் காதில் விழுந்தது. சுமார் ஆறரை மணியிருக்கும் எங்கள் பக்கத்துவீட்டு பரிமளம் எங்கள் வேலிக்கு அருகே வந்து " ரீச்சர் அந்தக் கச்சான் விக்கிற பெடியன் சரியான கள்ளன் போல இருக்கு. நீங்கள் கொஞ்சம் கவனமா இருங்கோ உங்கள் [illegible]வாறதால் தான் சொல்லுறன் ரீச்சர்." ஏன் அவன் பாவம் கஷ்டப்பட்ட பையன் [illegible] பிழை செய்தவன் பரிமளா?" என பதற்றமாக வினவுகின்றேன். " 50 ரூபா கொடுத்து 30 ரூபாவுக்கு கச்சான் வாங்கின பிள்ளைகளுக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை போட ஒரு விடயம் 16

# முட்டையா கோழியா எது முதலில் வந்தது?

ரம்யன்

"நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பார் நடந்து விடும்"

இது ஒரு சினிமாப் படத்தில் வரும் பாடல் வரிகள்.

பெட்டைக்கோழி கூவி ஒரு போதும் பொழுது விடிவதில்லை என்று ஒரு சொல் வழக்கும் உண்டு

கோழியிலிருந்து முட்டை வந்ததா?, ''முட்டையில் இருந்து கோழி வந்ததா? என்பது ஒரு பழமொழி. ''கோழி முட்டையிட்டால் தான், அதிலிருந்து குஞ்சு வர முடியும் அங்கனம் வரும் குஞ்சு வளர்ந்தால் தான் அது கோழியாக முடியும், அப்படி வரும் கோழியால் தான் முட்டையிட முடியும் இது ஒரு இயற்கை நியதி. இது ஒரு மகா தத்துவமும் கூட.

கடவுள் தான் உலகையும் அதனுடன் சார்ந்த அனைத்தையும் படைத்தார் என்கின்றோம். இப்படி சொல்பவர்கள் யார் என்று பார்த்தால்-கடவுளால் படைக்கப்பட்டவர்களான நாம் தான் அதாவது மனிதர்களாகிய நாம் தான் அவர்கள். எனவே கடவுள் மனிதர்களைப் படைக்காமல் விட்டிருந்தால் படைத்த பிறகும் அவனுக்கு ஆறு அறிவுகளைக் கொடுக்காமல் விட்டிருந்தால் ஒரு வேளை கடவுள் பற்றிய சிந்தனையே இல்லாமல் போயிருக்கும்.

இன்னொரு வகையில் பார்த்தால் கடவுள் மனிதனைப் படைத்தாரா அல்லது மனிதன் தான் கடவுள் என்று ஒரு பொருள் இருப்பதாக விளங்கிக் கொண்டானா என்று சிந்திக்க தோன்றுகின்றது. அந்த வகையில் பார்த்தால் கடவுளில் இருந்து மனிதன் தோன்றினானா? அல்லது மனிதனில் இருந்து தான் கடவுள் சிந்தனை தோன்றிற்றா என்ற கேள்வி பிறக்கிறது அல்லவா?

இவையெல்லாம் சாதரண மனிதனுக்கு எட்டாத விடயங்கள் என்று கூறி விடுகிறார்கள் வேதாந்திகள். கோழி முதலில் தோன்றிற்றா அல்லது முட்டை தான் முதலில் தோன்றிற்றா. ஒன்றில்லாமல் மற்றது இல்லை என்று தெரிகிறது. எவ்வாறோ ஆதியில் ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

அந்த ஆதிப்பொருளே கடவுள் என்கின்றார்கள் சமயவாதிகள்-அதனையே இயற்கை என்கின்றார்கள் பகுத்தறிவாதிகள்.

இரண்டு சாராரும் மூலம் ஒன்று இருந்ததை அல்லது இருப்பதை ஒப்புக் கொள்கிறார்கள். எனவே ஒரு மூலத்தி லிருந்தே ஞாலம் வந்தது அந்த ஞாலத்துக்கு ஒரு மூலம் இருந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்கு பெயரை நீங்கள் கடவுள் என்றால் என்ன? இயற்கை என்றால் என்ன? எல்லாம் ஒன்று தான்.

### மனிதன் மாறவில்லை

உலகம் மாறிவிட்டது என்று எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள் உலகம் அப்படி ஒன்றும் பெரிதாக மாறிவிடவில்லை. உலகப் போக்குத் தான் மாறியுள்ளது. மாறிக் கொண்டிருக்கிறது.

சூரியன் அப்படியே தான் இருக்கிறது. கிழக்கில் தோன்றி மாலையில் மேற்கே மறைகிறது. அவ்வப்போது பூமியின் சுழற்சியில் ஏற்படும் மாற்றக்களுக்கேற்றவாறு அதன் தாக்கம் மாறுமட்டு மீள்கிறது. இது ஆதிகாலம் தொட்டு நடைபெறும் செயல் தான். அந்தச் சூரியனிலும் கூட ஏதோ வெடிப்புகளும், காந்தப் புயல்களும் சூறாவளிகளும் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

பூமிப் பந்தும் அப்படியே தான் இருக்கிறது. வழமை போல சுழன்று கொண்டும் நகர்ந்து கொண்டும் கால மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டும் தன் கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அதில் வதியும் மனிதர்கள் தாம் மாறிவிட்டார்கள், மாறிக் கொண்டு இருக்கிறார்கள், இந்த மாற்றங்களில் நன்மையானவையும் உண்டு தீமையானவையும் உண்டு.

அதிகாலத்தில் மனிதர்கள் இருந்த நிலைக்கும் இன்றிருக்கும் நிலைக்கும் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

போருக்குப் போகும் தமிழ் வீரர்கள் அந்தக் காலத்தில் ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு வாளையும் வேலையும் சில சமயம் வில்லையும் அம்பையும் ஈட்டியையும் காவிக் கொண்டு போனார்கள்- இக்காலத்தில் அப்படிப் போக முடியுமா?

காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றாற்ப் போல் மனிதன் மாறியாக வேண்டும். மாறிக் கொண்டு தான் இருக்கின்றான்.

எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதிக் கொண்டிருந்த மனிதன் இன்று விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் காரணமாக கணினியில் தட்டச்சு செய்து தன் ஆக்கங்களை வெளியிடுகின்றான். பறவைகள் மூலம் செய்தித் தொடர்புகளை வைத்துக் கொண்டிருந்தவன் இன்று என்னென்ன விதமாகவெல்லாம் அந்தத் துறையில் வளர்ந்து விட்டான் என்பதை எண்ணிப் பார்க்க முடியாமல் இருக்கிறது.

மிகச் சமீப காலம் வரை செப்புக்கம்பிகளின் தொடர் அமைப்புகளின் மூலம் வெளியலகுடன் தொடர்பு கொண்டிருந்தவன். சாதாரண மனிதன் கூட தன் சட்டைப்பையிலேயே கையடக்க தொலைபேசிகளைக் கொண்டு திரியும் அளவுக்கு வளர்ந்து விட்டான்.

இவ்வாறு வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் மனிதன் முன்னேறிவிட்ட நிலையைக் காண்கிறோம். ஆனால் இந்த மனிதனின் குணங்கள் - நடத்தைகள் மட்டும் பெருமளவில் அந்தக்காலத்திலிருந்தவைப் போலவே, காலத்துக்கு ஏற்பமாறியிருந்தாலும் - அப்படியே இருப்பதை என்னவென்று சொல்வது.

திருடர்களைப் பாருங்கள், அந்தக்காலத்தில் பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் தம் பாக்கெட்டுகளில் பணப்பைகள், பவுன்ரன் பேனைகள், மற்றும் கைகளில் கைக்கடிகாரங்களை அணிந்து செல்ல அஞ்சுவார்கள். குறைந்தால் இரண்டு ரூபாய் கூடினால் 50 ரூபாய்க்குமான பேனைகளை பின்பக்கற் திருடர்கள் அடித்துக்கொண்டு இறங்கி விடுவார்கள். இன்று பேனைகளைப் பற்றி அக்கறைப்படுபவர் யார்?

தொட்டெழுதும் பேனைகள், பவுன்ரன் பேனைகள் எல்லாம் போய் இப்போது போல் பெயின்ற் குமிழ் முனைப் பேனைகள் அதிலும் எத்தனை விதம்? அவ்வாறான திருடர்களின் கவனம் இப்போது கையடக்க தொலைபேசிகளிலும், சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற திருட்டுக்களிலும் திரும்பியுள்ளது. அதாவது திருடும் போக்கு மாறவில்லை, திருடும் பொருள்களும் பெறுமதியும் தான் மாறியுள்ளன.

இதற்கு பணத்தின் பெறுமதி குறைந்திருப்பது ஒரு காரணம் எனலாம். ஒரு பவுன்ரன் பேனையத் திருடினால் இன்று என்ன ஒரு பத்து ரூபாய் தேறும் அந்த பத்து ரூபாயில் ஆடம்பரமாக என்ன வாங்கலாம்?

ஒரு சைக்கிள் ஒன்றில், குறைந்தது ஐயாயிரம் ரூபாயாவது சுளையாக கையில் கிடைக்கும். தொழில் இல்லாமல் சுற்றித்திரிகின்றவர்களுக்கு -கல்வி அறிவு இல்லாமல் கபோதிகளாக இருப்பவர்களுக்கு திருடுவது ஒரு நல்ல தொழிலாகத் தெரிகின்றது. ஆடம்பரமாக உடை உடுத்து, சிகரெட்டை ஊதிக் கொண்டு, மோட்டார் சைக்கிள்களில் உலாவருவதற்கு வழிவேறு என்ன இருக்கிறது?

உண்மையில் நாகரிக சமுதாயத்தில் இப்படியானவர்களுக்கென சமூக நலத்திட்டங்களை அரசுகள் செயல்படுத்த வேண்டும் அதற்கான வழிமுறைகள், செயற் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும், பிரதேச சபைகள் கிராமிய அமைப்புகள் இதில் அக்கறை கொள்வது அவசியம். ஆனால் இப்படியானவர்களை வைத்தே பலர் பிரமுகர்களாய் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது. குற்றம் புரிகிறவர்களைப் பிடிக்கவும், காவலில் அடைத்து விசாரிக்கவும் தண்டனை வழங்கவும் சட்டங்களும் அதற்கான அமைப்புகளும் இருக்கின்றன. அந்த வகையில் அரசுகள் ஏராளமாகப் பணத்தையும் கொட்டுகின்றன. ஆனால் குற்றங்கள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது எப்படி, அதற்கான திட்டங்கள் என்ன, அவை களை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பவை பற்றி யாரும் சிந்திப்பதாய் இல்லை.

சிந்திக்க வேண்டியவர்களே குற்றம் புரிகிறவர்களாகவும், குற்றம் புரிகிறவர்களை பேணுகிறவர்களாகவும், குற்றம் புரிகிறவர்களைக் கொண்டு தம் சுய காரியங்களை செய்வித்துக் கொள்பவர்களாகவும் இருந்து விட்டால் அவைகளை ஒழித்து கட்டுவதற்கான வழிமுறைகளைப் பற்றி அவர்கள் ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? ★

---

# உயர்கல்வியில் கிரகங்களின் ஆதிக்கம்

பிரம்மஸ்ரீ சண்முகதியானேஸ்வரசர்மா
ஜோதிடர், நுணாவில் மத்தி.

எம்மவர்கள் அன்றைய காலம் முதல், இன்றுவரை நிரந் தரமான சொத்து என்று கருதுவது கல்வியைத் தான்...! ''கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்ற வாசகத்தை அடிக்கடி கூறி, பிள்ளைகளை உற்சாகப்படுத்தும் பெற்றோர் எம்மவரில் நிறையப்பேர் இருக்கவே செய்கிறார்கள். இருப்பினும், தம் பிள்ளைகள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தை எட்டியதும், தம் கௌரவத்தை முன்னிலைப்படுத்தி அவர்களின் உயர்கல்வியை தீர்மானிக்கும் பெற்றோரும் இருக்கவே செய்கிறார்கள். அதனைப், பிள்ளைகளின் விருப்பப்படியோ, அல்லது ஜாதக ரீதியாகவோ, அவர்கள் தீர்மானிப்பதில்லை.

ஒரு மாணவனின் கல்வியை அவனுடைய ஜாதகத்திலுள்ள கிரக அமைப்பை வைத்துத் தீர்மானிப்பது நல்லது. பொதுவாக கல்விக்குரியவன் புதபகவான் 4ஆம் வீடு கல்வியையும், 05ஆம், 09ஆம் வீடுகள் உயர்கல்வியையும் தெரிவிக்கின்றன. புதபகவான் ஆட்சி, உச்சம் பெற்றாலோ, அல்லது சுபக்கிரக ஆதிபத்தியம் கொண்ட கேந்திரங்களிலோ, இலாபஸ்தானத்திலோ இருந்தலே, கல்விச் சிறப்பைத் தருவான். இருப்பினும், பாவக்கிரகங்களின் தாக்கத்துக்கு உள்ளானாலோ, நவாம்சத்தில் பாவக்கிரக ஆதிபத்தியம் கொண்ட வீடுகளில் இருந்தாலோ, கல்வியில் தடங்கல்கள் ஏற்பட இடமுண்டு. அப்படியான ஜாதகர்கள் புதன்கிழமைகளில் புதபகவானுக்கும், விஷ்ணுபகவானுக்கும் வழிபாடுகளைச் செய்து வருவதன் மூலம் சிறப்பை அடையலாம். கல்வியில் சிறப்புத் தேர்ச்சியை கொடுக்கக்கூடிய குருபகவானின் பார்வை புதனுக்கு இருப்பது சிறப்பும். புதபகவானும், குருபகவானும், 05ஆம், 09ஆம் வீடுகளில் ஆட்சி, உச்சம் பெற்றாலும் அறிவாற்றலும், உயர் கல்வியும் கொடுக்கிறது. எது எப்படியிருப்பினும், எமது பெற்றோர்களில் சிலர், எனது பிள்ளை வைத்தியராக வர வேண்டும் அல்லது பொறியலாளராக வரவேண்டும் என்று பிள்ளையின் விருப்பத்திற்கு மாறாக, அடம்பிடித்து கல்வியைத் திணித்து, சீரழித்து விடுகிறார்கள். ஒருவர் மருத்துவராகவோ அல்லது பொறியிலாளராகவோ வருவதற்கு கிரகநிலை கள் சிறப்பாக அமைதல் வேண்டும்.

உதாரணமாக மேடம், சிங்கம், விருட்சிகம், தனு ராசிகளை மருத்துவத்தைக் குறிப்பிடும் ராசிகள் என்கிறோம். இவ்ராசிகள் லக்கினம் அல்லது ராசிக்கு 10ஆம் வீடாக அமையுமானால், ஒருவர் மருத்துவராக உருவாகலாம். சூரியன் மருத்துவத்துறையயும், செவ்வாய் சத்திர சிகிச்சையும் குறிக்கும் கிரகங்களாகும். சூரியனின் வீட்டில் செவ்வாயும், செவ்வாயின் வீட்டில் சூரியனும் பரிவர்த்தனம் பெறுவது மருத்துவத்துறைக்கு யோகம் தரும். 06 ஆவது வீடு நோய்களையும், 08ஆவது வீடு நோய்களால் ஏற்படும் துன்பங்களையும், அதனால் ஏற்படும் மரணங்களையும், 05ஆவது வீடு அறிவாற்றலையும், அதனால் ஏற்படும் கல்வியையும் குறிப்பிடுகிறது. 12ஆவது வீடானது வைத்தியசாலை, அதில் தொழில் புரியும் நிலை போன்றவற்றைக் குறிப்பிடும் வீடாகும்.

மருத்துவத்துறையை 06ஆம், 08ஆம், 10ஆம், 12ஆம் வீடுகள் குறித்து நிற்கின்றன. சந்திரனுக்கு கேந்திரங்களில் செவ்வாய் இருப்பதோ, அல்லது சந்திரனும், செவ்வாயும் சேர்ந்திருப்பது, அல்லது சூரியனும், சந்திரனும் ராசியிலும் நவாம்சத்திலும் தொடர்புபட்டிருப்பது மருத்துவக் கல்வியில் சிறப்பைத் தரும்.

04ஆம் அதிபதி 10இல், அல்லது 10ஆம் அதிபதியின் வீட்டில் இருப்பது, அல்லது 06ஆம் அதிபதி லக்கினத்திற்கோ, 10ஆம் வீட்டதிபனுக்கு தொடர்புபடுவது அல்லது சந்திரனுக்கு 10ஆவது வீட்டில் பாவக்கிரகங்கள் இருந்து குருவால் பாக்கப்படுவது அல்லது நவாம்சத்திற்கு 10ஆம் வீட்டின் அதிபதி, இராசி நிலையில் புதனுக்கு திரிகோணஸ்தானத்தில் அமைவது, அல்லது 10ஆம் அதிபதி நவாம்சத்தில் 12இல் இருந்து மிதுனம், கன்னி, விருட்சிகத்தில் அமைவது நவாம்சத்தில் 10ஆம் அதிபதி சூரியன் வீட்டில் இருப்பது, நவாம்சத்தில் புதன் ராகுவுடன், கூடுவது நவாம்சத்தில் 10ஆம் வீட்டதிபனை, ராகு, கேது, செவ்வாய், சனி கிரகங்களில் ஒன்று பார்ப்பது, அல்லது நவாம் சலக்கினத்தை புதன் [illegible] மருத்து வத்[illegible] சிறப்பைத் தரும்.

அதே வேளை, குருவின் ஆட்சி உச்ச வீடுகளிலிருந்து 01ஆம், 02ஆம், 04ஆம், 05ஆம், 06ஆம், 07ஆம், 09ஆம், 10ஆம் வீடுகளில் சுக்கிரன், புதன், குரு போன்ற கிரகங்கள் தனியாகவோ, சேர்ந்திருந்தோ, சூரியன், சனி, செவ்வாயால் பார்க்கப்படுவது சிறப்பான மருத்துவத்துறை சார்ந்த யோகத்தைத் தரும்.

குருபகவான் லக்கினத்திற்கு அல்லது நவாம்ச லக்கினத்திற்கு 02ஆம், 05ஆம் வீடுகளில் இருக்கும் போது, அந்த வீடு சுக்கிரனின் அல்லது புதனின் வீடாக அமைந்து குரு, புதன், சுக்கிரனுடன் தொடர்பு படுவது சிறந்த மருத்துவக் கல்வியைத் தரும்.

அதே போன்று பொறியியல்துறையில் சிறப்புப் பெற, புதன் கணிதத்துறை, புத்திசாதுரியமாகச் சிந்திக்கும் திறன், நிர்வாகத்திறமை, கட்டட நிர்மாணநுட்பம் போன்றவற்றைத் தருகிறார். பொதுவாக இடபம், விருட்சிகம், கும்ப ராசிகளை பொறியியல் துறைக்கான இராசிகள் என்கிறோம். லக்கினம் சிறப்பாக அமைய வேண்டும். லக்கினத்திற்கு செவ்வாய், புதன், சனி இவர்களில் ஒருவரின் தொடர்பு இருந்தல் வேண்டும். லக்கினாதிபன் லக்கினத் திலோ, அல்லது லக்கினத்தைப் பார்த்தல் வேண்டும். லக்கினாதிபதியை செவ்வாய், சனி, புதன் யாராவது ஒருவர் பார்க்க வேண்டும் . அதேவேளை, கடகம், துலாம், விருட்சிகம், மகரம், மீனமாக லக்கினம் அமைவது, அல்லது லக்கினாதிபதி மேற்படி லக்கினங்களில் அமைவது பொறியியல் துறைக்கு சிறந்ததாகும்.

பொறியியல் துறையில், மதிப்பீடு செய்வதற்கு செவ்வாய், புதன் இணைவு சிறப்பையும், சுக்கிரன் கட்டடப் பணியை அழகுற அமைப்பதற்குரிய கல்வியில் சிறப்புப் பெறுவதற்கும், அதே போன்று சிவில் பொறியிலாளர் கல்வியில் சிறப்புறுவதற்கு சனி, பகவானுக்கு, சந்திரன், குரு, சுக்கிரன் தொடர்பு படுவதும், மின்சாரப் பொறியிலாளராக கல்வியில் சிறப்புறுவதற்கு செவ்வாய்க்கு, சந்திரன், குரு, சுக்கிரன் தொடர்பு படுவதும் நன்று.

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி போன்ற கிரகங்களில் ஏதாவது ஒன்று கேந்திரங்களிலிருந்து ஆட்சி, உச்சம் பெறுவதும் பொறியியல் துறையில் பட்டம் பெற வழி சமைக்கும் எனலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை தெரியுமா? 147

### உங்களுக்கும் பரிசில்கள்

1.செயற்கை கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு எது?
2. காசநோயின் தடுப்பூசி என்ன?
3.உப்பினால் ஆன நகரம் எது?
4.மனித உடலின் மிகப் பெரிய தசை எது?
5.தேசிய அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

### விடைகள் 145

1. அடால்வ் ஹிட்டலர்
2. ஆஸ்திரேலியா
3. இந்தோனேசியா
4. 333000 மடங்கு
5. 1950 ஆம் ஆண்டு

### வெற்றி பெற்றோர் விவரம் (144)

★ சி.வனோஜா, தரம் 3சி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
★ க.கபிலன், தரம் -9, உடுவில் மான்ஸ் ம.வி.
★ சி.கோபிகா, தரம் -6, மருதங்கேணி இ.த.க.பாடசாலை
★ கு.பிரியதக்ஷி, தரம் 8சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை
★ வி.சாருமதி, தரம் 7ஏ, மீசாலை வீரசிங்கம் ம.வி.
★ சி.டல்ஷிகா, தரம்-8, மருதங்கேணி இ.த.க.பாடசாலை.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 25.02.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

# கஞ்ச வியாபாரியும் முட்டாள் உதவியாளர்களும்

பணக்கார துணி வியாபாரி பணக்காரனாக இருந்தாலும் படு கஞ்சன். அவனிடம் வேலை செய்தவர்கள் அனைவரும் படு முட்டாள்கள். எங்கே புத்திசாலிகளை வேலைக்கு வைத்தால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டும் எனவும், தன்னிடமே படித்து எங்கே தனக்கு போட்டியாக வியாபாரம் தொடங்கி விடுவார்கள் எனவும் நினைத்தான்.

ஒரு நாள் வழக்கம் போல விற்பனைக்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஒரு ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிவிட்டு மிகக்குறைந்த கூலிக்கு அமர்த்திய முட்டாள் வேலைக்காரர்கள் இருவருடன் புறப்பட்டான்.



அளவுக்கு அதிகமாக பொருள்களை ஏற்றியதால் வழியில் பாரம் தாங்காமல் ஒட்டகம் கீழே விழுந்துவிட்டது.

வேலைக்காரர்களைப் பார்த்து அவன், ''நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் வருவதற்குள் மழை வந்துவிட்டால் பெட்டிகளை எப்படியாவது நனையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். அனைவரும் எவ்வளவோ சொன்னார்கள். ஆனால், வியாபாரியோ வழித்துணைக்கு தானே இவர்களை அழைத்துச் செல்கிறேன். எடுபிடி வேலை செய்ய வேண்டும். இதனால் எனக்கு ஒரு பாதிப்பும் வராது என்று நினைத்தான். சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

''நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது?'' என்று கேட்டான் ஒருவன். ''பெட்டிகளுக்கு உள்ளே இருக்கின்ற துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகள் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகள் நனையாமல் பார்த்துக் கொள்வோம்,'' என்றான் அடுத்தவன்.

இருவரும் பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளுக்கு மேல் போட்டனர்.

மழையில் நனைந்து துணிகள் எல்லாம் ஈரமாகிவிட்டன.

ஒட்டகத்துடன் திரும்பிய வணிகன், ''ஐயோ! என்னடா செய்தீர்கள்? துணிகள் எல்லாம் நனைந்து வீணாகிவிட்டதே,'' என்று கோபத்துடன் கத்தினான். ''முதலாளி நீங்க சொன்னபடி பெட்டிகள் நனையாமல் இருப்பதற்காகத் துணிகளை எல்லாம் அதன் மேலே போட்டோம். அந்தப் பெட்டிகள் சிறிது கூட நனையவில்லை. நீங்களே பாருங்கள்,'' என்றான் அவர்களில் ஒருவன். ''முட்டாள்களான உங்களுக்கு இனி என்னிடம் வேலை இல்லை,'' என்று அவர்களை விரட்டினான் வணிகன். கொஞ்சம் காசுக்கு சிக்கனம் பார்க்கப் போய் முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வேதனையுடன் ஊர் திரும்பினான் வணிகன்.






செ.ரிஷிரன்
தரம்-7, யா/ மத்திய கல்லூரி



பா.தமிழிசை
தரம்-4, யா/ புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.



செ.ரிஷிதரன்
தரம்-7, யா/ மத்திய கல்லூரி



கே.விதுர்சனா
தரம்-4, சாவகச்சேரி, றோ.க.த.க.பாடசாலை.



பா.சுதாங்கன்
தரம்-4கே, யா/ புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை



ஆர்.அஜிதன்
தரம்-8, கிளி.முழங்காவில் ம.வி.

## பழமொழிகள்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
அடாது செய்பவர் படாது படுவார்
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
கடுகு சிறிதானாலும் காரம் பெரிது
ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
குறைகுடம் தளும்பும் நிறைகுடம் தளும்பாது
நிழலின் அருமை வெயிலில் தெரியும்
சிறுதுரும்பும் பல் குத்த உதவும்
சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
குப்பையில் போட்டாலும் குண்டு மணி மங்காது
பழகப் பழகப் பாலும் புளிக்கும்

ச.விபூஷன்
யா/ புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை.

## ஊடுகாட்டித் தாள் ஒட்டும் இயந்திரம்

Laminator



முக்கியமான ஆவணங்களை நீண்ட காலம் பாதுகாத்து வைப்பதற்காகத் தடிப்பான பொலித்தீனால் அட்டையிடுவதே இந்த இயந்திரத்தின் முக்கிய தொழிற்பாடாகும். இதற்கு A4, B5, 1D, Legal என்ற அளவுகளில் உள்ள ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களை பொலித்தீன் அட்டையிட பயன்படும்.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிடும் விலைகளால்



அடிக்கடி மாறிடும்
விலைகளால் இங்கு
உலை லைத்துச்
செல்கிறது வாழ்வு
எரிபொருள் விலையதை
எண்ணினாலே
பற்றி எரிகிறது உள்ளம்
எடுக்கின்ற சம்பளமோ
கொடுக்கின்ற விலைகளிலே
காணாமற்போக
பயணங்கள் எங்கே
சேமிப்பு எங்கே
அவன் எங்கோ அடிக்க
எமக்கிங்கு வலிக்கிறது
வல்லாதிக்க உலகில்
மீண்டும் மீண்டும்
சமத்துவக் கனவுகளில்
விலையிழந்து
தவிக்கிறது மானிடம்
நடுவீதியில் நாங்கள்

புலோலியூர், வேல்நந்தன்.

# வெளிநாட்டு மாப்பிள்ளை



என் கனவுகள்
விலை பேசப்படுகின்றன
வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு
இயன்ற வரைக்கும்
என் இதயத்தின்
வலிகளை யாரும்
புரிந்து கொண்டதாக
புலப்படவில்லை எனக்கு
என் உணர்வுகள்
எனக்குள்ளே
தற்கொலை செய்து கொள்கின்றன
பெற்றோரின்
வறுமையை எண்ணி
சமுதாயச் சந்தையின்
போட்டி வியாபாரத்தில்
பருவமடையாமல்
பறிக்கப்பட இருக்கிறது
என் வாழ்க்கை
தாத்தாவுக்கு வாழ்க்கைப்பட
தயாராக்குகின்றனர்
என்னைப் பெற்றோர்?

ச.தீபன், மயிலங்காடு



# புதியதோர் உலகம் செய்வோம்

நீ சாதிக்கப் பிறந்தவன்
சாய்வதற்கல்ல...
பழைமையை தகர்த்தெறி
புதுமையைத் புடம்போடு நீ
புதுமையானவன் பூமிப்பந்தை
வலம்வா புதைப்போம்
மடமைகளைத் மண்தோண்டி உன்
நிழல்பட்டால்
உயிர்த்தெழுகின்றது
சுவாசக்காற்றும் உன்
பத்துவிரல்பட்டால்
பட்ட மரமும் துளிர்க்கத் துடிக்கின்றன
பிரபஞ்சத்தின்
புதிய வார்ப்பு - நீ
உதிர்வுகள் உன்னை
உதாசீனப்படுத்தினாலும்
உன் இலக்கும் இலட்சியமும்
ஓயப்போவதில்லை எழுந்து வா
புதியதோர் உலகம் செய்வோம்

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

# மௌனம்

தோழியே வாழ்க்கையில் சலிப்புற்று
சாய்ந்தபோது தோள் மீது தாங்கி
துக்கம் மறக்க வழி செய்தாய்

வேதனையோடு மழுங்கி விடுமோ- எனது
இலட்சியம் என - நான்
எண்ணியபோது
சாதனைகள் பல புரிய வைத்தாய்

ஏற்றத்திலும் தாழ்விலும்
என்னில் பாதியாய் என்னோடிருந்தாய்

திடீரென எம்முன்
புயல்வீசியது ஏனோ?
புதிதாய் பூத்த மலரொன்றை
உன் கண்கள் நாடியதாலோ?



வருஷமாய் வாழ்ந்த நட்பை
நிமிஷத்தில் வந்த காற்று
அள்ளிச் செல்வதா
இதுவா உலகளாவிய நட்பு

உலகிலே மிகச் சிறந்த
நட்பு நமதென்று முரசு கொட்டச்
சொல்லணும் என்று நினைத்தோமே

இவ்வாறு பாதியிலே
உறங்கி விடுவதற்கா?
உயிருள்ளவரை நீ வாழ்வாய் - என்றும்
என்னுள் சிறந்த தோழியாய்
உன்னுள் நான் வாழ்வேனா?

என் இறுதிவரையாவது விடைசொல்
காத்திருக்கிறேன் நான்
உனக்காக என்னால் வினாவப்பட்ட
கேள்விகள் ஆயிரம் அத்தனைக்கும் - என்
பதில் மௌனங்கள் தானா?
இன்னும் எத்தனை காலம்
இந்த மௌனம்....!!!

விஜயசாந்தி, புலோலி.

# மீள்குடியேற்ற வாழ்வு

இதுதான் எம்வீடு
கொஞ்சிக் குலவி
நெஞ்சம் மகிழ்ந்திருந்த வீடு
இதில்தான் அப்பாவின் அலுவலக அறை
அதில் என்னது இருந்தது
பக்கத்தில் அக்காவினுடையது ... இன்று
எல்லாம் மண்ணோடு மண்ணாக
மொத்தக் குடும்பத்துக்கும் - இந்த
ஒற்றைக் கூடாரம்தான் தஞ்சம்

நேற்றுப் பெய்த மழையின் ஈரம்
முற்றாக காயவில்லை இன்னும்
ஒருவேளை உணவையாவது
ஒழுங்காய் கொடுப்போம்
பருப்போடென்றாலும்- என்ற
அங்கலாப்புடன்
எரியவே மறுக்கும் அடுப்புடன்
போராடிக் கொண்டிருக்கும் அம்மா



இன்றும் மழைவருமா நேற்றுப்போல்
எமையெல்லாம் தூங்கவிடாது தூரத்துமா...?
தாங்க முடியாத துயருடன் வானம் நோக்கும்
தங்கையின் வெறித்த பார்வை...

கலையாத கனவுகளுடன் காத்திருந்து கரம்பிடித்த
கணவனையும் - ஒற்றைக்
காலையும் பறிகொடுத்து
தொலை தூரம் சென்று தண்ணீர் எடுத்து வந்த
களைப்பில்
தொலைந்துபோன அக்காவின் நிஜமுகம்....

எப்படி வாழ்ந்த வீட்டில்
இப்படி வாழ்கின்றீர்களே
என்பதுபோல
கதிரையில் சித்திரமாய்
பத்திரப்படுத்தப்பட்டிருக்கும்
அப்பாவினம் தம்பியினதும்
புகைப்படங்கள்
பரிதாபமாய் எமைப் பார்க்கும்
போரின் போது இறந்தவர்கள் அவர்கள்
போரின் பின்னரும்
செத்துக் கொண்டிருக்கிறோம்
கொஞ்சம் கொஞ்சமாய்- எம்
மீள்குடியேற்ற வாழ்வில் நாம்.

க.தர்சினி,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

# ஏமாற்று நாடகத்தில் இன்னுமொரு அங்கம்

"இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியாவால் அமைக்கப்பட்ட இந்த இராணுவ விசாரணைக்குழு உலகை ஏமாற்றும் அப்பட்டமான ஒரு மோசடி நடவடிக்கையாகும்.



சிலரைச் சில காலம் ஏமாற்றலாம். பலரைப் பல காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாற்ற முடியாது. தமிழ் மொழியில் இப்படியொரு பழமொழி உண்டு. ஆங்கிலத்திலும் இதே அர்த்தம் உள்ள பழமொழி ஒன்று உண்டு.

பழமொழிகள் எந்த மொழியில் எப்படி இருந்த போதிலும், எல்லோரையும் எல்லா நேரமும் ஏமாற்ற முடியும் என்பதில் நம்பிக்கை வைத்துச் செயற்படுபவர்கள் இன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள். ஒரே நேரத்தில் இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என உலகில் சக்தி வாய்ந்த வல்லரசுகளெனக் கருதப்படும் நாடுகளையும், ஆசிய ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் ஒவ்வொரு முகங்களைக் காட்டி ஏமாற்றுவதில் இலங்கை உலக சாதனை படைத்து வருகிறது.

இலங்கை அரசு திட்டமிட்ட வகையில் பிறரை ஏமாற்றுகிறது என்பதை அது தெரிந்தே மேற்கொள்கிறது. அதேவேளையில் ஐ.நா. சபை, மேற்கு வல்லரசுகள், இந்தியா போன்றவையும் நாம் ஏமாறுகிறோம் என்பதைத் தெரிந்தே ஏமாறுகின்றன.

ஐ.நா. சபையும் சக்தி வாய்ந்த வல்லரசுகளும் தெரிந்தே ஏமாறும் அளவுக்கு முட்டாள்களா என்ற கேள்வி எழும்பக் கூடும். நிச்சயமாக அவை முட்டாள்தனமானவையல்ல. உலக அரசியலையே தமக்கேற்ற வகையில் வடிவமைக்குமளவுக்கு வல்லமையும், ராஜதந்திர யுத்த தந்திர நகர்வுகளையும் மேற்கொள்ளுமளவுக்கு ஆற்றலையும் படைத்தவை.

ஆனால் ஏமாறுவது போன்ற தோற்றப்பாடு ஒரு பரந்த விரிந்த நீண்டகால இலக்கின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப் படுகின்றன. உலக மேலாதிக்கம் நோக்கிய சீனாவின் நகர்வும் அதற்கெதிராக மேற்குலகும் இந்தியாவும் முன்னெடுக்கும் முயற்சிகளும் ஒன்றுடன் ஒன்று நடத்தும் பனிப்போரின் அடிப்படையிலேயே இலங்கையால் ஏமாற்றவும் முடிகிறது. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தற்காலிகமாக விரும்பியே ஏமாறுவது போன்ற ஒரு தோற்றப் பாட்டைக் காட்டுகின்றன.

ஞாயிறு காரம்

சீனாவின் நீண்ட கால இலக்கைக் கொண்ட முத்துமாலைத் திட்டம் பசுபிக் பிராந்திய, இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் பேணி வரும் நோக்கம் கொண்டதாகும்.

மியன்மார், பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு, இந்தோனேஷியா எனப் பரந்த ஒரு பகுதியைக் கொண்டதாகும் இந்த முத்துமாலைத் திட்டம். இவ்வகையில் இந்தப் பரந்த திட்டத்தில் இலங்கை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையமாகும். ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகம் விமான நிலையம், நெடுஞ்சாலைகள், தாமரைக் கோபுரத் திட்டம் எனச் சீனா இலங்கையில் பலமாகவே காலூன்றி வருகிறது. மேலும் அந்நாடு பூநகரியில் ஒரு சர்வதேச விமானத் தளத்தை நிறுவவுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்த நிலையில் இலங்கை மேலும் மேலும் சீனாவின் பக்கம் சாய்ந்து விடாமல் தடுக்க, மேற்கு நாடுகள் போரின் கடைசி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றைக் கையில் எடுத்துள்ளன. இவை தொடர்பாக ஆரம்பத்தில் இலங்கை எதிர்ப்புக் காட்டுவதும் பின் ஒத்து வருவது போல் ஒரு தோற்றப்பாட்டைக் காட்டி பிரச்சினைகளைத் திசை திருப்புவதும் என ஒரு பெரும் தொடர் ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றி வருகிறது. ஆனால் இவற்றை மேற்குலகும் அமெரிக்காவும் நன்றாகப் புரிந்து கொண்டாலும் கடும் போக்கைக் கையாண்டால் இலங்கை முழுமையாகச் சீனா பக்கம் விழுந்து விடும் என்ற முன்னெச்சரிக்கையுடன் மிக அவதானமாகக் காய்களை நகர்த்துகின்றன.

இந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாக வைத்துக் கொண்டே இலங்கை துணிந்து எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்று வித்தையை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

இலங்கை போர்க்குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு இதே தந்திரோபாயத்தைக் கைக்கொண்டு வருகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கூட்டத் தொடரில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாகக் கடும் தொனியில் பிரச்சினைகள் எழுப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இந்தக் கூட்டத் தொடரில் கடும் போக்கைக் கடைப்பிடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. எவ்வளவுதான் இலங்கை ஜனாதிபதியும் அமைச்சர்களும் நாடு நாடாக ஓடித் தமக்கு ஆதரவு திரட்ட முயன்றாலும் அமெரிக்க நிலைப்பாடு உறுதியாக இருக்கும்போது அந்த நிலைமை இலங்கைக்குச் சாதகமாக அமையப்போவதில்லை.

எனவே தான் இலங்கை அரசு இன்னுமொரு ஏமாற்று வித்தையை அரங்கில் ஏற்றி வைத்துள்ளது. போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் சில அம்சங்களை விசாரிக்க இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரியவால் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அவற்றை ஆராய்ந்து இராணுவ நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும். அது அவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும்.

அதாவது எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்தில் கூட்டத் தொடரின் இலங்கை தொடர்பான குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படும்போது அங்கு அமைச்சர் மஹிந்த சமரசிங்க தாங்கள் அவை தொடர்பாக உள்ளூரிலேயே விசாரணை நடத்துவதாகவும் அந்த விசாரணை முடிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிப்பார். இப்படியான ஒரு நோக்கத்துக்காகவே இந்தக் குழு அமைக்கப்படுகிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஆயுதப் படையினர் மீதே வைக்கப்படுகின்றன. அவற்றை இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் குழு விசாரணை செய்வதும் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதும் எவ்வளவுதூரம் நேர்மையாக இடம்பெறும் என்பது தெளிவான விடயமாகும். அன்றிலிருந்து இன்றுவரை பாதுகாப்புச் செயலரோ இராணுவப் பேச்சாளர்களோ இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை எனவும் இலங்கை இராணுவம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையது எனவும் கூறி வருகின்றனர். இந்த வகையில் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்த எல்லையைத் தாண்டிவிட முடியுமா? எனவே இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியாவால் அமைக்கப்பட்ட இந்த இராணுவ விசாரணைக்குழு உலகை ஏமாற்றும் அப்பட்டமான ஒரு மோசடி நடவடிக்கையாகும். அதாவது ஏமாற்றத் தொடர் நாடகத்தின் இன்னொரு அங்கம்தான் இந்த விசாரணைக்குழு. எல்லோர்ரையும் எல்லா நேரமும் ஏமாற்றும் இந்த தந்திரோபாயத்துக்குச் சர்வதேசமும் இந்தியாவும் எப்படி முகம் கொடுக்கப் போகிறன என்பதுதான் இங்கு எழும் முக்கிய கேள்வி.

போரின் இறுதி நாள்களிலும் போர் முடிவுற்ற அண்மைய நாள்களிலும் இலங்கைப் படையினரின் போர்க்குற்றங்கள் தொடர்பாக மனித உரிமை நிறுவனங்களும் சில ஊடகங்களும் ஆதாரபூர்வமான செய்திகளை வெளியிட்டு வந்தன. குறிப்பாக வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் பாதுகாப்பு வலயத்தில் மருத்துவமனைகள் மீதும் மக்கள் குடியிருப்புகள் மீதும் எறிகணைகள் வீசப்பட்டு பெரும் தொகையானோர் கொல்லப்பட்ட செய்திகளும் வெளிவந்தன.

ஆனால் அரசு அவற்றை நிராகரித்தே வந்தது. எனவே இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.செயலருக்கு ஆலோசனை வழங்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அதை எதிர்த்து அரச விசுவாசியான விமல் வீரவன்ச தலைமையில் ஆர்ப்பாட்டங்கள், முற்றுகைப் போராட்டம், உண்ணாவிரதம் எனப் பல நாடகங்கள் நடத்தப்பட்டன.

ஆனால் அதுவரை போர்க்குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லையென மறுத்த இலங்கைத் தரப்பினர் அவை தொடர்பாக உள்ளூரிலேயே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

அதுவும் சர்வதேசத்தை ஏமாற்ற மேற்கொள்ளப்பட்ட ஒரு நாடகம் என்ற போதிலும் ஐ.நா. நிபுணர்குழு சுயாதீனமாக விசாரணை நடத்தி இலங்கை அரசின் மோசடிகளை அம்பலப்படுத்தியது. கடந்த மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைப் பிரச்சினை எழுப்பட்டபோது இலங்கை தாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியது. இந்தியாவும் அதற்குத் தலையாட்டியது.

இப்போது அடுத்த கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் ஒரு இராணுவ அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இது ஒன்றும் அதிசயமல்ல. இதன் விசாரணையும் முடிவுகளும் எப்படியிருக்கும் என்பதை மக்கள் நன்கே புரிந்து வைத்துள்ளனர்.

எப்படியிருப்பினும் இலங்கை அரசின் ஏமாற்று நாடகத்தின் அடுத்த அங்கம் மேடையேற்றப்பட்டு விட்டது. இதைச் சர்வதேசம் புரிந்தே வைத்துள்ளது. ஆனால் அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் சர்வதேசம் தயங்கினால் மேலும் இலங்கை சீனா பக்கம் சாய்வதைத் தடுக்க முடியாது என்பதுதான் நிதர்சனம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே உணர்ந்திடு



நாட்டினில் நாங்கள்
பெண்களாய்
வந்து பிறந்தாச்சு
இங்கு நடப்பவை
எல்லாம் சிந்தையில்
என்றும் வேதனையாச்சு
வருடங்கள் விரைந்தோடுவதும்
வெகு விரைவாச்சு
அதனுடன் ஏறுது
மளமளவென
சீதனப் பேச்சு
கன்னியும் முதிர்ந்து இங்கு
பழமாய் விழுந்தாச்சு
பெண்ணே உன்னைப் போல் பிற
பெண்ணையும் நினைச்சு
ஏழைப் பெண்ணும் வாழ்வதற்காய்
பேசு ஆணை விலை குறைச்சு
இதை உணர்வதும் உலகில்
எம் பெண்ணாச்சு
என்று தான் விடுவாள் அவள்
சந்தோசப் பெருமூச்சு

(நந்தினி)

# புரிந்து வாழ்பவளே பெண்



"பெண்கள் நாட்டின் கண்கள்" என்பது வெறும் வார்த்தைகளுக்காக மட்டும் சொல்லப்பட்டதல்ல. இது அனுபவ மான்களால் ஆராய்ந்து கூறப்பட்டது. ஓர் பெண்ணானவள் தன் சொந்த விருப்பங்களைவிட, எப்போதும் பிறர் விருப்பங்களுக்காகவே தன்னை ஈடுபடுத்துபவள். வளரும் போது பெற்றோரின் விருப்புக்கு ஏற்றவளாகவும், பருவ வயதில் மணம் முடித்து கணவனின் விருப்புக்கு ஏற்றவாறாகவும், பிள்ளைகளுடன் அவர்களுக்கு அமைவாகவும் அவளின் வாழ்க்கை ஓர் வட்டத்திற்குள்ளேயே சுழன்று கொண்டு இருக்கின்றது. அவளின் குடும்பத்தார் யாராவது ஒரு நாள் அவளின் விருப்புக்கு இணங்க ஏதாவது செய்வார்களா என்றால் இல்லை. யாருமே இல்லை, பாவம் அவள் தன் ஆசைகளையும் தன் னுள்ளே போட்டு, தன்னைச் சார்ந்தவர்களுக்காகவே வாழ்கின்றாள்.

பெண் அடிமை விலங்கை ஒழித்து அவர்களுக்கு உதவுவோம் எனச் சட்டம் பேசுவோர் எல்லாம் வெறும் பேச்சுடனேயே நின்றுவிடுவார்கள். ஊருக்கு உபதேசம் உனக்கில்லை என்பார்கள். வீதியில் ஓர் பெண் அலங்கரித்துச் சென்றால், அதைப் பார்த்து ரசிக்கும் ஆண்கள், தம் குடும்பத்தில் உள்ள மனைவியோ, சகோதரிகளோ அவ்வாறு சென்றால் உடனே தாண்டவமாடுகிறார்கள். ஏன் இந்த ஆண்கள் இவ்வாறு இருக்கின்றார்கள்? மங்கை மங்களத்துக்குரியவள். அவள் என்றுமே தன்னைப் பிறர் மட்டமாக நினைக்க இடமளிக்கமாட்டாள். இதனை ஆண்கள் புரிந்துகொள்ளவேண்டும். தடைகள், கட்டுப் பாடுகள் அதிகரிக்கும் போதே அவள் பல்வேறுபட்ட மனப்போக்குகளுக்கு ஆள்பட்டு, தன்னை மாற்றிக்கொள்கிறாள். சுதந்திரம் பறிக்கப்படும்போது தான் அதன் விளைவுகள் எல்லை யின்றி பரவத் தொடங்குகின்றன.

எனவே அவள் மனம் நோகாது சில முடிவுகளை அவளாகவே எடுத்துக்கொள்ள அவளின் கருத்துக்களை நீங்களும் கேட்டு ஆலோசிக்க முயன்று பாருங்கள். அப்போது அவள் நிச்சயமாக நீங்கள் கூறும் எவ்விடயத்தையும் சலிக்காது அன்புடன் ஏற்றுக்கொள்வாள். "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்பார்கள். எனவே பெண்ணானவள் தன்னையும் காத்துக் கொள்வதோடு தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பது மிக முக்கியமானது.

அன்று தொட்டு இன்று வரை பெண்கள் தம் முன்னேற்றங்களில் பின் தாங்காமல் தம்மைச் சூழவுள்ளவர்களின் நலன்களையும் கருதிப் பல அரிய செயல்களை செய்கின்றார்கள். எனவே அவர்களின் மதிப்பு என்றும் உயர்ந்து மிளிர அவர்கள் தான் காரணமாக இருக்க வேண்டும். சூழலையும்,சந்தர்ப்பங்களையும் புரிந்துகொண்டவர்களாக மாறவேண்டும் என்பதனை மறந்துவிடக் கூடாது.

நந்து.

# நிம்மதியாக வாழ....



வாழ்வில் நிம்மதியாக இருப்பது முக்கியமா? அல்லது நம் விருப்படி எல்லாமே நடப்பது முக்கியமா? நமது இஷ்டப்படி எல்லாமே நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறவர்கள் நிம்மதியாக ஒருபோதும் இருப்பதில்லை. இது கொஞ்சம் கசப்பான உண்மை.

பொதுவாகப் பழைய காலத்தில் எத்தனையோ சிக்கல்களுக்கு மத்தியிலும் பெண்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தார்கள். அதிக வசதி இல்லாமல் இருக்கலாம். கல்வி மறுக்கப்பட்டிருக்கலாம். என்றாலும் சங்கடங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிம்மதியாக வாழந்து முடித்தார்கள்.

குடும்ப விஷயத்தில் எந்தப் பொறுப்பும் ஏற்கத் தயாராக இல்லாத, கொஞ்சம் குணக்கேடான குறைபாடுகள் மிக்க கணவனுடன் கூட, சென்ற தலைமுறைப் பெண்கள் அதிக சிக்கல் இல்லாமல் வாழ்ந்து முடித்துவிட்டார்கள்.

ஆனால் இன்று அப்படியா? தன் குடும்பத்தில் பலமடங்கு அக்கறை காட்டும் கணவோடு கூட இன்றைய படித்த உழைக்கின்ற பெண்களால் குடும்பம் நடத்த முடிவதில்லை. காரணம் அவள் அவனைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் மறுகணமே அவள் தன் நிம்மதியை இழந்துவிடுகிறாள். அதிக சிக்கலுக்கு உள்ளாகிறாள். எனவே புரிந்துகொள்கிறேன் என்ற உரிமையில் இன்னொரு மனதில் பிரவேசிக்க நினைப்பது சில சமயங்களில் கடுமையான காயங்களையே ஏற்படுத்துகின்றது. பழைய காலத்தில் பெண்கள் ஆணைப் பின்பற்ற, ஏற்றுக்கொள்ள காட்டிய அக்கறையை, அதனைப் புரிந்துகொள்ளும் எந்தமுயற்சியிலும் காட்டியதில்லை. அநாவசியமென்று நினைத்திருக்கலாம், அவர்கள் வளர்ந்த சூழ்நிலையில் இந்த எண்ணம் தோன்றாமலே இருந்திருக்கலாம். எல்லாவற்றையும் விட நிம்மதிதான் முக்கியம் என்ற உண்மை புரிந்துகொண்ட பெண்களுக்கு இந்த இரகசியம் புரிந்திருக்கும்.

(நித்தியா)

இலைக்கத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# குடும்பத்தை சொர்க்கமாக்க...

சந்தியா.



அன்பான, அரவணைப்பான வார்த்தைகளை உங்கள் கணவரிடத்தில் பயன்படுத்துங்கள் கணவருக்காக அக்கறையுடன் தயாரிக்கப்பட்ட உணவைச் சரியான நேரத்திற்குள் பரிமாறுங்கள் . கணவருடன் சேர்ந்து உண்ணும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

கணவரிடம் மென்மையான குரலில் அழகாக, அன்பாக பேசுங்கள். கணவரின் பேச்சை உதாசீனப்படுத்தாதீர்கள்.

உங்களுடைய கணவன் ஏழையாகவோ அல்லது சாதாரண வேலையிலோ இருந்தால் அதற்காக வாழ்க்கையை வெறுத்துவிடாதீர்கள்.

ஏழைகள், உடல் ஆரோக்கியம் இல்லாதவர்கள், ஊனமுற்றோர்கள் போன்ற நம் நிலைக்கு கீழாக உள்ளவர்களைப் பார்த்தேனும் இறைவன் நம்மை இந்த நிலைக்கு என்றாலும் உயர்த்தி வைத்திருப்பதை நினைத்துச் சந்தோஷப்படுங்கள்.

தன்னம்பிக்கையும் மற்றும் கணவருக்கு நீங்கள் அளிக்கும் ஊக்கமும்தான் உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

அவசியம் இல்லாத பொருள்களை வாங்கித் தரும்படி கேட்டு கணவனை நச்சரிக்காதீர்கள். செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்வின் உங்கள் சொத்துக்களாகும். அவற்றைப் பேணி நல்லமுறையில் வளர்த்தெடுக்க உங்கள் முழு முயற்சிகளையும் முன்னெடுங்கள்.

உங்கள் கணவர் உங்களுக்குச் செய்யும் உதவிகளுக்கு உடனுக்குடன் நன்றி செலுத்தும்போது உங்கள் கணவரை மேலும் உதவி செய்பவராகவும் உங்களைப் பலவழிகளிலும் சந்தோஷப்படுத்துபவராவார். கணவர் தவறு செய்திருந்தால் அதனை நல்ல சூழ்நிலை பார்த்து சொல்ல முயற்சி செய்யுங்கள். அல்லது அவருடைய கோபம் குறையும் வரை அமைதியாகக் காத்திருந்து சாந்தமான முறையில் அவருடன் பேச்சு நடத்துங்கள்.

வெளி விஷயத்தின் காரணமாக கோபம் இருந்தால், கோபம் குறையும் வரை காத்திருந்து அவரை சமாதானப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

அவருடைய பிரச்சினைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு அந்தக் கோபமான நிலையிலேயே பல கேள்விகளை எழுப்பி தொந்தரவு செய்யாதீர்கள்.

குடும்பத்தின் ரகசியங்களை மற்றவரிடம் சொல்லாதீர்கள். முக்கியமாக தாம்பத்தியம் மற்றும் உங்கள் கணவர் மற்றவரிடம் சொல்ல விரும் பாத விஷயங்களை வெளியே கூறாதீர்கள்.

கணவனுடைய பணத்தையும் சொத்துக்களையும் பாதுகாத்து வையுங்கள். கணவனுடைய அனுமதியின்றி வீட்டைவிட்டு வெளியேறாதீர்கள். உங்கள் கணவருக்குப் பிடிக்காதவர்களை வீட்டிற்குள் வர அனுமதிக்காதீர்கள்.

கணவர் வீட்டில் இருக்கும் நேரத்திலும், இல்லாத நேரத்திலும் அவருடைய பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் நல்லபடியாக நடந்து கொள்ளுங்கள்.

கஷ்டங்களை எதிர்கொள்ளும்போது பொறுமையுடன் இருங்கள். வாழ்க்கையில் இழப்புகள், சோதனைகள்,ஏற்படும்போதும் இறைவனின் வேண்டிக்கொள்ளுங்கள்.

உங்களிடம் உங்கள் கணவர் மோசமாக நடந்து கொண்டால் கூட அவரிடம் நீங்கள் நல்ல முறையாக நடந்து பாடம் புகட்டுங்கள். உங்களுடைய அன்புக் கணவருக்கு ஒத்தாசையாக இருந்து அவரை ஊக்கப்படுத்தி, அவருக்குத் தேவையான நல்ல கருத்துகளைச் சொல்லி அவரின் துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். வீட்டை சுத்தமாகவும், அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்துக் கொள்ளுங்கள். பொழுது போகாத நேரங்களில் வீட்டுப்பொருள்களை சீர்படுத்தி வையுங்கள், உங்கள் கைகளால் தயாரித்த அலங்காரப் பொருள்களைக் கொண்டு வீட்டை அழகுபடுத்துங்கள். ஒரு பெண் தன் கணவனது திருப்தியைப் பெற்ற நிலையில் மரணித்துவிட்டால் அவள் சொர்க்கத்தில் நுழைவாள். தீர்க்க சுமங்கலியாவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்த போராட்டமே வெற்றிக்கு வழிவகுக்கும்

சங்கர்



நாட்டில் நொந்து நூலகிக்கொண்டிருக்கும் உழைக்கும் அப்பாவிப் பொது மக்கள் மீளுவதற்கான ஒரேயொரு மார்க்கமாகப் போராட்டமே எஞ்சிக் கிடக்கிறது.

முதலாளித்துவப் போக்குடைய மஹிந்த ஜனாதிபதி தலைமையிலான இனவாத அரசுக்கு எதிராகவே மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தருணமாகவே இது உள்ளது.

எரிபொருள் விலையேற்றம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஊதிய உயர்வின்மை, உற்பத்தித் துறைகளில் ஈடுபடப் பல்வேறு கட்டுப்பாடுகள், உற்பத்திக்குரிய ஊதியம் கிடைக்காமை போன்ற வாறான அரசின் போக்கால் அப்பாவி உழைக்கும் மக்கள் போராட வேண்டிய தேவை எழுந்துள்ளது. தொழிற்சங்கங்கள், கட்சிகள் சில போராட்டத்தைத் தொடங்கியும் உள்ளனர்.

தனியார் சிற்றூர்திச் சங்கம், மீனவர் சங்கம், தாதிமார் சங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் சிற்றூர்திச் சங்கங்கள் அண்மையில் இனபேதமின்றி நாடு முழுவதும் பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டிருந்தன.

ஊதிய உயர்வு கோரியும் எரிபொருள் விலையுயர்வை எதிர்த்தும் இவ்வாறு பலமுறை போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதைவிட இனரீதியாகப் பிளவுபட்ட நிலையிலும் மக்கள் போராட்டங்கள் பல இடம் பெற்றுள்ளன.

தனியார் துறை ஓய்வூதியச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களது போராட்டம், மரக்கறிகளுக்கான பிளாஸ்ரிக் கூடைத் திட்டத்துக்கான போராட்டம், தொம்பே பொலிஸ் நிலையம் மீதான பொது மக்களது தாக்குதல் போராட்டம் எனப் பெரும்பான்மை இன மக்களின் போராட்டங்கள் அண்மையில் நடந்தேறியிருக்கின்றன. அவர்களது போராட்டங்கள் சில வெற்றியும் கண்டுள்ளன.

இதேபோலவே கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களை விடுதலை செய்யவும் ஊடக சுதந்திரம் மீதான அடக்குமுறையை எதிர்த்தும் தமிழர்கள் பகுதியில் போராட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டன.

தூரநோக்கற்ற அரசின் ஏதேச்சதிகாரப் போக்கின் காரணமாக தொடர்ந்தும் உழைக்கும் மக்களின் நலன் புறந்தள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தொழிற்சங்கப் போராட்டங்கள் ஒன்றிணைந்த நிலையில் இன, மத பேதமின்றி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

'உழைக்கும் மக்கள்' என்ற புள்ளியில் இன, மத பேதமின்றி மக்கள் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுத்தால் உரிய இலக்கை எட்டமுடியும். ஆனால் இந்த நிலைமை முற்றுமுழுதாக ஏற்படவில்லை. குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டும் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

மக்கள் எழுச்சி கொண்ட போராட்டங்களின் முடிவுகள் வெற்றியில் நிறைவடையும் என்பதற்கான எடுத்துக்காட்டுக்கள் வரலாற்றில் நடந்தேறியுள்ளன.

முதலாளித்துவ சார்பு நிலையுடைய அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். அவ்வாறான மக்கள் எழுச்சிகளே அரசை ஆட்டம் காணச் செய்யும். அதன் மூலமே உழைக்கும் மக்கள் தமது உரிமைகளைப் பெற முடியும். ✦

---

# நாடகத்துறையில் நாடறிந்த பெருங்கலைஞர் பல்துறை வல்லர் எஸ்.ரி.அரசு

31

ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் சாதனை படைத்த கலைஞர்கள் பலராக இருப்பினும் இந்தத் துறையினது வளர்ச்சியின் தொடக்க காலம் முதல் இன்று வரை தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவோர் அரிதாகவே காணப்படுகின்றனர். இவர்களுள் நாடக ஆசிரியராகவும் நெறியாளராகவும் நாடக, திரைப்பட நடிகராகவும் எழுத்தாளராகவும் ஒப்பனையாளராகவும் சிறப்புறப் பணியாற்றியதில் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலான பட்டறிவு கொண்ட முதுகலைஞராகவும் பழகுவதற்கினிய நல் மனிதராகவும் விளங்கி வருபவர் அரசையா என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டு வரும் நாடகச்செல்வன் எஸ்.ரி.அரசு.

மறைந்த சிவக்கொழுந்து சுந்தரம்மா தம்பதியரின் மகனாக 28.04.1926இல் முத்திரைச்சந்தி, நல்லூரில் இவர் பிறந்தார். நல்லூர் சாதனா பாடசாலை, பரியோவான் கல்லூரி, முத்துத்தம்பி மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கற்ற இவர் சிறுவயதில் இருந்து மருத்துவம், சிற்பம், நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு வந்தார். சிற்பத்துறையில் அதிகமான நாட்டம் கொண்ட இவர் தனது பதினாறாவது வயதில் தமிழ்நாட்டின் மதுரைக்குச் சென்று சிற்ப மேதைகளிடம் இக்கலையைக் கற்றுவந்தார்.

இவ்வாறு தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த காலத்தில் இந்திய இராணுவத்தில் இணைந்து கொண்ட இவர் நான்கு ஆண்டுகள் பணியாற்றி இரண்டாவது உலக மகா யுத்தத்திலும் பங்குகொண்ட பின் ஈழத்துக்கு வந்து தனது கலைப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டு வந்தார். நுண் கலைகளில் ஈடுபாடும் திறனும் கொண்டிருந்த இவர் புகைப்படத்துறையையும் கற்றுக்கொண்ட பின் யாழ்.செல்வம்ஸ் ஸ்ரூடியோவில் படப்பிடிப்பாளராகவும் பணியாற்றத் தொடங்கினார்.

நாடகத்துறையில் அதிகமான விருப்பம் கொண்டிருந்த இவர் வி.சி.பரமானந்தத்தின் நெறியாள்கையில் 1948இல் மேடையேற்றப்பட்ட தூக்குமேடை என்னும் நாடகத்தில் கதாநாயகனாகத் தோன்றி முதல் முதலாக அரங்கேற்றம் கண்டு அனைவரது பாராட்டுக்களையும் தனதாக்கிக்கொண்டார். இவ்வாறு பரமானந்தத்தின் நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்று வந்த இவர் கலையரசு சொர்ணலிங்கத்தால் பாராட்டப்பட்டதுடன் அவரது நெறியாள்கையில் உருவான தேரோட்டி மகன் முதலான பல நாடகங்களில் நடித்தும் வந்தார்.

ஏராளமான நாடகங்களில் நடித்துப் பெரும் புகழ் பெற்றிருந்த இவர் அக்காலத்தில் நாடக ஆர்வலர்கள் பலரால் தொடங்கப்பட்ட வண்ணை.கலைவாணர் நாடக மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் அம்மன்றத்தின் நாடக நெறியாளராகவும் பணியாற்றி வந்தார். இவரால் நெறியாள்கை செய்யப்பட்டு இம்மன்றத்தால் மேடையேற்றப்பட்ட வீரமைந்தன், சரியா தப்பா, திப்பு சுல்த்தான், கானல் வரி, அன்னையின் ஆணை போன்ற நாடகங்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் மக்களின் பெரு வரவேற்பைப் பெற்றன. இவ்வாறு சிறந்த பல நாடக ஆற்றுகைகளை அளித்து வந்த இவர் 1978இல் தொடங்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியின் நாடகப் பயிற்சிகளையும் பெற்றுத் தன்னை மேலும் வளப்படுத்திக் கொண்டார்.

ஈழத்தின் சினிமாத் துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட டாக்சி டிரைவர், குத்து விளக்கு போன்ற படங்களில் நடித்ததுடன் கடமையின் எல்லை என்னும் படத் தயாரிப்பில் உதவி நெறியாளராகவும் பணியாற்றியுள்ளார். மரபுவழி, சமூக, வரலாற்று, நவீன, நடன நாடக அரங்குகள் பற்றிய நீண்ட காலப் பட்டறிவு கொண்ட இவரது நெறியாள்கையில் வையத்துள் தெய்வம், பாஞ்சாலி சபதம், நல்லை நகர் நாவலர், கவரி வீசிய காவலன், இறுதிப் பரிசு, தமிழன் கதை போன்ற பல நாடகங்கள் சிறப்புற மேடையேற்றம் கண்டன.

நாடகத்துறைக்குத் தேவையான அனைத்துத் திறன்களும் கொண்டிருந்த இவர் 1968இல் கலாவிநோதன் கணபதிப் பிள்ளை சின்னமணியால் தொடங்கப்பட்ட வில்லிசைக் [illegible] ராகப் பன்னிர[illegible] பணியாற்றியவர். புராண, இதிகாசக் கதைகள் அனைத்தையும் பார்வையாளர் முன் காட்சிப் படிமங்களாகத் தோன்றச் செய்த இந்தக் குழுவின் வில்லிசை நிகழ்வானது ஈழத்தின் பட்டி தொட்டியெங்கும் இன்று வரை அழியாப் புகழோடு ஒலித்துக் கொண்டிருக்கின்றமை யாவரும் அறிந்ததே. இந்தக் குழுவினரால் 1977இல் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நிகழ்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான வில்லிசை நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு சிறப்பித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவர் மத்தியில் நாடக அறிவையும் நடிப்பாற்றலையும் வளர்ச்சியுறச் செய்த இவர் யாழ்.இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி போன்ற இடங்களில்

## சாதனைக் கலைஞரைச்
### சந்திப்போம் சிந்திப்போம்

தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் நாடகங்களை நெறியாள்கை செய்து நாடகப் போட்டிகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி, தேசியமட்டத்தில் முதலிடம் பெற்றுக்கொள்ளவும் வழி சமைத்த பெருமைக்குரியவர்.

நாடகம் என்பது வரையப்பட்ட சிறந்த ஓவியம் போல் மேடையில் காட்சிதர வேண்டும். ஒவ்வொரு நடிகனின் சிறு அசைவும் கலை அம்சத்துடன் மிளிர வேண்டும். ஒரு நடிகன் நடிக்கும் போது. மற்ற நடிகனும் அந்த நடிகனின் உணர்வின் பால் ஆட்பட வேண்டும். அவரது வசனம் முடிந்த பின்னர் தானே எனது வசனம் வரும் எனும் காத்திருப்புடன் சிலை போல நின்று விட்டால் நாடகம் உயிரற்றுப் [illegible] எனவே தொடர்ச்சியான, [illegible]களின் ஊடாகவே ஒரு நெறியாளரால் சிறந்த நாடகத்தை மேடையேற்ற முடியும். அத்துடன் ஒலி, ஒளி, ஒப்பனை, மேடையமைப்பு போன்றனவும் நாடக ஆற்றுகையின் கனதியைத் தீர்மானித்து விடுவதால் இவை பற்றிய அறிவு கொண்டவராகவும் நெறியாளர் இருக்கவேண்டும்.



நவீன வசதிகள் அற்ற அக்காலத்தில் கடினமான மனித உழைப்பின் பயனால் எத்தனையோ நாடகங்களைச் சிறப்பான முறையில் நாங்கள் மேடையேற்றினோம். உள்ளங்கையினுள் உலகம் உருளுகின்ற இக்காலத்தில் ஒலி, ஒளி, இசை, மேடையமைப்பு என்பன இலகுவான செயற்பாடுகள் ஆகிவிட்டன என்றாலும் நாடக மேடையேற்றங்கள் குறைந்து வருகின்றமை கவலை தருவதாக இருக்கின்றது என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார்.

வசாவிளான் தவமைந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 202



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. குழந்தைப் பேறு
4. எந்நேரமும்
6.மேரு
7.காவலாக பாதுகாப்பாக அமைவது
8.பெண்கள்
10.விலாசமான
11.மிடி
13.விளையா நிலம்
14.சம்மதச் சொல்
15.இதுவே இன்ப ஊற்று
16.இது ஓயாது
17. முகத்தில் வரும்
18. இசையுடன் தொடர்புடையது
20. பல்லக்கு
21.பறப்பது

### மேலிருந்து கீழ்

1. திறன்மிக்க செயற்பாடு
2.சாமர்த்தியசாலி
3.ஒன்றை சிக்க வைக்க விரிப்பது
4.தஞ்சம்
5.சிவநடனம்
7. மனம்/ வீடு
9. நில்
10. ஆட்சியில் இருப்பது
12. ஓர் இந்திய மாநிலம்
14.உற்பத்தி பெரியளவில் இடம்பெறும் மையம்
15.மலையிலிருந்து கொட்டுவது
16.அன்னை
17. இது வரப்பத்தும் பறந்திடும்
19. இத்தாலியின் தலைநகரம்

✱ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 200 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) ஒபாமா (4) சந்நிதி (7) சாவித்திரி (9) கசை (10) மாத்தறை (11) கன (12) தளை (13) வரம்பு (15) நில் (16) உளம் (17) கடம் (18) ஏர் (19) மகுடம் (21) மாந்த (22) திரு (23) புணர்தல்

**மேலிருந்து கீழ்**

(1) ஒசாமா (2) பாவித்தல் (3) மாத்தளை (4) சரி (5) நகனம் (6) திசை (8) திறை (11) கரம் (13) வளம் (14) புலர்தல் (15) நிம்மதி (16) உடம்பு (17) கட (18) ஏந்த (20)குரு (21)மார்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 202**
***நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,***
***இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,***
***யாழ்ப்பாணம்.***

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 29.02.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.202 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.03.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 200 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**திருமதி அ.திலகவதி,**
சன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி.

**2 ஆம் பரிசு**
**செல்வி நா.அம்சாயினி,**
மே/பா நா.நாகபாலன்,இல. 178, காந்திநகர், திருகோணமலை

**3 ஆம் பரிசு**
**திருமதி அ.குருநாதன்,**
இல.290, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**கா.வேலுப்பிள்ளை,**
இல.459/1 ஹொறவபொத்தன வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**
**யோ.பாஸ்கரன் சித்தார்த்தர்,**
வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை.

**பாராட்டுப் பெறுவோர்**

**து.காண்டீபன்,**
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

**டில்சான்,**
இல. 51/5, A1/1, கவுடானா வீதி,
தெஹிவளை

**த.பரமேஸ்வரன்,**
கந்தையா ஆசிரியர் வீதி, கந்தரோடை,
சுன்னாகம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# பாரி ....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*"அற்றைத் திங்கள்*
*அவ்வெண்ணிலவின்*
***எந்தையும் உடையேம், எம் குன்றும்***
*பிறர் கொளார்*
***இற்றைத்திங்கள்***
***இவ்வெண்ணிலவின்***
***வென்றெறி முரசின் வேந்தர் எம்***
***குன்றும் கொண்டார், யாம்***
***எந்தையும் இலமே"***

என்று அவர்கள் இரங்கிக் குமுறும் மொழிகள் எம் உள்ளத்தையும் தொட்டு நிற்கிறது அல்லவா?

நாட்டையிழந்து, தந்தையை இழந்து தனித்து விடப்பட்ட அம் மகளிருக்குக் கபிலர் தஞ்சமாக இருந்துள்ளார். பாரி வள்ளலுடன் தோழமை கொண்டவரான கபிலர், அம் மகளிர் மணப்பருவம் அடைந்ததும், வேறொரு குறுநில மன்னனிடம் அழைத்துச் சென்று அவர்களை மணஞ்செய்து கொள்ளுமாறு கேட்ட பொழுது, அவன் மறுத்துவிட்டான். அதனால் மனஞ் சோர்ந்த கபிலர் இன்னொரு அரசனிடம் கூட்டிச் சென்று கேட்ட பொழுது, வறுமையுற்ற இப் பெண்களை மணம் புரிய இயலாது என்று கூறிவிட்டான்.

*"அற்ற குளத்தில் அறு நீர்ப் பறவை போல்*
*உற்றுழித் தீர்வார் உறவல்லர்...."*

என்பதை அறியாதவரல்லர் கபிலர். தம்முடன் தோழமை கொண்டிருந்த பாரி வள்ளலின் மக்கள் இருவரையும் வறுமை நிலை உணராதபடி பேணிக் காத்து வந்தார் அந்தப் புலனழுக்கற்ற புலவர் பெருமான் கபிலர் என்பது வரலாறு.

*"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு*
*என்னாற்றுங் கொல்லோ உயிர்க்கு*
*[குறள்-211]*

தமக்கு நீர் உதவுகின்ற மேகங்களுக்கு உலகம் கைமாறு செய்கிறது? அந்த மாரி போன்று பாரி வள்ளலும் கைம்மாறு கருதாமல் வழங்கிப் புகழ் பெற்றுள்ளான் என்பதை அறிவோமாக.

மேலும்,

*"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்*
*பொன்றாது நிற்பது ஒன்று இல்"*
*[குறள்-233]*

என்னும் வள்ளுவர் வாய் மொழியின் படி, நிலையில்லாத இவ்வுலகில் இறவாது நிற்கக் கூடியது உயர்ந்த புகழே அன்றி வேறு இல்லை என்பது நாம் அறிந்து கொள்வோம்.

இவ்வாறு, இலக்கியங்களிலே நாம் அறியும் புகழ் பெற்ற மாந்தர் எல்லாம் விதியின் வழியில் ஏராளமான துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதையும் நாம் உணரவேண்டும்.

அந்தவகையில் பாரி வள்ளலும் மகளிரும் விதிவிலக்கானவர்கள் அல்லர். மாநிலத்தில் விதியை வென்ற மனிதர் யாரும் இல்லையே!

# அழை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகுதி காசு 20 ரூபாவை தரல்லா பாருங்கோ ரீச்சர்; எவ்வளவு கள்ளக்குணம். இப்படியான ஆக்களை வீட்டுக்கு வர விடக்கூடாது. "மனதில் ஏதோ தோன்ற ஒரு கணம் பொறிதட்டிய உணர்வு " பரிமளா உங்களுடைய பிள்ளையள் மிக்சர் வாங்கும் போது வேறு ஆட்களும் அந்தப் பொடியனிடம் மிக்சர், வடை வாங்கினார்களா? பதற்றத்துடன் கேட்டேன் " ஓம் ரீச்சர் எங்கண்ட மச்சாளின்ர பிள்ளைகள். பாமாவின்ர பிள்ளையள் எல்லோரும் வாங்கினவை ஏன் கேக்கிறியள்?"

" சும்மாதான் கேட்டனான் எங்கள் வீட்டில காசை கவனமாகக் கணக்குப் பார்த்துத்தான் தந்தான். அந்தப் பையன் நல்ல பிள்ளை. சரியான கஷ்டம் " பரிமளாவுடன் பேச மனமில்லாது வீட்டிற்கு வருகின்றேன். வீட்டில் என் கணவரிடம் நடந்த சம்பவத்தைக் கூறுகின்றேன்.

" உந்தப் பிள்ளைகள் எல்லாம் சேர்ந்து அந்தச் சின்னப்பையனிடம் கச்சான் வாங்கியிருக்கும். கணக்கில் ஏதோ பிழை நடந்திருக்கும்.பாவம் அந்தச் சின்னப் பையன். எவ்வளவு நேர்மையான பையன் என்பது எங்களுக்கு தெரியும்" அவரது குரலிலும் அந்தச் சிறுவனுக்காக பச்சாதாபப்படும் உணர்வு.

எனக்கு நெஞ்சில் ஊசியால் குத்துவது போன்ற உணர்வு. பரிமளா அந்த ஏழைச் சிறுவனை கள்ளன் என்று கூறிய வார்த்தைகள் என் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தன. தன் குடும்பச் சுமையைச் சுமக்கும் அந்தச் சிறுவன் .... நாங்கள் கொடுத்த பணத்தை கைநீட்டி வாங்க மறுத்த நேர்மை... அவனா இந்த அற்ப பணத்திற்கு ஆசைப்பட்டிருப்பான் நம்ப மறுத்த மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

சுமார் ஆறு மணியிருக்கும் பரிமளாவின் வீட்டு வாசலில் அம்மா ..... என்ற குரல் நிசப்தமான அந்த நேரத்தில் என் காதுகளை நம்ப முடியவில்லை. அந்த சிறுவனாக இருப்பானோ என் கணவரிடம் ஒன்றும் கூறாது பதற்றத்துடன் எங்கள் வாசலுக்கு விரைகின்றேன். எங்கள் வீட்டிற்கு மிக அண்மையில் பரிமளா வீடு இருப்பதால் அவர்களது வீட்டில் மெதுவாகக் கதைப்பது கூடக் கேட்கும். நான் எங்கள் கேற்றைத்திறந்து வெளியே வரவும் பரிமளாவும் வாசலுக்கு வருவது தெரிகின்றது.

என்ன ஆச்சரியம் அந்தச் சிறுவன் மிகவும் களைப்படைந்த நிலையில் மயங்கி விழும் நிலையில் அங்கே நின்று கொண்டிருந்தான். பரிமளாவைக் கண்டதும் " அம்மா உங்கள் பிள்ளைகள் கடலைச்சுருள் வாங்கிப் போட்டு 50 ரூபா தந்தவை 30 ரூபாவுக்கு வாங்கினவை; மிகுதி 20 ரூபா நான் குடுக்க வேண்டும். அதற்கிடையில் மற்றச் சின்னப் பிள்ளைகளும் கச்சான், மிக்சர் வாங்கினதாலை கணக்குப் பிழைச்சுப்போச்சு இப்ப காசு 20 ரூபா கூட இருக்கு.

உங்களின்ர பிள்ளையளுக்குத் தான் மிச்சக்காசு குடுக்காத நினைவு வந்தது. அது தான் வந்தனான், இந்தாங்கோ 20 ரூபா ..... கொஞ்சம் தண்ணியும் தாறீங்களே அம்மா தலை சுத்துது. காசை கை நீட்டி வாங்கிய பரிமளாவின் முகம் என்னைப் பார்த்ததும் பேயறைந்தது போல் மாறிவிட்டது.

சுயபச்சாதாபத்தில் பரிமளா "வருந்துவது எனக்குப் புரிந்தது......" தம்பி நில்லுங்கோ ஓடி வாறன்... பரபரப்பாக உள்ளே சென்ற பரிமளா கையில் தண்ணீருடன் ஓடி வந்து சிறுவனிடம் தண்ணீரைக் கொடுப்பதையும் சிறுவன் என்னைப் பார்த்து முறுவலித்துவிட்டு "போட்டுவாறன் அம்மா, வீட்டில் என்னை எல்லோரும் பார்த்துக் கொண்டிருப்பினம். அம்மா சாப்பிடாமல் பார்த்துக் கொண்டிருப்பா...." வேகமாக தேய்ந்த அந்தச் செருப்புகளுடனும், அந்த வெளிறிய தொப்பியுடனும் செல்லும் அந்த இளம் குருத்தைப் பார்த்த வண்ணம் நெஞ்சம் கணக்க மனம் நெகிழ்ந்து பார்த்த வண்ணம் நான் எனது வாசலிலும், பரிமளா தன் வீட்டு வாசலிலும் நிற்கின்றோம். எனது மனதில் அந்தச் சிறுவன் மீது பரிதாபம் தோன்றினாலும் அவனைப் பற்றி பரிமளா கொண்ட சந்தேகம் நீங்கியது நிம்மதியாக இருந்தது. அந்தச் சிறுவன் எங்கள் இருவரின் நெஞ்சிலும் இமயமாக உயர்ந்தது மட்டும் உண்மை என்பதை புரிந்து கொண்டு எனது கணவரிடம் விடயத்தைக் கூற விரைகின்றேன். மனம் லேசாகிவிட்ட உணர்வுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடரும் தீவிரவாதம்

> இன்று உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் தீவிரவாதிகளின் தாக்குதல் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த இயலாத கையறு நிலையிலேயே அதிகாரத் தரப்பினர் தடுமாற நேர்ந்துள்ளது

■ யமுனா

இன்று 'தீவிரவாதம்' என்ற சொல் உலகளாவிய ரீதியில் ஒரு பேசுபொருளாக அமைந்து விட்டது. அந்த அளவுக்கு இன்றைய காலகட்டத்தில் தீவிரவாதத் தரப்புக்களின் வெறித்தனமான செயற்பாடுகளும் அடாவடித்தனமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

அல்குவைதா என்பது உலகையே உலுப்பிய மிக முக்கியமான தீவிரவாத அமைப்பு என்பது தெரிந்தவொன்றே. அந்த அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன். அமெரிக்காவின் பென்டஜன் வர்த்தக மையம் மீதான தாக்குதல் எவராலும் இலகுவில் மறந்து விட முடியாதது. இந்தத் தாக்குதலை நடத்தியதும் ஒஸாமா பின்லேடனின் தலைமையிலான 'அல்குவைதா' தீவிரவாத அமைப்புத்தான். அன்று முதல் அமெரிக்காவால் சல்லடை போட்டுத் தேடப்பட்டு வந்த ஒசாமா பின்லேடன் பின்னர் அமெரிக்கா விசேஷ படையணி மூலம் கொல்லப்பட்டார்.

'அல்குவைதா'வின் இமயம் எனக் கருதப்பட்ட ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டுவிட்டாலும் அதன் ஏனைய பரிவாரங்கள் தமது அமைப்பைத் தொடர்ந்தும் விஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், வேறு பல தீவிரவாத அமைப்புகளும் உலகில் கிளை பரப்பி விருட்சமாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இந்தியாவிலும் அண்மைக் காலமாக பல்வேறு தீவிரவாத அமைப்புகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசியல் முக்கியஸ்தர்களைக் குறிவைத்து பல்வேறு குண்டுத் தாக்குதல்களை அவை மேற்கொண்டு வருகின்றன.

இந்தியாவில் இடம்பெற்ற முக்கியமான தாக்குதல் சம்பவங்களில் மும்பை தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் இலகுவாக எல்லோராலும் மறந்து விட முடியாத ஒன்று. இந்தத் தாக்குதலில் பெரும்தொகையான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட சம்பவம் இன்னமும் இந்திய மக்கள் மனதில் தீராத ரணங்களாகப் பதிந்துள்ளது.

இவை மட்டுமன்றி ரயில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் மற்றும் . இந்தியத் தலைநகர் புதுடில்லி உச்ச நீதிமன்ற நுழைவாயிலில் கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவை தீவிரவாதிகளின் கைவரிசைகள் என்றபோதிலும், ஒரு சில தாக்குதல் சம்பவங்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட சில தீவிரவாத அமைப்புகள் உரிமை கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் மிக அண்மையில், கடந்த 13 ஆம் திகதி இந்திய ஆட்சித் தலைமைகளையே ஆட்டம் காண வைத்த குண்டு வெடிப்புச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

புது டில்லியிலுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் அலுவலகத்துக்கு அருகில், இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதரக அதிகாரியின் கார், குண்டு வெடிப்புத் தாக்குதல் ஒன்றுக்கு இலக்காகியது. இந்தியாவிலுள்ள இஸ்ரேல் தலைவரின் மனைவி உட்பட 4 பேர் குறிப்பிட்ட சம்பவத்தில் காயமடைந்திருந்தனர். எனினும் இந்தச் சம்பவத்துக்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் இதுவரை உரிமை கோர வில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறிப்பிட்ட அந்த காரில் வெடிகுண்டைப் பொருத்திய தீவிரவாதிகள் யார் என்று கண்டுபிடிக்க இயலாது திணறிக் கொண்டிருக்கிறது இந்திய பொலிஸ் துறை. விசாரணைகள் பல கோணங்களில் முடுக்கிவிடப்பட்டன முதல்கட்ட விசாரணைகளின் முடிவுகளின் அடிப்படையில், குறிப்பிட்ட அந்த காரில் நவீன ரக காந்தக் குண்டொன்று பொருத்தப்பட்டதாகவும் அது கையடக்க அளவில் சிறிதாக இருந்ததால் மோட்டார் சைக்கிளில் வந்த இரு தீவிரவாதிகள் அந்த வெடி குண்டை காரின் வெளிப்புறத்தில் எண்ணெய்த் தாங்கிக்கு அருகில் ஒட்ட வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

இந்தப் புதிய வகை தாக்குதல் சம்பவத்தையடுத்து, வழமையாக இடம்பெறுவது போல இந்தியாவிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்குமான பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வளவுதான் முற்பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டாலும், தீவிரவாதிகளும் புதுசு புதுசாகத் தமது கைவரிசையைக் காட்டத் தவறுவதில்லை என்பதுதான் உண்மை.

இது ஒரு புறமிருக்க, இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு ஈரான்தான் காரணம் என்று இஸ்ரேலியப் பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார். இது குறித்து டில்லியிலுள்ள ஈரானியத் தூதர் மேரி நபிஜடே கருத்துத் தெரிவிக்கையில்:

இஸ்ரேலியப் பிரதமரின் இந்த குற்றச்சாட்டை நாம் ஏற்றுக் கொள்ளவும் இல்லை; மறுத்தலிக்கவும் இல்லை. சம்பவம் குறித்து டில்லி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணையின் மூலம் உண்மை தெரியவரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, டில்லியில் இடம் பெற்ற குறிப்பிட்ட கார்க் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்த அதேநேரம் ஐரோப்பாவின் ஜார்ஜியாவில் உள்ள பிபிளிசி என்ற இடத்திலும் இஸ்ரேல் தூதரகம் அருகே குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேலுக்கு எதிராகவே இந்தக் குண்டு வெடிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இந்திய உளவுப் பிரிவினருக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, குறிப்பிட்ட குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:

குறிப்பிட்ட தாக்குதல் இந்தியாவிலுள்ள இஸ்ரேலியத் தூதரின் மனைவியை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இறுதிக்கட்ட விசாரணை அறிக்கைதான் முழுமையான பதிலைக் கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு ஐ.நா.சபையும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இந்த தாக்குதல் சம்பவத்துக்கு தீவிரவாதிகள்தான் காரணம் என்றும், எனவே உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட்டுத் தீவிரவாதத்தை வேரறுக்கச் செயற்பட வேண்டும் என்றும் ஐ.நா.சபை தெரிவித்துள்ளது. என்னதான் இருந்தபோதிலும் இன்று உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் தீவிரவாதிகளின் தாக்குதல் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த இயலாத கையறுநிலையிலேயே அதிகாரத் தரப்பினர் தடுமாற நேர்ந்துள்ளது என்பதே இன்றைய கசப்பான யதார்த்த உண்மையாகும். ✱

# சீனாவுக்கு உதவுமா இந்தியா?

■ ராஜராஜன்

திபெத் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதில் தாம் உதவத் தயாரென இந்தியா சீனாவிடம் கூறியிருப்பது நகைப்புக்குரியது.

சீனாவுக்குச் சென்றபோது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இந்த உதவும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்தபோது அரசியல் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதற்கு இலங்கை அரசு தயாராக இருப்பதாகத் கூறியவரும் இதேகிருஷ்ணா தான். இந்து மகா சமுத்திரத்தை தாண்டும் முன்னர் அவர் இந்த விடயத்தையே மாற்றி விட்டிருப்பார்.

ஈழத் தமிழர்களை ஏமாற்றுவதென்பது இந்தியர்களுக்குப் புதியதொன்றல்ல வாடிக்கையான ஒரு விடயம்தான். 1983 இற்குப் பின்னர் ஈழத் தமிழர் விவகாரத்தில் மூக்கை நுழைக்கத் தொடங்கிய இந்தியா இதுவரை அதனை வெளியே எடுக்கவில்லை.

இலங்கையின் இனப் பிரச்சினையை இடியப்பச்சிக்கலாக்கி அதில் குளிர் காய்ந்து வருகின்றது இந்தியா. ஈழத் தமிழர்களுக்கெதிரான போக்கு அன்னை இந்திராவின் மறைவுக்குப் பின்னர் ராஜீவ் காந்தியின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுக் கடந்த போரின்போது உச்சக்கட்டத்தை எட்டியது.

தன்னையொரு அகிம்சாவாதியாக வெளியுலகருக்குக் காட்டிக் கொண்டு ஈழத்தமிழர்களைப் பிணக்குவியலாக்கிய இலங்கையரசின் சகல நடவடிக்கைகளுக்கும் பின்னால் இந்தியாவின் குருதி தோய்ந்த கரங்கள் செயற்பட்டதை ஈழத்தமிழர்கள் தமது இறுதி மூச்சுள்ளவரை எத்தனை யுகங்கள் கழிந்தாலும் மறந்துவிடமாட்டார்கள். இந்த நிலையில் நீண்ட காலமாகச் சீனாவை உறுத்திக் கொண்டிருக்கும் திபெத் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு தான் உதவ விருப்பதாக இந்தியா கூறியிருக்கின்றது.

இத்தனைக்கும் இவ்விரு நாடுகளுக்கிடையேயான எல்லைப் பிரச்சினை கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. 1962 ஆம் ஆண்டு இடம்பெற்ற சீன – இந்தியப் போரின்போது சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட பெரியதொரு நிலப்பரப்பு இன்னமும் அப்படியேதான் உள்ளது.

இதனை மீண்டும் மீட்டெடுப்பதற்குக் காத்திரமான நடவடிக்கை எதையும் இந்தியாவால் எடுக்க முடியவில்லை. சீனாவுக்கு எதிராக எதனையும் செய்வதற்கு இந்தியா துணியவில்லை என்பதையே இது காட்டுகின்றது. 1962 இல் சீனாவிடம் தான் வாங்கிய அடியை இந்தியா இன்னமும் மறக்கவில்லை.

அதேவேளை சீனா இன்று அசுர வேகத்தில் முன்னேறியுள்ளதுடன் அமெரிக்காவையே விஞ்சிவிடும் நிலையில் காணப்படுகின்றது. உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடாகச் சீனா விளங்கிய போதிலும் அந்த மக்கள் பலத்தைக் கொண்டே பொருளாதார ரீதியிலும், இராணுவப் பலத்திலும் மேலோங்கிய நிலையில் அது காணப்படுகின்றது. தன்னையொரு பெரிய நாடாக இந்தியா எண்ணுகின்ற போதிலும் சீனாவின் பார்வையில் சிறு துரும்பாகவே காட்சியளிக்கின்றது.

இந்த நிலையில் சீனாவின் உள் விவகாரங்களில் தான் உதவுவதாகக் கூறுகின்ற இந்தியாவின் கூற்று அதன் சரணாகதிப் போக்கையே வெளிப்படுத்துகின்றது.

அதுமட்டுமன்றி இலங்கையரசுக்குத் தான் உதவி செய்வதற்கான முக்கிய காரணமாக இலங்கையில் சீனாவின் ஊடுருவலை இந்தியா குறிப்பிடுகின்றது. ஆனால் சீனாவை விட உயர்ந்ததொரு நிலையில் இந்தியாவை இலங்கை ஒரு போதுமே கருதியதில்லை. இதை இந்தியா இன்னமும் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

கடந்த இறுதிப் போரின்போது கூட இந்தியா நினைத்திருந்தால் எத்தனையே ஈழத் தமிழர்களைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் தனது நெஞ்சத்தில் குடிகொண்டிருந்த வஞ்சத்தைத் தீர்ப்பதிலேயே அந்த நாடு குறியாக இருந்ததேயொழிய ஈழத்தமிழர்களைப் பற்றி எள்ளளவும் சிந்திக்கவில்லை.

ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரினால் யூத மக்கள் எந்த வகையில் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்களோ அதனை விடப் பல மடங்கு கொடுமைகளை ஈழத் தமிழர்கள் அனுபவித்துள்ளனர்.

உயிருடன் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டுப் பலர் மடிந்துள்ளனர். பெண்கள் என்று கூடப் பார்க்காமல் தமிழ்ப்பெண்கள் குரூரமாகக்கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவையெல்லாம் உரிய சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆனால் காந்தி பிறந்த தேசத்தை ஆள்பவர்கள் இதனை ஒரு பொருட்டாக எடுத்ததாகத் தெரியவில்லை. இன்னமும் இலங்கையரசைக் காப்பாற்றும் செயற்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் எந்த நாட்டின் ஊடுருவலைத் தடுப்பதற்காக இலங்கையரசுக்கு உதவுவதாக இந்தியா கூறுகின்றதோ அதே நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினையில் தான் உதவவிருப்பதாகத் தற்போது கூறுகின்றது.

இதெல்லாம் இந்தியாவின் முதுகெலும்பற்ற தன்மையையே துலாம் பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

இனியும் ஈழத் தமிழர்கள் இந்தியாவை நம்பியிருப்பதில் எவ்வித பயனும் விளையப் போவதில்லை. மத்தியின் ஆட்சி பீடத்தில் காங்கிரஸ் இருந்தாலென்ன, மாற்றுக் கட்சிகள் இருந்தாலென்ன நிலைமையில் எவ்வித மாற்றமும் நிகழப் போவதில்லை.

தமிழ் நாட்டின் ஆட்சிப் பீடத்தில் மாறி மாறி அமரும் கருணாநிதி மற்றும் ஜெயலலிதா போன்றவர்களே ஈழத் தமிழர்களை நட்டாற்றில் விடும்போது மத்தியில் ஆட்சி செய்பவர்களா உதவப் போகின்றனர்.

தனது சொந்தப் பிரச்சினைகளையே தீர்க்க வக்கில்லாத இந்திய அரசு சீனாவுக்கு உதவுவதாகக் கூறியதைச் சீனா அரசு ஒரு பொருட்டாகவே கொள்ளாது என்பதுதான் உண்மை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கு மூலதனம் முயற்சி

பிறேமினி

'முயற்சி' பற்றி எழுத வேண்டும் என எண்ணியவுடன் என் மனதில் முதலில் வந்து நின்றது இந்தக் குட்டிக் கதை தான்.

ஓர் அரசனுக்குத் திடீரென ஓர் எண்ணம் உருவாகின்றது. உடனே தன் கீழுள்ள மந்திரிமாரை அழைத்து அரச சபையைக் கூட்டுகின்றார். வந்திருக்கும் மந்திரிகளிடையே ஒரே சலசலப்பு. எதற்காக அரசன் அவசர அவசரமாக மந்திரி சபையைக் கூட்டியிருக்கின்றார் என்பதுதான்.

அவர்களின் பரபரப்பை நீடிக்க விரும்பாத அரசன்.'உங்களுக்கு நான் ஒரு பலப்பரீட்சை வைக்கப் போகிறேன். அதில் வெற்றி பெறுபவன் தான் என்னுடைய மதி ஆலோசகராக இருக்க முடியும்' என்கிறார். பரீட்சை இதுதான் 'இந்த அரண்மனைக் கதவை யார் தனி ஒருவனாகச் சென்று திறக்கிறார்களோ இனி அவர்தான் என்னுடைய மதி ஆலோசகர். சரி ஒவ்வொருவராக வந்து முயன்று பாருங்கள் என்கிறார்.

எல்லா மந்திரிமாரும் வாயடைத்துப் போய் நின்றார்கள். ஏனெனில் அந்தக் கதவைத் திறக்கக் குறைந்தது ஒரு பத்துப் பேராவது தேவை. எப்படித் தனியே திறக்க முடியும்? எல்லோரும் மெல்ல மெல்ல பின்வாங்கினார்கள்.

ஒருவர் கூட முயற்சி செய்து பார்க்கவில்லை. அரசனுக்கு மந்திரிமார் மீது கடுங் கோபம் வந்தது. உடனே வெளியே நின்ற காவலாளர்களை அழைத்தார். அவர்களிடமும் தனது கருத்தை முன்வைத்தார். காவலாளர்களும் பயந்து ஒதுங்கினார்கள். மந்திரிமாரே செய்ய முடியாததைத் தம்மால் எப்படிச் செய்ய முடியும் என்ற எண்ணம் அவர்களுக்கு. ஆனால் ஒரு காவலாளி கதவை நோக்கிச் சென்றான். கதவைத் தள்ளினான் அது திறந்து கொண்டது. உண்மையிலேயே அந்தக் கதவு திறந்தே இருந்தது. ஆனால் ஒருவர் கூட முயற்சி செய்யாமல் கதவைத் திறக்க முடியாது என்று தமக்குள்ளே தீர்மானத்தை எடுத்துக் கொண்டு ஒதுங்கிக் கொள்ள அந்த ஒரு காவலாளி மட்டுமே முயன்று அரசனின் மதி ஆலோசகராக வருகின்றான்.

இந்தக் கதை சொல்லும் பாடம் என்ன? எதுவாக இருந்தாலும் முயற்சி செய்ய வேண்டும். முயற்சி இருந்தால் தான் வாழ்க்கையில் முன்னேறலாம். 'முடியாது', 'இயலாது' என்ற எண்ணங்கள் எம்மைக் கீழ் நிலைக்குக் கொண்டு போய்விடும்.

உழைப்பும் விடாமுயற்சியும் உடைய ஒருவன் தன் வாழ்நாளில் தோல்விகளைச் சந்தித்ததாகச் சரித்திரமே கிடையாது. உலகில் மனிதர்கள் மாத்திரமன்றி அனைத்து உயிரினங்களுமே தம் வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கு ஏதோ ஒரு வகையில் முயற்சியைச் செய்து கொண்டுதானிருக்கின்றன.

மிகவும் சிறிய எறும்பு, தேனீ போன்றவற்றின் சுறுசுறுப்பையும் முயற்சியையும் நாம் உற்று நோக்கத் தவறக்கூடாது.

'முடியும் என்பவன் வழியைத் தேடுகிறான். முடியாது என்பவன் காரணத்தைத் தேடுகிறான்' என்பது ஓர் அரிய கருத்து.

எந்தவொரு காரியமாக இருந் தாலும் என்னால் 'முடியும்' என்று நினைப்ப வன் - அந்தக் காரியத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதற்கான வழிகளைத் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பான். ஆனால் 'முடியாது' என்று இருப்பவனோ அதற்குரிய முயற்சி எதையுமே செய்ய மாட்டான். ஆனால் அதற்காக ஒவ்வொரு காரணங்களையும் சாட்டுக்களையும் சொல்லிக் கொண்டிருப்பான்.

'நாளை பரீட்சைக்குப் படிக்க வேண்டும்' என்று சொன்னால் - பசிநோக்காது, கண்துஞ்சாது, விழித்திருந்து கருமமே கண்ணாக முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்பவன் உயர்ந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வான். அதைவிடுத்து முயற்சி எதுவுமே செய்யாமல் வீண் பொழுது போக்கியவர்கள் தலையிடி, காய்ச்சல் என்றும், வீட்டில் வேலை என்றும் ஏதேதோ காரணங்களைக் கண்டுபிடிப்பார்கள். இதனால் எந்தவொரு பயனும் இல்லை.

வள்ளுவப் பெருந்தகையும், 'தனது குடியை உயரச் செய்து முன்னேற்ற வேண்டும் என்று எண்ணுபன் சோம்பி இருக்க மாட்டான் எனக் கூறுகின்றார்.

*'குடி செய்தார்க்கு இல்லைப் பருவம்*
*மடி செய்து மானங் கருதக் கெடும்'*

என்பது குறள். அன்றாடம் உழைக்கும் விவசாயி பருவங்களைக் கவனத்தில் கொள்ளாமல் விடாமுயற்சியுடன் முயல்வான்.

ஆனால், சோம்பியிருந்து கொண்டு முயற்சியில்லாமல் இருப்பவன் மழைக் காலம், வெயில் காலம், பனிக்காலம் என்று ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிக் கொண்டு முயற்சி இன்றி கீழ் நிலைக்குச் சென்று விடுவான்.

உலகை வென்ற வெற்றியாளர்கள் அனைவருமே முயற்சியால் முன்னுக்கு வந்தவர்கள்தான். தோமஸ் அல்வா எடிசன் பல நூற்றுக் கணக்கான தடவைகள் முயற்சி செய்து கண்டுபிடித்தது தான் 'மின்குமிழ்'. அன்று அவர் தனது முயற்சியைக் கைவிட்டிருந்தால் உலகமே இருளில் மூழ்கியிருந்திருக்கும்.

தமிழரின் தொன்மைக்கும், பெருமைக்கும் சான்று பகரும் சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு - 'தமக்கென வாழாமல் - பிறர்க்கென விடாமுயற்சியோடு முயலுகின்ற சான்றோர்களால் தான் இந்தவுலகம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது' என்று கூறுகின்றது.

இன்றைய நவீன உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள், அவசர யுகத்திலும் பதற்றத்திலும் பம்பரமாகச் சுழன்று கொண்டிருக்கிறார்கள். நிற்க நேரமில்லை, நடக்க நேரமில்லை, நிம்மதியாய் இருந்து சாப்பிட நேரமில்லை, உறங்க நேரமில்லை. எல்லாமே துரிதகதியில் விரைந்து நடைபெற வேண்டுமென எண்ணுகிறார்கள்.

நாமும் எந்தவொரு விடயமாக இருந்தாலும் 'முயற்சி' என்ற மூலதனத்தை முதலீடு செய்தால் தான் 'வெற்றி' என்ற பலனை அடைய முடியும். பாடசாலைகளில் சில மாணவர்கள் முயற்சி எதுவுமின்றி பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவிடத் துடிக்கிறார்கள்.

செயற்பாடுகள் எதுவுமின்றி பெரிய பதவிகளைப் பெற்று விட வேண்டும் என்று பேராசைப் படுகிறார்கள். முயற்சி என்ற ஒன்று கையில் இல்லை என்றால் இது சாத்தியமாகுமா...? 'முயன்றால் முடியாதது எதுவுமில்லை' என்பதை இவர்கள் எப்போது உணரப் போகிறார்கள்...? ★

# கல்விக்கு வேலி!

சோபனா

> வடமாகாணத்தில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்க முடியாமல் மூடப்பட்டு விட்டன. இன்னும் எத்தனை மூடப்படப் போகின்றனவோ.

"இளமையில் கல்வி சிலை யில் எழுத்து" என்பது போல், கல்வி மனிதனுக்கு எந்தளவுக்குத் தேவை? அதன் பலாபலன் என்ன என்பது தொடர்பாக கற்றுத் தேர்ந்தவர்களும் இளமைக் காலத்தில் அதனைப் பெற முடியாதவர்களும் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள்.

சிறந்ததொரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்குதவற்கு அடிப்படையாகஇந்தக் கல்வி ஊன்றுகோலாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது. ஏழை, பணக்காரன் என்னும் வேறுபாடின்றி அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகத்தான் எமது மூதாதையர்களும் கல்விப் புலமை வாதிகளும் ஓர் கல்விச் சாலையை எமக்காகப் பெற்றுத் தந்தார்கள்.

இந்தக் கல்விச்சாலைகள் அனைத்தும் "பாடசாலை" என்னும் ஒருமித்த இடமாக கிராமம், நகரம் என விரிவடையத் தொடங்கியது. எனினும் அந்தக் காலத்தில் கல்வியை ஏழை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது "பணம்" என்னும் அரக்கன் ஆட்டிப் படைத்ததால் வறுமை காரணமாகப் பிள்ளைகள் வீடுகளில் முடக்கப்பட்டார்கள்.

இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் அனைவருக்கும் கல்வி என்னும் ஒளி கிடைக்க வேண்டும் என்னும் சிந்தனையுடனும் பாடசாலைகளில் "இலவசக் கல்வித் திட்டம்" கொண்டுவரப்பட்டது. அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் ஏழை மாணவர்களுக்குப் பெரும் பயனைப் பெற்றுத் தந்தது.

அத்துடன் யாழ்.மாவட்டத்துக்கு இந்தத் திட்டம் ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது. தமக்குள் திறன்கள் இருந்தும் அதனை வெளிக்கொணர முடியாமல் வீடுகளில் முடக்கப்பட்ட மாணவர்கள் இலவச கல்வித் திட்டத்தால் சிறந்த கல்விப் புலமை வாதிகளாக உருவாக்கப் பெற்றனர். இது யாழ். மாவட்டத்தின் கல்விச் செயற்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் ஒரு படிக்கல்லாக அமைந்தது.

ஆனால், இந்த உயர்ந்த நிலை இன்று யாழ்.மாவட்டத்தில் எந்தளவுக்குப் பாதுகாக்கப் படுகின்றது என்பது ஓர் கேள்விக்குறியான விடயமே? மாணவர்களின் கல்வி இன்று ஓர் வியாபாரமாக மாறிவிட்டதால்தான் இந்த நிலை.

இதனால் மாணவர்களின் கற்றல் திறன்கள் மழுங்கடிக்கப்பட்டு, சீரற்ற ஒரு சமுதாயம் உருவாகுவதற்கு அரசு வழிசமைத்துக் கொடுத்துள்ளது.

போரின் பாதிப்புக்கள் ஒருபுறம் இடைவிடாத, விட்டுவிலகாத துன்பமாக இருந்தாலும், மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான வளங்கள் சரியான முறையில் பெற்றுக் கொடுக்கப்படாததே பிரதான காரணமாக உள்ளது.

மாணவர்கள் கற்றலில் ஆர்வமுடையவர்களாக இருந்தாலும், தமக்குத் தேவையான கற்றலைப் பெற முடியாத நிலையில் புத்தகப்பை சுமந்து செல்லும் இன்னொரு மாணவனைப் பார்த்துப் பெருமூச்சு விடத்தான் அவர்களால் முடியும்.

மாணவர்களின் இந்த நிலைக்குக் காரணம் தான் என்ன? வடமாகாணத்தில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்க முடியா மல் மூடப்பட்டுவிட்டன. இன்னும் எத்தனை மூடப்படப் போகின்றனவோ.

கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் எமக்காகத் தேடித் தந்த முன்னோர்கள் சொத்துக்கள் இன்று பயனற்றுப் போய்விட்டன.

மாணவர்கள் தமக்குத் தேவையான கல்வியை உளமாறப் பெற்றுக் கொள்வதற்குப் பாடசாலைகளில் சிறந்த வளங்கள் கிடைக்கப் பெறுவது முக்கியமான ஒன்றாகக் காணப் படுகிறது.

இன்று நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் குறித்த பாடசாலைகளின் சூழலைச் சேர்ந்த மாணவர்கள் எங்கோ சென்று தமது கல்வியைத் தொடர்வது. ஊருக்குள் பாடசாலை இருக்கும் போது அதைத் தாண்டி இன்னொரு இடத்துப் பாடசாலைக்கு அண்டை வீட்டார் போல் சென்று கல்வியைத் தொடர வேண்டியநிலை.

போரின் பின்னர் பெரிய அபிவிருத்திப் பணிகள் அரசால் பகட்டுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறந்த சமுதாயத்தின் அடித்தளமான பாடசாலைகளை மூடிவைத்துக் கொண்டு சமுதாயத்தை சீரற்ற பாதைக்குச் செல்வதற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது அரசு.

வெளிநாடுகள் கூட மெச்சுமளவுக்குச் சிறந்த கல்விப் புலமை வாதிகளைக் கொண்ட யாழ்.மாவட்டத்தில், 495பாடசாலைகள் உள்ள நிலையிலும், 430 பாடசாலைகள் மட்டுமே தற்போது சேவையை வழங்குகின்றன. மீதி 65 பாடசாலைகளின் கதி என்ன?

குறித்த பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால்தான் கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு அதிக கட்டணம் செலுத்திக் கற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதனைவிட போக்குவரத்து இடையூறுகளால் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலக வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைவிட கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பிந்திய காலப் பகுதியில் 107 பாடசாலைகள் உள்ள நிலையிலும் 97 பாடசாலைகளே இயங்குகின்றன. ஏனைய 10 பாடசாலைகளும் கால்நடைகளின் உறைவிடமாக மாறிவிட்டன.

மாணவர்களின் கற்றலுக்கு உறைவிடமாக இருக்க வேண்டிய பாடசாலைகள் இன்று கால்நடைகளுக்கு உறைவிடம். இதனைவிட ஏனைய முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் 26 பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

அபிவிருத்திகளைப் பலமாக நடத்துவதாகக் கூறும் அரசு இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கே மீளவும் புதிய கட்டடங்களை அமைத்து மெருகூட்டிக் கொண்டிருக்கிறது. மூடியிருக்கும் பாடசாலைகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

இந்த நிலையில் பாடசாலைகளின் வளங்களுக்குத் தகுந்தால் போல் மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்க முடியாமல் மேலதிக மாணவர்களின் கற்றல்களை அடிப்படையாக வைத்து அனுமதிகள் வழங்க வேண்டிய நிலைக்குச் சில பாடசாலைகள் தள்ளப்பட்டுள்ளன.

இதனால் கிராமப் புறப்பாடசாலை மாணவர்கள் ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் மட்டுமே தமது கல்வியைத் தொடர வேண்டியுள்ளது.

போக்குவரத்தில் இவர்களின் கல்விக்கான நேரம் அரைவாசி போய்விடும். தமது கல்விப் புலமைகளை மழுங்கடிக்கச் செய்து விட்டு இளமையில் பெற வேண்டிய கல்வியைத் தொலைத்துவிடுகிறார்கள். இது இவ்வாறு இருக்க அதிக மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாட வேண்டியும் உள்ளது.

ஆக மொத்தம் கல்வி இப்போது வியாபாரமாகிப் போய்விட்டது. ஏழை, பணக்காரன் வேறுபாடின்றி அனைவரும் "பணம்" இருந்தால் தான் படிக்க முடியும் என்னும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்குத் தீர்வு கிடைக்க வேண்டுமெனில் மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீள இயங்க ஆரம்பிக்க வேண்டும்.

கிராமப் புறப் பாடசாலைகளில் பாடசாலைக்குச் செல்ல முடியாத மாணவர்கள், இடை விலகி இருக்கும் மாணவர்கள் தமது ஊருக்குள் ஓர் பாடசாலை இருக்கும் போது, ஆர்வத்துடன் கற்றலைத் தொடர நினைப்பார்கள். இவர்களது கல்விக்கு ஒளி கிடைக்குமா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசுப் பயணத்தில் அசௌகரியம்

கறுப்பி

வீதியில் சென்றுகொண்டிருந்த போது சடார் என்று ஒரு பெரிய சத்தம். திரும்பிப் பார்த்தேன். ஐந்து அல்லது ஆறு வயது மதிக்கத்தக்க பாடசாலைச் சிறுவன் ஒருவன், ஓட்டோ ஒன்றிலிருந்து தூக்கி வீசப்பட்டு வீதியில் உருண்டு சென்றான். ஒரு கணம் திடுக்கிட்டுப் போனேன். வீதியில் சென்றுகொண்டிருந்தவர்கள் சிறுவனைச் சூழ்ந்துகொண்டனர். சம்பவ இடத்துக்கு நானும் சென்று என்ன நடந்தது என்று விசாரித்தேன்.

எதிர் எதிரே வந்த ஓட்டோக்கள் இரண்டும் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் ஒன்றுடன் ஒன்று மோதியதால் ஏற்பட்ட நிலைதான் இது.

2010ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 17 ஆயிரம் ஓட்டோக்களும் தற் போது யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்து 659 ஓட்டோக்களும் பாவனையில் உள்ளன என யாழ். மாவட்டப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்.மாவட்டத்தில்தான் அதிகமான ஓட்டோக்கள் பாவனையில் உள்ளன எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டது.

பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப, மக்களின் தேவைகளும் அதிகரித்துச் செல்கின்றன. நெருக்கமான சூழ்நிலையை மக்கள் நாடுவது இல்லை. போக்குவரத்தைக் கூட பேருந்துகளிலோ சிற்றூர்திகளிலோ மேற்கொள்வதைத் தவிர்த்து வருகின்றனர். ஓட்டோவைத்தான் நாடுகின்றனர். ஒவ்வொரு மக்களும் ஓட்டோ செலுத்துவோரை நம்பித்தான் பயணத்தை மேற்கொள்கின்றனர். நம்பிக்கையை நிறைவேற்றுவது சாரதிகளின் பொறுப்பாகவும் உள்ளது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஓட்டோக்களில்தான் அனுப்பிவிடுகின்றனர். பாடசாலைச் சேவைக்காக ஓடும் ஓட்டோக்கள் அளவுக்கு அதிகமான பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு வருகின்றன. அதற்குள் பிள்ளைகள் ஒவ்வொன்றும், ஒன்றை ஒன்று முட்டி மோதிக் கொண்டும் சண்டை பிடித்துக்கொண்டும் விளையாடிக் கொண்டும் இருக்கும்.

சாரதியோ அதை எல்லாம் கவனியாது தன் வேலையை மட்டுமே பார்த்துக்கொண்டிருப்பார். பாடசாலையிலிருந்து ஏற்றி வீடு கொண்டு சேர்க்கும்வரையில், பிள்ளைகளின் உயிருக்கு உத்தரவாதம் சாரதிதான். அதற்காகவேதான் பெற்றோர் தமது பிள்ளைகளை ஓட்டோவில் சொகுசாக அனுப்ப வேண்டும் என்று எண்ணுகின்றனர்.



ஓட்டோவில் ஏறினால் போதும், ஏனைய வாகனங்களை முந்தியடித்துக் கொண்டு ஓடுவதுதான் ஓட்டோ சாரதியின் சாதனை.

இதனால் பொதுமக்களுக்கு எவ்வளவு அசௌகரியங்கள் என்றெல்லாம் நினைப்பது கிடையாது. யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது, சில பிரதான வீதிகள் காப்பெற் வீதிகளாக இருந்தாலும் ஏனைய வீதிகள் பல்லாங்குழி விளையாடும் வீதிகள்தான். வீதிகளின் நிலை ஒருபுறம் இருக்க, சாரதிகளின் பயணமும் அவ்வாறேதான். இதுமட்டுமன்றி ஓட்டோ சாரதிகள் நடத்து கொள்ளும் விதம், வீதியால் செல்லும் பெண்களுடன் சேஷ்டை விடுதல் என்பன குறைந்தபாடாக இல்லை. இதை யாரும் கேட்கச் சென்றால், ஓட்டோ என்னுடையதல்ல என நழுவி விடுவார்கள். ஓட்டோ சாரதிகளை இனங்காண்பது என்பதே கடினமாக உள்ளது. வயோதிபரோ நோயாளி ஒருவரோ சிறுதூரம் நடந்து செல்ல முடியாத நிலையில், ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தினால் தூரத்துக்கு மேலாகப் பணத்தை கொள்ளையிட்டு விடுவார்கள்.

இனி, எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டவும் தயங்கமாட்டார்கள். வீதிகளில் இளம்பெண்களைக் கண்டால் போதும், 'ஸ்ரைல்' என்ற பெயரில் ஓட்டோவை வாகனங்களுக்கு இடையில் எல்லாம் செலுத்தி ஓடினால் சாதனை படைத்த தான நினைப்பு அவர்களுக்கு.

பயணிகளின் நலனைக் கருத்தில் கொள்ளாத சாரதிகள் இவர்கள்தான் என்ற நிலை வருகிறது. பயணிகளை ஏற்றிக்கொண்டு தாறுமாறாக ஓடுவது அதிக இரைச்சலுடன் பாட்டு ஒலிக்கவிட்டு, தாளம் தட்டிக்கொண்டு ஓடுவதும் இன்பமானதே. பின்னால் உள்ள பயணிகளின் நிலைபற்றிச் சிந்திப்பதே இல்லை. நோயாளியா, வயோதிபரா என்பது எல்லாம் அவர்களது கணக்கில் இல்லை. இவர்கள் பொலிஸாருக்கும் டிமிக்கி கொடுத்து விட்டுச் செல்கிறார்கள் என்றால் பாருங்களேன்.

இன்றும் எத்தனையோ ஓட்டோ சாரதிகள் சாரதி அனுமதிப்பத்திரங்களோ, காப்புறுதிப் பத்திரங்களோ இல்லாதுதான் வீதிகளில் வலம்வந்து கொண்டிருக்கின்றனர். இவர்களை அடையாளம் காண்பது எவ்வாறு? ஆள் அடையாள அட்டை போதுமா?

யாழ். மாவட்ட ஓட்டோவை இனங்காண்பதற்கு இலகுவான வழிகளைச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் சாரதிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் பட்டசத்தில் அதனைக் கடமை நேரங்களில் பயணிகளுக்குத் தெரியும் விதத்தில் வைத்திருக்க வேண்டும். சாரதிகளுக்கான தனியான உடையை நடைமுறைப்படுத்த வேண்டும். இதுமட்டு மன்றி, கட்டணங்களும் நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

பொதுமக்களுடைய தேவைகளை, குறைகளைக் கேட்டு அறிவதற்கு சங்கங்கள் முன்னின்று செயற்பட வேண்டும். இது காலத்தின் அவசிய தேவையாகும். ★

# மண்ணாக்கப்படும் உள்நாட்டு வளங்கள்

பாண்டியம்மா

வாழ்க்கைச் செலவின்உயர்ச்சி வறிய மக்களின் வாழ்க்கையை எந்தளவுக்குப் பாதிப்படையச் செய்துள்ளதோ, அந்தளவுக்கு அவர்களின் தொழில் வாய்ப்புகளையும் பறித்தெடுத்து பரிதாபகரமான ஓர் நிலைக்கு அவர்களைத் தள்ளிவிட்டுள்ளது.

" பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்" என்பார்கள் இந்த நிலைதான் இன்று வறிய மக்களின் வாழ்வாதரத்திலும் தொடர்கிறது.

அன்றாட சீவியத்துக்காக, இயற்கை வளங்களைத் தானமாக நினைக்கும் கூலித் தொழிலாளர்கள் இன்று கிடைக்கும் விளை பொருள்களைச் சீரான முறையில் சந்தைப் படுத்த முடியாமலும் விற்பனை செய்ய முடியாமலும் இருப்பது இன்னொரு புறம்.

யாழ்ப்பாணத்து வளங்களில் பிரதானமானது பனை வளம். தனது பலன்களை இனாமாக அதிகம் கொடுக்கும் காலம் இது என்பதால், இதனை சந்தைப்படுத்த முடியாமலும் சேமித்து வைக்க முடியாமலும் பெரும் நஷ்டத்தை மட்டும் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலைக்கு பனைசார் தொழிலாளர்கள் உள்ளனர்.

எனினும், தமது வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்ற இத்தகைய தருணங்களைச் சந்தர்ப்பமாக நினைத்த தொழிலாளர்களுக்கு இது ஒரு ஏமாற்றம் மட்டுமே. தற்போது 'பனங் கள்' காலமாகையால் தொழிலாளர்கள் பெரியதொரு எதிர்பார்ப்பில் தொழிலில் இறங்குகின்றனர்.

ஆனால் '' சாண் ஏற முழம் சறுக்கும்'' என்பதுபோல் உயிரைப் பணயம் வைத்து வான் உச்சி மரங்களில் இருந்து பெற்றுக் கொண்ட கள்ளை, சங்கங்களில் கொடுத்து விற்பனை செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.

குறிப்பாக தீவகப்பகுதி, வன்னிப்பகுதி சீவல் தொழிலாளர்களுக்கு இந்த ஏமாற்றம் கிடைத்துள்ளது. சேகரித்துக் கொண்ட பனங்கள்ளை நிலத்துக்குச் சமர்ப்பணம் செய்ய வேண்டிய நிலை எனத் தொழிலாளர் கவலையுடன் தெரிவிக்கின்றனர். இது எதனால் ஏற்பட்டது. பனங்கள்ளைப் பெற்றுக் கொள்ளச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்?

அதிக பனங்கள் உற்பத்தி செய்யும் காலம் இது என்பதால் அதனை சேமித்து வைப்பதற்கான வளங்களை சங்கங்கள் பெற்றுக் கொள்ளாமல் இருந்து விட்டு மூன்று தொழிலாளர்களின் வயிற்றில் அடிப்பது ஏன்? இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? பனை வளத்தின் பலன்களைத் திட்டமிட்ட முறையில் சந்தைப்படுத்துவதற்குத் தேவையான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது சங்கங்களில் பொறுப்பல்லவா?

யாழ். மாவட்டத்தில் கள்ளடைப்புத் தொழிற்சாலைகள் பல இருந்தன. இந்தத் தொழிற்சாலைகள் இன்று இருந்த இடமே தெரியாமல் மறைக்கப்பட்டு விட்டன.

இந்தத் தொழிற்சாலைகள் மீள இயங்கும் போது கிடைக்கும் பனங்கள்ளை வெளிநாடுகளுக்கோ, ஏனைய மாவட்டங்களுக்கோ சந்தைப்படுத்துவதன் மூலம் அதிகளவு இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வெளிநாடுகளில் இருந்து மதுசாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கும் மதுப் பிரியர்கள், நோய் வாய்ப்படுவது மட்டுமல்லாது தமது பணத்தையும் வீணாகச் செலவு செய்கிறார்கள்.

இதனை விட எமது பிரதேசத்தில் இயற்கையாக எந்த விதக் கலப்படங்களும் அற்ற முறையில் கிடைக்கும் பனங்கள்ளைக் கொள்வனவு செய்வதற்கு கள்ளுத் தவறணைகள் நடவடிக்கைகள் எடுக்குமா?

சமூக சீரழிவுகள், மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளால் இன்று எத்தனையோ தவறணைகள் மூடப்பட்டு விட்டன. ஆனால் நவீன முறையில் அமைக்கப்பட்ட மதுபான நிலையங்கள் இன்று எத்தனை புதிது புதிதாகத் திறக்கப்படுகின்றன.

இதற்கெல்லாம் அனுமதி கொடுக்கும் குறித்த அமைச்சுகள் ஏன் எமது உள்நாட்டு உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

சீவல் தொழிலாளர்கள் கள்ளை வீடுகளில் வைத்து விற்க முடியாது என்பது பொலிஸார் போட்ட சட்டம். இவர்களுக்குப் பயந்து சங்கங்கள் ஊடாகவாவது கள்ளை விற்பனை செய்வோம் எனச் செல்லும் தொழிலாளர்களுக்கு ஏமாற்றம்தான் மிச்சம். அன்றாடச் சீவியத்தை நாளாந்த வருமானத்தில் நடத்தும் தொழிலாளர்களுக்கு இது ஒரு பெரிய இழப்பே.

இது தொடர்பாகப் பனை அபிவிருத்திச் சபை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் சீவல் தொழிலாளர்கள் பலர் இன்று தமது தொழிலைக் கைவிட்ட நிலையில் உள்ளனர். எனினும் எமது வளங்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்குடன் தொடர்ந்து சீவல் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களை வெறுப்படையச் செய்யும் செயற்பாடாக இது அமைந்துள்ளது. சங்கங்கள் கள்ளைக் கொள்வனவு செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

வெளிநாட்டு உற்பத்திகளில் நாட்டம் கொண்டுள்ள கொள்வனவாளர்கள் உள்நாட்டு உற்ப்த்தியைப் பெற்றுக் கொள்வதற்கும் ஆர்வம் காட்ட வேண்டும். தொழிலாளர்களுக்குத் தேவையான சந்தை வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். இயற்கை அன்னை எமக்காக கொடுத்த பனை வளத்தின் உற்பத்திப் பொருள்களை தரமான வகையில் சந்தைப்ப்டுத்தி சிறந்த வருவாயை பெற்றுக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டெரிக்கும் வெயிலில் தண்ணீருமின்றி வாடினோம்

10

## உணர்வுகளை இறக்கி வைத்த நேரம்

- அருட்தந்தை
சூ.ம.ஜெயசீலன்

என்னக்கா தனிய இருக்கி நீங்க? என்றது பழக்கப்பட்ட குரலொன்று.

''ஆ... சசியக்கா என்று வந்த வார்த்தையை அடக்கிக் கொண்டு மெது வாக புன்னகைத்தேன். ஏனோ அவளை கண் டது கொஞ்சம் ஆறுதலாகத்தான் இருந்தது. அப்போது அவளை தங்களுடன் அழைத்துக் கொண்டு வந்தவர்கள் தேநீர் அருந்துவ தற்காக வரச்சொல்லி சைகை காட்டி அவளை அழைத்தனர்.

என்னுடன் நிற்கும்போது அழைத்ததால் அவள் என்னை விட்டுவிட்டுச் சென்று எப் படி தேநீர் பருகுவதென்று தடுமாறினாள். ஆயிரக் கணக்கான மக்களுக்கு மூன்று வேளை யும் கஞ்சிகாய்ச்சி ஊற்றியவள் சசியக்கா.

போரின் இறுதி நாள்களில் தொடர்ச்சி யாக கஞ்சிக் கொட்டிலை இயக்குவதற்காக அவள் எறிகணை மழைக்குள்ளும் படாத பாடுபட்டவள். நான்தான் அவளை வட்டு வாகலில் வைத்து போ போ என்று பலவந் தப்படுத்தி அனுப்பினேன். என் சொல்லை கேட்டுத்தான் உறவுகளைத் தேடிப்பிடித்து அவர்களுடன் வந்திருக்கிறாள்.

அவள் சேர்ந்து வந்தவர்களிடம் இருக் கும் கொஞ்சத் தண்ணீரையும் சீனி, தேயிலை யையும் தெரிந்துகொண்டு எனக்கும் தா என் சிநேகிதிக்கும் தா என்று அவளால் எப்படிக் கேட்க முடியும். ஆங்காங்கு நின்று அவதானிக்கும் படையினரும் காட்டிக் கொடுப்போரும் என்னை போராளி என்று இனங்கண்டுகொண்டு வந்துவிட்டால் அவர்களையும் அல்லவா விசாரிப்பார்கள்.

அந்தப் பயம் குடும்பமாக வந்துள்ளவர் களுக்கு எழுவதிலொன்றும் தவறில்லையே. என் கண் முன்னாலேயே பலர் படையின ரால் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டதை பார்த்துக்கொண்டு மக்கள் ஆதரிக்கவில்லை என்று குறைசொல்ல முடியாது. அவர்களுக்கு மனதிருந்தாலும் இட மில்லாத சூழல்தான் அது. சசியக்காவின் திண் டாட்டத்தை புரிந்துகொண்டு சொன்னேன்.

''பரவாயில்லையக்கா. நீங்க போய் குடியுங்க. சுடுதண்ணி இருக்குமெண்டால் என்னட்ட கோப்பியும் சீனியும் இருக்கு. அரை டம்ளர் எண்டாலும் தாங்க. நான் இதி லையே இருக்கிறன்'' - என்றேன். சசியக்கா சென்று அவர்களிடம் கேட்டுவிட்டு வந்து என்னிடமிருந்த சிறிய பொதி சீனியையும் கோப்பியையும் வாங்கிச் சென்றாள்.

அக்குடும்பத்தின் தாயார் கோப்பியை ஆற்றி சசியக்காவிடமே கொடுத்தனுப்பி னார். அமைதியாக இருந்து கோப்பியை அருந் தினேன். முதல்நாள் மதியம் அருந்திய தேநீ ருக்குப் பின்பு நான் குடித்த பானம் அதுதான்.

கோப்பி அருந்திய பின் தலைச்சுற்று குறைந்து விட்டது. கொஞ்சமாய் ஒரு உற்சாகமும் தெரிந்தது. அவ்விடத்திலேயே அமர்ந்திருந்தேன். கோப்பியை ஆற்றித்தந்த குடும்பமும் தலையாட்டிவிட்டு போய்விட் டது. பின்பு எழுந்தேன்.

யாராவது எங்களுடன் வா என்று அழைக் கக் கூடியவர்கள் இருக்கிறார்களா என்று நோட்டமிட்டேன். நன்றாகத் தெரிந்த ஆயிரம்பேர் இருந்தாலும் அவர்களில் எவரும் போராளிகளாய் இருந்தவர்களை தம்மோடு அழைத்துச்செல்ல துணிய வில்லை. அதை தவறு என்றும் சொல்ல முடி யாது. அறிந்தவர்கள் யாரும் அவர்களாய் தலை யசைத்தால் மட்டுமே நானும் தலைய சைத்தேன்.

திருவிழாவில் தொலைந்தபோன சிறுமியைப்போல அங்குமிங்கும் பார்த்த படி அல்லது யாரையோ தேடியபடி அசைந்து கொண்டிருந்தேன். யாரோ என் போராளிப் பெயரைச்சொல்லி சத்தமாக அழைத்தார் கள். அட இவ்வளவு அச்சமான நிலை யிலும் என்னை பெயர் சொல்லி அழைக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள்தான். குரல் வந்த திசையைப் பார்த்தேன். தெரிந்தவர் தான். தன் மனைவி பிள்ளைகளோடு இருந்தவர் தம் அருகில் வருமாறு கையை காட்டினார். சென்றேன்.

''இருங்களன் அக்கா'' என்றாள் அவனது துணைவி. அவளருகே அமர்ந்துகொண் டேன். அந்த குடும்பத்தை எனக்கு பல ஆண் டுகளாக தெரியும். என்னை கண்டவுடன் அவளது கண்கள் குப்பென கலங்கின. அவளை பார்க்க எனக்கும் அழுகை பொத்துக் கொண்டுதான் வந்தது. சற்று நேரத்தில் எங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டோம்.

பின்புதான் அவள் - தான் காயப்பட்டி ருக்கும் விடயத்தைச் சொன்னாள்.

எனக்கெல்லோ அக்கா காயம் என்றாள். அப்போதுதான் அவளின் தோற்றத்தை அவதானித்தேன். கையில்லாத சட்டையை அணிந்திருந்த அவளுக்கு காயம் எதி லென்று தெரியவில்லை. அவளது விலா வின் மேற்பகுதியில் சிறிய காயமிருந்தது. பஞ்சை வைத்து கையால் அதை அமர்த் திக்கொண்டே இருக்கவேண்டியிருந்தது. ஒட்டுவதற்கு எதுவும் இருக்கவில்லை.

ஒட்டிவிடக் கூடிய மாதிரி ஏதுமிருந்தால் தாங்களனக்கா என்று பரிதாபமாக கேட்டாள். என்னிடம் சிறிதளவு குளிசைகள் தவிர மருத்துவத்திற்கான வேறு எதுவும் இருக்கவில்லை. தொடர்ச்சியாக சரியான உணவில்லாத காரணத்தால் இரத்தச் சோகை யினால் பாதிக்கப்பட்டிருந்த எனக்கு மருத்து வத் தோழிகள் விட்டமின் குளிசைகளை தந்திருந்தார்கள்.

அவற்றை நான் என் பையிலேயேதான் வைத்திருந்தேன். நான் என்னிடமிருந்த சத்துக்குளிசைகளில் கொஞ்சம் கொடுத் தேன். அதை ஒவ்வொருநாளும் குடிக்கச் சொல்லி அக்கறையோடு கொடுத்தேன். அப்போது என்னால் செய்யக்கூடியதாய் இருந்தது அவ்வளவுதான்.

அவர்களுடைய மூத்த மகன் தண்ணீர் போத்தலுடன் வந்து சேர்ந்தான். பதினான்கு வயதுடைய அச்சிறுவன் என்னைப் பார்த்து புன்னகைத்தான்.

அம்மா அக்காவுக்கு குடிக்க குடுங்க என்றபடி தன் தாயாரிடம் தண்ணீரைக் கொடுத் தான். அவள் மூடியைத் திறந்து போத்திலை என்னிடம் நீட்டினாள். அவர்களது பேரன்பை அப்போது புரிந்து கொண்டேன். அவ்விடத்தில் யாரும் தண்ணீரையெல்லாம் அறிந்தவர் தெரிந்தவர்களுக்காக தியாகம் செய்ய விரும்ப மாட்டார்கள்.

தண்ணீருக்கு அப்போதே விலை ஏறிவிட்டிருந்தது. இயலக் கூடியவர்கள் எடுத்துவந்து அதை விற்றுப் பணமாக்கிக் கொண்டிருந்தார்கள். நான் தண்ணீரை வாங்கி கொஞ்சமாய் குடித்தேன். சற்று நேரத் தில் அவர்களும் புறப்பட்டு விட்டார்கள்.

உச்சி வெய்யில் மண்டையை பிளந்தது. கண்கள் தம்பாட்டில் சோர்ந்தன. அரை மயக்க நிலை என்னை கீழே சரித்தது. யாரோ கிழித்துப் போட்ட புகைப் படங்கள டங்கிய அல்பம் ஒன்றை நிலத்தில் விரித்து விட்டு கையில் தலையை வைத்துக்கொண்டு படுத்துவிட்டேன்.

நேரம் எப்படி கழிந்ததென்று புரியவில்லை. வெயில் கொஞ்சம் கொஞ்சமாய் என் சக்தியை உறிஞ்சிக் கொண்டிருந்ததை என்னால் உணரமுடிந்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் என்று தாகமாய் இருந்தது. ஆனால் என்னிடம் ஒருதுளி தண்ணீருமே இருக்கவில்லை. வயிறு புகைந்தது.

சொல்லி வைத்தாற்போல் அந்த வெட் டையில் இருந்த முக்கால்வாசிப்பேரும் அரை மயக்கத்தில்தான் கிடந்தார்கள். வரவர மக்கள் தொகை பெருகுவதை உணர முடிந்தது. என்னையும் நெருக்கிக்கொண்டு சிலர் என்னருகே சரிந்தார்கள். வானம் ஒருவித மங்கலாய் தெரிந்தது.

உண்மையிலேயே வானம் மங்கலாய்த்தான் இருந்ததா அல்லது என் உணர்வுக்கு அப்படித் தெரிந்ததா என்று புரியவில்லை. ஆனாலும்கூட வெம்மையை தாங்க முடியவில்லை. கண்களைத் திறந்து பார்ப்பதும் மூடிக்கொள்வதுமாக நீண்ட நேரத்தை போக்கினேன்.

என்னருகே அமர்ந்த காயப்பட்ட பையன் ஒருவனது தாயார் தண்ணீர் போத்திலொன்றுடன் வந்தார். தன் மகனுக்கு குடிக்க கொடுத்துவிட்டு என்னை போராளி என்று இனங்கண்டதால் எனக்கும்கூட ஒரு குவளை தண்ணீர் தந்தார். அந்தத் தாயாரில் ஏற்பட்ட நன்றியுணர்ச்சியை என்னால் வெளிக்காட்டத் தெரியவில்லை. உள்ளார்ந்த மகிழ்ச்சியோடு அதைப் பருகினேன். பின்பு என்னைப்பற்றி என் குடும்பம் பற்றி விசாரித்தாள். பதில் சொன்னேன்.

''எனக்கு உங்கட குடும்பத்தை தெரியு மடா? அம்மாக்கள் காயப்பட்டவையாமே உண்மையா?''

''ஓமம்மா. கப்பலால அனுப்பினதால பரவாயில்லாம போயிட்டாங்க'' என்றேன்.

''அதுதான் நல்லதடா. இப்படியொரு பய ணத்தை உங்கட அம்மாவால தாங்கியிருக் கவே முடியாது'' என்று சொல்லிக் கொண்டே கோல்மன்ஸ் பை ஒன்றை உடைத்து தண்ணீர் போத்திலுக்குள் கொட்டினார். அதற்குள் கொஞ்சம் சீனியையும் போட்டு விட்டு குலுக்கினார். குளிர்பானம் தயாராகி விட்டது. அதில் அருகிலிருந்த சிறுமிக்கும் குடிக்கக் கொடுத்தார். பின்பு போத்திலை தனது மகனருகில் வைத்துவிட்டு தாகமாய் இருக்கும்போது மட்டும் ஒவ்வொரு மிடறு குடிங்க ஐயா என்றார். மனசு கேட்கவில்லை போலும். குவளை ஒன்றில் முக்கால் வாசிக்கு ஊற்றி எனக்கும் தந்தார்.

தம்பிக்காக வையுங்க அம்மா. காயப் பட்டவன் பாவம் என்று அதை தியாகம் செய்யத்தான் விரும்பினேன். ஆனால் செய்யவில்லை. அதனை வாங்கி அவ் விடத்திலிருந்த சிறிய போத்திலொன்றில் ஊற்றி வைத்துக்கொண்டேன்.

நானும் தாகம் மேலிடும்போது அரை மிடறாவது குடிக்கலாம் அல்லவா? கண் களைத் திறந்து பார்க்கவே முடியாத வெய் யிலின் அகோரத்தில் நான் மயங்கித்தான் கிடந்தாலும் எவரும் உதவாமல் போகலாம் அல்லவா? அந்த பகல் என்னை வறுத்து எடுத்துவிடும் என்பதைப் புரிந்துகொண்டு அதை குடிக்காமல் வைத்திருந்தேன். அந்தத் தாய் அருகிலிருந்த சிறுமியைப் பற்றி சொல்லத் தொடங்கினார்.

''இந்த பிள்ளைக்கு அப்பா அம்மா இல்லையடா. ஷெல்லடியில செத்திட்டுது கள். ஊர் சனம், இந்தப் பிள்ளைய என்னை கூட்டிக்கொண்டு போகச்சொல்லி கெஞ்சின துகள். நான் எங்கட ஊரில மாதர் சங்கத் தலைவியாக இருந்தனானம்மா. அதுகளின்ர வேண்டுகோளை தவிர்க்க முடியேல்லை. அதோட இந்தப் பிள்ளையும் பாவம் தானேடா. இதுக்கு யார் இருக்கிறா? அழக் கூடத் தெரியாம அநாதையா நிக்கிது. வவுனியா வில இவட சொந்தக்காரர் இருக்கிறாங்க. கொண்டுபோய் அதுகளோட சேத்துவிட் டால் சரி. அதுகளும் அப்பா அம்மா இல்லாத இந்த பிள்ளைய ஏற்குதுகளோ மாட்டுதுகளோ யாருக்குத் தெரியும்'' என்று விட்டு கொஞ்சநேரம் அமைதியாக இருந்தார்.

என்ர மகனுக்கும் காயம். இஞ்ச பாரம்மா விலா பிளந்துகிடக்கு. நான் என்ர பிள்ளைய பாப்பனா இந்தப் பிள்ளையை பாப்பனா? யாரையம்மா நான் தூக்கிக் கொண்டு வாறது? என்னை ஒருதரும் கொடுமைக்காரி எண்டு சொல்லாதீங்க. இந்தப் பிள்ளை தன்ர பஞ்சுக் காலால நடையா நடந்துதானம்மா வந்தது. அதுக்கு வயிறு நிறைய சாப்பாடு போடாட்டிலும் அது என்ர பிழையில்லம்மா. உயிர் வாழ்றதுக்கு மட்டும்தான் தின்னக் குடுக்கி றன். என்னிட்ட என்னம்மா இருக்கு? என்ர மகனுக்கே குடுக்க காணாது. அதில கொஞ் சத்தை பிச்சுத்தான் இவவுக்கு குடுக்கிறன். ஏதோ என்னால முடிஞ்சது என்று பெரு மூச்சு விட்டார் அந்தத் தாயார்.

இப்படியொரு இக்கட்டான நேரத்தில் ஐந்து வயதுச் சிறுமியை பொறுப்பெடுத் திருப்பதே பெரிய விடயம். குழந்தையின் நிலைமையையும் தாயாரின் இல் லாமையையும் நினைத்து வேதனைப்பட மட்டுமே என்னாலும் முடிந்தது.

எங்கள் நாட்டில் அநாதைகளே இருக்கக் கூடாது என்பதற்காக எத்தனைவிதமான ஏற்பாடுகள் இருந்தன. எத்தனை இல்லங்களும் காப்பகங்களும் செயற்பட் டன. இதோ கண்முன்னாலேயே அநா தைகள் அதிகரித்துக்கொண்டு செல்கிறார் கள். நினைக்க நினைக்க வேதனையும் வெறுப்புமாக இருந்தது. என் கையறு நிலையை நான் வெறுத்தேன். மரணம் கூட தீண்டாத மனுசியாக இருக்கிறேனே என்று என்னை நானே நொந்துகொண்டேன்.

அம்மாச்சி இந்த பிள்ளையையும் பைகளையும் கொஞ்சநேரம் பாத்துக் கொள்ளம்மா. நான் தம்பிய கொண்டே பனையடியில இருத்திப்போட்டு வாறன் என்ற அந்த தாய் தன் மகனை தோளில் சாய்த்து தூக்கி நிறுத்தி அணைத்துப் பிடித்துக்கொண்டு மெதுவாக நடந்தாள்.

நான் அந்த சிறுமியை அவதானித்தேன். சூழ்நிலையின் தார்ப்பரியத்தை அறியாத வளாய் அந்தச் சிறுமி கள்ளங் கபடமற்று சிரித்தாள். நான்கு அல்லது ஐந்து வயதை தாண்டியிராத குழந்தை. பாவம் இந்த பிஞ்சுக் கால்களால் எவ்வளவு தூரம் நடந்திருக்கிறாள். எனது இதயம் இரும்பாய் கனத்தது. வேதனையுடன் பைமீது சாய்ந்து கொண்டேன். தாங்க மாட்டேன் என்று இதயம் விம்மிப் புடைத்தது. பற்களை கடித்துக்கொண்டு அழுகையை அடக்கி னேன்.

அன்ரி அன்ரி என்று அணுங்கலாய் அழைத்தது ஒரு மழலை குரல். என்ன என்று கேட்கக்கூட தெம்பற்றவளாய் மயங்கிக் கிடந்தேன் நான். மீண்டும் என்னை அழைத்தபடி தோளில் தட்டினாள் அந்த சிறுமி.

என்னம்மா? என்றேன் இரக்கத்துடன்.

''அன்ரி கொஞ்சம்போல இதில குடிக்கட்டா? பசிக்குது. சரியா பசிக்கிது என்றவள் நான் போத்திலில் வைத்திருந்த அந்த சிறிதளவு குடிபானத்தை தொட்டு காட்டினாள். நான் ம்... என்றதுதான் தாமதம் அவள் ஆவலோடு போத்திலை எடுத்து திறந்து இரண்டு மிடறு குடித்தாள். அதில் கொஞ்சத்தை மூடி எனக்காகவும் என்று வைத்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த என்னை நோக்கி பளீரென புன்னகைத்தாள்.

அந்தப் புன்னகையில் நன்றியும் மகிழ்ச்சியும் மட்டுமல்ல கொஞ்சமாய் வெட்கமும் தெரிந்தது. முன் பின் அறியாத வர்களிடத்தில் கேட்டுவாங்கி குடித்தேனே என்பதால் ஏற்பட்ட நாணம்தான் அது என்பதை புரிந்துகொண்டு மெதுவாய் அவள் கையில் தட்டிக்கொடுத்தேன்.

சற்று நேரத்தில் திரும்பிவந்த அந்த தாயார் மிகுதி பைகளையும் தூக்கிக் கொண்டு அந்தச் சிறுமியையும் விரல் பிடித்து அழைத்துச் சென்றார். செருப்புகளற்ற அந்தப் பிஞ்சுக் கால்கள் எட்டி நடை போட்டன. விரைவிலேயே அந்தக் கால்கள் சனத்திரளுக்குள் மறைந்து என் கண் களிலிருந்து காணாமல்போய்விட்டன. ஆனால் மனசுக்குள்... (சந்திப்போம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை நோக்கி திரும்பியுள்ள பல்குழல்கள்



அதிரன்

நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம் அரசுக்குப் பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதையாகிவிட்டது. அதன் சிபார்சுகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் அரசுக்கு வரத்தொடங்கி விட்டது. ஏற்கனவே போர்க்குற்ற விசாரணை விடயம் நிலுவையாக உள்ள நிலையில் இது புதிய தலையிடிதான்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை போர்க்குற்ற விவகாரத்தைச் சிறிதளவுகூட சாதகமான வகையில் அணுகவில்லை என மனிதஉரிமை அமைப்புக்கள் தொடக்கம் மேற்குலக நாடுகள் வரை உறுதியாகக்கூறி விட்டன. இதுவிடயத்தில் உள்நாட்டு முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டதால் சர்வதேசப் பொறிமுறை தேவை என்ற குரலும் சற்றுத் தீவிரமாக மேலெழும்ப ஆரம்பித்துள்ளன.

அமெரிக்கா இந்த விடயத்தில் உறுதியாக நிற்பதுதான் அரசிற்குப் புதிய தலையிடி. போர்க்குற்றப் பிரேரணைக்கு ஜெனீவா மாநாட்டில் ஆதரவு கொடுக்கப் போவதாக அமெரிக்கா எழுத்துமூலம் இலங்கைக்குத் தெரிவித்துவிட்டது. அதே வேளை இவ்விவகாரத்துடன் நல்லிணக்கம், வடமாகாணசபைத் தேர்தல் என்பவை பற்றி விவாதிக்க வெளிவிவகார அமைச்சரை வாஷிங்டனுக்கு வருமாறும் அமெரிக்கா அழைத்துள்ளது.

இந்த நிலையில் தெற்காசிய விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கின் அணுகுமுறைதான் அரசுக்குப் பெரிய நெருக்கடிகளைக் கொடுத்துள்ளது.

இம்முறை கொழும்பு வந்த அவர் அரசுக்கு நல்ல உச்சந்தலையடி கொடுத்து விட்டுத் திரும்பியதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. அதுவும் மஹிந்த ராஜபக்ஷ அரசில் அதிக செல்வாக்கைச் செலுத்தும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்குத்தான் பிளேக்கின் பயணம் பெரும் கசப்பாக அமைந்துவிட்டது. கோத்தபாயவை பிளேக் சந்தித்த போது இருவருக்கு இடையேயும் பெரும் வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றதாகவும் பிளேக் கடும் தொனியில் அவருடன் பேசியதாகவும் தெரியவருகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா மிகவும் தீவிரமாக உள்ளது. அதன் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே அதனை விரும்புகின்றது. போர்க்குற்ற விவகாரத்தில் சற்றுப் பின்னடிக்கின்ற நாடுகள் கூட அதற்கு ஆதரவு கொடுக்க முன் வந்துள்ளன. ஏதோ ஒரு வகையிலாவது சர்வதேசத்துக்கு இலங்கை பொறுப்புக்கூறக்கூடிய பொறிமுறை தேவை என்று அமெரிக்கா கருதுகின்றது. இந்தியா உட்பட மேற்குலகின் முழு இலக்குமே சீனாவிடமிருந்து இலங்கையைக் கழற்றுவதுதான். தற்போதைய சூழலில் இலங்கையின் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலமே இதனை மேற்கொள்ள முடியும். ஆட்சி மாற்றத்தினைக் கொண்டு வருவதற்கு இலங்கையில் அதிகாரச் சமநிலை மாற்றமடைய வேண்டும். தற்போது அதிகாரச் சமநிலை மகிந்தருக்குச் சார்பாக அதி உச்சவகையில் உயர்ந்திருக்கின்றது. தமிழ் அரசியலுக்குச் சிறிய வகை வெற்றிகளையாவது கொண்டுவராமல் இந்த அதிகாரச் சமநிலையில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது.

இதனால்தான் குறைந்தபட்சம் வடக்கு மாகாணசபைத் தேர்தலையாவது நடத்த வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கின்றது.

காலதாமதம் இலங்கையின் மீதான சீனாவின் பிடியை மேலும் உறுதிப்படுத்தும் என்பதால் அமெரிக்கா இலங்கை விடயத்தில் இப்போது அதிக அவசரம் காட்டுகின்றது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவரினால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட கடிதம், ஹிலாரி கிளின்டனின் அமெரிக்க அழைப்பு, பிளேக்கின் இலங்கைப் பயணம், சொல்ஹெய்மின் இந்தியப் பயணம், ஜெனிவாவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தல் என்பனவெல்லாம் இந்த அவசரத்தின் எதிரொலிகளே.

இன்னொரு பக்கத்தில் ஆளுங்கட்சிக்கும் எதிர்கட்சிக்குமிடையே அதிகாரச் சமநிலையைக் கொண்டு வருவதற்காக சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான முயற்சிகளிலும் அமெரிக்கா இறங்கியுள்ளது. இது தொடர்பாக அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசுடன் தொடர்ச்சியான பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். இரு தரப்பிலும் நிபந்தனைகள் முன் வைக்கப்படுவதனால் இன்னமும் பேச்சுகள் வெற்றிபெறவில்லை.

> “
>
> இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் இலங்கையைத் தண்டிக்க வேறு வழியில்லை என்பதும் அவர்களின் கருத்தாகவுள்ளன. ஆகவே மேற்குலகம் இதனை கனகச்சிதமாக – தந்திரமாகக் கையாண்டு இலங்கைக்கு எதிராக தீர்மானம் மேற்கொள்ளும் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது

இன்று ஜனாதிபதியுடன் போட்டி போடக்கூடிய தலைவர் சரத்பொன்சேகாதான். போர் வெற்றியில் அவர் மாத்திரமே பங்கெடுக்கக் கூடியவராக இருக்கின்றார். ஆனால் அவர்கூட ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அதன் தலைமைப் பொறுப்பினை எடுக்கும்போதே அதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கும். இன்று ஐக்கிய தேசியக்கட்சி என்னதான் பலவீன நிலையில் இருந்தாலும் அரச கட்சிக்கு மாற்று அதுவேயாகும். அமெரிக்கா ஐக்கிய தேசியக்கட்சிக்குள் அவரைக் கொண்டு வருவதிலும் முன்னின்று செயற்படுவது போலத்தெரிகின்றது.

ஜெனிவா கூட்டத் தொடரில் தமக்கு ஆதரவான நாடுகளைத் திரட்டிக்கொள்வதில் இலங்கை இப்போது அவசர அவசரமாக ஈடுபட்டு வருகிறது. அதற்காக அமைச்சர்கள் பல்வேறு ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்குப் படையெடுத்துள்ளனர். சென்றதடவை இந்தியா உற்சாகத்துடன் ஆதரவைத் திரட்டிக் கொடுத்தது. ஆனால் இந்தத் தடவை இந்தியா உற்சாகமாக செயற்படுவதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவின் முயற்சிக்கு இந்தியாவும் ஆதரவளிப்பது போலவே தென்படுகிறது. இந்தியா தன்னால் முடியாத ஒன்றை அமெரிக்கவைக் கொண்டு செயற்படுத்துகிறது என்ற [illegible] இல்லாமல் இல்லை.

இப்போது புதிதாக இராணுவ நீதிமன்றம் என்று ஒரு புஷ்வாணத்தை அவிழ்த்து விட்டிருக்கிறது இலங்கை அரசு. இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென இராணுவ நீதிமன்றம் ஒன்றை நியமித்திருக்கிறார் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய. ஜெனிவாவில் அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கான அரசின் ஒரு நாடகமே இது. இந்த நாடகம் சர்வதேசத்துக்குப் புரியாத ஒன்றல்ல. நியமிக்கப்பட்ட அடுத்த நாளே சர்வதேச மனித உரிமை அமைப்புக்களான மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவை இந்த இராணுவ நீதிமன்றை முற்றாக நிராகரிப்பதாக அறிவித்து விட்டன. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனை ஒரு போதும் ஏற்கமாட்டோம் என்று வெளிப்படையாக தெரிவித்துவிட்டது. இது இப்போது அரசுக்கு மேலும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படைகள் தொடர்பான ஆலோசனைக் குழுவுக்குச் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை மறுபக்கத்தில் அரசுக்கு பெரும் நெருக்கடியாகிவிட்டது. போர்க் குற்றவாளியான ஒருவரை எப்படி இந்தக் குழுவில் நியமித்தீர்கள் என்று மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கேள்வி எழுப்பியிருந்தார். அத்துடன் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதிகளும் இந்த நியமனத்தைக் கடுமையாக எதிர்த்துள்ளனர். இதன் மூலம் அமெரிக்காவுடன் இந்தியாவும் இலங்கைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளமை வெட்டவெளிச்சமாகிவிட்டது.

இதனால் இப்போது இலங்கை அரசு ஆப்பிழுத்த குரங்கின் நிலையில்தான் உள்ளது. இந்தியா, அமெரிக்கா ஆகியவற்றுடன் முரண்படவும் முடியாமல் ஒத்துப் போகவும் முடியாமல் இரண்டும் கெட்டான் நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் காரணம் இந்த ஜெனிவா மாநாடுதான். அங்கு தனக்கு எதிராகத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டால் தனது ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்பது ஜனாதிபதி மஹிந்தவுக்கு நன்றாகத் தெரியும். அதிலிருந்து தப்பிக்கத் தான் கடுமையாகப் போராடுகிறார் அவர். அவரது போராட்டம் பலிக்குமா? பலிக்காதா? என்பது வேறு கதை.

ஆயினும் ஜெனிவா மாநாடு இலங்கை அரசுக்கு நல்ல ஒரு சூடு போடும் என்றே ராஜதந்திரிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் இலங்கையைத் தண்டிக்க வேறு வழியில்லை என்பதும் அவர்களின் கருத்தாகவுள்ளன. ஆகவே மேற்குலகம் இதனை கனகச்சிதமாக - தந்திரமாகக் கையாண்டு இலங்கைக்கு எதிராக தீர்மானம் மேற்கொள்ளும் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்றே கூறப்படுகிறது.

பிளேக்கின் இலங்கைப் பயணமும், அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின் போர்க்குற்றவியல் விசாரணைகளுக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப்பின் இலங்கைப் பயணமும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு நடவடிக்கைதான். அது இலங்கை அரசுக்கும் தெரியும். ஆயினும் அமெரிக்காவைப் பகைத்துக் கொள்ளும் துணிவு மஹிந்தருக்கு இல்லை.

ஜனாதிபதியைச் சந்தித்த பிளேக் அவரிடம் சில விடயங்களை தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். ''யுத்தம் முடிவுற்ற பின்னர் நான் இலங்கை வந்த போது உங்களால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளில் எதனையும் நீங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. இதன் பின்னரும் நான் அதுபற்றி உங்களுக்கு ஞாபகமூட்டினேன். அப்போதும் நீங்கள் அக்கறை காட்டவில்லை. உங்களால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நான் எனது தலைமைக்குத் தெரிவித்திருந்தேன். இப்போது அந்த உறுதிமொழிகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாதமை குறித்து என்னிடம் எனது தலைமை கேள்வியெழுப்பி இருக்கிறது. உறுதிமொழியை வழங்கிய மஹிந்த ராஜபக்ஷ நாடகமாடுகிறாரா? அல்லது நீர் நாடகமாடுகிறீரா? என்று என்னிடம் கேள்வியெழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே உங்களது விடயத்தில் நான் இனி கடுமையாகவே இருப்பேன்'' என்று மஹிந்தவிடம் கூறியிருக்கிறார் பிளேக்.

இதிலிருந்து அமெரிக்கா இந்த விடயத்தில் மிகக் கடுமையாக இருக்கிறது என்பது அரசுக்கும் வெளியுலகுக்கும் வெளிப்பட்டிருக்கிறது. அந்த வெளிப்பாடு வெறுமனே பேச்சோடு மட்டுமல்ல ஜெனிவா மாநாட்டிலும் எதிரொலிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த மாநாட்டில் இலங்கை அரசை நோக்கி இந்தியா, அமெரிக்கா , மேற்குலகம் எனப் பல பல்குழல்கள் தாக்குதலை நடத்தத் தயார் நிலையில் காத்திருக்கின்றன. இலங்கை அந்தப் பல்குழல் தாக்குதலில் இருந்து எப்படித் தப்பிக்கப் போகிறதோ தெரியவில்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வைத்திய மேம்பாட்டுக்கு...

தமிழ்ப் பரம்பரை வைத்தியர்கள் சிலரின் கவனக் குறைவான அல்லது தவறான சிகிச்சை முறைகளால் ஏற்பட்ட விபரீதங்கள் பற்றிய செய்திகள் மிகவும் வேதனையளிப்பதாக உள்ளன. வைத்தியம் என்பது உயிரைக் காப்பாற்றும் ஒரு புனிதமான சேவை. ஆனால், நோயாளிகளின் உயிர்களுக்கே உலைவைக்கும் ஒரு விபரீத விளையாட்டாகச் சிலரின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன.

தமிழ் மக்களில் பெரும்பாலானோர் தமிழ் வைத்தியத்தில் மிகவும் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கைக்கு இதுபோன்ற ஒரு சிலரின் தவறான செய்கைகள் பங்கம் விளைவித்து விடக் கூடாது என்பதற்காகவும் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் தடுப்பதற்குச் சில ஆலோசனைகளை வழங்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

நாள்பட்ட நோய்கள், மாற்ற முடியாத நோய்கள் என்று ஒரு மருத்துவத் துறை சார்ந்தவர்கள் கூறும்போது மாற்றுமருத்துவமுறைகளை நாடுவது நோயாளிகளின் இயல்பு. சில நோயாளிகள் 'கிளினிக்' இல் தொடர்ந்தும் ஒரேவிதமான மருந்துகளைத்தான் திரும்பத் திரும்பத் தருகிறார்கள்; அதனால் பிரயோசனம் இல்லையே என்று மனம் சலிப்படைந்ததும் மாற்று மருத்துவங்களை நாடுகின்றனர்.

தம்மிடம் சிகிச்சை பெற வரும் நோயாளிகளைப் பரிசோதித்து, அவருக்குத் தன்னால் சிகிச்சையளிக்க முடியுமா? என்று தீர்மானிக்க வேண்டியது ஒரு நல்ல மருத்துவரின் கடமையாகும். அதாவது ஒரு மருத்துவர் தம்முடைய எல்லை (Limitatuon) என்ன என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். அதைவிடுத்து ''இதை நான் மாற்றிக் காட்டுகிறேன்'' என்பது போன்ற சவால்கள் அதிகப் பிரசங்கித்தனமானவை.

* பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற வைத்தியர்கள்.
* லங்கா சித்த ஆயுள் வேதக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற வைத்தியர்கள்.
* பரம்பரை வைத்தியர்களாகப் பதிவு செய்துள்ள வைத்தியர்கள்.
* எவ்வித பதிவும் இன்றி வைத்தியம் செய்பவர்கள்.

எனத் தமிழ் வைத்தியர்கள் பாரம்பரிய - கல்வி அறிவு ஆற்றல்வழி. மேற்கூறியவாறு பிரித்தறியப்படலாம்.

இதில் முதல் இருசாராரும் தத்தம் நிறுவனங்களில் குறித்த பாடத் திட்டங்களுக்கமைய மருத்துவக்கல்வி பயின்றவர்கள். ஆனால் கடைசி இரு சாராருள் பெரும்பாலானோர் அனுபவ அறிவைக் கொண்டே வைத்தியம் செய்பவர்களாக உள்ளனர்.

பரம்பரை வைத்தியர்களில் சிலரிடம் வினைத்திறன் மிக்க மருந்துகள் உள்ளன. அவர்களில் சிலர் நாள்பட்ட அல்லது மாற்ற முடியாது என்று கைவிடப்பட்ட நோய்களை ஆச்சரியப்படத்தக்க முறையில் குணப்படுத்தியுள்ளனர். எனினும் அவற்றுக்கான ஆதாரங்களோ புள்ளிவிவரங்களோ பலரிடம் இல்லை.

ஆயுள்வேத திணைக்களத்தில் பரம்பரை மருத்துவத்துக்கென தனியான ஒரு பிரிவுள்ளது. அப்பிரிவினரும் வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களமும் இணைந்தும் தனித்தும் பரம்பரை மருத்துவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறைகளைக் கடந்த சில வருடங்களாக முன்னெடுத்து வந்துள்ளனர். இத்தகைய பயிற்சிப் பட்டறைகளில் மிகக் குறைந்தளவிலான பரம்பரை வைத்தியர்களே பங்குபற்றியுள்ளனர் என்பது வருந்தத்தக்கதே!

பரம்பரை வைத்தியர்களுக்கான கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் என்பன நன்கு திட்டமிடப்பட்டு அடிக்கடி நடத்தப்படுவதுடன் அவற்றில் கலந்துகொள்ளாமல் தவிர்க்கும்

பரம்பரை வைத்தியர்களுக்கு எதிராக ஆயுள்வேத திணைக்களம், வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் என்பன தகுந்த நடவடிக்கைகளை எடுப்பின் மருத்துவ நடவடிக்கைகளைச் சீராக முன்னெடுக்க அவை உதவலாம்.

தமிழ் வைத்திய சிகிச்சை தற்போது தன்னிச்சையான முறையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரும்பாலான வைத்தியர்கள் தத்தமக்கென சில மருந்துகளை வைத்துக் கொண்டு வைத்தியம் செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர்.

இதற்கு முக்கிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. சித்த மருத்துவத்துக்கென இலங்கையில் ஒரு பொதுவான அங்கீகரிக்கப்பட்ட மருந்துத் தொகுப்பு நூல் Siddha Pharmacocia இல்லாதிருப்பது.

அதாவது சித்த மருந்துகள் பல்வேறு நூல்களிலும் ஏட்டுச் சுவடிகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் சிதறிக் காணப்படுகின்றன. பரம்பரை மருத்துவர்களின் அனுபவ முறையிலும் பல மருந்துகள் பாவிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை ஒருங்குதிரட்டி துறை சார் நிபுணத்துவம் பெற்றவர்களின் உதவியுடன் சித்த மருந்துத் தொகுப்பு நூல் உருவாக்குவது அவசியமானதாகும். இது தொடர்பாக ஆயுள்வேதத் திணைக்களம் சில வருடங்களுக்கு முன்னர் எடுத்த முயற்சி வெற்றியளித்ததாகத் தெரியவில்லை

2. அங்ஙனம் தொகுக்கப்பட்ட மருந்துத் தொகுப்பு நூலில் கூறப்பட்டுள்ள மருந்துகளை சித்த மருந்து உற்பத்தி நிலையம் அமைத்து அதற்கூடாகத் தயாரித்து விநியோகித்தல். இதுவிடயமாக சகல வசதிகளுடனும் சித்த மருந்து உற்பத்தி நிறுவனம் ஒன்று அரச ஆதரவுடன் அமைக்கப்படல் வேண்டும் என்பது சித்த மருத்துவர்களின் நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது. இது தொடர்பாகக் காலத்துக்குக் காலம் சில முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவை எதுவும் இதுவரை வெற்றியளிக்கவில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

இவ்விரு விடயங்களையும் நிறைவேற்றும் பட்சத்தில் தமிழ் வைத்தியர்களின் சிகிச்சை முறையில் ஒரு பொதுமைப்பாட்டை - ஒருங்கிணைப்பை- ஒழுங்கு முறையை ஏற்படுத்த முடியும்.

அடுத்து நிறுவனங்களில் பட்டம் பெற்ற பட்டதாரி மருத்துவர்களில் பலர் தமக்குத் தேவையான மருந்துகளின்றிச் சிரமப்படுகின்றனர். அதனால் சிலர் தமக்குச் சம்பந்தப்படாத மருந்துகளைப் பாவிப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். ஒவ்வொரு மருத்துவரும் தமக்குத் தேவையான மருந்துகளைத் தாமே தயாரித்தல் என்பது தற்காலத்தில் சாத்தியப்படாத ஒரு விடயமாகும். எனவே அவர்களுக்குத் தேவையான சகல மருந்துகளும் தடையின்றியும் தாராளமாகவும் உற்பத்தி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சகல வசதிகளுடனும் சித்த மருந்து செய் நிறுவனம் அமைக்கப்பட்டு அதற்கூடாக மருந்துகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதற்கு நீண்ட காலம் தேவைப்படும். அதுவரைக்கும் தேவையான மருந்துகளை இந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவிடயமாக வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் கூடிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். ஒரு சில மருந்துகளை வைத்துக் கொண்டு தமிழ் வைத்தியத்தை நிறைவாகச் செய்ய முடியாது என்பதே தமிழ் வைத்தியர்களின் ஆதங்கமாகும்.

தமிழ் வைத்தியர்களால் தயாரிக்கப்படும் மருந்துகள், மருந்து செய்நிலையங்கள் மட்டுமன்றி அவர்களால் பதிவேடுகள் சரிவரப் பேணப்படுகின்றன போன்ற விவரங்களையும் ஆயுள்வேத திணைக்களமும் வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களமும் உயர்மட்ட அதிகாரிகளை நியமித்து பரிசோதனைகளை நடத்தி அவதானிக்க வேண்டும். சில தினங்களுக்கு முன்னர் வடமாகாண சுதேச மருத்துவத்துறைப் பணிப்பாளர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சிறப்புச் சிகிச்சை, நிபுணத்துவ சேவை என்ற பெயரில் சுதேச மருத்துவர் சிலரால் செய்யப்பட்டுவரும் விளம்பரங்களும் மக்கள் மத்தியில் மயக்கத்தை ஏற்படுத்தவதாக உள்ளன.

நிபுணத்துவ சேவை குறித்த துறையில் நிபுணத்துவம் அல்லது சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒருவராலேயே வழங்கப்பட முடியும். அந்தவகையில் இலங்கையில் சித்தமருத்துவத்துறையில் குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மிகச் சிலரே உள்ளனர். எனவே, மக்களைக் கவர்வதற்காகப் போலி விளம்பரங்கள் வெளியாகுமிடத்து அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் சுதேச வைத்தியத் திணைக்களம் முன்வர வேண்டும்.

இறுதியாக இன்றைய உலகின் கவனம் மூலிகை மருத்துவத்தை நோக்கியும் திரும்பியுள்ளது. உலக சுகாதார நிறுவனமும் பரம்பரை மருத்துவத்துக்கே உரிய அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பரம்பரை மருத்துவர்களுக்கான கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள், பரம்பரை வைத்தியர்களால் பயன்படுத்தப்படும் மூலிகைகள், மூலிகை மருந்துகள் என்பவற்றை ஆவணப்படுத்துதல் ஆய்வுகளுக்குட்படுத்துதல் என்ற பல மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தமிழ் வைத்திய பரம்பரையினரும் தமக்குத்தாமே பெருமை பேசிக் கொண்டிருப்பதை விடுத்து இத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தம்மையும், தாம் சார்ந்துள்ள மருத்துவத்தையும் மேன்மையடையச் செய்ய முடியும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

# அள்ளுமாந்தத்துக்கு சிறந்தது உசிலமர வேர்ப்பட்டை

## உசிலமரம்

**வேறுபெயர்- ஊஞ்சமரம்,சீக்கிரி மரம் அரைப்பு மரம் துரிஞ்சில், உயில் உகில்**
**தாவரவியற் பெயர் - Albizzia amara**
**(அல்பீஸியா அமரா)**
**குடும்பம்- Mimosoideac**
**(மைமே சேயிடியே)**
**ஆங்கிலப் பெயர்- Wheel tree**

உவர்வலயத்தில் வளரும் சிறுமரம் கூட்டிலைகள் இரட்டைச் சிறைப் பிரிப்பானவை. சிற்றிலைகள் மிகச்சிறியவை பூக்கள் சிவப்பு நிறம், மஞ்சள் நிறம், கனி அவரைக் காய் போன்றது . இதன் இலை, பூ, விதை எண்ணெய் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

அள்ளுமாந்தத்துக்கு.

குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற அள்ளுமாந்தத்துக்கு இதன் வேர்ப் பட்டையைக் குடிநீரிலிட்டு 5மில்லி லீற்றர் அளவில் காலை, மாலை கொடுக்கலாம்.

சிரங்குக்கு

பூவை நீர்விட்டவித்து அந்த நீரால் கழுவிவர மாறும்.




வீக்கத்துக்கு

பூவை நீர் வட்டரைத்து வீக்கத்தின் மேல் வைத்துக் கட்டிவர மாறும்.

பொடுகுக்கு

உசிலம் இலையை உலர்த்திப் பொடி செய்து தலைக்கு சீயாக்காய் போல தேய்த்து முழுக தலைப் பொடுகு, மண்டைக் கரப்பன், தலை விரணம், என்பன மாறும். சவர்க்காரத்துக்குப் பதிலாக இப் பொடியை உடம்பில் தேய்த்துக் குளித்துவரஉடல்அழுக்குகள்நீங்கும் வியர்வை நாற்றம் மாறும் . இதன் விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை தோல் விரணங்கள் படைகளுக்குப் பூசிவர குணம் ஏற்படும்.

படர்தாமரைக்கு

இதன் இலைச் சாற்றைப் பூசிவரப் படர் தாமரை மாறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரியான தடத்தில் இலங்கை

■ டிலீப்



இலங்கை கிரிக்கெட் அணி, தொடர் தோல்விகளுக்கு முடிவு கட்டி வெற்றியுடன் பயணிக்கத் தொடங்கியிருக்கின்றது. மஹேல அணித் தலைமைப் பதவி ஏற்ற பின்னர் இலங்கை கிரிக்கெட் அணி போராடும் வல்லமையை அதிகரித்த போதும் அது வெற்றி பெறும் அளவுக்கு கிடைக்கவில்லை. இருப்பினும் நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவுடன் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி தனது அதி உச்ச போராட்டத்தை நிரூபித்து ஆஸியை அதன் சொந்த மண்ணிலேயே அடக்கி விட்டது.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வருகின்ற கொமன்வெல்த் முக்கோண கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களின் நிறைவில் இலங்கை அணி பின்தங்கியிருந்தது. விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்து இருந்தது. அத்துடன் இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்திருந்தாலும், இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு சிம்மசொப்பனமாகவே விளையாடியிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்களின் முடிவுகளை நிச்சயம் இலங்கை அணி மாற்றியமைக்கும் என்ற நம்பிக்கை இலங்கை ரசிகர்களிடம் இருந்தது.

அதனை இலங்கை நிறைவேற்றுமோ என்ற அச்சம் இந்தியாவுடனான ஆட்டத்தின் போது இருந்தது. ஏனெனில் இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக போராடும் அளவுக்கான பெரியளவான ஓட்ட எண்ணிக்கையை இலக்காக அமைக்கவில்லை. இருப்பினும் நிர்ணயித்த ஓட்ட எண்ணிக்கைக்குள் பெரிய துடுப்பாட்ட பட்டியலை கொண்டிருக்கும் இந்திய அணியை அடக்கித் திணற வைத்தனர்.

இந்தியாவுடனான ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சந்திமாலை நம்பியே விளையாடியது. அத்துடன் சொல்லிக் கொள்ளும்படியாக இலங்கை அணியின் துடுப்பாட்டமும் அமையவில்லை. ஆனாலும் பந்து வீச்சில் இலங்கை சிறப்பாகவே கலக்கியது. மிகக் குறைவான ஓட்ட எண்ணிக்கைக்குள் பலமான இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களை சிக்க வைத்தனர். அத்துடன் களத்தடுப்பிலும் தொடர்ந்து தமது அதீத திறமைகளை வெளிப்படுத்தினர். இருப்பினும் வெற்றி பெற வேண்டிய ஆட்டத்தில் - நிலையில் - வீணாக சம நிலையில் முடிக்கப்பட்டது.

இலங்கையின் இந்த எழுச்சியானது ஆஸ்திரேலியாவுடன் நிச்சயமாக உச்சக் கட்டமாக இருக்கும் என்ற ரசிகர்களின் எதிர்பார்ப்பை இலங்கை அணி வீரர்கள் பூர்த்தி செய்தனர். மஹேல ஜெயவர்தன தனது தற்துணிவின் அடிப்படையில் மூன்று சகலதுறை வீரர்களையும் ஒரே ஆட்டத்திலேயே களமிறக்கினார். அவரது இந்த முடிவு இலங்கை அணியின் வெற்றயை துரிதப்படுத்தி - இலகுபடுத்தி - விட்டது.

சங்ககார தலைமையில் இலங்கை அணி உலகக் கிண்ணத்தில் எவ்வாறு ஆக்ரோஷமாக, எதிரணிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளையாடியதோ அதே போன்றே ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்திலும் இலங்கை அணி தனது ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. உலகக் கிண்ணத்தின் பின்னர் தொடர் தோல்விகளுக்கு சென்று கொண்டிருந்த இலங்கை அணி தற்போது சரியான தடத்தில் பயணிக்க தொடங்கியிருக்கின்றது.

மஹேலவின் அணித் தலைமைக்கு கிடைத்த பரிசே மேற்படி வெற்றி. களத் தடுப்பை கணத்துக்கு கணம் சரியான அணுகுமுறையில் மாற்றியமைக்கும் மஹேல அதன் மூலம் உரிய பலனை அணிக்குப் பெற்றுக் கொடுக்கின்றார். இளைய தலைமுறை வீரர்களுக்கு மஹேலவின் அணித்தலைமை ஒரு எடுத்துக் காட்டாக அமையும்.

**மீண்டெழுமா பாகிஸ்தான்?**

எந்த அணியையும் சமாளிக்கும் வல்லமை கொண்ட பாகிஸ்தான் தற்போது தனது பாதையில் தளம்பலை சந்திக்கத் தொடங்கியிருக்கின்றது. கடந்த வருடம் இடம்பெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் பின்னர் பாகிஸ்தான் அணி சிறிது காலம் சர்ச்சைகளால் குழம்பியிருந்தது. பாகிஸ்தான் அணிக்கு சர்ச்சைகள் எப்போதும் புதிதல்ல. இருப்பினும் அதன் பின்னர் பாகிஸ்தான் பெற்ற எழுச்சியானது ஏனைய அணிகளுக்கு சிம்மசொப்பனமாகவே இருந்தது. இலங்கையை ஒரு நாள் தொடர், டெஸ்ட் தொடர், 'ரி-20' தொடர் என்று சகல ஆட்டங்களிலும் வழித்து துடைத்து அனுப்பியது. அத்துடன் இங்கிலாந்துடன் டெஸ்ட் தொடரை அபாரமாக வென்றதுடன் 'முதலிட அணி' கர்வத்தை அவர்களிடமிருந்து அகற்றியது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரையில் மூன்று சுழற்பந்து வீச்சாளர்கள் எதிரணிகளை ஆட்டிப்படைத்து வந்தனர். சயிட் அஜ்மல், மொஹமட் ஹபீஸ், அப்ரிடி இவர்களது பந்து வீச்சை சமாளித்து தப்புவது கடினம் என்ற நிலையே எதிரணிகளுக்கு இருந்தது. அத்துடன் துடுப்பாட்ட வரிசையிலும் சிறப்பாக இருந்தது பாகிஸ்தான்.

இப்படி உச்சத்திலிருந்த பாகிஸ்தான் திடீரென்று தரையில் தொப்பென்று விழுந்து விட்டது. இங்கிலாந்துடனான முதலிரு ஒரு நாள் ஆட்டங்களிலும் தோல்வியைச் சந்தித்துள்ளது. இங்கிலாந்து அணியில் குக், போப்ரா இருவரது துடுப்பாட்டத்தை மட்டும் நம்பியே மொத்த அணியும் இருக்கிறது. இவர்களின் போராட்டத்தால் இங்கிலாந்து பெற்றுக் கொள்ளும் ஓட்ட எண்ணிக்கையை பாகிஸ்தானால் விரட்ட முடியாதிருக்கிறது.

துடுப்பாட்டத்தில் கலக்கிய பாகிஸ்தான் இப்போது சுருண்டு படுத்திருக்கிறது. இங்கிலாந்தின் பின்னின் வேகத்துக்கு 7 துடுப்பாட்ட வீரர்களுடன் களமிறங்கும் பாகிஸ்தான் அணியால் ஈடுகொடுக்க முடியாதிருக்கிறது. மீதியிருக்கும் ஆட்டங்களிலாவது பாகிஸ்தான் வெற்றி பெற்று மீண்டும் தனது இருப்புக்கு திரும்புமா?

# கதைப்பதால் அபிவிருத்தி கிடைக்குமா?

■ இனியன்



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது விளையாட்டுத்துறை வீரர்களின் பயன்பாட்டுக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லை என்ற நிலைமை தொடர்கதையாகவே உள்ளது. இதனால் வீரர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த பொது விளையாட்டு மைதானத்தை அரசு 325 மில்லியன் ரூபா செலவில் வடமாகாணத்துக்கான சகல வசதிகளுடன் கூடிய சர்வதேச விளையாட்டு மைதானமாக மாற்றி அமைப்பதற்கான புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தது.

புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாக 3 வருடங்களோ 5 வருடங்களோ செல்லலாம். புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் காலப்பகுதியில் வீரர்கள் தங்களது விளையாட்டு துறைசார் பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் விளையாட்டுக் கழங்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் உரிய வசதியான விளையாட்டு மைதானம் இல்லை என்பதே இன்று ஏற்பட்டுள்ள குறையாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத்துறை வளர்ச்சிபெற வேண்டும் என்றால், வீரர்கள் தாங்கள் சார்ந்த விளையாட்டுத்துறைப் பயிற்சிகளை மேற்கொள்ளவும் விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் உரிய மாற்று விளையாட்டு மைதானம் ஒன்று தேவைப்படுகின்றது.

தங்களது தேவைகளை விளையாட்டுத்துறை அதிகாரிகள், பூர்த்தி செய்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதே விளையாட்டுத்துறை வீரர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து விளையாட்டுத் துறைக்கு என்று ஒரு பிரிவை உருவாக்கி இருந்தனர்.

அந்த விளையாட்டுத்துறை மூலம் விளையாட்டு வீரர்கள் சர்வதேசம் வரைக்கும் சென்று விளையாடி வெற்றிவாகை சூடி வந்தமை நாம் அறிந்ததே.

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குப் புத்தூக்கம் அளிக்கும் முகமாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வன்னி அபிவிருத்தி சங்கத்தால 1993, 1994 ஆம் ஆண்டுகளில் உதைபந்தாட்டப் போட்டி நடத்தியமை, 2003, 2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழா என பல்வேறு போட்டிகள் நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்ற போதும் விளையாட்டுத்துறையின் வளர்ச்சி நத்தை வேகத்தில் இடம்பெற்று வருகின்றது.

அண்மையில் வடமாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இந்த வடமாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்திக் கூட்டத்தில் வடமாகாண விளையாட்டுத் துறை அதிகாரிகள் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் விளையாட்டுத் துறை சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டோர் தங்களது தேவைகள் உள்ளடங்கிய கடிதங்களை சமர்ப்பித்த நிலையில் குறித்த தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்று உறுதிமொழி கூறப்பட்டமையும் தெரிந்ததே.

விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பாக நான்கு சுவர்களுக்குள் இருந்து பேசிக்கொண்டு இருப்பதால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை.

உரிய அதிகாரிகள் நேரடியாக உரிய இடங்களுக்குச் சென்று குறைகளை அறிந்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆய்விலும் முன்னேற்றம் பேச்சுக்கும் சம்மதம்

## ஈரானின் தற்போதைய நிலைப்பாடு

■ ராம்

உலக நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐ.நா சபை உறுப்பினர்கள் என்று எல்லோரும் ஈரானை என்னதான் தடுத்து நிறுத்த முற்பட்ட போதிலும் அந்நாடு அணு ஆராய்ச்சியில், தான் எடுத்துக் கொண்ட முடிவை எட்டுவதற்கு வேண்டிய எல்லா தகைமைகளையும் பெற்றுவிட்டதாக கடந்த புதன்கிழமை வெளிப்படுத்தியுள்ளது.

அணு குண்டு ஒன்றை ஈரான் தயாரிப்பதற்கு தேவையான யுரேனியத்தைச் செறிவூட்டும் பணியை மிக முன்னேற்ற கரமாக அது நடத்தி முடித்துள்ளது.

இந்த விதமாக ஈரான் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்காவும் ஐ.நா சபையும் ஐரோப்பிய நாடுகளும் கடும் பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தன. வரும் மாதங்களில் ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி அழிக்கவிருப்பதாகக் கூட அறிவிக்கப்பட்டிருந்தது.

பாரசீகக் குடாப்பகுதிகளில் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்களும் பிரிட்டிஷ் போர்க்கப்பல்களும் கூட நகர்த்தப்பட்டிருந்தன. அவை அனைத்தையும் உதாசீனம் செய்துவிட்டு யுரேனியத்தை செறிவூட்டும் விடயத்தில் பல வழிகள் முன்னேற்றி விட்டதாக ஈரான் எடுத்துகாட்டி உள்ளது.

உள்நாட்டிலேயே முதன்முதலில் உருவாக்கப்பட்ட 20 வீதம் செறிவூட்டப்பட்ட அணு எரிபொருளை அந்நாட்டின் அதிபர் முகமது அகமதி நிஜாத் திறந்து வைப்பது அந்த நாட்டுத் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

அணு ஆராய்ச்சியில் ஈரான் முன்னேறியிருப்பது வெளிக்காட்டபட்டமைக்குத் தமது நோக்கம் அமைதியைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதையே காட்டுகிறது என்பதை உறுதிப்படுத்துவதாக ஈரான் கூறிக்கொள்கிறது.

''அனைவருக்குமே அணு சக்தி, அணு குண்டு எவருக்குமில்லை'' என்ற தமது சுலோகத்தை ஈரான் வெளிப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனல் இவையெல்லாம் அணு குண்டு ஒன்றை தயாரிப்பதற்கான முன்முயற்சிகளை மறைக்கும் தந்திரங்கள் என்று அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கருதுகின்றன.

### உலக வல்லரசுகளுடன் பேச்சு நடத்தத் தயார்

ஈரான் தனது சர்ச்சைக்குரிய அணு ஆராச்சித் திட்டத்தில் பிரதான முன்னேற்றத்தை அடைந்துவிட்டதாக அறிவித்து ஒரு நாள் கழித்து மீண்டும் உலக வல்லரசுகளுடன் பேச்சு நடத்த ஆயத்தமாக இருப்பதாக அறிவித்துள்ளது.

அமெரிக்கா, ஈரானின் சோதனைக் காட்சிகள் வெளியிடப்பட்டமை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், சர்வதேசத் தடைகளாலும் வேறு சர்வதேச அழுத்தங்களாலும் தாக்கத்துக் குள்ளாகியுள்ளமையினாலேயே இந்த நிலைப்பாட்டை எடுத்து மீண்டும் பேச்சு வார்த்தைகளுக்கு திரும்ப இருப்பதாக அறிவித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவது தொடர்பாக ஈரான் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேச்சுவார்த்தை என்ற கொள்கையை நாங்கள் எப்போதும் வரவேற்றிருக்கிறோம். ஆக்கப் பூர்வமான அணுகுமுறை மற்றும் ஒத்துப்போகும் மனப்பான்மை மூலமாக இந்தப் பேச்சு வார்த்தைகளில் ஒருபடி முன்னேற முடியும் என்று நாம் நம்புகிறோம் என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ரகிம் மெஹ்மன்பரசட் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபரில் ஐரோப்பிய யூனியன் வெளியுறவுக் கொள்கை வகுக்கும் தலைவர் கதரின் ஆஷ்டன் அனுப்பியிருந்த கடிதம் ஒன்றுக்கு ஈரான் கடந்த புதன் கிழமை அனுப்பிய பதில் கடிதத்தில் பேச்சுக்களுக்குத் தாங்கள் தயாராய் இருப்பதாக அறிவித்துள்ளது. பி5+1

> **"பேச்சுவார்த்தை என்ற கொள்கையை நாங்கள் எப்போதும் வரவேற்றிருக்கிறோம். ஆக்கப் பூர்வமான அணுகுமுறை மற் றும் ஒத்துப்போகும் மனப் பான்மை மூலமாக இந்தப் பேச்சு வார்த்தைகளில் ஒருபடி முன்னேற முடியும் என்று நாம் நம்புகிறோம் என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ரகிம் மெஹ்மன்பரசட் தெரிவித்துள்ளார்.**

குழு என்றழைக்கப்படும் - ஐ.நா. பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பு நாடுகளான பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் நடைபெற்ற கடைசிச் சுற்றுப் பேச்சுக்கள் 2011 ஜனவரியில் முடிவடைந்தன.

பேச்சு வார்த்தைக்கான கடிதத்தை அனுப்புவதில் ஈரான் காட்டியுள்ள தாமதம் அதன் அணு ஆராய்ச்சி முன்னேற்றத்தை வெளிப்படுத்திய தினத்துடன் இணைந்திருப்பதற்காகச் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

தெஹ்ரானிலுள்ள அணு உலை ஒன்றுக்குள் ஈரானில் உள் நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 20 வீதம் செறிவூட்டப்பட்ட எரிபொருள் கருவியை அதிபர் முகமது அகமதி நிஜாத் செலுத்தி வைப்பதை அந்த நாட்டுத் தொலைக் காட்சி காண்பித்தது.

### ஐ.நா. பொதுச் சபையில் சிரியாவைக் கண்டிக்கும் தீர்மானம்

பாதுகாப்புச் சபையில் சிரியாவுக்கு எதிரான கண்டனத் தீர்மானம் ரஷ்ய, சீன வீட்டோ பிரயோகத்தால் தோல்வி கண்டுள்ள நிலையில் அரபு நாடுகளின் முன் முயற்சியில் ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் ஒன்றை கொண்டுவந்து நிறை வேற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை பொது சபையில் விவாதிக்கப்பட இருந்த இந்தத் தீர்மானத்தில் பொதுமக்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்தும்படி சிரிய அதிபர் பஷார் அல் ஆஸாத்தைக் கேட்டுக் கொள்ளப்பட இருந்தது.

சவூதி அரேபியாவாலும் கட்டாரினாலும் தயாரிக்கப்பட்டிருந்த இந்தத் தீர்மாணத்தின் பிரதிகள் அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டிருந்தன.

சிரியாவில் கடந்த 11 மாதங்களாக இடம்பெற்று வருகின்ற வன்முறைகளுக்கு முடிவு கட்டுவதற்கு அரபு நாடுகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு இத் தீர்மானத்தில் ஆதரவு தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், சிரியா விடயத்தை கவனிப்பதற்கான ஐ.நா.பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட இருந்தது.

இந்தத் தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் பொதுச் சபையில் எதிர்த்தாலும் வீட்டோ செய்வதற்கான அதிகாரம் இல்லை. அதே சமயம் பொதுச்சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் அதிக தாக்கம் கொண்டதாக இருக்கமாட்டது. 193 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபையில் குறைந்தது 133 வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடிய சாத்தியம் இருப்பதாக ராஜதந்திரி வட்டாரங்களில் பேசிக் கொள்ளப் பட்டது.

**உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்**

### ஒரு கட்சி ஆட்சிக்கு முதல்

இதற்கிடையில் சிரியாவில் 50 வருட காலமாக இருந்து வரும் ஒருகட்சி ஆட்சி முறையை மாற்றி அமைக்கும் விதத்தில் மதிய அரசமைப்பு ஒன்றை கொண்டுவர இருப்பதாக அதிபர் அல்-ஆஸாத் அறிவித்திருக்கிறார்.

மனித நேயத்துக்கு மாறான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐ.நா.வின் கருத்துக்களை மறுதலித்துள்ள அதிபர் ஆஸாத் வரும் 26 ஆம் திகதி புதிய அரசமைப்பு தொடர்பான கருத்துக் கணிப்பு நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

ஆட்சியிலுள்ள பாத் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் அதே சமயம் பல கட்சிகள் செயற்படுவதற்குப் புதிய அரசமைப்பில் இடம் தரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதிபராக வருபவர் ஏழு ஆண்டுகாலம் இரு தடவைகள் ஆட்சி புரிய முடியுமாம்.

அமெரிக்க தரப்பில் இது பற்றி கருத்து தெரிவித்த பேச்சாளர் இது ஒரு சிரிப்புக்கிடமான செயற்பாடு. சிரிய மக்கள் புரட்சியை இது கேலி செய்வதாக உள்ளது என்று தெரிவித்தார். ஆனால் சிரியாவுக்கு ஆயுதம் ஏற்றுமதி செய்யும் பிரதான நாடான ரஷ்யா அதனை வரவேற்றுள்ளது.

### அமைதி ஏற்படும் வழியைக் காணோம்

ரஷ்ய வெளியுறவு அமைச்சருக்கு சிரிய, அதிபர் ஆஸாத் தமது நாட்டில் அமைதியைத் தோற்றுவிக்க ஆவன செய்வதாக உறுதியளித்துள்ள போதிலும் அங்கு அமைதி திரும்புவதற்கான எந்தவித அறிகுறிகளும் காணப்படவில்லையென்று நிலைமைகளைக் கண்காணித்து வரும் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

முக்கிய நகரான ஹொம்ஸ் மீது ஆஸாத் படைகள் பலநாள்களாகக் கடும் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தன என்று கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர். அதே சமயம் இந்தத் தாக்குதல்கள் சிரியாவில் மனித அழிவுக்கு வழி கோலுவதாக இருக்கப் போகிறது என்று சர்வதேச சமூகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. சபை சிரியா விடயத்தில் செயற்படாமல் வாளாவிருப்பது அந்த நாட்டின் அதிகாரிகளை ஊக்கப்படுத்துவதாய் இருக்கிறது. அதனால் அவர்கள் தமது நாட்டு மக்கள் மீதே மோசமான முறையில் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று ஐ.நா.விலுள்ள மனித உரிமைகளுக்கான பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

மனித உரிமை உயர் ஸ்தானிகரான நவிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், ''பாதுகாப்புச் சபை சிரியா மீது உறுதியான நடவடிக்கையொன்றை எடுப்பதில் ஒருமித்த கருத்துக்கு வர முடியாமற்போனமை எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்கள் மீது மிக மோசமான முறையில் கடும் தாக்குதல்களை நடத்துவதற்கு அவர்களுக்குத் துணிச்சலைக் கொடுத்துள்ளது'' என்று குறிப்பிட்டார்.

### மணப்பெண் நடத்திய கழிவறைப் போராட்டம்

திருமணமாகி கணவன் வீட்டுக்குச் சென்ற இளம் மனைவி இரண்டாம் நாளே கணவன் வீட்டிலிருந்து தாய்வீட்டுக்குத் திரும்பிவிட்டார். - காரணம் வேறொன்றுமில்லை புதிய வீட்டில் கழிவறையில்லை. கணவன் கழிவறையொன்றைக் கட்டி விட்டு அழைத்தால் தான் வருவேன் என்று கூறிச் சென்றவர் எட்டு நாள்களின் பின் திரும்பி வந்தார். அதற்குள் கணவன் சிவராம் என்பவர் கையிலிருந்த சேமிப்பையும், அயலவர்களின் உதவியையும் கொண்டு கழிவறையொன்றைக் கட்டி முடித்துவிட்டார்.

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இந்தியாவில் உள் கிராமங்களில் இன்னமும் இந்த மாதிரியான பின்னடைவுகள் இருந்தே வருகின்றன. அதில் பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்த மாதிரியான ஒரு போராட்டத்தை நடத்தி அந்த இளம் பெண் அனித்தா நரே என்பவர் வெற்றி பெற்றிருப்பதை பெண் உரிமைப் போராட்ட அமைப்பு பலவும் பாராட்டியுள்ளன. இந்தத் துணிச்சலான செயலில் வெற்றி பெற்றமைக்காக அனித்தா நரேக்கு அரசு சாரா நிறுவனம் ஒன்று 10,000 டொலர் பரிசு அறிவித்துள்ளது.

### பொப் பாடகியின் இறுதிச் சடங்கு

காலஞ்சென்ற அமெரிக்க நடிகையும் பொப் இசைப் பாடகியுமான பொப் டிவா விட்னிஹவுஸ்டனின் பூதவுடல் நேற்று (சனி) தனிப்பட்ட முறையிலான பிரார்த்தனைகளின் பின்னர், அவர் வளர்ந்த இடமான நியுஜேர்ஸி மெதடிஸ்த சபை தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்படவிருந்தது. அந்த தேவாலயத்திலேயே அவர் தேவாலய கூட்டுப் பிரார்த்தனை பாடல்களைப்பாடி வளர்ந்தார்.

கடந்தவாரம் சனிக்கிழமை 48 வயதில் காலமான ஹவுஸ்டனின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டு அவருக்கு இறுதி மரியாதை செய்யும் சந்தர்ப்பம் அவரது ஆதரவாளர்களுக்கு கிடைக்காமல் போனது. நியூயோர்க் பொது மயானமென்றில் இரண்டு நாள் பொது ஞாபகார்த்த கிரிகைகளை நடத்துவதற்கு இருந்த ஏற்பாட்டை அவரது குடும்பத்தினர் விரும்பவில்லை.

கடந்தவாரம் சனிக்கிழமை பெவெர் லிஹில்டன் ஹோட்டலில் குளியல் அறை தொட்டியில் அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார். கிராமி விருதுகளுக்காக அந்த ஹோட்டலில் ஆயத்தங்கள் நடை பெற்றுக் கொண்டிருந்த போது இது நடந்தது. உலகின் மிக உன்னதமான குரல் வளம் பெற்றவரான ஹவுஸ்டனின் 170மில்லியன் ஒலிப்பதிவுகளுக்கு மேல் விற்பனையாகியுள்ளன. வாழ்க்கையில் பெரும் போராட்டங்களை எதிர் கொண்டவரான அவர் இறுதிக் காலத்தில் வாழ்க்கை தடம் புரண்டுபோனவராகக் காணப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க...

உடலை வளமாக வைத்திருக்க வேண்டும் எனும் ஆர்வம் எல்லோரிடமும் காணப்படுவது இயல்பு. அப்படிப்பட்டவர்கள் பின்வரும் வழிமுறைகளை கடைபிடிப்பது பயனளிக்கும்.

தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். உடற்பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் செய்வதல்ல, தினசரி அலுவல்களுக்கிடையே வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உடற்பயிற்சி செய்யலாம். படிகளில் ஏறி இறங்குவது, அடிக்கடி நடப்பது, கண்களுக்கு பயிற்சி கொடுப்பது, கைகால்களை நீட்டி மடக்குவது, மூச்சுப் பயிற்சி என எவ்வளவோ செய்யலாம்.

தினமும் மூன்று வேளை மூக்கு முட்ட அசைவப் பொருள்களை உடலுக்குள் திணிப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள். எல்லாம் அளவாய் இருப்பதே ஆரோக்கியமானது. தினமும் ஐந்து முறை காய்கறிகள் மற்றும் பழங்களை உண்ணுங்கள். பெரும்பாலானவை வேக வைக்காததாக இருக்க வேண்டியது முக்கியம். சில காய்கறிகள் அரைப்பதத்துடன் வேக வைத்து உண்ணலாம்.

நல்ல பழக்கங்களைக் கொண்டிருப்பது முக்கியம். குறிப்பாக புகைத்தலை முழுமையாய் விட்டு விடுங்கள். மது அருந்துதல், எதிர்மறை எண்ணங்களை வளர்த்தல் போன்ற அனைத்துமே உடலுக்கு ஊறு விளைவிப்பவை. எனவே நல்ல பழக்கங்கள், நல்ல சிந்தனைகள் இவை முக்கியம்.

மோசமான கொழுப்பு நிரம்பிய உணவுகளை ஒதுக்குங்கள். நலமான வாழ்வுக்கு உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம், அதற்கு தேவையற்ற கொழுப்புப் பொருள்களை ஒதுக்குவது மிக மிக அவசியம்.

உணவில் உப்பு சேர்ப்பதை மட்டுப்படுத்துங்கள். அளவுக்கு அதிகமான உப்பு உடலில் பல்வேறு நோய்களைக் கொண்டு வரும். அதிகம் உப்பை உட்கொள்ளும்போது உடலில் சோடியம் அளவு அதிகரிக்கிறது, இது மினரல்களின் சமநிலையைப் பாதிக்கிறது. உயர் குருதி அழுத்தத்துக்குக் கூட இது காரணமாகி விடுகிறது.

உண்பதை நன்றாக மென்று உண்ணுங்கள். அதிக நேரம் மென்று உண்ணும் பொருள் உங்கள் உடலுக்கு அதிக பயனளிக்கும். தேவையற்ற கொழுப்பு சேர்வதிலிருந்தும், வாயுத் தொல்லை, செரிமானப் பிரச்சினை போன்ற அனைத்திலிருந்தும் அது உங்களைப் பாதுகாக்கும். நிறைய தண்ணீர் குடியுங்கள். உடலிலுள்ள அசுத்தங்களை வெளியேற்ற அது உதவும்.

இனிப்புப் பொருள்களை உண்பதை அளவுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். உடலின் சர்க்கரை அளவு அதிக்ரிக்கும் போது கொழுப்பு, இன்சுலின், டிரைகிளைசெரிட்ஸ் போன்றவற்றின் அளவு உடலில் அதிகரித்து உடலின் எதிர்ப்புச் சக்தியை கொஞ்சம் கொஞ்சமாய் வலுவிழக்கச் செய்யும். நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் வாங்கும் பொருளில் குளுகோஸ், சுக்ரோஸ், லாக்டோஸ், கார்ன் சுகர் என எழுதப்பட்டிருப்பவை எல்லாம் இனிப்புப் பொருள்களே!

எலும்புகள் வலிமையாக இருக்க வேண்டியது உடலின் மிக முக்கியமான தேவை. இல்லையேல் ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற எலும்பு உடைவு நோய் வந்து மிகப்பெரிய சிக்கலை உருவாக்கிவிடும். எனவே உடலுக்குக் கல்சியம் சத்து அதிகம் கிடைக்கக் கூடிய உணவுகளை தவறாமல் உண்ணுங்கள். எலும்பின் உறுதியை நீர்த்துப் போகச் செய்யும் குளிர்பானங்களை முழுமையாய் ஒதுங்குங்கள்.

தேவையான ஓய்வு, தேவையான தூக்கம், மனதை இலகுவாக்குதல் இவையெல்லாம் மிக மிக முக்கியம். வேலை வேலை என எந்நேரமும் அலையாமல் உடலுக்கும் மனதுக்கும் மகிழ்ச்சியளிக்கும் செயல்களை தினமும் சற்று நேரம் செய்யுங்கள். குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் அன்பாகவும், இனிமையாகவும் செலவிடும் நிமிடங்கள் ஆரோக்கிய உடலுக்கும் வழிவகுக்கும்.

A+ Fitch Rating

'மற்றும்' என்பதன் சக்தி

சேமிப்புகள் மற்றும் நிலையான வைப்புகள்

உங்கள் கொடுக்கல் வாங்கல்களின் வசதி கருதி நிரந்தர வைப்பைப்போன்று தேவையான அனைத்து சந்தர்பங்களிலும் பணத்தை சேமிக்க மற்றும் மீட்டெடுப்பதற்கும், சேமிப்புக்கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எப்பொழுதும் உங்கள் வசதியை கருத்திக்கொண்டு அதிக அனுகூலங்களை பெற்றுத்தருவது எமது கடமையாகும்.

அதியுயர் பயன்பாடு மற்றும் அதியுயர் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் சேமிப்பு முறைமை மற்றும் நிரந்தர வைப்பு முறைமை மூலமும் உங்களுக்கு பொருத்தமான முதலீட்டு முறையொன்றை தேர்ந்தெடுங்கள்.

திலினி 011 2315053 மற்றும் ருக்மல் 081 2230112 ஆகியோரை அழைத்து சேமிப்புத் திட்டம் மற்றும் நிலையான வைப்பு என்பனவற்றில் எது உங்களுக்கு மிகப்பொருத்தமானது என்பதை கண்டறியுங்கள்.

நாடளாவிய ரீதியில் 500க்கு மேற்பட்ட ATM இயந்திரங்கள் (கொமர்ஷல் வங்கி மற்றும் சென்ட்ரல் பினான்ஸ்)

1957ம் ஆண்டு டிசம்பர் 5ந் திகதி வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது. 2011ன் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது.

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
பிரதான அலுவலகம்: இல. 84, ராஜ வீதி, கண்டி.
நகர் அலுவலகம்: இல. 270, வொக்சோல் வீதி, கொழும்பு 2.

அருகிலுள்ள எமது கிளைக்கு விஜயம் செய்யுங்கள்
வெப்.தளம்:www.cf.lk

போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்
பிழையானது | சரியானது
ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர்: வரதராஜன் வன்னி மாவட்டத்தில்!
1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தந்து
3. சகல தேகரோக நிவாரணியாகத் திகழும்
சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க தற்போது தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக்கவரும் வர்ணமூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் கண்டு பிடிப்பதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே. பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
குறிப்பு: போலிகளின் நடமாட்டம் வன்னிப் பகுதியில் அதிகமாக உள்ளதால் வன்னி மக்கள் இதைக் கருத்திற்கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.
Manufatured by:
SITHARA PRODUCT,
Puttalam Road, Chilaw.
(Reg.No.:6382)AR/PR/no:228
யாழ். மாவட்ட ஏக விநியோகத்தர்,
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 0212222567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்)
(போலிகளை விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றோம்.)

ஒரு மணித்தியாலத்தில் யாழ்ப்பாணத்திற்கு...!!!
- ஜனவரி 21ம் திகதி முதல் தினமும் யாழ்ப்பாணத்திற்கு இரு சேவைகள்
- இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யலாம்
- வாடகைச் சேவைகளையும் பெறலாம்

EXPOAIR
your friend in the skies...
No. 14F, Palaly Road, Thirunelvely, Jaffna. Tel: 021 - 2223891 / 2226297
E-mail: Jaffna@expoavi.com Website: www.expoavi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கல் ஏன் வருகின்றது

★காரமாக உள்ள உணவுகள் சாப்படும்போது விக்கல் வருவது இயல்பு. சர்க்கரை நோய், உடல் பருமன், அல்சர், நரம்பு பிரச்னை, வயிற்றில் அறுவை சிகிச்சை, பக்கவாதம், அல்சர் நோய்களுக்காக மாத்திரை சாப்பிடுபவர்களுக்கும் விக்கல் வர வாய்ப்புள்ளது. விக்கல் தொடர்ந்து வரும்போது கண் வறண்டு போதல் மற்றும் மயக்கம் ஏற்படலாம்.

★இதுபோன்ற பிரச்சினை உள்ளவர்கள் எளிதில் ஜீரணம் ஆகும் உணவுகளை சாப்படவேண்டும். காய்கறி, பழங்கள் அதிகளவில் எடுத்துக்கொள்ளலாம். மாச்சத்து அதிகம் உள்ள உணவுகளைத் தவிர்க்கவும். வறட்சியான உணவுகளையும் தவிர்க்கவேண்டும்.

★நார்ச்சத்து, புரதம் அதிகம் உள்ள உணவுகளையும் தவிர்க்கவும். சப்பாத்தி, பரோட்டா, எண்ணெயில் பொரித்தவற்றை இயன்றவரை தவிர்க்கவும். விற்றமின் ஏ, விற்றமின் சி சத்துள்ள உணவுகள், எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ள உணவுகள் எடுத்துக்கொள்ளலாம். தக்காளி, ஆரஞ்சு, எலுமிச்சை, கொய்யா ஆகியவற்றில் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளது.

★ சூடான உணவுகள் தவிர்த்து எளிதில் ஜீரணம் ஆகும் உணவுகளுக்கு முக்கியத்துவம் தரவும். தினமும் 4 முதல் 8 லீற்றர் தண்ணீர் அருந்தவும்.











## வடகிழக்கு சீனாவில்...



வடகிழக்கு சீனாவில் 16.5 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய பூச்சி படிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மற்றும் ப்ரிஸ்டல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இணைந்து மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் அரிய கண்டுபிடிப்பு இது. இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பவை வருமாறு:

ஜுராசிக் காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படும் மிகச்சிறிய பூச்சியின் படிமம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது 16.5 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது என்பது முதல்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

நுண்ணிய தொழில்நுட்ப சாதனங்களை கொண்டும் ஆர்க்கபோய்லஸ் என்ற பண்டைய இசை ஆராய்ச்சியாளர்களின் உதவியுடனும் படிம நிலையில் இருந்த பூச்சியின் ஒலி குறித்து ஆராயப்பட்டது. இந்த பூச்சி உற்சாகமான ஒலிக்கு சொந்தமானது என்றும், அந்த ஒலிதான் உலகின் மிக தொன்மையான இன்னிசைக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. இதுகுறித்த தொடர் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோதமான கென்ரெய்னர் வீடுகள்

தற்போது உலகெங்கும் பல்வேறு வகையான விநோதமான வீடுகள் உருவாகி வருகின்றன. பிரான்ஸின் Lille என்ற பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட விநோதமான கென்ரெய்னர் வீடுகளே இவை.

8 கென்ரெய்னர்களைச் சேர்த்தே ஒரு குடும்பத்துக்கு ஏற்ற வீடு ஒன்று அழகாக வடிவமைக்கப்படுகின்றது.

சாதாரண வீட்டில் உள்ள அத்தனை வசதிகளும் இதில் உள்ளன.

இங்கு உள்ள விசேடம் என்னவென்றால் வேலை காரணமாக இடம் மாற வேண்டி வந்தாலும் வீட்டை அப்படியே இடம்மாற்றலாம்.








## பார ஊர்தி (லொறி) விற்பனைக்கு

**அஷோக் லேலண்ட் கார்கோ 1012**
நிறுவனத்தினால் பாவிக்கப்பட்ட **JB XXXX** மற்றும் **HP XXXX** தொடரிலக்கங்களைக் கொண்ட அலுமினிய தகட்டிலான 5 லொறிகள் விற்பனைக்குண்டு



பரீட்சீரத்தல்
(வார நாட்களில் மாத்திரம்)
க்ரவுண் சிட்டி களஞ்சியசாலை கட்டிடத்தில்
கடோல்கெலை, லியனகேமுல்லை,
சீதுவை என்ற முகவரியில்

## Power Pro

UK இலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜெனரேட்டர்கள்




Hotline
0727 548659
0718 724442
0773 065257

Power Pro பவர் ஜெனரேட்டர்கள்
8KVA இலிருந்து 2000KVA

எங்கள் தயாரிப்புகளும் சேவைகளும்

- சத்தம் வெளியேறாத ஜெனரேட்டர்கள்
- பழுது பார்த்தல், பராமரித்தல்
- ATS & AMF பேனல்கள்
- டீசல் டாங்குகள், டிரயலர்கள்
- உதிரி பாகங்கள்
- 24 மணித்தியால சேவைகள்


சத்தம் வெளியேறாத ஜெனரேட்டர்கள்


உதிரி பாகங்கள்

Yoraka Engineering (Pvt) Ltd ஆனது பொறியியல் சம்பந்தப்பட்ட தீர்வுகளை வழங்கும் நிறுவனம் ஆக கடந்த 24 வருடங்களாக இயங்கி வருகின்றது.

UK இலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உள்ளூரில் சந்தைப்படுத்தப்படும் Power Pro ஜெனரேட்டர்களுக்கான தனித்த முகவர் அத்துடன் STAMPFORD (UK) மின்மாற்றிகள் (Alternators) இற்கான ஒரே உள்ளூர் சேவை முகவர் என்ற பெருமை எங்களுக்கே உரித்தாகும். நம்பகமானதும் , நம்பத்தகுந்ததும் ஆன நிறுவனமாக பொறியியல் சம்பந்தப்பட்ட தீர்வுகளை வழங்கும் சந்தையில் பல வருடங்களாக பெயர் பதித்துள்ளது.

YORAKA
power solutions for the nation

YORAKA ENGINEERING (PVT) LTD.
No. 67, S De S Jayasinghe Mawatha, Kohuwala, Sri Lanka.
Sales | 071 8 724442
Web: www.yorakapower.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










With the opening of our Jaffna branch, the students of the north can now obtain a professional qualification in Human Resource Management. Take advantage of the ever increasing scope and demand for HR professionals here and abroad. Successful completion of our professional qualification within 2 1/2 years will further enable you to obtain a MBA or Honors Degree from recognized foreign universities or from the Sri Lankan Open University, thereby fast tracking your path to progress.

IPM is the Nation's leading professional body for fostering and creating HR professionals since 1959, and is affiliated with international HRM organizations. Our experienced and well qualified lecture panel, together with exceptional student resources will guarantee success for students wanting to step in to the professional world of HR.

| Programme in Career Guidance and Development (PCGD) | Foundation Course in Human Resource Management (FCHRM) | Certificate Course in Human Resource Management (CCHRM) |
|---|---|---|
| Mould your caring personality into a lucrative career | A Solid foundation for professional growth | We make you right for the picking |

**For more details contact Dharshiha on 0777 285883 or dharshi.ipm@gmail.com**

**Institute of Personnel Management Sri Lanka (Inc.)**

Jaffna Study Centre, No.19, People's Bank 2nd Floor, Stanley Road, Jaffna.

Jaffna office will be open daily from 2 pm to 5 pm for admission

IPM Sri Lanka
The Nation's Leader in HRM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் வளர்ப்பவர்களின் இதயம் நன்றாக இருக்குமாம்



நாய் வளர்ப்பவர்களின் இதயம் நன்றாகவும், வேதனைகள் ஏதுமின்றி லேசாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் டோக்கியோ அருகே கனகவா என்ற இடத்தில் உள்ள கிடாசோவா பல்கலைக் கழகத்தை சேர்ந்த நிபுணர்கள் நீண்ட நாள்களாக நோயினால் அவதிப்பட்ட 200 பேரிடம் ஆய்வு மேற்கொண்டனர். அவர்களில் நாய் வளர்ப்பவர்களின் இதயம் நல்ல திடகாத்திரமாக வும், மனதில் வேதனைகள் இன்றி லேசாக இருப்பதையும் கண்டறிந்தனர்.

அதே நேரத்தில் நாய்களை வளர்க்காதவர்களின் இதயம் பல குழப்பங்கள் மற்றும் வேதனை களுக்குட்பட்டு இருந்தது. நாய்களை வளர்ப்பவர்கள் இதய நோய் இன்றியும், நாய்களை வளர்க்காதவர்கள் இதயம் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். நாய்களுடன் கொஞ்சி விளையாடுவதன் மூலம் மன இறுக்கம் குறைவதே இதற்கு காரணம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




மனைகள் சிறக்க மகிழ்ச்சி பொங்க உங்கள் நிதிப்பிரச்சனைக்கு கை கொடுக்க காத்திருக்கிறது ஏசியா அசட். உங்கள் வெற்றியே எங்கள் வெற்றி. எனவே வழமைக்கு மாறாக உங்களுக்கேற்றவாறு உங்கள் நிதிப்பிரச்சனைக்கு தீர்வு காணும் எமது கிளிநொச்சி கிளையோடு இணையுங்கள்.

உடன் அழைப்பு: பார்தீபன் 0777 555 826

- நிலையான வைப்பு • விவசாய கடன்
- குத்தகை மற்றும் வாடகைக்கொள்வனவு • ஈட்டு கடன்
- சிறு கடன் உதவி • மோட்டார் சைக்கிள் கடன் வசதிகள்
- முச்சக்கர வண்டிக்கடன்

ASIA ASSET FINANCE LIMITED

121, ஆனந்தபுரம், கண்டி வீதி (A9), கிளிநொச்சி.

தலைமைக் காரியாலயம்
இல. 76, தர்மபால மாவத்தை, கொழும்பு 03, இலங்கை. தொ.பேசி 0112 574 682-5, 0115 234 821-6, 0115 234 911/2 இணையம்: 0112 577 477

# சூடாக பானங்களை அருந்தினால்..



மழைக்காலமோ, குளிர்காலமோ சிலருக்கு ஜலதோஷம் பிடித்துவிடும். எதை சாப்பட்டாலும் ருசியே இருக்காது.

காரணம் ஜலதோஷத்தினால் மூக்கடைப்பு ஏற்படுவதோடு சுவை அறிய முடியாத அளவிற்கு வாய் கசந்துவிடும். எனவே ஜலதோஷத்தினால் சளித் தொந்தரவு இருக்கிறதா? சூடாக பானங்களை அருந்தும்போது சளி காணமல் போய்விடும் என்று தெரிவிக்கின்றனர் ஆய்வாளர்கள்

ஜலதோஷம் மற்றும் அது சார்ந்த தொந்தரவுகள் ஏற்பட்டால் சூடாக பானத்தை அருந்துவது நோயின் தன்மையைக் குறைத்து விடுதலை அளிக்கும் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த கார்டிஃப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். பெரும்பாலான மக்களை எரிச்சலுக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கும் பொதுவான நோய் ஜலதோஷம். இதற்கு எளிய மருத்துவ வழி இருப்பதும், அது நிரூபிக்கப்பட்டிருப்பதும் மருத்துவ உலகின் மகத்துவம் என ஆச்சரியப்படுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

## தொண்டை வலியை நீக்க

மூக்கிலிருந்து நீர் வடிதல், எரிச்சல், தும்மல், தலைக்கனம், சோர்வு,

தொண்டை வலி என எதுவானாலும் சூடான தண்ணீரை அடிக்கடி குடியுங்கள் என அறிவுறுத்துகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். குளிர் காலங்களில் சூடான பானங்களை அருந்தி வருவதனால் இத்தகைய நோய்களின் தாக்கங்களும், அது தரும் விளைவுகளும் மிகவும் குறையும். சூடான பானங்களை இத்தகைய பருவ காலங்களில் அருந்துவதை மக்கள் வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும் என்கின்றனர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடன் செய்திகளுக்கு: www.onlineuthayan.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வரோக நிவாரணி – நெல்லிக்கனி



அன்றாடம் உட்கொள்ளும் நெல்லிக்காயனது அருமருந்தாகும். இது வாதம், பித்தம், கபம், என்னும் திரிகரண தோஷங்களையும் போக்கவல்லது. இதனாலேயே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதன் பெருமை பற்றி ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. நமது முன்னோர்கள் இதனை இரசாயனம் என்றே அழைத்துள்ளனர்.

தினசரி உணவில் நெல்லிக்காயை சேர்த்துக்கொண்டால் நூறு ஆண்டுகள் வரை இளமையுடன் வாழலாம் என்று சித்தர்கள் தங்களின் குறிப்புகளில் எழுதி வைத்துள்ளனர். உடல் நலத்திற்கு ஏற்ற நெல்லிக்காய் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வல்லது. பெண்களோ நெல்லிக்காயினை சௌபாக்கியம் என்று கருதி கார்த்திகை மாதத்தில் உத்தரண துவாதசி அன்று துளசிச் செடியுடன் இணைந்து பூஜிக்கின்றனர். இதிலும் கடுக்காயைப்போலவே இதில் பல வகையுண்டு பெருநெல்லி, கருநெல்லி, அருநெல்லி, என்பது. இதில் கருநெல்லி கிடைக்காதது. மற்றவை கடைகளில் கிடைக்கும்.

## ஐந்து சுவை கொண்டது

ஆறு சுவைகளில் இனிப்பு, புளிப்பு, கைப்பு, துவர்ப்பு, உவர்ப்பு என்னும் ஐந்து சுவைகளும் நெல்லிக்காயில் உள்ளன. இதில் உள்ள இனிப்பும் உவர்ப்பும் பித்தத்தையும், புளிப்பு, கைப்பு, கபம் ஆகியவற்றையும் போக்க வல்லது.

## உயிர்சத்துக்கள்

உயிர்ச்சத்துக்களான ஏ,பி,சி என்ற மூன்றும் அடங்கியுள்ளன. சாத்துக்குடிச் சாற்றில் உள்ள விற்றமின் சத்து 20 மடங்கு இதில் உள்ளது. நெல்லிக்காய் வாடிய போதிலும் சிறிதளவும் குறைவதில்லை. நோயற்றவராக மனிதர் வாழ தினசரி 50 மில்லிகிராம் விற்றமின் சி சத்து தேவை. இதற்கு 4 சாத்துக்குடி சாறோ, 8 அவுன்ஸ் தக்காளிச்சாறோ சாப்பிடவேண்டும். ஆனால் இந்த 50 மில்லிகிராம் விற்றமின் சி அரை அவுன்ஸ் நெல்லிக்காயில் கிடைக்கிறது.

## பித்தம் தணிக்கும்

ஜீரணக்கோளாறு, பித்த மயக்கம், காமாலை, கண்நோய், இரத்தசோகை போன்றவைகளுக்கு நெல்லிக்காய் மருந்தாகும். இதனை ஊறுகாயாக செய்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும் இதனால் பித்தம் தணியும். உணவு எளிதில் ஜீரணமாகும்.

## கர்ப்பணிகளுக்கு ஏற்றது

நெல்லிக்காய் இரும்புச்சத்து உள்ளது இரத்தத்தைச் சுத்தஞ்செய்து இருதயத்தை வலுப்படுத்தும். எனவே கர்ப்பிணிகள் முதல் மாதம் தொட்டு 9 மாதங்கள் வரை காலை, மாலை, ஒரு நெல்லிக்காய் அல்லது நெல்லி முள்ளி உட்கொண்டால் அடிக்கடி வரும். வாந்தி நிற்கும். நல்ல பசியும் எடுக்கும். நெல்லிக்காயில் உள்ள இரும்பு சத்தும், சுண்ணாம்பு சத்தும் நல்ல உடல் ஆரோக்கியத்தையும், ரத்த விருத்தியையும், கர்ப்பிணிகளிடையே ஏற்படுத்துகிறது. மேலும் கர்ப்பத்தில் உள்ள சிசுவுக்கும் ஆகாரமாகக் கிடைக்கிறது.

## நினைவாற்றல் கூடும்

பிறந்த குழந்தைகளின் உணவில் நெல்லிக்காய் சாற்றினைக் கொடுத்து வந்தால் வளரும் குழந்தைகள் தேக ஆரோக்கியத்துடன் திகழ்வார்கள். மாணவர்கள் இதனை தவறாது உட்கொண்டால் நினைவாற்றல் அதிகரிக்கும் கண்பார்வை தெளிவாகும். புத்திக்கூர்மையை ஏற்படுத்தும். குழந்தைகளுக்குக் கோணலாக முளைத்த பற்களுக்கும், காலத்தில் முளைக்காத பற்களுக்கும் கூட நெல்லிக்காய் ஏற்றது.

பல்லில் ஏற்படும் பயோரியா என்னும் வியாதிக்கு இது அருமருந்து. நெல்லியிலைச் சாற்றை கொப்பளித்து காயை உட்கொண்டால் உடன் வியாதி நீங்கும்.

## வியக்க வைக்கும் வெள்ளைநிறக் கரடிகள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 அடி கூட நகரமுடியாத அதிக பருமனுடைய பெண்





பிரித்தானியாவிலேயே மிகவும் குண்டான ஆண் பற்றிய தகவல்கள் வெளியாகி சில தினங்களிலேயே அந்த நாட்டின் குண்டான பெண் பற்றிய செய்தி வெளிவந்துள்ளது.

43 வயதான பரண்டா பளான்கம் டேவிஸ். இவர் தினமும் 6,000 கலோரி பெறுமதியான உணவுகளை உட்கொள்ளு கின்றாராம். இதனால் 20 அடி கூட நடக்க முடியாத அளவிற்கு இவரது உடல் பருமன் காணப்படுகின்றது.

மேலும் 45 ஸ்டோன் நிறையை உடைய சரோன் மேவ் சிம்லர் என்ற பெண் கடந்த 2010ம் ஆண்டில் இறந்த தன் பின்னர் அதே நிறையை கொண்டுள்ள பரண்டா அவரின் இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org